உ

[illegible] ||

[illegible] ||

# தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.

இஃது

தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் தாலூகா
கிழவிடையல் கிராமம் இராமஸ்வாமிய்யர்
குமாரர் பென்ஷன் டிரிவினியூ இன்ஸ்பெக்டர்
ஆர். முத்துஸ்வாமி அய்யரால்
இயற்றப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

பதிப்பித்தவர்:
**K. M.** நாகராஜ அய்யர்,
கிழவிடையல்,
திருச்சிரை போஸ்டு.

**1937.**

*(All Rights Reserved.)*

விலை ரூபாய் **1—8—0.**

Printed at
SARADA VILASA PRESS,
KUMBAKONAM.

# மூன்றும் பதிப்பின் முகவுரை.

ஆஸ்திகர்களும், சிஷ்டர்களுமான பிராம்ஹணர்களின் உபகாரத்தின் பொருட்டு, எனது தகப்பனுர் **R. முத்துஸாமி அய்யர்** அவர்களால் ஸ்மிருதி முக்தாபலமெனனும் **வைத்யநாத தீக்ஷிதீய** நிபந்தனக்ரந்தத்தையனுஸரித்து தமிழ்பாஷையில் எழுதப்பட்ட "**தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்**" என்னும் நூல் இருமுறை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதென்பது யாரும் அறிந்த விஷயமே. ஷை க்ரந்தத்தின் காபிகள் முழுவதும் செலவாகிவிட்டபடியால், மறுபடி அதை பதிப்பிக்கவேண்டுமென பல ஆஸ்திகர்களின ஆக்ஞையையாதரித்து நானும் இதை மூன்றும் பதிப்பாக அச்சிட்டு வெளியிடலானேன். இந்த மூன்றும் பதிப்பானது இரண்டாம் பதிப்பிலுள்ளபடியே அச்சிடப் பட்டிருக்கிறது. என் சக்திக்கியன்றவாறு நன்கு பரிசோதிக்கப்பட்டிருக்கும் இந்நூலில் ஏதாவது பிழைகளிருந்தாலும் அவைகளைத் திருத்திக்கொள்ளும்படிக்கும், அவைகளை எனக்குத் தெரிவிக்கும்படிக்கும் ஆஸ்திகர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

கீழவிடையல்,
17—1—1937.

K. M. நாகராஜன்.

# இரண்டாம் பதிப்பின் முகவுரை.

சிறியதும், விஷயங்கள் ஸங்கிரஹமாய் அடங்கியதும், மிக்க உபயோகமானதுமான இந்நூலை முதன்முதல் அச்சியற்றி வெளியிடுவதற்கு முன் இந்நூலின் கண் அடங்கியுள்ள ஆசௌச, ச்ராத்தகாண்டங்களின் ஸங்க்ரகத்தை மாத்திரம் அடங்கியதான சிறிய நூல் ஒன்றை, ஆசௌசச்ராத்த நிர்ணயஃ என்ற பெயருடன் முதற் புத்தகமாக பலருக்கு உபயோகமாகும்படி வெளியிட்டேன். அச்சிறு நூலில் வைத்யநாத தீக்ஷிதீயத்தின் ஏனையகாண்டங்களின் சாராம்சங்களையும் வெளியிட்டிருந்தால் விஷயந்தெரியாத ஸாமான்யர்களுக்கு மிக்க உபயோகமாதல்கூடும் எனறு, இச்சிறிய நூல் வெளியாகிய சின்னாட்களில் நமது நண்பர்கள் சிலர் தெரிவித்ததின்பேரில் இரண்டாவதாக வைத்யநாததீக்ஷிதீயம் என்ற ஸ்மிருதிமுக்தாபலத்தை எவ்வளவு ஸங்க்ரஹமாய் எழுத முடியுமோ அவ்வரையில் எழுதி, தர்ம சாஸ்திரச் சுருக்கம் என்ற பெயருடன் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டேன். ஆனால், இதில் திதிநிர்ணய, ப்ராயச்சித்த காண்டங்களின் ஸங்கிரஹங்கள் எழுதப்படாமல் அக்காண்டங்களின் முக்ய அம்சங்களை மாத்ரம் மற்ற காண்டங்களின் விஷயஸந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டது. அவற்றை நன்குணராத சிலர், மேற்கண்ட இரண்டு காண்டங்களின் சாராம்சங்களும் தனித்தனியாக சேர்க்கப்படாமலிருப்பதை ஓர் குறையாகக்கொண்டு நமக்கு கடிதமூலமாகவும், நேரிலும் தெரிவித்தனர். அவர்களுக்குத் தகுந்த ஸமாதானம் சொல்ல நான் முன் வர

வேண்டியதவசியமாதல்பற்றி, அதற்காகவே இவ்விரண்டாம் பதிப்புக்கும் ஓர் முகவுரை எழுதத்துணிந்தேன். இப்புத்தகத்தின் முதற் பதிப்பின் முகவுரையில் கூறியபடி ஆறு காண்டங்களில் ஐந்தாவதான திதிநிர்ணயகாண்டம் முக்யமாக பஞ்சாங்கம் வெளியிடுபவர்களுக்கே இன்றியமையாததென்பது அதிலடங்கியுள்ள விஷயங்களால் நன்கு புலப்படும். ஆதலால் அதிலுள்ள விஷயங்கள் முற்றிலும் நமக்குத்தேவையில்லையானபடியால், பஞ்சாங்கங்களில் உண்டாகும் வித்தியாஸங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியதற்கான அம்சங்களை மாத்திரம் அக்காண்டத்திலிருந்து மற்ற காண்டங்களில் சில ஸந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கிறதென்பதைக் கவனித்துப் படிப்பவர்களே நன்கறிவார்களாதலின் அதைப்பற்றி அதிகம் கூறாது விடுத்தனம். இனி, ப்ராயச்சித்த காண்டத்தை ஸங்க்ரஹமாய் மற்ற காண்டங்களைப்போல் வெளியிடாததற்குக் காரணம், அது ரொம்பவும் விரிவாய் இருப்பதுடன், மற்றொரு காரணம் அதை ஸங்கிரஹமாய் எழுதமுடியாததே முக்யமாகக்கொள்ளவேண்டும். எனினும், அதில் மிகவும் இன்றியமையாதவையான விஷயங்களை திதிநிர்ணயகாண்டத்தைப்போல் ஸந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ப்ராயச்சித்தகாண்டத்திலுள்ள ப்ராயச்சித்தங்களில் சில அரசர்களால் கண்டனை, தண்டனை செய்யவேண்டியதாகிறது. ப்ராசீனகாலத்திலிருந்த அரசர்கள் மதஸம்பந்தமானவற்றில் உண்டாகும் கெடுதல்களையும், முறைபிசகி நடக்கும் விஷயங்களையும் கவனித்து அவரவர்களின் மதஸம்பந்தமான விஷயங்களை அடிக்கடி சீர்திருத்தி ஒழுங்குபடுத்திக்கொண்டு வந்தனர். ஆனால், தற்சமயமோ அவ்விஷயம் இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டதுடன், கலியுகபுருஷனின் ஆதிக்கத்தா

லும், ப்ராம்மணர் முதலான வர்ணத்தார்கள், பாப புண்யம் தெரியாமல் அவரவர்களே ஸ்வாதீனஸ்தர்களாக ஆகிவிட்டார்கள். அதனால் தற்காலத்தில் ப்ராயச்சித்தங்கள் எவ்வளவு மட்டில் நடைபெறும் என்பதை நன்குணரலாம். ப்ராயச்சித்தகாண்டத்தின் முக்ய கருத்தானது, அநுஷ்டாதாவானவர்களும், சாஸ்திரந்தெரிந்தவர்களுமான பலபேர்கள் சேர்ந்து „பரிஷத்து" என்ற பெயர் வைத்து, ஒவ்வொருவரும் அவர்கள் செய்த பாபத்தைத் தெரிவித்தால், அவர்களின் சாஸ்திரத்திற்கும், சக்திக்கும் தக்கதான விதாயகம் சொல்லுகிறபடி ப்ராயச்சித்தம் செய்யவேண்டியதென்பதே. ஆகையால் அதுவே போதுமானதென்று அநுஷ்டித்துவருவதால் அதை விஸ்தரிக்கவில்லை.

வைத்யநாததீக்ஷிதீயம் என்ற ஸ்மிருதிமுக்தாபலத்தில் இல்லாத அநேக வசனங்கள் இப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அச்சுப் புஸ்தகங்களில் இல்லாமல் பழையகாலத்திய ஓலைச்சுவடிகளிலிருந்தும், ப்ராசீனகாலத்தில் இருந்த வித்வான்களை ஸந்தேகங்கள் கேட்டு, அவர்கள் சொன்ன விதாயக வசனங்களை அக்காலத்திய பெரியோர்கள் அவரவர்கள் வைத்திருக்கும் பழய சுவடிகளில் எழுதியிருப்பதைக்கொண்டும், „பஹூநாம் அநுக்ராஹ்யம்" என்ற நியாயப்படி, பல ஸ்மிருதிகளை ஆராய்ந்து பார்த்த பெரியோர்கள் சொன்னதைக்கொண்டும், முதற் பதிப்பு வெளியான பிறகு ஏற்பட்ட சில ஸந்தேகங்களைத் தற்காலத்திய சாஸ்திர ஸம்பன்னர்களைக்கேட்டு அவர்கள் வெளியிட்ட விதாயகங்களையும், சிலவற்றை உசிதப்படி மாற்றியும் இப்பதிப்பு மிக சிரமத்துடனும், வரிசைப்படுத்தியும் அச்சியற்றி வெளியிடலானேன். முன் பதிப்பில் இல்லாத அவஶிஷ்டஶ்லோகா: என்ற விஷய

மும், திரவியசுத்தி விஷயமும், இப்புஸ்தகத்திலுள்ள கிரந்த பதங்களுக்கு அததற்கேற்பட்ட தமிழ் அர்த்தம் விளக்கி ஒரு அகராதியும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அல்ப அறிவுள்ள நான் பெரியோர்களுடைய சலுகையைக்கொண்டு இவ்விரண்டாம் பதிப்பும் வெளியிடத் துணிந்தேன். சாதுக்கள் இதிலுள்ள குற்றங் குறைகளை நீக்கி குணங்களைச் கிரஹிப்பார்களென்று நம்புகிறேன்.

இந்நூலின் கடைசியிலுள்ள வைதீக விஷயங்களின் ஜாப்தாவில் காட்டப்பட்டிருக்கும் பிராம்மணர்களின் ஸங்க்யையும், தொகையும் மாதிரிக்காகப் போடப்பட்டிருப்பதையறியாமல், சிலர் அதிலுள்ளபடியே கார்யங்களை நடத்த எத்தனிப்பதானது முதல் பதிப்பு வெளியான சின்னாட்களில் எமது செவிக்கெட்டியபடியால், அப்படிச்செய்பவர்கள் இனியாவது அப்படிச்செய்யாமல், அவ்விஷயத்தில் "முக்ய அறிவிப்பு" என்பதைப் படித்து அதின்படி நடக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அவர்கள் செய்தால் நான் அவ் வைதீக விஷயத்தை இதில் வெளியிட்டதற்குப் போதுமான ஸம்பாவனையாகக்கொள்வேன்.

கீழவெடயல். *R. Muthusami Aiyar*

# முதற் பதிப்பின் முகவுரை.

பிர்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்ட பல ஜீவராசிகளுள், மனிதர்களான நம்மில் நான்கு வர்ணங்கள் ஏற்பட்டிருக்கின் றன. அவையாவன:— **பிராம்மணர், க்ஷத்திரியர், வைச்யர், சூத்திரர்.** இவர்களின் தர்மங்களும், ஒழுக்கங்களும், வேதங் களாலும், மனு, வ்யாஸர், வஸிஷ்டர், அங்கிரஸ, ஆபஸ் தம்பர், யாக்ஞவல்க்யர் முதலான மஹரிஷிகளினுடைய "ஸ்மிருதி" களாலும், சுருதி ஸ்மிருதிகளால் அவலம்பிக் கப்பட்ட இதிகாஸபுராணங்களாலும் எடுத்துரைக்கப்பட்டி ருக்கின்றன. இவைகள் அதிக விஸ்தாரமாகவிருப்பதால் அவைகளை ஆராய்ந்து பார்க்க அசக்தர்களாயிருப்பவர்களின மேல் கிருபைகூர்ந்து அவர்களின் சௌசரியத்தின் பொரு ட்டு முன்னோர்கள் பல நிபந்தன கிரந்தங்களை ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். அவைகளுள், "ஸ்மிருதிமுக்தாபலம்" என்பது ஒன்று. இஃது, சுமார் 200 வருஷங்களுக்கு முன் னர், "கண்டரமாணிக்கம்" என்னும் கிராமத்தில் வஸித்து வந்த பிர்ம்மஸ்ரீ **வைத்யநாத தீக்ஷிதர்** அவர்களால் தயாரிக் கப்பட்டது. இதை, 1. வர்ணாசிரம தர்ம காண்டம், 2. ஆந்ஹிககாண்டம், 3. ஆசௌசகாண்டம், 4. சிராத்தகாண் டம், 5. திதிநிர்ணயகாண்டம், 6. பிராயச்சித்தகாண்டம் என 6 பாகங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்நி பந்தன கிரந்தமே நம் தேயத்தில் ஸ்மார்த்தர்களுக்குள் ப்ரசி த்தமாயும், ஆசாரத்திற்கு ஒத்துமையாயும் இருப்பதால் அனுஷ்டானத்தில் இருந்துவருகிறது. இஃது ஸகல ஆசா ரங்களையும், தர்மங்களையும் தெரிவிப்பதாயிருந்தபோதிலும்

ச்ரமமன்றியில் முக்யவிஷயங்களை ஸாமான்னிய ஜனங்கள் சுளுவில் தெரிந்துகொள்ளும் பொருட்டு, மேற்படி கிரந்தத்தினின்றும், கால, தேச, வர்த்தமானங்களுக்கு அநுகுணமாக முக்யமான விஷயங்களை ஆராய்ந்தெடுத்து எளிய தமிழ் நடையில் ஒரு நூலாக எழுதி அதற்கு, "தர்மசாஸ்திர ஸங்கிரஹ:" அல்லது "தர்மசாஸ்திரச் சுருக்கம்" என்று பெயர் புனைத்து அச்சிட்டு வெளிப்படுத்த முன்வந்தேன். இதிலுள்ள விஷயங்களை நான் தீர்க்காலோசனை செய்தும், பல சான்றோர்களைக் கலந்து யோசித்தும், ஆசரணைகளை விசாரித்தும் எழுதியிருக்கின்றேன். ஹம்ஸம்போன்ற ஸாதுக்கள் இதிலுள்ள தோஷங்களைத் தள்ளி, குணங்களையே கிரஹிப்பார்களென்று நம்பி, அல்ப அறிவுள்ள நான் இதை வெளியிடத் துணிந்தேன். இதிலிருக்கும் தவறுதல்களை எடுத்துக்காட்டும் பெரியோர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான வந்தனத்தை அளிக்க ஸித்தமாயிருக்கின்றேன். இதில் என்னையறியாமலே அநேகம் பிழைகள் நேர்ந்திருக்கிறபடியால் அப்பிழைகளைப் பொருத்து இதை அங்கீகரிப்பீர்களென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

# சில முக்ய அபிப்ராயங்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களாகிய
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள்
ஸ்ரீ மடம், கும்பகோணம், நெ. 3-19. 2—2—1919.

"தர்மசாஸ்திர ஸங்கிரஹம்" அல்லது "தர்ம சாஸ்திரச் சுருக்கம்" என்னும் இந்த நூதன புஸ்தகமானது ஆஸ்திகர் அனைவரும் அவசியம் படித்து அறிந்து கொள்ளவேண்டிய சாஸ்திராசாரங்களை மிக்க சுலபமாக அறிந்துகொள்ளும்படி சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது. தேச பாஷையில் பிரசுரமாகும் இந்தப் புஸ்தகம் அனைவருக்கும் மிக்க உபயோகமுள்ளது.

ஸ்ரீ மஹாஸன்னிதான ஆக்ஞைப்படி,
(ஒப்பம்) ஸ்ரீகாரியம், ராமஸ்வாமி சாஸ்திரிகள், ஏஜண்டு.

---

PROFESSOR

## M. R. Ry. K. Sundararama Ayyar Avl. writes as under:—

**"Dharma-Sastra Sangraha"** by M. R. Ry. R. Muthusami Ayyar Avl., is the name imports a compendium of the leading Dharmas and Acharas of the Hindus. The author's object is to bring out a **Vade-Mecum** of the Hindu rituals which can be studied and consulted by all who are interested in them, and he is to be congratulated on the successful manner in which he has carried it out. The arrangement is methodical and the discrimination shown in the selection of topics is clear through out the work. The list at the close in which the author gives the various component parts of

the various vedic rituals and the minimum cost of each will also prove of help to those who have to perform them. The compilation has been made with much care and pains, and will prove useful and instructive as a companion to the members of a Hindu household, and especially to the young.

KUMBAKONAM,
29th April, 1919. } Sd. **K. Sundararama Ayyar.**

கும்பகோணம் காலேஜில் ப்ரொபெஸராயிருந்த
**பிரம்மஸ்ரீ, K. சுந்தரராமய்யர் அவர்களின் அபிப்பிராயம்.**

ம-ா-ா-ஸ்ரீ R. முத்துஸாமி அய்யர் அவர்கள் இயற்றிய "தர்ம சாஸ்திர ஸங்கிரஹம்" என்னும் நூல் அதன் பெயர் அறிவிக்கிறபடி ஹிந்துக்களின் முக்கியமான தர்மங்கள், ஆசாரங்கள் இவைகளின் சுருக்கம். ஹிந்துக்களுடைய மத சம்பந்தமான கர்மாக்களில் அவாவுள்ளவர்கள் அவைகளை படிப்பதற்கும், சந்தேகங்களை ஆதார மூலமாய் தெளிந்து கொள்ளுவதற்கும் புத்தகரூபமாக ஒரு சுருக்கம் எழுதி வெளியிடவேண்டுமென்பது இதை இயற்றியவரின் கருத்து. இக்கருத்து பூரணபலிதமாகும்படியான வழியில் இந்நூலை எழுதி முடித்திருப்பது மெச்சத்தக்கதே! சமாசாரங்களை கிரமப்படி கொண்டுவந்திருக்கும் ஒழுங்கினாலும் தகுதியான இடங்களில் சங்கதிகளை பொருக்கிச் சேர்த்துச் சொல்லியிருக்கும் பகுத்தறிவினாலும் இந்நூல் ஆதிமுதல் அந்தம் வரையில் மிகவும் தெளிவாக இருக்கிறது. அநேக வைதீக கர்மாக்களுக்கும் அவைகளுக்கு அதம பக்ஷமேனும் செய்ய வேண்டிய செலவுகளுக்கும் இந்நூலின் கடைசியில் கொடுக்கப்பட்ட ஜாப்தா அக்கர்மாக்களை செய்யவேண்டியவர்களுக்கு மிகவும் உபகாரமாயிருக்கும். இச்சுருக்கம் சிரமப்பட்டு மிகவும் ச்ரத்தையோடு இயற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஹிந்துக் குடும்பங்களிலுள்ளவர்களுக்கும் முக்கியமாய் சிறுவர்களுக்கும் இது உபயோகமாயும் விஷயங்களை தெரிவிப்பதற்கு அனுகூலமாயுமுள்ள ஓர் புத்தகமாயிருக்கும்.

# விஷய விளக்கம்.

## வர்ணாச்ரம தர்ம காண்டம்.


| | |
|---|---|
| வேதங்களும் அதன் பிரிவுகளும் ஸூத்ரங்களும் | 1 |
| வர்ணம் .... .... .... | ,, |
| யுகங்கள் .... .... .... | ,, |
| கலியுக நிஷித்த தர்மங்கள் .... .... | 2 |
| திக்கு நியமம் .... .... .... | ,, |
| ப்ராம்ஹண தர்மம் .... .... .... | ,, |
| அக்நிஹோத்ரம் .... .... .... | ,, |
| அந்ய வேதாத்யயனஞ்செய்தல் .... .... | 3 |
| உபாகர்மம் .... .... .... | ,, |
| அத்யயனம் .... .... .... | ,, |
| ப்ராம்ஹணவ்ருத்தி.... .... .... | 4 |
| ப்ராம்ஹணர்களுக்கு ஸம்ஸ்காரங்கள் .... | ,, |
| ருதுகாலம் .... .... .... | 6 |
| பும்ஸவனம் .... .... .... | ,, |
| ஸீமந்தம் முதலிய ஸம்ஸ்காரங்கள் .... | 7 |
| உபநயன முதல்கொண்டுள்ள ஸம்ஸ்காரங்கள் .... | 10 |
| பத்நி ரஜஸ்வலையாக இருந்தால் .... .... | 14 |
| சௌளாதி கர்மாக்கள் செய்யக்கூடாத காலம் .... | ,, |
| உபநயனஞ் செய்யத்தகுந்தவர்கள் .... | ,, |
| யமளோத்பவர்களின் ஜாதகர்ம விதி .... | ,, |
| நமஸ்காரஞ் செய்யத்தகாதவர்கள் .... | 15 |
| விவாஹத்திற்குரிய கன்யா லக்ஷணம் .... | ,, |
| கன்யகாதான கர்த்தா .... .... | 16 |
| சுப காலங்களில் செய்யவேண்டியது .... | ,, |

இரண்டு சோபன விஷயம் .... .... 16
ஸ்வீகார புத்ரர்களின் விவாஹ விஷயம் .... 17
ஸபத்னீ புத்ரர்களின் விவாஹ விஷயம் .... 18
ஔபாஸனமும், ஸ்தாலீபாகமும் .... 19
ஔபாஸநாக்னியில் செய்யவேண்டிய கார்யங்களும், லௌகிகாக்நியில் செய்யவேண்டிய கார்யங்களும் 20
தள்ளிவிடத்தகுந்த ஸ்த்ரீகளும், புனர்விவாஹ விஷயமும் 21
ஸகோதரர்களின் விவாஹ விஷயம் .... ,,
பாரியை பர்த்தாவினிடத்தில் இருக்கவேண்டிய முறை 22
கர்ப்பிணி ஸ்த்ரீயின் நியமம் .... .... ,,
விதவா தர்மம் .... .... .... 23
நமஸ்காரத்தில் அபிவாதனம் செய்யத்தகாத விஷயம் ,,

## ஆன்ஹிக காண்டம்.

ப்ராம்ஹ முகூர்த்தத்தில் எழுந்து செய்யவேண்டிய கார்யங்களின் க்ரமம் 25
பஹிர்பூமிக்குப் போகும்போதுள்ள முறை .... 26
சௌச நியமம் .... .... .... 27
ஆசமன விதியும், அதைச்சார்ந்தவைகளும் .... 29
ஈரவஸ்த்ரத்தோடு ஜபம், தர்ப்பணம் முதலியவைசெய்யவேண்டிய முறை 32
தேவதீர்த்தம் முதலானதுகளின் ஸ்தானமும் உபயோகிக்கும் காலமும் ,,
தர்ப்பம், பவித்ரம் முதலியன .... .... 33
தர்ப்பம் .... .... .... 34
ஆசமனம் முக்யமாய்ச் செய்யவேண்டிய காலங்கள் 36

தந்ததாவன விதிமுறையும், அதற்குறியவிஷயங்கள் முதலியனவும் 38
ஸ்நானம் .... .... .... 43
ப்ரம்ஹசாரிகளுக்கும், யதிகளுக்கும் ஸ்நான நியமம் 44
அருணோதயகால லக்ஷணம் .... .... 45
ஸ்நானங்க தர்ப்பணம் முதலியன .... ,,
வஸ்த்ரங்கட்டிக்கொள்ளவேண்டிய முறை .... 48
வஸ்த்ரப்ரோக்ஷண மந்த்ர: ... ... ,,
வஸ்த்ரக்ரஹணம் ... ... 49
வஸ்த்ரயோஜநம் ... ... ,,
வஸ்த்ரத்தை ஸூர்யனுக்குக் காண்பிவிக்க மந்த்ரம் ,,
வஸ்த்ரந்தரித்துக்கொள்ள மந்த்ரம் .... ,,
கட்டிக்கொள்ளக்கூடாத வஸ்த்ரங்கள் .... ,,
நக்னத்வ லக்ஷணம் .... .... 50
உத்தரீய மன்னியில் செய்யத்தகாத கர்மங்கள் .... 51
ஸ்நான வஸ்த்ரத்தைப் பிழியவேண்டிய நியமம் ,,
ஸ்நான நியமத்தில் விசேஷங்கள் .... ,,
வெந்நீர் ஸ்நானம் .... .... .... 56
ஸம்பர்க்காசௌச விஷயம் .... .... 57
சண்டாள தர்சன, ஸ்பர்ச, ஸம்பாஷணாதிகளில் ப்ராயச்சித்தம் ,,
ஒரே ஆஸனத்தில் சூத்ராதிகளோடு உட்காரலாம் 58
சவாசௌச விஷயம் .... .... ,,
நிசி என்பது .... .... .... ,,
ஹிரண்யரூபமாக ச்ராத்தம் செய்யவேண்டிய காலங்கள் 59
கிரஹண நியமம் .... .... .... ,,
ஸங்க்ரமணாதி புண்யகாலங்களின் பெயர் .... ,,
புண்யகாலத்தைத் தெரிந்துகொள்ளுதல் .... 60

| | |
|---|---|
| ரஜஸ்வலே .... .... .... | 61 |
| காம்ய ஸ்நானங்கள் .... .... | 62 |
| என்ணெய்தேய்த்துக்கொள்ள அர்ஹமில்லாத திதி, வார, நக்ஷத்ரங்கள் | 65 |
| திதி, வார, நக்ஷத்ர, யோக, கரணங்களுக்குள் வாரம் முக்யம் | ” |
| தீபாவளியில் தைலஸ்நானத்தின் மகிமை .... | 66 |
| தீர்த்த யாத்ரை .... .... .... | 68 |
| கௌண ஸ்நானம் .... .... .... | 69 |
| வ[illegible]யாரணவிபி: ... ... | 70 |
| ஸந்த்யாவந்தனஞ் செய்யக்கூடிய காலம் .... | 72 |
| ப்ராம்ஹணர்கள் நித்யஞ்செய்யவேண்டிய கர்மாக்கள் | ” |
| ஜபத்திற்கு யோக்யமான ஆஸனங்களும், ஸ்தலங்களும் | 74 |
| ஜபமாலேக்குறிய ஸங்க்யைகளும், உத்தம, மத்யம, அதமங்களின் நிர்ணயங்களும் | 78 |
| ப்ரோக்ஷித்துக்கொள்வதற்கு அர்ஹமில்லாத தீர்த்தங்கள் | 80 |
| ஔபாஸனஞ்செய்வது .... .... | ” |
| ஸமிதாதானம் .... .... .... | 81 |
| பிறர் ஔபாஸனத்தைச் செய்வதற்கு அதிகாரமுள்ளவர்கள் | ” |
| ஹோமார்ஹமானவைகள் .... .... | 82 |
| ப்ரம்ஹயஜ்ஞம் .... .... | 86 |
| பூஜைக்கு அர்ஹமல்லாத புஷ்பங்கள் .... | 87 |
| த்ரிகால ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டிய கால நிர்ணயம் | ” |
| யமதர்ப்பணம் .... .... .... | 89 |
| பீஷ்மதர்ப்பணம் .... .... .... | ” |

| | | |
|---|---|---|
| | [illegible] ... ... | 90 |
| | திலதர்ப்பணம் செய்யவேண்டிய காலம் .... | 91 |
| | வஸ்த்ரத்தைப் பிழியும் முறை .... .... | 92 |
| | பூஜார்ஹமில்லாத புஷ்பங்கள் .... .... | 93 |
| | ஸாளிக்ராம பூஜையின் முறை .... .... | 94 |
| | தர்பஸங்க்ரஹண மந்த்ராः | ,, |
| | [illegible] | ,, |
| | விஷ்ணுபூஜார்ஹமான புஷ்பங்கள் .... | ,, |
| | ஶைவபூஜா தீர்த்தப்ரோக்ஷண மந்த்ராः ... | 95 |
| | [illegible] ... ... | ,, |
| | சிவபூஜைக்கு அர்ஹமல்லாதவைகள் .... | 96 |
| | வைச்வதேவம் .... .... .... | 97 |
| | யதிக்கும், ப்ரம்ஹசாரிக்கும் பிக்ஷைகொடுக்கும் முறை .... | ,, |
| | போஜனம் .... .... .... | 98 |
| | [illegible] ... ... ... | 99 |
| | பேசக்கூடாத காலங்கள் .... .... | 101 |
| | சாப்பிடக்கூடாத விஷயங்கள் .... .... | 102 |
| | தாம்பூலம் .... .... .... | 109 |
| | படுக்கை .... .... .... | 110 |
| | சில்லரை தர்மங்கள் .... .... .... | 111 |
| | த்ரவ்ய சுத்தி விஷயம் .... .... | 126 |

## ஆசௌச காண்டம்.

| | | |
|---|---|---|
| 1 | ஜ்ஞாதிகள் ... .... ... .... .... | 134 |
| 2. | பிறப்புத்தீட்டு .... .... .... | ,, |
| 3. | இறப்புத்தீட்டு .... .... .... | 136 |
| | (1) 10 நாள் தீட்டு .... .... .... | ,, |
| | (2) புருஷர்களுக்கு மூன்று நாள் தீட்டு .... | ,, |

(3) புருஷர்களுக்கு பக்ஷிணித்தீட்டு .... 138

(4) புருஷர்களுக்கு 1 நாள் தீட்டு .... „

(5) ஸ்த்ரீகளுக்கு ஏற்படும் தீட்டு .... 139

1. ஸ்த்ரீகளுக்கு 3 நாள் தீட்டு .... „

2. ஷை பக்ஷிண்யாசௌசம் .... 140

3. ஷை 1 நாள் தீட்டு .... .... 141

4. தீட்டுச்சேர்க்கை .... .... .... „

(1) பிறப்புத்தீட்டில் பிறப்புத்தீட்டு .... „

(2) பிறப்புத்தீட்டும், இறப்புத்தீட்டும் .... 142

(3) இறப்புத்தீட்டில் இறப்புத்தீட்டு .... 144

5. அதிக்ராந்தாசௌசம் .... .... 146

6. ஆசௌசமில்லாதவர்கள் .... .... 148

7. மற்றவைகள் .... .... .... „

8. ச்ராத்தமத்தியில் ஆசௌசம் நேரிட்டால் .... 150

9. விவாஹ மத்தியில் ஆசௌசமும், மாதா பிதாக்களின் மரணமும் ஏற்பட்டால் .... „

10. யாகதீக்ஷாமத்தியில் ஆசௌசம் நேர்ந்தால் .... „

11. இதர விஷயங்கள் .... .... .... 151


## ச்ராத்த காண்டம்.


1. ப்ராயஶ்சித்தாதிகள் ... ... ... 157

2. ஸம்ஸ்காரம் .... .... .... 158

3. ஸம்ஸ்காராக்னிகளின் பெயர்கள் .... 159

4. ஸம்ஸ்காரஞ்செய்வதற்கு அக்னிநிர்ணயமும், ப்ரேத க்ரியைகளும் .... 160

5. உஹநம் ... ... ... 172

6. துர்மரணமடைந்தவர்களுடைய ஸம்ஸ்காரம் .... 173

7. பதிதனுடைய ஸம்ஸ்காரம் .... .... 174

8. தேசாந்தரம்போய் இறந்தவர்களுடைய ஸம்ஸ்காரம் „

9. புனர் தஹனம் .... .... .... „

| | | |
|---|---|---|
| 10. | பாஷாணோத்தாரணவிஷயம் ... ... | 175 |
| 11. | நாராயணபலி ... ... | 177 |
| 12. | ஸஞ்சயநம் ... ... ... | 178 |
| 13. | கர்த்ருக்ருத்ய: ... ... ... | 179 |
| 14. | ஶிலாதிவிஸர்ஜநம் ... ... | 181 |
| 15. | வ்ருஷோத்ஸர்கம் ... ... ... | 182 |
| 16. | உதககும்பதாநம் ... ... ... | ,, |
| 17. | வபநம் ... ... ... | 184 |
| 18. | தீட்டுச்சேர்க்கையில் வபனமும், உதகதானமும் | 190 |
| 19. | தீக்ஷையில் வபனம் .... .... | 193 |
| 20. | ஸம்ஸ்காரத்தினுல் அதிகத்தீட்டு.... .... | 194 |
| 21. | ஶுத்திஶ்ராத்தம் ... ... ... | 195 |
| 22. | ஸபிண்டீகரணம் ... ... | 198 |
| 23. | த்வாதச ச்ரவணர்களின் பெயர்கள் .... | 202 |
| 24. | வத்ஸராந்தஸபிண்டீகரணவிஷயே மாஸிகாதிபோஜநே நியமத்ரயஸம்ஶயா | 203 |
| 25. | ஷோடஶகும்பம் ... ... ... | ,, |
| 26. | ஊநமாஸிகம் ... ... ... | 204 |
| 27. | மாஸிகம் ... ... ... | 205 |
| 28. | த்ரிபுருஷோத்தேச ச்ராத்தமும், ஏக புருஷோத்தேச ச்ராத்தமும் ... | 207 |
| 29. | ஹோமமுள்ள ச்ராத்தங்களும், ஹோமமில்லாதவைகளும் ... | ,, |
| 30. | ச்ராத்தம் .... .... .... | 208 |
| 31. | பித்ருஶேஷபோஜநம் ... ... | 224 |
| 32. | ச்ராத்தாங்க தர்ப்பணம் .... .... | 225 |
| 33. | தர்ச ச்ராத்தம் முதலியன .... .... | 226 |
| 34. | மஹாளயம் .... .... .... | 229 |

35. நாந்தி .... .... .... 232
36. மலமாஸத்தில் செய்யக்கூடியவைகள் } செய்யக்கூடாதவைகள் } .... 236
திதிநிர்ணய காண்டம், ப்ராயச்சித்தகாண்டம்.... 239
சில முக்ய விஷயங்கள் .... .... 241
விசேஷ அறிவிப்பு, கவனிப்பு .... .... 246
ஷட்பிண்டிகளுக்கு ஸபிண்டீகரணத்தில் வரணம் முதலியதைக் காட்டும் அட்டவணை }.... 247
வைதீக ஜாப்தா .... .... .... 253
அகராதி .... .... .... 273

உ

# தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.

## வர்ணாச்ரம தர்ம காண்டம்.

### 1. வேதங்களும், அதன் பிரிவுகளும் ஸூத்ரங்களும்.

ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம் என, வேதங்கள் நான்கு. அவற்றில் முதலாவது ருக்வேதத்திற்கு ஆச்வலாயநம், கௌஷீதகம் என்று ஸூத்ரங்கள் இரண்டு. இரண்டாவது யஜுர்வேதமானது கிருஷ்ணயஜுர் வேதம், சுக்லயஜுர்வேதம் என்று இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுளது. அவற்றில் கிருஷ்ணயஜுர்வேதத்திற்கு, போதாயனம், ஆபஸ்தம்பம், பாரத்வாஜம், ஸத்யாஷாடம், வைகானஸம் என்று ஐந்து ஸூத்ரங்களும், சுக்லயஜுர்வேதத்திற்கு காத்யாயனம் என்று ஒரே ஸூத்ரமும் ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவதான ஸாமவேதத்திற்கு, த்ராஹ்யாயணம், ஜைமினீயம் என்று இரண்டு ஸூத்ரங்கள்.

### 2. வர்ணம்.

பிரம்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர என நான்கு பிரிவுகள்.

### 3. யுகங்கள்.

க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என நான்கு. நான்காவதான கலியுகத்தில் பராசரஸ்ம்ருதியே முக்கியமானது.

### 4. கலியுக நிஷித்த தர்மங்கள்.

1. ஒரு பிராம்ஹணன் பன்னிரண்டு வருஷம் கிணற்றிலேயே ஸ்நானம்செய்து வருவானேயானுல் அவன் பிராம்ஹண்யத்தை இழந்து சூத்ரனுகிவிடுவான்.

2. ஜ்யேஷ்டபாகம் கொடுத்தல், ஸஹ்ராஸம்செய்துகொள்ளல், ஆசௌசத்தைக் குறைத்தல், ப்ருஹ்மசாரியாக வெகுகாலமிருத்தல், கிருஹஸ்தன் தூரதேசத்திற்கு தீர்த்தயாத்ரைசெய்தல், யதிகள் சாயங்காலத்தில் வீட்டில் இருத்தல், பிராம்மணர்கள் தூரதேசத்திற்குச் செல்லுதல், கடல் யாத்ரைசெய்தல் இவைகள் கூடாது.

### 5. திக்கு நியமம்.

ஒரு கர்மாவுக்கு திக்குநியமஞ்சொல்லப்படாவிட்டால் கிழக்கு, வடக்கு, வடகிழக்கு இவைகளிலொன்றை உபயோகிக்கலாம். இன்னவிதஞ் செய்கிறதென்று சொல்லாதவிடத்தில் உட்கார்ந்து செய்யவேண்டியது.

### 6 பிராம்ஹண தர்மம்.

பிராம்ஹணனுக்குறிய கர்மங்கள் 6. அதாவது:- 1. அத்யயனம் செய்வதும், 2. அத்யயனஞ் செய்விப்பதும், 3. யாகஞ் செய்வதும், 4. யாகஞ் செய்விப்பதும், 5. தானங் கொடுப்பதும், 6. தானம் வாங்குவதுமாம். சூத்ரனிடமிருந்து பிரதிக்ரஹம் வாங்கக்கூடாது.

### 7. அக்னிஹோத்ரம்.

தகப்பன், தமயன் இவர்கள் அக்னிஹோத்ரஞ் செய்யாதவர்களாயிருந்தால், ஒருவனுக்கும் அக்னிஹோத்ரம் செய்ய அதிகாரமில்லை. தமயன் அனுமதி கொடுத்தால் செய்யலாம். தகப்பன் அனுமதி கொடுத்தாலுஞ் செய்யக்கூடாது.

### 8. அன்ய வேதாத்யயனஞ் செய்தல்.

**1.** தனது வேதத்தை விட்டு இதர வேதத்தை அத்யயனஞ் செய்யக்கூடாது. தன் வேதத்தை அத்யயனஞ் செய்தபிறகு இதர வேதத்தை அத்யயனஞ் செய்யலாம்.

**2.** விடியற்காலத்திலெழுந்து அத்யயனஞ் செய்தபிறகு தூங்கக்கூடாது. சூத்ரர்கள் கேழ்க்கும்படி அத்யயனஞ் செய்யக்கூடாது.

### 9. உபாகர்மம்.

**1.** க்ரஹணத்திலும், ஸங்க்ரமணத்திலும் உபாகர்மஞ் செய்யக்கூடாது. யஜுர்வேதிகள் உதயவ்யாபியான பர்வத்திலும், ருக்வேதிகள் உதயவ்யாபியான சிரவணத்திலும், ஸாமவேதிகள் ஹஸ்தநக்ஷத்திரத்திலும் உபாகர்மஞ் செய்ய வேண்டியது.

**2.** உபநயநமானபின் 6-மாதம் வரையில் க்ஷௌரஞ் செய்துகொள்ளக்கூடாது. உபாகர்மத்தில் செய்துகொள்ள வேண்டியது.

**3.** * ச்ராத்தமும் உபாகர்மமுஞ் சேர்ந்தால் உபாகர்மஞ் செய்துவிட்டு ச்ராத்தஞ் செய்யவேண்டியது. பரஹ்மசாரிகள் அன்று க்ஷௌரமுஞ் செய்துகொள்ளவேண்டும். (ஸாமமர்கள் ச்ராத்தமான பிறகே உபாகர்மஞ் செய்ய வேண்டும்.)

### 10. அநத்யயனம்.

பிரதமை, அஷ்டமி, சதுர்தசி, அமா, பூர்ணிமா இந்த திதிகளிலும், ஷஷ்டி திதிகளுக்கு முதல் இரவிலும் அத்யய

* இது சிலர் ஆசாரம். ச்ராத்தமானபிறகே செய்யவேண்டுமென பலர் கொள்கை.

னஞ் செய்யக்கூடாது. க்ரகணம், ருதுஸந்திகள், இவைகளிலும், நிமந்தரணஞ் சாப்பிட்ட தினம், ப்ரதிக்ரஹஞ் செய்த தினம், இவைகளிலும், அன்று முழுவதும் அத்யயனஞ் செய்யக்கூடாது. கொடி யேறுகிற தினத்திலும், இறங்குகிற தினத்திலுங் கூடாது. க்ரஸ்தாஸ்தமன க்ரஹண விஷயத்தில் 3-நாட்கள் கூடாது. ஸாமவேதத்வனி கேழ்க்கும்போது ருக், யஜுஸ்ஸுகளை அத்யயனஞ் செய்யக்கூடாது. மகாநவமி, ச்ரவணத்வாதசி, அக்ஷயதிருதியை, ரதஸப்தமீ, மகாபரணீ இவைகளிலும், மன்வாதி, யுகாதிகளிலுங் கூடாது.

## 11. ப்ராம்ஹணர்களுக்கு ஆபத்விருத்தி கிருஷி.

1. உழவு காளைகளை ஒரு பகலின் பாதிகாலம் வரையில் உழவு செய்யலாம். உழவு முடிந்தவுடன் அவைகளைக் குளிப்பாட்டவேண்டியதவச்யம்.

2. புருஷர்கள் ஐம்பது வயதிற்கு மேல் விவாஹம் செய்துகொள்ளவே கூடாது. நிமந்த்ரணமும் சாப்பிடக் கூடாது.

## 12. ப்ராம்ஹணர்களுக்கு ஸம்ஸ்காரங்கள்.

பராம்ஹணர்களுக்கு அவரவர்கள் ஸூத்ரத்திற் கண்டபடி 40 ஸம்ஸ்காரங்களு மதற்கதிகமாயுமுண்டு. அவைகளில் உபநயனம் வரையுள்ள ஸம்ஸ்காரங்கள் மெத்த ஆவச்யகங்கள். அதற்கு மேற்பட்டவைகள் அவ்வளவு ஆவச்யகங்களல்ல. பிரியமிருந்து செய்தால் மெத்த விசேஷம். ஏனென்றால்—பிரம்மசர்யத்திலிருந்து ஸந்யாஸம் பெறலாம் என்ற விதியிருப்பதால் உபநயனத்திற்கு மேற்பட்ட ஸம்ஸ்காரங்கள் அதிகாரத்தைப் பொருத்தவைகளென ஏற்படுகிறது.

### நாற்பது ஸம்ஸ்காரங்களாவன.

ஸ்மார்த்த கர்மங்கள் 14

ச்ரௌத கர்மங்கள் 26

### ஸ்மார்த்த கர்மங்களாவன.

1. கர்ப்பாதானம் 2. பும்ஸவனம் 3. ஸீமந்தம் 4. ஜாதகர்மம் 5. நாமகரணம் 6. அன்னப்பிராசனம் 7. சௌளம் 8. உபநயனம் 9. ப்ராஜாபத்யம் 10. ஸௌம்யம் 11. ஆக்னேயம் 12. வைச்வதேவம் 13. ஸ்நாநம் 14. விவாஹம்.

### ச்ரௌத கர்மங்களாவன.

ஐந்து தேவயக்ஞம், ஏழு பாகயக்ஞம், ஏழு ஹவிர்யக்ஞம், ஏழு ஸோமஸம்ஸ்தை ஆக 26.

### தேவ யக்ஞங்களாவன.

1. தேவயக்ஞம் 2. பித்ருயக்ஞம் 3. பூதயக்ஞம் 4. மனுஷ்யயக்ஞம் 5. ப்ரஹ்மயக்ஞம் ஆக 5.

### பாக யக்ஞங்களாவன.

1. அஷ்டகை 2. ஸ்தாலீபாகம் 3. மாஸிச்ராத்தம் 4. ச்ராவணீ 5. ஆக்ரஹாயணீ 6. சைத்ரீ 7. ஆச்வயுஜீ ஆக 7.

### ஹவிர்யக்ஞங்களாவன.

1. அக்ன்யாதாநம் 2. அக்னிஹோத்ரம் 3. தர்சபூர்ணமாஸம் 4. ஆக்ரயணம் 5. சாதுர்மாஸ்யம் 6. நிரூடபசுபந்தம் 7. ஸௌத்ராமணீ ஆக 7.

### ஸோம ஸம்ஸ்தைகளாவன.

1. அக்னிஷ்டோமம் 2. அத்யக்னிஷ்டோமம் 3. உக்த்யம் 4. ஷோடசி 5. வாஜபேயம் 6. அதிராத்ரம் 7. அப்தோர்யாமம் ஆக 7. ஆக மொத்தம் 40.

2. ஸ்மார்த்தகர்மாவில் நிஷ்கரமணம் அதாவது சந்த்ர தர்சனம், சூர்யதர்சனம் இவை இரண்டையும் சேர்த்து 16 கர்மங்களென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த இரண்டையும் விலக்கி பிரேதகர்மம், ஸபிண்டீகரணம் இந்த இரண்டையும் சேர்த்து 16 என்று சிலரும், இந்த நாலையும் சேர்த்து 18 என்றும் ஆக ஸ்மார்த்த சிரௌத கர்மங்கள் 44 என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

## 13. ருது காலம்.

ருதுவான தினம்முதல் 16 தினம் வரையில் ருது காலமென்று பெயர். அதில் முதலில் 4 தினங்கள் நீங்கலாகவும், பிறகுள்ள தினங்களில் அஷ்டமி, ஏகாதசி, திரயோதசி, சதுர்தசி, அமா, பூர்ணிமா, சதுர்த்தி, ஷஷ்டி இந்த திதிகள் நீங்கலாகவும் ஸ்திரீகளைக் கூடலாம். வியாழன், சனி, புதன் இந்தக் கிழமைகளும், சிரவணம், ரோகிணி, ஹஸ்தம், அனுஷம், ஸ்வாதி, ரேவதி, மூலம், உத்திரம், சதயம் இந்த நக்ஷத்ரங்களும், விருஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, கும்பம், மீனம் இந்த லக்னங்களும் நிஷேகத்திற்கு ச்லாக்யங்களாம். கேட்டை, மிருகசீர்ஷம், புனர்பூசம், இவை மத்தியமம். ருதுகாலத்தில் இரட்டித்ததினமானால் புத்ரனும், ஒற்றைப்படை தினமானால் பெண்ணும் உண்டாகும். ருதுகாலங்களில் ஸ்திரீகளைச் சேராவிடில் மகாதோஷமுண்டு.

## 14. பும்ஸவனம்.

ஸ்திரீகளின் கர்ப்பமானது நன்றாய் தெரியும்போது, அதாவது:— 3 அல்லது 4-வது மாதத்தில் பூசநக்ஷத்திரத்தில் "பும்ஸவனம்" செய்யவேண்டியது. கர்ப்பத்திலிருக்

கும் சிசு புரள்வதற்கு முன், ஹஸ்தம், மூலம், ச்ரவணம், புனர்பூசம், பூசம், மிருகசீர்ஷம் இந்த நக்ஷத்திரங்கள் புருஷ நக்ஷத்ரங்களாகையால் இவைகளில் "**பும்ஸவனம்**" செய்ய வேண்டியது. இதை கர்ப்பம் தோறுஞ்செய்யவேண்டும். முதல் கர்ப்பத்திற்குச் செய்வது போதுமென்று சிலர் கொள்கை. ஆனால் இந்த கர்ப்பம் புருஷப்பிரஜையாகப் பிறக்க வேண்டுமென்று அபேக்ஷிக்கின்றவன் ஒவ்வொரு கர்ப்பத்திலும் "**பும்ஸவனம்**" செய்யவேண்டியது

## 15. ஸீமந்தம் முதலிய ஸம்ஸ்காரங்கள்.

1. கர்ப்பத்தின் 4, 6, 8-வது மாதத்தில் ஸீமந்தம் செய்யவேண்டியது. 6-வது மாதம் முதல் ப்ரஸவம்வரையிலுஞ் செய்யலாம். இந்த ஸம்ஸ்காரம் ஸ்திரீகளுக்கு சுத்தியைத் தருவதால் முதல் கர்ப்பத்திற்கே போதுமானது. அன்றியும், சிசுவிற்குஞ் சுத்தியைக் கொடுக்குமாதலால் ஒவ்வொருகர்ப்பத்திற்குஞ் செய்யவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். "**ஸீமந்த மென்ற ஸம்ஸ்காரம்**" ஸ்திரீகளுக்கு மெத்த ஆவச்யகமாதலால் புருஷன் தேசாந்திரஞ் சென்றிருந்தாலும், மறித்தாலும், மைத்துனன், குரு, கிட்டின தாயாதன் இவர்களைக்கொண்டாவது ஷை ஸம்ஸ்காரத்தை அவச்யஞ்செய்ய வேண்டியது.

2. **ஜாதகர்மம்:**— ஒருவனுக்கு "சிசு" பிறந்தால் உடனே ஸ்நாநஞ்செய்து தானம் முதலியவைகளைச் செய்யவேண்டும். புத்ர ஜனன தினம் முழுமையும் அவன் சுத்தனாகையால் அவன் தானஞ்செய்வதும், அவனிடம் ப்ரதிக்ரஹம் வாங்குவதுங் குற்றமாகமாட்டாது. மரணாசௌச மத்தியில் பிள்ளை பிறந்தால் தீட்டுப்போன பிறகு "**ஜாதகர்மம்**" செய்ய

வேண்டியது. ஜநநாசௌளவம் நேர்ந்த ஸமயத்தில் புத்ரன் பிறந்தால் உடனே முறைப்படி **"ஜாதகர்மம்"** செய்யலாம்.

3. ஆசௌசம் நேரிட்ட ஸமயங்களில் புத்ரன் பிறந்தால், ஜனகன் அச்சமயம் ஆசௌசத்திலிருந்து விடுபட்டு சுத்தியைப் பெறுகிறான்.

4. **நாமகரணம்:—** பிறந்ததுமுதல் 11-வது தினத்திலாவது, முதல் வருஷ முடிவிலாவது பிறந்த குழந்தைக்குப் பெயர் வைக்கவேண்டும். குலதைவத்தின் பெயரையும், முன்னோர்களின் பெயரையும் வைப்பது ச்லாக்யம்.

5. **காது குத்தல்:—** சித்திரை, கார்த்திகை, தை, பங்குனி இந்த மாதங்களில் சுக்லபக்ஷத்தில் நல்லதினம் பார்த்து, பல் முளைத்தவுடனும், தாயின் மடியில் ஏறி இறங்கத்திறமை வந்தபோதும், ஊசியில் பட்டைக்கோர்த்து அதை ஸமமாய் இரட்டையாகச் சேர்த்து குத்தவேண்டும்.

6. **சூர்ய சந்த்ர தர்சனகாலம்:—** மூன்றாவது மாதத்தில் குழந்தையை அறை, கூடம், தொட்டில் இவைகளினின்று மெடுத்து சூரியனுக்குக் காட்டவேண்டும். அதாவது—சூர்ய தர்சனஞ் செய்துவைக்கவேண்டியது. அவ்விதமே நான்காவது மாதத்தில் சந்த்ரதர்சனமுஞ் செய்துவைக்கவேண்டியது.

7. **அன்னப்ராசனம்:—** 6-வது மாதத்தில் **'அன்னப்ராசனஞ்செய்யவேண்டும்'** அமுதூட்டுதல் விதிமுறைப்படி நடத்தவேண்டும். அன்னத்துடன் தயிர், நெய், தேன் இவைகளைச்சேர்த்து ப்ராசனஞ் செய்துவைக்கவேண்டும்.

8. **சௌளம்:—** மூன்றாவதுவயதில் விதிப்படி குடுமி வைக்கவேண்டியது. தாயார் கர்ப்பவதியாயிருந்தால் கூடாது. ஞாயிறு, செவ்வாய், சனி, பிரதமை, சதுர்த்தி, நவமி,

ஷஷ்டி, சதுர்தசி, கார்த்திகை, பூரட்டாதி, உத்திரட்டாதி இவைகள் கூடாது. அச்வதி, திருவோணம், ஸ்வாதி, சித்திரை, பூசம், புனர்பூசம், அவிட்டம் இவைகளில் செய்யலாம். ஜந்மநக்ஷத்ரங் கூடாது.

9. **ஸ்திரீகளுக்கு விவாஹமே உபநயன ஸ்தானீயம்.** அதற்கு முந்திய எல்லா ஸம்ஸ்காரங்களுமுண்டு. அவைகளை மந்த்ரமன்னியில் செய்யவேண்டியது. ஸ்வகாலத்தில் செய்யாவிட்டால் ப்ராயச்சித்தமுமுண்டு.

10. **அக்ஷராப்யாஸம்:—** 5-வது வயது வந்தபிறகு விஷ்ணு விழித்திருக்கும் மாதங்களில் அக்ஷராப்யாஸஞ் செய்து வைக்கவேண்டியது. உத்தராயணம் ச்லாக்யம். மாசிமாதங் கூடாது. ஆடி மாதம் நலம். செவ்வாய், சனி கூடாது. திருவோணம், ஹஸ்தம், பூசம், மிருகசீர்ஷம், அவிட்டம், ஸ்வாதி, சதயம், அனுஷம், கேட்டை, சித்திரை இந்த நக்ஷத்ரங்கள் ச்லாக்யம். ஹரி, லக்ஷ்மி, பார்வதி, ஸரஸ்வதி, மஹர்ஷி, வித்யை இவர்களைப் பூஜித்து ஆஜ்யாஹுதிசெய்ய வேண்டியது. பிறகு பிராம்ஹணபூஜை செய்யவேண்டியது. குமாரன் மேற்கு முகமாயும், குரு கிழக்கு முகமாயும் உட்கார்ந்துகொண்டு அக்ஷராப்யாஸஞ் செய்வித்தல் வேண்டும். பிரதமை, அஷ்டமி, அமா, பூர்ணிமா, இவை அனத்யயன தினங்களாகையால் இவைகளில் ஒருபோதும் படிக்கக்கூடாது.

11. உபநயனம் ஏற்படுவதற்கு முன் பாலர்களுக்கு விதி நிஷேதங்கள் கிடையாது. ஆனல், கட்குடிப்பது முதலான மகாபாதகங்களைச்செய்ய விடக்கூடாது.

12. 5 வயதிற்கு மேற்பட்டவர்களை அவரவர்களிஷ்டப்படி செய்யவிடாமல் ஆச்ரமத்திற்குத் தக்கவாறு நடத்தப்

பெற்றோர்கள் முயலவேண்டும். 6 வயதிற்குட்பட்டவர்களை சண்டாளன், ரஜஸ்வலை இவர்கள் தொடுவதினால் அசுத்தி ஏற்படாது. உபநயனத்திற்கு முன் நியமமில்லை.

## 16. உபநயனமுதற்கொண்டுள்ள ஸம்ஸ்காரங்கள்.

1, கர்ப்பத்திலிருந்து 8-வது வயதில் ப்ராம்ஹணர்களுக்கு "உபநயனம்" செய்யவேண்டும். வஸந்தகாலம் ச்லாக்யம், தை, மாசி, பங்குனி மாதங்கள் நல்லது. அனத்யாயதினமும், ஸங்க்ரமணமுங்கூடாது. நிமித்தம்பற்றி வருவதை அனத்யயன தினத்திலுஞ்செய்யலாம். ஜ்யேஷ்ட மாஸத்தில் ஜ்யேஷ்டபுத்ரனுக்கு உபநயனஞ்செய்யக்கூடாது. சந்த்ரன் குறைவுபடும்போதும், சுக்ரன் 8-வதிடமிருக்கும்போதும், சூரியன் ராசியின் முதற்பாகத்திலிருக்கும்போதும், அனத்யாயங்களிலும், திரயோதசி, சதுர்தசி, பர்வ, ப்ரதமை, சதுர்த்தி, ஸப்தமி, அஷ்டமி, நவமி, ஏகாதசி இவைகளிலும், சாகாதீசனுடைய அஸ்தமயகாலத்திலும் உபநயனஞ்செய்வது கூடாது. ருக்வேதத்திற்கு ப்ருஹஸ்பதியும், யஜுர்வேதத்திற்குச் சுக்ரனும், ஸாமவேதத்திற்கு அங்காரகனும், அதர்வவேதத்திற்கு புதனும் அதீசர்கள். ஸ்வசாகாதீசனுடைய கிழமையில் உபநயனம் செய்வது மெத்த நல்லது. தன் சாகாதிபன் வலுத்து கேந்திரத்திலிருக்கும்போது, அதாவது— லக்னத்திற்கு 4, 7, 10 ல் இருக்கும்போது, உபநயனம் செய்தல் சுகத்தைக்கொடுக்கும்.

2. உபநயனத்திற்கு 16-வயதுவரையில் கௌணகாலமானாலும், 8-வயதிற்குமேல் ப்ராயச்சித்தம் செய்தே உபநயனம் செய்யவேண்டும். 16-வயதிற்குள் உபநயனம் செய்யாவிட்டால் அவனுக்கு ப்ராம்ஹண்யம் போய்விடும். அத்ய

யனஞ்செய்வது முதலான ஒரு வைதிககர்மத்திற்கும், தான ப்ரதிக்ரஹங்களுக்கும் அவன் அர்ஹனல்ல.

3. **பூநூல் நூற்க அதிகாரமுள்ளவர்கள்:—** சுமங்கலி, கன்னிகை, அல்லது விதவை இவர்கள் பருத்தியினால் நூர்க்க வேண்டும்.

4. **யக்ஞோபவீதம் செய்யும் முறை:—** சுத்தமான இடத்தில் உட்கார்ந்து வலது கையின் நாலு விரல்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு அதில் அந்த நூல்களை மூன்று இழைகளாக 96 தடவை சுற்றினால் அது பூநூலாகும். அதற்குத்தான் "**ஷண்ணவதி**" என்று பெயர். அதை தீர்த்தத்தால் சுத்திசெய்து முறுக்கி மூன்றாகமடித்து முறுக்கி ஆற்றியெடுத்தால் ஒன்பது தந்துக்களுடன் ஓர் ஸரமாகும். அதை மூன்று வளையமாகச்செய்து வலம்புரியாய் முடிபோடவேண்டும். அதற்குத்தான் "**யக்ஞோபவீதம்**" என்று பெயர். அது தொப்புள் வரையிலும் நீளமுள்ளதாயிருக்கவேண்டும். அதற்குக் குறைந்தால் ஆயுஸ்ஸைக் குறைக்கும். அதிகமாயிருந்தால் செய்யுங் கர்மங்கள் நஷ்டமாகும்.

5. கிருஹஸ்தன் 3-வது வஸ்த்ரம் தரித்துக்கொள்ள வேண்டும். ஸௌகர்யப்படாவிட்டால் அதற்குப் பதிலாக மூன்றாவது பூநூலைத்தரிக்கலாம். இரண்டுமில்லாமலிருக்கவேகூடாது. இருந்தாலோ? அவன் சூத்திரத் தன்மையை அடைந்து நாயாகப்பிறப்பான். கோபத்தால் பூநூலை அறுத்துக்கொண்டால் மூன்று, அல்லது ஒன்றாவது க்ருச்ரம் செய்து உடனே பூநூலைத் தரிக்கவேண்டும். யக்ஞோபவீதத்தில் உரோமமிருந்தால் அதை உடனே எடுத்தெறிந்துவிட்டு 10 தடவை "**காயத்ரியை**" உச்சரித்து தீர்த்தத்தினல் அலம்பவேண்டும். பூநூலுக்கு முடி போடும்பொழுது ஹரி

ஹரப்ரம்ஹாதிகளை நமஸ்கரிக்கிறேனென்று சொல்லவேண்டும். பூநூலின் 96 சுற்றுகளில் ஒவ்வொன்றும் நாலங்குலமிருக்கவேண்டும்.

6. 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌧𑌾𑌰𑌣𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ॥

𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍇𑌰𑍍𑌯
𑌤𑍍𑌸𑌹𑌜𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 । 𑌆𑌯𑍁𑌷𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍁𑌞𑍍𑌚 𑌶𑍁
𑌭𑍍𑌰𑌂 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌂 𑌬𑌲𑌮𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇𑌜𑌃 ॥

𑌜𑍀𑌰𑍍𑌣𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ॥

𑌉𑌪𑌵𑍀𑌤𑌂 𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑌨𑍍𑌤𑍁(𑌂) 𑌜𑍀𑌰𑍍𑌣𑌂 𑌕𑌶𑍍𑌮𑌲𑌦𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌸𑍃𑌜𑌾𑌮𑌿 𑌜𑌲𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑌰𑍍𑌚𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌯𑍁𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇 ॥

7. **தண்டம்:**— பில்வம், புரசு, உதும்பரம், அச்வத்தம் இவைகளை தண்டத்திற்கு உபயோகிக்கலாம். அந்த தண்டம் அவரவர்களின் தலைமட்டம் இருக்கவேண்டும்.

8. **அஜினம்:**— ப்ரம்ஹசாரிகள் கிருஷ்ணமிருகத்தின் தோலை உபவீதமாக தரிக்கவேண்டும். கோவின் சர்மாவையும் உபயோகப்படுத்தலாம்.

9. **மௌஞ்சீ:**— ப்ரம்ஹசாரிகள் முஞ்சிக்கயறை மூன்று சுத்தில் இடுப்பில் தரிக்கவேண்டும். அதில் கௌபீனங் கட்டிக்கொள்ளக்கூடாது. முஞ்சிப்புல் கிடைக்காவிட்டால் நாணலை உபயோகிக்கலாம்.

10. **உபநயனகாலநியமம்:**– உபநயனகாலத்திற்கு முன், பட்டுதரித்து உபநயனகாலத்தில் வெண்மையான வஸ்த்ரம்புதிதாக தரிக்கவேண்டும். கௌபீனமும் தரிக்கவேண்டும். 4-வது தினத்தில் எல்லாவற்றையும் விஸர்ஜனம் செய்துவிட்டு மறுபடியும் கௌபீனம் முதல் புதிதாக தரிக்கவேண்டியது. கௌபீன

மில்லாமல் ஒருபோதுமிருக்கவே கூடாது. ப்ரம்ஹசாரிகளுக்கு சாயவஸ்த்ரம் கூடாது.

11. கிருஹஸ்தனுக்கும் ப்ரம்ஹசாரியைப்போல் கடி ஸூத்ரம் ஆவசியகம். அதில்லாமல் செய்யப்படுங் கர்மங்கள் நிஷ்ப்ரயோஜனங்கள். அவன் நக்னன் என்று சொல்லப்படுவான்.

12. உபநயனகாலத்தில்பிக்ஷைவாங்குவது:- முதலில் தாய், ஸஹோதரி, தாயுடன் பிறந்தவர்கள், தகப்பனுடன் பிறந்தவர்கள், அன்பானபந்துக்கள் இந்த வரிசையாய் கேழ்க்கவேண்டும். விதவை, கர்ப்பிணி இவர்களைக் கேழ்க்கக் கூடாது.

13. அன்னபிக்ஷாசரண நியமம்:— அன்னபிக்ஷை எடுக்கும் ப்ரம்ஹசாரியை அதட்டிக்கடிந்து பேசக் கூடாது. பிக்ஷையெடுப்பவன் தன் ஆகாரத்திற்கு மிஞ்சி எடுக்கக்கூடாது. அப்படி எடுத்து மீந்துவிட்டால் அதை பூமியில் புதைத்துவிடவேண்டியது. அல்லது தண்ணீரில் கரைத்துவிடவேண்டும். குரு, அவர் தாயாதி, தன் தாயாதி, அம்மான் முதலிய பந்துக்கள் வீட்டில் பிக்ஷை எடுக்கக் கூடாது. பிக்ஷை, ஊறுகாய், கறி இவைகளை உபபாத்ரமன்றி கையினுல் கொடுப்பது கூடாது.

14. ப்ரம்ஹயக்ஞம்:— உபநயன தினம் முதல் மறுநாள், அல்லது நாலாவது நாளிலிருந்து ஸந்த்யாவந்தனத்தைப் போல் ப்ரஹ்மயஜ்ஞத்தையும் நித்யம் செய்யவேண்டியது.

15. ஸமிதாதானம்— ப்ரம்ஹசாரிகள் இரு ஸந்த்யா காலங்களிலும் ஸமிதாதானம் செய்யவேண்டியது.

16. காலாதீதப்ராயச்சித்தம்:— ஒவ்வொருகர்மாவும் அததற்கேற்பட்டகாலத்தில் செய்யப்படாவிட்டால் ப்ரா

யச்சித்தபூர்வகமாய் ஷை கர்மாவைச் செய்துவிட்டு அடுத்த கர்மாவைச் செய்யவேண்டும். சௌளத்தில் 50-ப்ராம்ஹணர்களுக்கும், உபநயனத்தில் 100 ப்ராம்ஹணர்களுக்கும், விவாஹத்தில் சக்திக்குத் தக்கபடியும், ஆதானத்தில் 100-பேருக்கும், ருதுசாந்தியில் 10, 12-ப்ராம்ஹணர்களுக்கும், பும்ஸவன ஸீமந்தங்களில் வெகுபேர்களுக்கும் அன்னமிடவேண்டியது. கர்ப்பாதானத்தில் இரண்டு பிராம்ஹணர்களுக்கு அன்னமிட்டு அன்று அவளைக்கூடவேண்டும்.

17. பத்னீ ரஜஸ்வலையாயிருந்தால் நாந்தி செய்யக்கூடாது.

18. **சௌளாதி கர்ம்மாக்கள் செய்யக்கூடாத காலம்:**-- தாயார் ரஜஸ்வலையாக இருந்தாலும், அல்லது 5 மாதத்திற்கு மேல் கர்ப்பமாயிருந்தாலும், சௌளம், உபநயனம், விவாஹம் ஒன்றும் செய்யக்கூடாது. உபநயனஞ் செய்துவைக்கிறவனுடைய பாரியாள் 6 மாதத்திற்குமேல் கர்ப்பவதியாய் இருக்கக்கூடாது.

19. **உபநயனஞ்செய்யத் தகுந்தவர்கள்:**-தகப்பன், பாட்டன், ஸஹோதரன், ஜ்ஞாதிகள், ஸமான ப்ரவரமுள்ள ஸகோத்ரர்கள் இவர்கள் உபநயனம் செய்விக்கலாம். முன் சொன்னவர்களில்லாவிடில் ஸ்வஸூத்ரக்காரர்களும், கிட்டின பந்துக்களும் செய்யலாம். பெண்டிழந்தவன் உபநயனம் செய்வதில் அதமனுவன்.

20. **யமளோத்பவர்களின் ஜாதகர்மாதி விதி:**

1. ஒரே தாயின் வயற்றில் இரட்டையாகப் பிறந்த பிள்ளைகளுக்கு ஒரே லக்னத்தில் ஒரே வேதியில் ஒரே ஆசார்ய

னால் ஜாதகர்மம் முதல் உபநயனம் வரையில் செய்யப்படவேண்டும். இரண்டும் பிள்ளையானாலும், பெண்ணாகயிருந்தாலும், ஒன்று பெண்ணும் ஒன்று ஆணாகயிருந்தாலும், வைதிகங்கள் ஒரேவேதிகையில் ஒரே ஆசார்யனால் செய்யப்படவேண்டியது.

2. ஒருவனுக்கு இரண்டு பார்யைகளிடத்தில் ஒரே லக்னத்தில் ஜனித்த குழந்தைகளுக்கும் ஒரே லக்னத்தில் செய்யவேண்டியதாயிருந்தால், இரண்டு வேதிகைகளில் இரண்டு ஆசார்யர்கள் செய்யவேண்டியது. நாந்தியையும் தனித்தனியாய் செய்யவேண்டியது.

21. **நமஸ்காரஞ்செய்யத் தகாதவர்கள்:—** வயதில் சிறியவர்களான, சிறிய தகப்பன், மாமன், மாமனார் இவர்களை நமஸ்காரம் செய்யக்கூடாது. ஆனால், எழுந்து மரியாதை செய்யவேண்டியது.

22. **விவாஹத்திற்குரிய கன்யா லக்ஷணம்:—**

1. செம்பட்டை மயிருள்ளவள், புருஷனைக் காட்டிலும் பருமனுள்ளவள், தேகமாத்யந்தம் உரோமமுள்ளவள், தலைமயிர் அதிகமில்லாதிருப்பவள், பூனைக்கண்ணுடையவள், தலைமயிர்போல் கருநிறமுள்ளவள், நக்ஷத்ரம், நதீ, வ்ருக்ஷம், மலை இவைகளின் பெயருள்ளவள், வெள்ளை நிறமுடையவள், சாதாரண உயரத்திற்குமேல் நெட்டையாகவாயினும், குட்டையாகவாயினுமிருப்பவள், மீசையுடையவள், கரகர ஸ்வரமுடையவள், பயங்கரமான பெயருடையவள், கர்ஜிக்கும் ஸ்வரமுடையவள், காக்கைக் குறலையொத்த குறலையுடையவள், வட்டமான கண்களையுடையவள், தேகமெங்கும் துர்நாற்றமுடையவள், முறுக்கிக்கோணலாயுள்ள பற்களையுடையவள், புருவங்கள் ஒன்றாய்க்கூடியிருப்பவள், காலிலாவது கையிலாவது ஆறுவிரல்

களையுடையவள், இத்யாதி அவலக்ஷணங்களுள்ள கன்னிகைகள் விவாஹத்திற்குக்கூடாது

2. ஒருவனுக்கு ஒரே பெண்ணயிருப்பவளையும் விவாஹம் செய்யக்கூடாது.

3 பிள்ளையின் வயதிற்கு பெண்ணின் வயது 1-வது குறைந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் சாஸ்த்ர ஸம்மதமில்லை.

## 23. கன்யகாதான கர்த்தா.

1. தகப்பன், பிதாமஹன், ஸஹோதரன், தகப்பனுடன் கூடப்பிறந்தவர்கள், மாதாமஹன், மாமன், ஸகோத்ரன், பந்து இவர்கள் ஒரு கன்யகையை தானஞ்செய்ய அதிகாரமுள்ளவர்கள். இவர்களில்லாவிடில் ஸ்வஸூத்ரிகளும், கிட்டின பந்துக்களும் செய்யலாம்.

2. ரோகமுள்ளவன், பைத்யமுள்ளவன் இவர்கள் தானம் செய்யக் கூடாது.

**24. சுபகாலங்களில் செய்யவேண்டியது:—** வீடுகளில் சுபம் நடந்தால் பெண்கள், ஸஹோதரிகள் முதலானவர்களுக்குப் புடவை வாங்கிக்கொடுக்கவேண்டும். பெண்ணிற்குச் சொந்தமான புடவைகளை தாயார் ஒரு பொழுதும் உபயோகிக்கக்கூடாது.

## 25. இரண்டு சோபன விஷயம்.

1. ஒரேகாலத்தில் இரண்டு சோபனங்கள் செய்யக்கூடாது. புத்ரனுக்கு விவாஹமும், புத்ரிக்கு விவாஹமும், ஒரே ஸமயத்தில் செய்யக்கூடாது. ஒரே வருஷத்தில் இரண்டு பெண்களுக்கு விவாஹஞ்செய்வது கூடாது. 6 அல்லது

3 மாதங்களாவது சென்றபின் செய்யலாம். அதிலும் வர்ஷ பேதமிருப்பது ச்லாக்யம்.

2. புத்ரனுக்கு விவாஹம் செய்து 6 மாதத்திற்குப் பிறகுதான் பெண்ணிற்கு விவாஹம் செய்யவேண்டும்.

3. புத்ரியின் விவாஹத்திற்குப் பிறகு புத்ரனுக்கு உபநயனம் செய்யக்கூடாது. இரண்டு புத்ரர்களுக்குச்சேர்த்து உபநயனம் செய்யக்கூடாது.

4. பொதுவாக ஒரு சோபனத்துடன் மற்றொரு சோபனம் செய்யக்கூடாது.

5. எந்தக் காரணத்தினாலாவது இரண்டு சோபனம் செய்யும்படி நேர்ந்தால் ஆசார்யர்கள் வெவ்வேறாக இருக்க வேண்டும்.

6. ஒரு தாய் வயிற்றில் பிறந்த புத்ரன் புத்ரிகளுக்கு ஒரு தினத்தில் விவாஹம் செய்யும்படி நேர்ந்தால் வேறு க்ராமத்திலாவது, அல்லது வேறுமண்டபத்திலாவது, வேறு லக்னத்திலாவது செய்யவேண்டியது

26. ஸ்வீகார புத்ரர்களின் விவாஹ விஷயம்.

1. கோத்ரத்வயம் பித்ர்யாஜ்யம் தத்தஸ்ய து விஶேஷத: ।
க்ருதேநைவ வ்ருதேநைவ தஸ்ய வம்ஶோத்ரா ந தோஷபாக் ॥

என்ற வசனப்படி ஸ்வீகாரபுத்ரனுடைய விவாஹத்தில் ஸ்வீகாரவம்சத்தின் கோத்ரமும், பிறந்த வம்சத்தின் கோத்ரமும், இந்த 2-கோத்ரங்களின் ப்ரவர ரிஷிகள் ஸம்பந்தப்பட்ட கோத்ரங்களும் நீங்கலாக மற்ற கோத்ரங்களில் விவாஹம் செய்யலாம்.

2. ஸ்வீகாரம் செய்துகொண்ட பிறகு ஔரஸன் பிறந்தால் ஊத்தன் வயதில் பெரியவனுயிருந்தாலும் கனிஷ்டனுகிறான். ஔரஸனுக்கு விவாஹமான பிறகுதான் ஊத்தனுக்கு விவாஹம் செய்யவேண்டும்.

## 27. ஸபத்னீபுத்ரர்களின் விவாஹ விஷயம்.

1. ஸபத்னீபுத்ரர்களுக்கு ஜனனத்தை யொட்டி ஜ்யேஷ்டத்வ மேற்படுவதால் தகப்பன் ஜீவதசையிலிருக்கும் வரையில் வயதின் க்ரமத்தின்பேரில் மூத்தவனுக்கு விவாஹம் செய்யவேண்டும். தகப்பன் இறந்த பிறகு நியமங்கிடையாது.

## விவாஹம்.

2. ஸீமந்தஜபுத்ரனுக்கும், ஸீமந்தஜபுத்ரிக்கும் ஆனி மாதம், ஜந்மமாதம், ஜந்மதிதி, ஜந்மநக்ஷத்ரம், ஜந்மவாரம் இவைகளில் விவாஹாதி சுபமுகூர்த்தங்கள் செய்யக்கூடாது.

3. விஷ்ணுசயனகாலம். அதாவது:—ஆஷாடசுத்த ஏகாதசிமுதல் கார்த்திக சுத்த ஏகாதசி வரையில். அதாவது:— சயன ஏகாதசி முதல் உத்தான ஏகாதசி வரையில் உபநயனம் விவாஹம் முதலியன செய்யக்கூடாது.

4. அந்தந்த ஊர்களின் தேவதைகளுக்கு உத்ஸவம் நடக்கும்போது விவாஹம் முதலியன செய்யவே கூடாது. உத்ஸவம் முடிந்த பிறகே செய்யவேண்டியது.

5. மாற்றுக்கு மருதலே விவாஹங் கூடாது.

6. ஒருவனுக்கே இரண்டு பெண்களையும் விவாஹஞ் செய்து கொடுக்கக் கூடாது.

7. ஒருவனுடைய இரண்டு பிள்ளைகளுக்கு மற்றொரு வனுடைய இரண்டு பெண்களையும் விவாஹம் செய்து கொடுக்கக் கூடாது.

## 28. ஔபாஸநமும், ஸ்தாலீபாகமும்.

1. ஔபாஸனம்:— ராத்திரி 9 நாழிகைக்குள் ஆரம்பிக்கவேண்டியது. அக்காலந் தவறினால் மறுநாள் ராத்ரியில் தான் ஆரம்பிக்கவேண்டும்.

2. முதலில் பௌர்ணமாஸஸ்தாலீபாகம் செய்து பிறகு ஊஸஷ்ஸ்தாலீபாகம் செய்யவேண்டியது. க்ருஷ்ணபக்ஷத்தில் விவாஹம் நடந்தால் சதுர்தசிவரையில் பௌர்ணமாஸஸ்தாலீபாகத்தைச் செய்து, பிறகு ஊர்சஸ்தாலீபாகத்தைச் செய்யலாம். ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி இந்த மாதங்களில் ஸ்தாலீபாகாரம்பம் செய்யக்கூடாது.

விவாஹம் செய்த ஆறு மாஸத்துக்குள் ஸ்தாலீபாகம் செய்யவேண்டியது. செய்யப்படாவிட்டால் பிறகு செய்யும் ஸ்தாலீபாகத்தில் புனர்விவாஹம் செய்யவேண்டியது. இந்தப் புனர்விவாஹத்தில் அடியிற்கண்டவைகளை விலக்கி ஊநாதிவ்ருத்தியைமட்டும் செய்யவேண்டியது.

(ஶாஜம் யொக்ஷம் தயா ஸஷுத்ரம் ஸ்நாநம் வஸ்த்ரம் ஹவெத்தயா । யாநாவஷேவஷெம் ஶிஶாரோஹம் க்ஷவாஹ்யம் யஷுவஜேந்நு ॥)

வௌணஷோஸ ஸ்தாலீபாகத்தை வம்வஜிவரையிலும் ஊஸஷ்ஸ்தாலீபாகத்தை அதற்கு அடுத்த வம்வஜிவரையிலும் செய்யலாம். இரண்டிலும் திரயோதசிவரையிலும் செய்ய

லாம் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

3. ஔபாஸனம் விட்டுப்போனால்:— (க்ருஹஸ்தர்களுக்கு) ஔபாஸநாக்னி இல்லாவிட்டால் விதுராக்நிஸந்தாநம் செய்துகொண்டு ஔபாஸனஞ் செய்து 4 ஆஹுதிகள் செய்யவேண்டும். பத்னியில்லாதவர்கள் வ்யாஹ்ருத்யக்நிஸந்தாநஞ் செய்துகொண்டு 2 ஆஹுதிகள் செய்யவேண்டும்.

## 29. ஔபாஸநாக்நியில் செய்யவேண்டிய கார்யங்களும், லௌகிகாக்நியில் செய்யவேண்டிய கார்யங்களும்.

1. ஸீமந்தம், 2. பார்வணஸ்தாலீபாகம், 3. பும்ஸவநம், 4. நித்யஹோமம், 5. வைஸ்வதேவம், 6. ஶாலீஶ்ராவணம், 7. அஷ்டகா, 8, ஶம்யாநபலி:, 9. ஸர்ப்பபலி: இவைகளை ஔபாஸநாக்நியில் செய்யவேண்டியது.

1. சௌளம், 2. ஜாதகர்ம, 3. கோதாநம், 4. ஸ்நாநம், 5. உபநயநம், 6. வ்ரதங்கள், 7. ராஜஹோம:, 8, ஸமிதாதாநம் இவைகளை லௌகிகாக்நியில் செய்யவேண்டியது.

ஸீமந்த: பார்வணஸ்தாலீபாக: பும்ஸவ: பாகபூர்ணம் ததா । பாகயஜ்ஞாஶ்ச க்ருஹ்யாக்நௌ கார்யா: கந்யாதிலௌகிகே ॥ நித்யஹோமோ வைஸ்வதேவம் ஶாலீஶ்ராவணம் ஏவ ச । அஷ்டகா ஶம்யாநஸர்ப்பஜ்யா: பாகயஜ்ஞா: ப்ரகீர்த்திதா: ॥

சௌளம் ஜாதககோதாநே ஸ்நாநோபநயநே வ்ரதம் । ராஜஹோமஸமித்தாநம் லௌகிகாக்நௌ விதீயதே ॥

## 30. தள்ளிவிடத்தகுந்த ஸ்திரீகளும், புனர்விவாஹவிஷயமும்.

1. ஸுராபானஞ்செய்பவள், ஸாதுக்களால் நிந்திக்கப் படுபவள், புருஷனுக்கே கெடுதிசெய்பவள், தீராதரோகமுடையவள், வேலையாட்களைத் தொந்திரவுசெய்பவள், சிறுதனம் விற்பவள், வீட்டுப் பண்டத்தை பாழாக்குகிறவள், பிள்ளை பெறாதவள், பெற்றுப்பெற்று சாகக்கொடுப்பவள், பெண் குழந்தைகளையே பெறுபவள், புருஷனை மனம் நோகும்படி பேசுகிறவள், த்வேஷங்கொண்டவள், இத்யாதி துர்க்குணங்கள் அமைந்த ஸ்திரீகளைத் தள்ளிவிட்டு வேறுவிவாஹஞ் செய்துகொள்ளலாம். மேற்கண்ட காரணங்களன்றி ஸ்திரீயைத் தள்ளி வேறு மணந்தால் குலம் நசித்துவிடும்.

2. பிள்ளை பெறாதவளை 10 வருஷம் பார்த்துக்கொண்டும், பெண்களையே பெறுபவளை 12 வருஷம் பார்த்துக் கொண்டும், பெற்றுப்பெற்று சாகக்கொடுப்பவளை 15 வருஷம் பார்த்துக்கொண்டும் வேறு விவாஹஞ் செய்யலாம்.

3. நற்குணம், நன்னடக்கை உள்ளவளுக்கு ரோகம், மலடித்தன்மை முதலிய தோஷங்கள் ஏற்பட்டாலும் அவளை ஸந்தோஷிப்பித்து அவள் அநுமதியின்பேரில் வேறு விவாஹஞ் செய்துகொள்ளலாம்.

4. மூன்றாவது விவாஹஞ் செய்யக்கூடாது. அப்படிச் செய்வதாகயிருந்தால் மூன்றாவதாக அர்க்க விவாஹஞ்செய்து நான்காவது விவாஹஞ் செய்யலாம்.

## 31. ஸஹோதரர்களின் விவாஹவிஷயம்.

1. மூத்தவனுக்கு விவாஹஞ் செய்யாமல் இளைய

வனுக்கு விவாஹம் செய்வது கூடாது. ஆனால் மூத்தவன் நபும்ஸகன், தீராத ரோகமுடையவன், கூன், குருடு, செவிடுள்ளவன், பைத்யம் பிடித்தவனாகவாவது இருந்தால் விவாஹஞ் செய்யலாம்.

2. மேற்கண்ட குறைவில்லாத மூத்த ஸஹோதரன் தேசாந்தரம் போயிருந்தால் 12 வருஷகாலம் அவன் வரவை எதிர்பார்த்திருக்கவேண்டும். அப்படியே மூத்தபெண் விவாஹமில்லாமலிருந்தால் இளையவளுக்கு விவாஹஞ்செய்யக் கூடாது.

## 32. பார்யை பர்த்தாவினிடத்தில் இருக்கவேண்டிய முறை.

1. பர்த்தா தரித்ரனாகயிருந்தாலும், ரோகியாகயிருந்தாலும், மூர்க்கனாகயிருந்தாலும் அவனை பார்யை அவமதிப்பாளானால், அவள் அடிக்கடி நாய், பன்றி பேடுகளாகப் பிறந்து துன்பமடைவாள்.

2. ஸ்த்ரீ, வ்ரதம் அனுஷ்டித்து உபவாஸமிருக்க வேண்டுமானால் பர்த்தாவினுடைய அனுமதியின் பேரிலேயே செய்யவேண்டியது. அனுமதியன்னியில் வ்ரதாதிகளைச்செய்தால் புருஷனுடைய ஆயுளைக் குறைக்கும். அவளும் நரகத்தையடைகிறாள். இதற்கு வசனம்,

𑌪𑌤𑍍𑌯𑍌 𑌜𑍀𑌵𑌤𑌿 𑌯𑌾 𑌨𑌾𑌰𑍀 𑌉𑌪𑍋𑌷𑍍𑌯 𑌵𑍍𑌰𑌤𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 ।
𑌆𑌯𑍁𑌷𑍍𑌯𑌂 𑌹𑌰𑌤𑍇 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 𑌸𑌾 𑌨𑌾𑌰𑍀 𑌨𑌰𑌕𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ॥

33. கர்ப்பிணி ஸ்த்ரீயின் நியமம்.— கர்ப்பிணி ஸ்த்ரீகள் மனக்குழப்பத்துடன் இருக்கக்கூடாது. அசுத்தமான விடத்திலும், உரல், உலக்கை இருக்குமிடத்திலும் உட்

காரக்கூடாது. இடைவிடாமல் உட்காரவாவது நிற்கவாவது தூங்கவாவது கூடாது. கணப்புச்சட்டி, விபூதிப்பானை இவைகள் அருகில் இருக்கக்கூடாது. தண்ணீரில் இறங்கி முழுகுவதும், நெருப்புத்தணலை யெடுத்து வேலை செய்வதுங் கூடாது. சாம்பலை வாரியெடுப்பதுங் கூடாது. உறக்கக் கூப்பிடுவதும் அதிகமாய் சிரிப்பதுங் கூடாது. மரத்தடியிலும் போகக் கூடாது.

## 34. விதவா தர்மம்.

1. விதவைகள் ஒரே வேளை சாப்பிடவேண்டும். பூமியிலேயே படுக்கவேண்டும். பரிமள வஸ்துக்களை தரிக்கக் கூடாது. தாம்பூலம் முதலியவை போட்டுக்கொள்ளக் கூடாது.

## 2. விதவைகள் கழுத்தில் ருத்ராக்ஷம் முதலிய மாலைகளை தரிக்கக்கூடாது.

விதவாயாஸ்து ஶய்யாம் ருத்ராக்ஷேண தாரணா ।
கண்டே யஸ்த்ந யா காலேஷு ப்ராஹ்மணீ ஶ்வயோநிதா ॥
விதவா ஶ்வேதவஸ்த்ராம் ச ருத்ராக்ஷம் நைவ தாரயேத் ।
கண்டே தாம் தரியாம் பஸ்மா விஸ்தாவந்ளவி நிக்ஷிபேத் ॥

## 35. நமஸ்காரத்தில் அபிவாதனம் செய்யத்தகாத விஷயம்.

1. 'தேவாக்நீம் ஸபாம் வ்ருக்ஷாந் நதீநதீ ததா யதீந் ।
தண்டவத் ப்ரணமேதேதாந் நாபிவாதநமாசரேத்' ॥

தேவதைகள், நதி, ஸபை, விருக்ஷங்கள், அக்னிகள், ஸன்யாஸி இவர்களை தண்டம்போல் நமஸ்காரம் செய்ய வேண்டியது. அபிவாதனம் செய்யக்கூடாது.

2. ஸ்த்ரீகளை நமஸ்கரித்தால் அபிவாதனஞ் செய்யக் கூடாது.

36. குரு ஸிம்ஹராசியிலிருக்கும்போது, அதாவது மஹாமாகவருஷத்தில் விவாஹஞ் செய்யக்கூடாது.

## நர்மதைக்கு வடபாகத்தில் இந்த நியமம்.

யஉ-ஶாஸ்த்ரஸம்ஹ்ரஹெ வண-ாஹ்ருயஉ-காணூஸாஷ்த: ॥

---

தர்மசாஸ்த்ரச்சுருக்கத்தில், வர்ணாச்ரமதர்மகாண்டம் முற்றுப்பெற்றது



உ

# தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.

( இரண்டாவது )

## ஆன் ஹி க கா ண் ட ம்.

### 1. ப்ராம்ஹமுஹூர்த்தத்தில் எழுந்துசெய்ய வேண்டிய கார்யங்களின் க்ரமம்.

1. **ப்ராம்ஹமுஹூர்த்தம்** என்பது, ராத்ரியின் நான்காவது யாமத்தின் பிற்பாதி. விடிய ஐந்து நாழிகை என்று சொல்வதுமுண்டு. அதில் எழுந்துவிடவேண்டியது. அதில் தூங்கினால் புண்யம் போய்விடுவதுடன் பித்ருக்களின் சாபமுங் கிடைக்கும்.

2. ஸந்த்யாகாலங்களில், ஆஹாரம், ஸ்த்ரீபோகம், நித்ரை, படிப்பு இந்நான்குங் கூடாது. ஆஹாரத்தினால் வ்யாதியும், ஸ்த்ரீபோகத்தால் கர்ப்பநாசமும், நித்ரையினால் மூதேவியும், படிப்பதால் ஆயுட்குறைவும் உண்டாகிறது.

3. தூங்கியெழுந்தவுடன் தைவம், நவக்ரஹம், மகரிஷிகள் முதலானவர்களை த்யானஞ்செய்யவேண்டும். ச்ரோத்ரியன், பசு, அக்னி, அக்ன்யாதானஞ்செய்தவன் இவர்கள் முகத்தில் விழித்தால் ஆபத்து நீங்கும். பாபி, பாக்யஹீனன், வஸ்திரமில்லாதவன் (குழந்தைகள் நீங்கலாக) மூக்க

றுபட்டவன் இவர்கள் முகத்தில் விழித்தால் கலசமுண்டா கும்.

## 2. பஹிர்பூமிக்குப் போகும்போதுள்ள முறை.

1. நக்ஷத்ர ஜ்யோதி மங்கலானகாலம் முதல் ஸூர்யோதயகாலம் வரையில் ஸந்த்யை என்று பெயர். அதற்கு முன் எழுந்து வீட்டிலிருந்து பாணப்ரயோக தூரத்திற்கப்பால் (100 கோல்களுக்குக் குறையாமல்) கிழக்கு, அல்லது வடக்கு, தெற்கு இந்த திக்குகளில் சென்று ஏராளமான ஜலத்தை அடைந்து செம்பில் ஜலத்தை எடுத்து வைத்து விட்டு, ம்ருத்திகையையும் வைத்துவிட்டு, பூநூலை நிவீதம் செய்து வலதுகாதில் சுற்றிக்கொண்டு, தலையை வஸ்த்ரத்தினால் மறைத்துக்கொண்டு, பகலில் வடக்குமுகமாகவும், இரவில் தெற்குமுகமாகவுமுட்கார்ந்துகொண்டு, பூமியை யாகத்திற்கு உபயோகமில்லாதவையாயும், பசுமையில்லாதவையாயுமுள்ள புல்லுகளால் மறைத்து மௌனமாய் மலமூத்ராதி விஸர்ஜனஞ் செய்யவேண்டியது. பிறகு மறுபடியும் அப்புல்லுகளால் மூடிவிடவேண்டும்.

2. அக்னி, காற்று, ஸ்த்ரீ, ப்ராம்ஹணன், குரு, பசு இவர்களுக்கெதிரில் மலமூத்ராதி விஸர்ஜனத்திற்கு உட்காரக் கூடாது. உழுகிறவிடத்திலும், ஜலத்திலும், புற்றிலும், மலை உச்சியிலும், ஆலயங்களிலும், ஆற்றங்கரையிலும், நாணக்கட்டைகளிலும், பயிரிலும், மரத்தடியிலும், அக்னியிலும், கடைத்தெருவிலும், பசுவின் சாணத்திலும், நதிகளிலும், யாகபூமிகளிலும், த்வாரத்திலும், புஷ்பத்திலும், குசத்திலும், மார்க்கத்திலும், பசுக்கொட்டகத்திலும், உமியிலும், வயல்களிலும், கிணற்றிலும், * நாச்சந்துகளிலும்,

* நாச்சந்து:— நான்கு பாதைகள் சேருகிற இடம்.

வறப்பினேரத்திலும், ஊஷரபூமியிலும், உத்யானத்திலும், ஜலத்தினருகிலும், தான்யங்களிலும், வாசலிலும், மாடியிலும், மாடிப்படிகளிலும், மனிதர்களிருக்குமிடத்திலும், பூர் நூலை தரித்துக்கொண்டும், கொடை பிடித்துக்கொண்டும், தேவாலயத்திற்கு எதிர் முகமாயும், நின்றுகொண்டும், மலமூத்ரங்களை விஸர்ஜனஞ் செய்யக்கூடாது. விஸர்ஜித்தவிடத்தில் தாமதித்து இருக்கக்கூடாது.

3. மலமூத்ராதிவிஸர்ஜனத்திற்கு முந்தி ஆசமனஞ் செய்து பிறகுதான் வெளிக்குப் போகவேண்டும்.

4. விஸர்ஜனத்திற்கு முந்தியே ஜலத்தை எடுத்து வைத்துக்கொள்ளாவிட்டால் அசுத்தனாகிறான். ஜலபாத்ரத்தைக் கையில் வைத்துக்கொண்டே மலாதிவிஸர்ஜனஞ் செய்தால் அந்த ஜலம் மூத்ரத்திற்கு ஒப்பாகும்.

5. விஸர்ஜனமான பிறகு வஸ்த்ரத்தை இடுப்பிற்கு மேல் தூக்கிக்கொண்டும், ஆண்குறியை பிடித்துக்கொண்டும் எழுந்திருக்கவேண்டியது.

குறிப்பு:— மேற்கண்டவைகள் வ்யாதிஸ்தர்களுக்கு உரித்ததல்ல.

## 3. சௌச நியமம்.

1. பகலில் வடக்கு முகமாகவும், இரவில் தெற்கு முகமாகவும் சௌசம் செய்யவேண்டியது. முதலில் மலவிஸர்ஜனத்திற்கும், பிறகு ஜலவிஸர்ஜனத்திற்கும், பிறகு இடது கைக்கும், அதனபிறகு இரண்டு கைகளுக்கும், பிறகு கால்களுக்கும், இந்த வரிசையாக சௌசஞ்செய்யவேண்டியது. செம்பிலிருக்குஞ் ஜலத்தைக் கொண்டே சௌசஞ் செய்யவேண்டியது. மண்ணும் ஜலமுமாக மாறி மாறி சௌச

வஞ் செய்யவேண்டியது. அபானத்திற்கு 5, ஆண்குறிக்கு இரண்டு, இடது கைக்கு 10, இரு கைகளுக்கும் தனித்தனி 7, இரு கால்களுக்கும் தனித்தனி ஏழு ம்ருத்திகைகளால் சௌளவம் செய்யவேண்டியது.

2. பலர் பலவிதமாய் ஸங்க்யை சொன்னபோதிலும், துர்க்கந்த நிவ்ருத்தியின்பொருட்டு அதிகமாகச் செய்வதும் ச்லாக்யந்தான். துர்க்கந்தம் ஸங்க்யைக்கு முந்தியே நிவ்ருத்தியாகிவிட்டால் ஸங்க்யைக்குக் குறைந்தாலுங் குறையலாம்.

3. இரவில் க்ராமத்திற்கு வெளியிலும், வீட்டிற்கு வெகு தூரத்திலும் விஸர்ஜனத்திற்குப் போகக்கூடாது.

4. ஆஹாரம், மலமூத்ரவிஸர்ஜனம் இவைகளை ரஹஸ்யமாகச் செய்தால் ஸ்ரீமானாக விளங்குவான். ப்ரகாசமாகச் செய்தால் லக்ஷ்மி விலகிவிடுவாள்.

5. ப்ரம்ஹசாரிகளுக்கு மேற்சொன்ன ஸங்க்யைக்கு இரட்டிப்பும், யதிகளுக்கு நான்கு பங்கும் ம்ருத்திகாசௌளவஞ் செய்யவேண்டியது.

6. ஸ்த்ரீகளுக்கும் ஸங்க்யையில் பாதி விதிக்கப்பட்டிருக்கிறது. சிறியவர்களுக்கு ஸங்க்யை ஏற்படாவிட்டாலும், துர்க்கந்தம் நீங்குகிறவரையிலும் ம்ருத்திகாசௌளவஞ் செய்யவேண்டியது ஆவச்யகம்.

7. இரவில் மேற்கண்ட ஸங்க்யையில் பாதியும், மார்க்கத்தில் கால் பங்கும், வ்யாதிஸ்தர்களுக்கு சக்திக்குத்தக்கபடியும் செய்யவேண்டியது.

8. ஜலக்கரையோரத்தில் உட்கார்ந்து ஶௌவஞ்செய்யக்கூடாது. ஜலம் எடுத்துக்கொள்ள சரிப்படாவிட்டால் சாண் அகலம் வரையில் ஜலக்கரையை யொதிக்கிவிட்டு அப்பால் உட்கார்ந்துகொண்டு வலது கையால் ஜலமெடுத்து இடது கையால் ஶௌவஞ்செய்யவேண்டியது. பிறகு அந்த இடத்தை நன்ருய் அலம்பி விடவேண்டியது. அப்படிச்செய்யாவிடில் தோஷமுண்டு.

9. ம்ருத்திகையின் ப்ரமாணம் பச்சைநெல்லிக்காயளவு.

10. ஜலவிமோசனமாத்ரத்திற்கு, ஆண்குறியில் ஒன்று, இடது கையில் மூன்று, இரு கைகளுக்கும் தனித்தனி இரண்டு ம்ருத்திகைகளால் ஶௌவஞ் செய்யவேண்டியது. இதற்கு ம்ருத்திகையின் ப்ரமாணம் தூதுவிளங்காயளவு.

11. தன்னுடைய மலமூத்ராதிகளை ஸ்பர்சித்தால் 10 தடவை ம்ருத்திகாஶௌவஞ் செய்யவேண்டியது.

12. பிறருடைய மலமூத்ராதிகளை ஸ்பர்சித்தால் கை கால்களுக்கு 32 மிருத்திகைகளால் ஶௌவம் செய்யவேண்டும்.

13. ஶௌவஞ் செய்த பிறகு கச்சம், சிகை இவைகளை நன்ருய்த் தரித்து, கால்களை முழங்கால் வரையிலும், கைகளை மணிக்கட்டு வரையிலும், அலம்பிக்கொண்டு ஆசமனஞ் செய்யவேண்டியது.

## 4. ஆசமன விதியும். அதைச்சார்ந்தவைகளும்.

1. வடக்கு, வடகிழக்கு, கிழக்கு இவைகளுள் ஒரு திக்கை நோக்கி உட்கார்ந்து இரு கைகளையும் இரண்டு முழங்

கால்களுக்குள்ளாக வைத்துக்கொண்டு வலது கையை பசுவின் காதுபோல் வைத்துக்கொண்டு அதில் உளுந்து முழுகும்படி யான தீர்த்தமெடுத்து மூன்று தடவை ஆசமநம் செய்ய வேண்டியது. தெற்கு, அல்லது மேற்கு முகமாக இருந்து ஆசமனம் செய்யவே கூடாது.

2. ஆசமனம் செய்தபிறகு பெருவிரலின் மூலத்தால் மயிர்கள் அடர்ந்த இரு உதடுகளையும் இரண்டு தடவை துடைத்து, நான்கு விரல்களாலும் ஒரு தடவை துடைக்க வேண்டும். ஆசமனம் செய்து முகத்தைத் துடைத்தவுடன் இடதுகை, இரு கால்கள், சிரஸ் இவைகளை ஜலத்தால் ப்ரோக்ஷித்துக்கொண்டு பிறகு மேலே சொல்லப்படுகிற அவயவங்களைத் தொடவேண்டும்.

3. பிறகு இருகண்கள், முகம், இருசெவிகள், ஆகிய கழுத்திற்குமேலுள்ள அவயவங்கள் ஒவ்வொன்றையும் தனித் தனி முறையே ஜலத்தைத் தொட்டுக்கொண்டே தொட வேண்டும். பிறகு இரு புஜங்களையும், மார்பையும், சிரஸ்ஸையும் ஜலத்தைத்தொட்டுத் தொடவேண்டியது.

4. அதன் க்ரமம்—பெருவிரலால் 2 கன்னத்திலும், பெருவிரலும் பவித்ர விரலுங்கூடியபடி இரு கண்களையும், பெருவிரலும் ஆள்காட்டி விரலுங்கூடி மூக்கையும், பெருவிரலும் சுண்டிவிரலுங்கூடி இரு செவிகளையும், பெருவிரலும் நடுவிரலுங்கூடி இரு புஜங்களையும், பெருவிரல் நீங்கலாக மற்ற நான்கு விரல்களால் மார்பையும், ஐந்து விரல்களையுங் கூட்டி சிரஸையும் தொடவேண்டியது.

5. ஆசமனம் செய்யும்போது முதலில் ப்ராசனம் செய்த தீர்த்தம் உட்கொண்ட பிறகு மறு ப்ராசனம்

செய்யவேண்டியது. ஸ்த்ரீகளுக்கு முதலில் சாப்பிட்ட ஜலம் கடவாய் சென்ற பிறகு மறுதடவை உட்கொள்ளலாம்.

6. ஆசமனம்செய்யும் தீர்த்தமானது நுரை, குமிழி இல்லாததாயும், உப்புக்கரியாததாயும் இருக்கவேண்டியது. உஷ்ணோதகத்தால் ஆசமனம் செய்யக்கூடாது.

7. கலங்கியதும், கெட்ட நாற்றமுடையதும், சருகு முதலியதுகளால் கெடுக்கப்பட்டதும், கெட்டவிடத்திலிருந்து பெருகினதுமான ஜலம் கூடாது.

8. ஏலம், லவங்கம், கற்பூரம், சந்தனம் முதலான வாஸனை சேர்க்கப்பட்ட தீர்த்தங்களாலும் ஆசமனம் செய்யக் கூடாது.

9. பரிஷேசனம் செய்து மிகுந்த தீர்த்தத்தை ஆசமனம் செய்யக்கூடாது. அப்படிச்செய்யவேண்டுமானால் அந்தப்பாத்ரத்திலிருக்கும் தீர்த்தத்தை கொஞ்சம் பூமியில் கொட்டிவிட்டு பாக்கியினால் ஆசமனம் செய்யலாம்.

10. ரோகிகள் வெந்நீரால் ஆசமனம் செய்யலாம்,

11. ஆஸனத்திலிருந்துகொண்டும், பாதங்களைமடக்கி இரு துடைகளிலும் கைகளை வைத்துக்கொண்டும் ஆசமனம் செய்யக்கூடாது. ஆனால், போஜனமான பிறகு ஆஸனத்தில் உட்கார்ந்து ஆசமனம் செய்யலாம். வலது தோளை மறைத்துக்கொண்டும், மேல் வஸ்த்ரத்தை இடுப்பில் கட்டிக் கொண்டும், நின்றுகொண்டும் ஆசமனம் செய்யக்கூடாது.

12. இடது கையால் ஜலத்தை ஸ்பர்சித்துக்கொண்டே ஆசமனம் செய்யவேண்டியது.

13. வேறொருவன் இரண்டுமுகமுள்ள ஜாரியினால்

தீர்த்தத்தை விடுவானேயானால் அதை வலக்கையால் ஏந்தி ஆசமனம் செய்யலாம்.

14. முழங்காலளவு ஜலத்தில் நின்றுகொண்டு ஆசமனம் செய்யலாம். ஒரு காலை ஜலத்திலும், மற்றொரு காலைக் கரையிலும் வைத்துக்கொண்டு உட்கார்ந்தும் ஆசமனஞ்செய்யலாம்.

15. இடதுகாலைக்கரையிலும் வலதுகாலை ஜலத்திலும் வைத்துக்கொண்டு இடது கையால் ஜலத்தைத்தொட்டுக் கொண்டும் ஆசமனஞ்செய்வது ச்லாக்யம்.

## 5. ஈரவஸ்த்ரத்தோடு ஜபம் தர்ப்பணம் முதலியவை செய்யவேண்டிய முறை.

ஈரவஸ்த்ரம் தரித்தவனானால் ஜலத்திலிருந்து கொண்டே தர்ப்பணம், ஜபம், ஆசமனம் இவைகளைச் செய்யலாம். ஜலத்திலிருந்தால் முழங்கால் தெரியக்கூடாது. ஸ்தலத்திலிருந்து ஜலத்திலும், ஜலத்திலிருந்து ஸ்தலத்திலும் ஆசமனம் செய்யக்கூடாது.

## 6. தேவதீர்த்தம் முதலானதுகளின் ஸ்தானமும், உபயோகிக்கும் காலமும்.

1. கட்டை விரலின் மூலத்தில் ப்ரம்ஹதீர்த்தமும், கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் மத்யத்தில் பித்ருதீர்த்தமும், சுண்டுவிரல் மூலத்தில் ப்ராஜாபத்யமும், விரல்களின் மூலத்தில் காயதீர்த்தமும், விரல்களின் நுணியில் தைவதீர்த்தமும், கரமத்யத்தில் ஆர்ஷம், ஆக்நேயம், ஸௌம்யகம் என்ற தீர்த்தங்களும் என்று முறையே சொல்லப்படுகின்றன.

2. நிவீதாவணம், ஸம்ஸ்ரவணம், ஶாஜஹோமம் இவைகளை காயதீர்த்தத்தாலும், பூஜை, பலிபோடுதல், ப்ரோக்ஷ

ணஞ் செய்தல், துடைத்தல், சாப்பிடுதல், நித்யஹோமஞ் செய்தல் இவைகளை தேவதீர்த்தத்தாலும், தயிர்சாப்பிடுதல், புதிதுண்ணல் இவைகளை ஸௌம்யதீர்த்தத்தாலும், தானத்தைப் பெற்றுக்கொள்வதை ஆக்னேயதீர்த்தத்தாலும் செய்ய வேண்டியது.

## 7. தர்ப்பம், பவித்ரம் முதலியன.

1. ஜபம், ஹோமம், தானம், வேதாத்யயனம், பித்ரு தர்ப்பணம், இக்கர்மாக்களில் குசம், பொன், வெள்ளி இவைகளிலொன்றை கையில் தரிக்கவேண்டும் பவித்ரவிரலின் மூலத்தில் பவித்ரத்தை தரிக்கவேண்டும்.

2. **தர்ப்பலக்ஷணம்:—** தர்ப்பங்கள் தாருண்யமடைந்ததாயும், நுணியுள்ளதாயும், ஓட்டைநீளமுள்ளதாயும் இருக்க வேண்டியது.

புஷ்பிக்காத நாணலுக்கு தர்ப்பம் என்று பெயர்.

மூலத்தோடு இருக்கும் தர்ப்பம் ஏகோத்திஷ்டத்திற்குமட்டில் உபயோகப்படும். மற்ற கார்யங்களுக்குக்கூடாது.

3. **பவித்ரலக்ஷணம்:—** நுணியுள்ளதும், ருஜுவானதுமான இரண்டு தர்ப்பங்களை ப்ரதக்ஷிணமாக முருக்கி மத்தியில் மடித்து அடிநுணிகளை ஒன்றாகச்சேர்த்து ப்ரணவத்தினால் முடியவேண்டும். அவ்விதம் முடிந்த பவித்ரத்தின் நுணி 4-அங்குலமும், முடிச்சு 1-அங்குலமும், வளையம் 2-அங்குல நீளமுமுள்ளதாக இருக்கவேண்டியது.

4. இந்த 2-தர்ப்பங்களும் நீளமும், பருமனும் சமமாக இருக்கவேண்டும்.

5. தேவகார்யத்தில் 2-ம், பித்ருகார்யத்தில் ஒன்று அல்லது மூன்றும் உபயோகிக்கவேண்டியது.

6. தர்ப்பபவித்ரத்தை கையில் தரித்துக்கொண்டபடி ஆசமனம் செய்யவே கூடாது.

7. கர்மாங்கமான ஆசமனத்திற்கு தோஷமில்லை.

8 குசம், பொன், வெள்ளி பவித்ரங்கிடைக்காவிட்டால் தர்ப்பங்களையாவது தரிக்கவேண்டியது.

9. பொன்பவித்ரம்:— 8-பங்கு தாம்ரமும், 12-பங்கு வெள்ளியும், 11-பங்கு பொன்னும் சேர்த்துச் செய்த பவித்ரம் அதிக ச்ரேஷ்டமானது.

10. பெரிய ரக்ஷை:— 31-பங்குள்ள ஸ்வர்ணபவித்ரத்திற்கு ப்ரம்ஹமுடி வேண்டியது நியமமில்லை.

11. தர்ஜநீ தரிக்க நியமமும், தரிக்கத்தகாதவர்களும்:— ஸ்வர்ணபவித்ரமன்னியில் தர்ஜநீமாத்திரம் தரிக்கக்கூடாது. ஜ்யேஷ்டனிருந்தால் கனிஷ்டன் தர்ஜநியை தரிக்கக்கூடாது. தகப்பனிருக்கும்போது புத்ரன் தர்ஜநியை தரிக்கலாகாது.

## 8. தர்ப்பம்.

1. தர்ப்பம் க்ரஹிப்பதற்கு நியமம்:— தர்ப்பம் பரிசுத்தமான ஸ்தலத்திலிருக்கவேண்டும். அதை க்ரஹிக்கக்கூடியவனும் பரிசுத்தனாக இருந்து கிழக்கு அல்லது வடக்கு இந்த திக்குகளை நோக்கி மந்த்ரபூர்வகமாய் க்ரஹிக்கவேண்டியது. ஹூங்காரத்தை முன்னிட்டு க்ரஹிக்கவேண்டியது.

தர்ப்பக்ரஹணமந்த்ர: ॥

விரிஞ்சிநா ஸஹோத்பந்ந பரமேஷ்டிநிஸர்கஜ ।
நுத ஸர்வாணி பாபாநி தர்ப்ப ஸ்வஸ்திகரோ பவ ॥

2. ஆவணி, மாசி இந்த மாதங்களின் அமாவாஸ்யையில் க்ரஹிக்கப்பட்ட தர்ப்பம் மிகவும் ச்லாக்யமானது.

3. அப்போது க்ரஹித்த தர்ப்பம் ஒரு க்ரியையில் உபயோகப்பட்டு மிகுந்தாலும், மற்றொரு கர்மாவிலும் உபயோ

கிக்கலாம். அதற்கு பழமையென்ற தோஷமில்லை.

4. ஒரு மாதத்தில் க்ரஹிக்கப்பட்ட தர்ப்பம் அந்த மாதம் முடியும் வரையில் உபயோகிக்கலாம். எந்த ஸமயம் கொண்டுவந்தாலும் 7-நாள்களுக்கு உபயோகிக்கலாம்.

5. அப்போதைக்கப்போது கொண்டு வருவதுதான் உத்தமம்.

6. அமாவாஸ்யையில் அவச்யம் தர்ப்பம் க்ரஹித்து வைத்துக்கொள்ளவேண்டியது. லௌகிகார்த்தமாக தர்ப்பங்களை க்ரஹிக்கக்கூடாது. இரு ஸந்த்யாகாலங்களிலும், ராத்ரியிலும் தர்ப்பங்களை க்ரஹிக்கக்கூடாது.

7. குச பேதங்கள்:— குசம், காசம் அதாவது நாணல், யவை, அருகு, கோதுமை, வழல், நெல் பயிர், முஞ்சிப்புல், விச்வாமித்ரம் இந்த ஒன்பதும் குசபேதங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறதுகள். இவைகளின் வரிசையில் முன்சொன்னது கிடைக்காவிட்டால் க்ரமமாக எது கிடைத்தாலும் உபயோகப்படுத்தலாம்.

8. முன் சொல்லப்பட்ட ஒன்பதும் கிடைக்காத பக்ஷத்தில் வாள்கோறை, சிறுகோறை, குதிரைவாலி இவைகளையும் உபயோகிக்கலாம்.

9. உபயோகிக்கத் தகாத தர்ப்பங்கள்:— மார்க்கத்தின் பக்கத்திலும், மயானத்திலும், யக்ஞபூமியிலுமுண்டானதும், வேதியில் பரப்பப்பட்டதும், ஆஸனமாக உபயோகித்ததும், பிண்டநிர்வாபணம், ப்ரம்ஹயக்ஞம், பித்ருதர்ப்பணம் இவைகளிலுபயோகிக்கப்பட்டதும், நகங்களால் கிள்ளப்பட்டதும், நெருப்பால் கொளுத்தப்பட்டதுமான தர்ப்பத்தை ஒருக்காலும் உபயோகிக்கக்கூடாது.

10. தர்ப்ப பவித்ரத்தை கையில் தரித்தபிறகு கையிலி ருந்து எடுத்தால் வலது காதில் தரித்துக்கொள்ளவேண்டும். வேறு ஒரு இடத்திலும் வைக்கக்கூடாது.

## பாத்ரஸாதனத்திற்கு போடவேண்டிய தர்ப் பங்களின் ஸங்க்யா நிர்ணயம்.

11. பாத்ரஸாதனத்திற்கு போடக்கூடிய தர்ப்ப ஸங்க்யை:— ஹோமத்ரவ்யங்களுக்கு ஆஸனத்திற்கு மூன்று தர்ப்பங்களும், மேல் மூடுவதற்கு மூன்று தர்ப்பங்களும் உபயோகிக்கவேண் டியது.

12. பர்யக்னிகரணத்திலும், கொளுத்துவதிலும், கொ ளுத்திப்பார்ப்பதிலும் ஒரே தர்ப்பத்தை உபயோகிக்கவேண்டி யது. (கோடு கிழிப்பதற்கு) உல்லேகனத்திற்கு இரண்டு தர்ப்பத்தை உபயோகிக்கவேண்டியது. பரிஸ்தரணத்திற்கு அதாவது:— அக்னியைச் சுற்றி நாலு பக்கத்திலும் போடுவ தற்கு 16 தர்ப்பங்களும், ப்ரம்ஹஸம்பந்தமான கார்யங்களில் 28 தர்ப்பங்களும் உபயோகிக்கவேண்டியது.

## 9. ஆசமனம் முக்யமாய்ச் செய்யவேண்டிய காலங்கள்.

1. சௌசஞ்செய்து முடிந்த பிறகும், அத்யயனஞ் செய்ய ஆரம்பத்திலும், போஜனத்திற்கு முந்தியும், பிந்தி யும், தேவபூஜையின் ஆரம்பத்திலும், குரு, பெரியோர்கள், யதிகள் இவர்களை நமஸ்கரிப்பதற்கு முந்தியும், ஒவ்வொரு வைதிக கர்மாக்களின் ஆரம்பத்திலும், ஆசமனம் செய்ய வேண்டியது.

2. நித்ரையிலிருந்து எழுந்தபோதும், உபவீததாரணஞ் செய்யும்போதும், ஔஷதம் சாப்பிட்டபோதும், பித்ருகார் யங்களிலும், த்ரவமுள்ள பதார்த்தத்தைச் சாப்பிட ஆரம்பத் திலும், சாப்பிட்ட பிறகும் ஆசமனம் செய்யவேண்டியது.

3. ஸ்த்ரீ ஸம்போகம், ஜபம், ஹோமம், தானம், பித் ருக்களுக்குப் பிண்டங்கொடுத்தல், தர்ப்பணம் செய்தல் இவை

களிலும், கர்மாக்கள் முடிந்தவுடனும், வாந்திசெய்த காலத்திலும், கண்ணீர்விட்டபோதும், அக்னி, பசு, ஸ்த்ரீ இவைகளை தொட்டவுடனும், § கச்சங்கலைந்து கட்டிக்கொள்வதிலும், ஶிகையை முடிந்துகொண்டபோதும், காயம்நேர்ந்தாலும், நாஸிகையின் மலத்தைத்தொட்டாலும், அபானவாயுப்பரிந்தாலும், அபசப்தங்களை உச்சரித்தாலும், வீதியில் சென்றாலும், அமேத்யத்தை மிதித்தாலும், அசுத்த வஸ்துக்கள், தூரஸ்த்ரீ, சூத்ரன், கழுதை, நாய் இவைகளைக் கண்டாலும், தும்பினாலும், வாயைக்கொப்பளித்தாலும், வஸ்த்ரந்தரித்துக்கொண்டாலும், பதிதனுடன் ஸம்பாஷித்தாலும், ஸ்நானகாலத்திலும், ப்ரதிக்ரஹத்திலும், ரோமமில்லாத உதடுகளை ஸ்பர்சித்தாலும் ஆசமனம் செய்யவேண்டியது.

4. ஹோமம் செய்து மிகுந்த அன்னத்தை புஜித்தாலும், தைல பக்வமில்லாத பதார்த்தங்களைத் தொட்டாலும், சண்டாளன், ம்லேச்சன் இவர்களுடன் ஸம்பாஷித்தாலும், அர்ச்சனை செய்தல், எண்ணை தேய்த்துக்கொண்டு ஸ்னானம் செய்தல், ச்ரௌதஸ்மார்த்த முதலிய கர்மங்கள் செய்தல் இவைகளின் முடிவிலும் இரண்டு தடவை ஆசமனம் செய்யவேண்டியது. மல மூத்ர விஸர்ஜனங்களில் மூன்று முறை ஆசமனம் செய்யவேண்டியது.

5. இரவில் நடுவான இரண்டு யாமங்களில், மலமூத்ராதிகளை விஸர்ஜனம் செய்தால் ஆசமனம் செய்தே தீரவேண்டியது. செய்யாவிட்டால் ப்ராயச்சித்தத்திற்குள்ளாவார்கள்.

6. அந்தக்காலத்தில் ஆசமனீயம் செய்யத் தீர்த்தங் கிடைக்காவிட்டாலும், ஏதாவது தடைகள் நேர்ந்தாலும் தனது

---

§ கச்சம் என்பது கௌபீனத்திற்கும் சொல்லப்படும்.

வலது காதை ப்ரணவோச்சாரணத்துடன் மூன்று தடவை தொட்டால் ஆசமனத்திற்கு ஸமமாகும்.

7. ப்ராம்ஹணனுடைய வலதுகாதில் ஸகல புண்யதீர்த்தங்களும், கங்காதி புண்யநதிகளும், அக்னிமுதலான தேவர்களும் வஸிக்கின்றார்கள்.

8. ராத்ரியின் நடுவான இரண்டு யாமங்களில் ஸ்நானம், தீர்த்தபானம், ஆசமனம் இவைகள் செய்யவேகூடாது.

9. ப்ராம்ஹணர்களின் முகத்தில் நின்றும் தெரிக்கும் எச்சிற்றுளிகள் சரீரத்தில் ஸம்பந்தப்பட்டால் ஆசமனம் செய்யவேண்டியதில்லை. வேதம் சொல்லுங் காலத்தில் எச்சிற்றிவலைகள் சரீரத்தில் ஸம்பந்தப்பட்டாலும் ஆசமனம் செய்யவேண்டியதில்லை.

10. ஒருவன் ஆசமனம் செய்யும்போது அந்த தீர்த்தம் பிறர் சரீரத்தில் தெரித்தால் அது எச்சிலாகமாட்டாது.

11. பற்களில் பசையாய்ப் பிடிக்கப்பட்டிருக்கும் அன்னம் முதலியவை தானே நழுவிவிழுமானல் அதற்கு ஆசமனம் செய்யவேண்டியதில்லை.

12. விஷ்ணுபாத தீர்த்தத்தை உட்கொண்டால் கையையும் அலம்பக் கூடாது. ஆசமனமும் செய்யக் கூடாது.

## 10. தந்ததாவனவிதிமுறையும், அதற்குறிய விஷயங்கள் முதலியனவும்.

1. கிழக்கு அல்லது வடக்குமுகமாக உட்கார்ந்துகொண்டு இரண்டுகைகளையும் முழங்கால்களுக்குள்ளாக வைத்துக்கொண்டு காஷ்டத்தினுல் வலது பக்கம் முதல் ஆரம்பித்து பல் துலக்கவேண்டியது. குக்குடாஸனத்திலிருந்து பல் துலக்கவேண்டும்.

2. தந்ததாவனத்திற்குறிய காஷ்டங்கள்:— பல் தேய்க்கும் குச்சிகளை முள்ளடர்ந்தமரம், பாலுள்ளமரம் இவைகளிலிருந்து க்ரஹிக்கவேண்டியது

3. பல் துலக்கும் காஷ்டத்தின் பருமனும் நீளமும்:— பல்துலக்கும் காஷ்டமானது 12-அங்குலம் நீளம், அல்லது ஒட்டை நீளமுள்ளதும், மத்யவிரல் அல்லது சுண்டுவிரல் பருமனும் இருக்கவேண்டியது. அதன் முற்பாதியின் மத்யத்தில் கட்டைவிரல் பிடித்திருக்கவேண்டும்.

4. பல் துலக்க அர்ஹமான வ்ருக்ஷங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நாயுருவி | 17. | இலந்தை |
| 2. | கருங்காலி | 18. | மருதையின் வேர் |
| 3. | ஆல் | 19. | செஞ்சந்தனம் |
| 4. | அத்தி | 20. | தினை |
| 5. | விளா | 21. | நருமா |
| 6. | மருதை | 22. | நாமக்கரும்பு |
| 7. | புங்கை | 23. | புரசு |
| 8. | நாவல் | 24. | அடம்பு |
| 9. | வேங்கை | 25. | எலுமிச்சை |
| 10. | மாதுளை | 26. | வேம்பு |
| 11. | இச்சி | 27. | காட்டு மா |
| 12. | மா | 28- | பலா |
| 13. | கடம்பை | 29. | கொன்னை |
| 14. | சாரடை | 30. | கோங்கையிலவு |
| 15. | வெண்மந்தாரை | 31. | அசோகம் |
| 16. | புன்னை | 32. | கிராம்புமரம் |

## 5. பல் துலக்க அர்ஹமில்லாத வ்ருக்ஷங்கள்

| | |
|---|---|
| 1. இலவு | 18. பருத்திச்செடி |
| 2. அரசு | 19. காரைச்செடி |
| 3. கிடாரை | 20. முருங்கைமரம் |
| 4. பாலை | 21. குசம் |
| 5. மாம்பழக்கொன்னை | 22. நாணல் |
| 6. நருளி | 23. அகில் |
| 7. தாளி | 24. பூலாச்செடி |
| 8. குங்கலியமரம் | 25. புளியாரை |
| 9. பாக்கு | 26. ஊமத்தை |
| 10. அவுரி | 27. பவழமல்லி |
| 11. தும்பை | 28. புளியமரம் |
| 12. மணிப்புங்கை | 29. பத்திரி |
| 13. செம்பருத்தி | 30. பனை |
| 14. பேயன்வாழை | 31. கூந்தல்பனை |
| 15. காகடம்பூண்டு | 32. தாழை |
| 16. வழல் | 33. பேரீச்சை |
| 17. தக்கோலம் | 34. தென்னை |

## 6. விஹித நிஷித்தங்கள்.

| | |
|---|---|
| 1. பில்வம் | 6. வாகை |
| 2. ஜாதிமல்லிகை | 7. இலந்தை |
| 3. எருக்கு | 8. இலுப்பை |
| 4. அரளிச்செடி | 9. புரசு |
| 5. மூங்கில் | 10. நொச்சில் |

## 7. காஷ்டத்தால் பல் துலக்கக்கூடாத காலம்.

| | |
|---|---|
| 1. ப்ரதமை | 8. ச்ராத்ததினம் |
| 2. சதுர்த்தசி | 9. யக்ஞதீக்ஷை |
| 3. ஷஷ்டி | 10. வ்ரதாதிநியமம் |
| 4. அஷ்டமி | 11. ஞாயிற்றுக்கிழமை |
| 5. நவமி | 12 வ்யதீபாதம் |
| 6. பர்வம் | 13. ஜந்மாநுஜந்மம் |
| 7. ஸங்க்ரமணம் | 14. மந்வாதி, யுகாதி |

## 8. இலை த்ருணங்களால், பல் துலக்கக்கூடிய காலம்.

| | |
|---|---|
| 1. ப்ரதமை | 3. நவமி |
| 2. ஷஷ்டி | 4. அமாவாஸ்யை |

## 9. காஷ்டம், இலை, த்ருணம் இவைகளால் பல் துலக்கக் கூடாத காலங்கள்.

| | |
|---|---|
| 1. ச்ராத்ததினம் | 5. வ்ரததினம் |
| 2. ஜந்மதிதி | 6. உபவாஸதினம் |
| 3. விவாஹம் | 7. யக்ஞதீக்ஷை |
| 4. அஜீர்ணம் | 8. அமாவாஸ்யை. |

10. கல், ஓடு, கருங்கல் இவைகளால் தேய்க்கக்கூடாது. ஆள்காட்டி விரலால் பல் துலக்கக்கூடாது. கட்டை விரலாலும், பவித்ர விரலாலும் பல் துலக்கலாம்

11. பல் துலக்குகிற குச்சியை ப்ரார்த்திக்கும் மந்த்ரம்.

𑌆𑌯𑍁𑌰𑍍𑌬𑌲𑌂 𑌯𑌶𑍋 𑌵𑌰𑍍𑌚𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌪𑌶𑍁𑌵𑌸𑍂𑌨𑌿 𑌚 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂𑌚 𑌮𑍇𑌧𑌾𑌂𑌚 𑌤𑍍𑌵𑌂 𑌨𑍋 𑌦𑍇𑌹𑌿 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑍇 ॥

आयुर्बलं यशो वर्चः प्रजाः पशुवसूनि च ।
ब्रह्म प्रज्ञां च मेधां च त्वं नो देहि वनस्पते ॥

12. பல் துலக்குங் குச்சியானது பச்சையாகவும், தோலுடன் கூடினதாகவும், ஜாதியும் பெயருந் தெரிந்ததாகவும், புளிப்பு, அல்லது துவர்ப்புள்ளதாகவும், கையால் ஒடிக்கப் படாததாகவும் இருக்கவேண்டியது.

13. பல் துலக்கப்பட்ட குச்சியை அலம்பி தென்மேற்கு மூலையில் எரிந்துவிடவேண்டும்.

14. இலைகளுடன் கூடியும், இரட்டை இலைகளுடன் கூடியும், ஓர்புறம் பச்சையும், ஓர்புறங் காய்ந்தும், முடிச்சுள்ளதாயும் குச்சிகள் இருக்கக்கூடாது.

15. புரசுமரத்தின் கட்டையால் ஆஸனம், சயனம், பாதுகை, இவைகளைச் செய்யக்கூடாது. தந்தகாஷ்டமும் கூடாது.

16. பல் துலக்குவதற்கு குச்சி கிடைக்காத காலத்திலும், அல்லது துலக்கக்கூடாத காலத்திலும், க்ரஹணத்திலும், 16 தடவை வாயைக் கொப்பளித்தால் பல் துலக்கினதற்கு ஸமானமாகும்

17. கோயில், கொட்டில், ச்மசானம், ஜலம், யாகபூமி, சுத்தமானவிடம் இவ்விடங்களிலிருந்து ஒரு காலத்திலும் பல் துலக்கவே கூடாது.

18. ஸுமங்கலிஸ்த்ரீகளுக்கு உபவாஸதினத்தில் புஷ்பம், சந்தனம், நல்ல வஸ்த்ரம் தரித்தல், கண்களுக்கு மை இட்டுக்கொள்ளுதல், அலங்காரஞ் செய்துகொள்ளுதல், பல் துலக்குதல் இவைகள் நிஷேதிக்கப்படவில்லை.

## 11. ஸ்நானம்.

1. ஸூர்யோதயத்திற்கு இரண்டு நாழிகை முந்தியே ஸ்நானஞ் செய்யவேண்டியது.

2. 𑌤𑍀𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌾 ॥

𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌾𑌦𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌸𑌿 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑍇𑌵𑌤𑌾 ।
𑌤𑍍𑌰𑌾𑌹𑌿 𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌆𑌜𑌨𑍍𑌮𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌤𑍍 ॥ [𑌵𑍀𑌕 ।
𑌤𑌿𑌸𑍍𑌰𑌃 𑌕𑍋𑌟𑍍𑌯𑍋𑌽𑌰𑍍𑌧𑌕𑍋𑌟𑍀 𑌚 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌯𑍁𑌰𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍
𑌦𑌿𑌵𑌿 𑌭𑍁𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑍇 𑌚 𑌤𑌾𑌨𑌿 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌤𑍁 𑌜𑌾𑌹𑍍𑌨𑌵𑌿 ॥

𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌵𑌰𑍁𑌣𑌂 𑌦𑍇𑌵 𑌮𑌮𑍍𑌭𑌸𑌾𑌂 𑌪𑌤𑌿 𑌮𑍂𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑌾𑌚𑌿𑌤𑌂 𑌦𑍇𑌹𑌿 𑌮𑍇 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌪𑌨𑍁𑌤𑍍𑌤𑌯𑍇 ॥

𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌾𑌵𑌾𑌹𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌘𑌵𑌿𑌨𑌿𑌷𑍂𑌦𑌨𑌮𑍍 ।
𑌆𑌪𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌃 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌶𑌰𑌣𑌂 𑌤𑌥𑌾 ॥

𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌚𑌾𑌗𑍍𑌨𑌿𑌶𑍍𑌚 𑌶𑌰𑍍𑌵𑌶𑍍𑌚 𑌵𑌰𑍁𑌣𑌶𑍍𑌚𑌾𑌪 **𑌏𑌵** 𑌚 ।
𑌶𑌮𑌯𑌨𑍍𑌤𑍍𑌵𑌾𑌶𑍁 𑌮𑍇 𑌪𑌾𑌪𑌂 𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍁 𑌚 𑌸𑌦𑍈𑌵 𑌮𑌾𑌮𑍍 ॥

3. ஸ்நானத்திற்கு ஐந்து அங்கங்களின் க்ரமம்.

𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌸𑍂𑌕𑍍𑌤𑌪𑌠𑌨𑌂 𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌂 𑌚𑌾𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌤𑌰𑍍𑌪𑌣𑌂 𑌚𑍈𑌵 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

ஸ்நானஞ் செய்யும்போது முதலில் ஸங்கல்பஞ்செய்துகொண்டு வருணஸூக்தபடனம்செய்து பிறகு ஸ்நானஞ் செய்யவேண்டும். பிறகு மார்ஜனம் செய்துகொண்டு ஸ்நானஞ்செய்து அகமர்ஷணஸூக்தத்தை ஜபிக்கவேண்டும். மறுபடி ஸ்நானஞ்செய்து ஸ்நாநாங்கமாக தர்ப்பணஞ் செய்யவேண்டும்.

4. பிறகு யக்ஷ்மதர்ப்பணம், ஶிரோதகம், வாஸோதகம் இவைகளைச்செய்துவிட்டு தலையைத் துடைத்துக்கொள்ள வேண்டும்.

5. யக்ஷ்மதர்ப்பணம் ||

யந்மயா தூஷிதம் தோயம் ஶாரீரமலஸம்பவாத் |
தத்தோஷபரிஹாரார்த்தம் யக்ஷ்மாணம் தர்ப்பயாம்யஹம் ||

6. ஶிகோதகம் ||

லதாகுல்மேஷு வ்ருக்ஷேஷு வர்த்தந்தே பிதரோ மம |
தேஷாமாப்யாயநார்த்தம் து உதகம் து ஶிகோதகம் ||

7. வஸ்த்ரோதகம் ||

யே கேசாஸ்மத்குலே ஜாதா: அபுத்ரா கோத்ரிணோ ம்ருதா: |
தே க்ருஹ்ணந்து மயா தத்தம் வஸ்த்ரநிஷ்பீடநோதகம் ||

## 12. ப்ரம்ஹசாரிகளுக்கும், யதிகளுக்கும் ஸ்நான நியமம்.

1. ப்ரம்ஹசாரிகளும், யதிகளும் ஸங்கல்பம் முதலானதுகளன்னியில், தண்டம்போல் முழுகவேண்டும்.

2. ப்ரம்ஹசாரிகள் காலையிலும், க்ருஹஸ்தர்கள் காலையிலும் மாத்யான்ஹிககாலத்திலும், யதிகள் மூன்று காலங்களிலும் ஸ்நானஞ் செய்யவேண்டியது.

3. வெந்நீரில் ஸ்நானஞ்செய்தால் அகமர்ஷணஸூக்தமும் ஸ்நாநாங்க தர்ப்பணமுங் கிடையாது.

4. ப்ராதஸ்நாநத்தை ஓடுகிற ஜலத்தில் செய்வது ச்லாக்யம்.

5. ஓட்டமின்றி தேக்கமான ஜலத்தில் ஸ்நாநஞ்செய்தல், அர்க்யங்கொடுத்தல், காயத்ரீஜபஞ்செய்தல் இவைகளை ஸூர்யனுக்கு எதிர்முகமாகச் செய்யவேண்டியது.

6. நதியில் ப்ரவாஹத்திற்கு எதிர்முகமாயிருந்து ஸ்நானஞ் செய்யவேண்டியது.

7. ஸந்த்யாகாலத்தில் ஸந்த்யைக்கு எதிர்முகமாகவும், ராத்ரியில் வடகிழக்கு முகமாகவும் ஸ்நாநம் செய்யவேண்டியது.

## 13. அருணோதயகால லக்ஷணம்.

ஸூர்யன் உதயமாவதற்குமுன் 4-நாழிகையுள்ள காலம் "அருணோதயம்" என்று சொல்லப்படும்.

## 14. ஸ்நானங்கதர்ப்பணம் முதலியன.

1. தீண்டல், க்ஷெளரம் இவைகளின் ஸ்நானத்திற்கு தர்ப்பணம் முதலியது கிடையாது.

2. ஸ்நாநம் செய்தவுடன் ஜலத்திலிருந்து கொண்டு தேவரிஷி பித்ருதர்ப்பணம் செய்யவேண்டியது. தொப்புள் அளவுள்ள ஜலத்திலிருந்துகொண்டு செய்யவேண்டியது.

3. தேவதர்ப்பணத்தை உபவீதியாயும், ரிஷிதர்ப்பணத்தை நிவீதியாயும், பித்ருதர்ப்பணத்தை இடம்போட்டுக் கொண்டும் செய்யவேண்டியது.

4. பிதா ஜீவித்திருக்கும்போது பிள்ளை, கருப்பு எள்ளைக்கொண்டு பித்ரு தர்ப்பணம் செய்யக்கூடாது.

5. ஞாயிற்றுக்கிழமையிலும், ஜந்ம நக்ஷத்ரத்திலும், வீட்டிலும், சோபனக்ருஹத்திலும், விவாஹத்திற்குப்பிறகு ஒரு வருஷத்திலும், உபநயனத்திற்குப் பிறகு 6-மாதங்களிலும், ஙெளளத்திற்குப் பிறகு 3-மாதங்களிலும், எள்ளினால் தர்பணம் செய்யக்கூடாது.

6. இவைகளெல்லாம் ப்ராதஸ்நாநத்தில் நித்யமாக ஏற்பட்டபடியால் இவற்றிற்கு எள்ளு வேண்டியதில்லை.

ஜீவபித்ருக்கள் ஸ்நாநாங்கதர்ப்பணத்தில் ஒருபொழுதும் கருப்பு எள்ளை உபயோகிக்கக் கூடாது. மற்றவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, இரண்டு ஸப்தமி, இரண்டு சுக்ல த்ரயோதசி, த்ரயோதசி, திருஜந்ம நக்ஷத்ரம், நிசி, ஸந்திகள் இவைகளிலும் வீட்டிலும் திலதர்ப்பணம் கூடாது. "தெளைடிக்ஷு கா ர்யேஷு திலைரெவ விமிச்ரயேத்" என்று வசனமிருத்திருல், அக்ஷதையும் கலந்து தர்ப்பணம் செய்யவேண்டியது. வீட்டில் தர்ப்பணம் செய்யவேண்டியதாக நிர்ப்பந்தம் ஏற்படும் பக்ஷத்தில் ஒரு பாத்ரத்தில் தீர்த்தம் எடுத்து அதில் எள்ளைப்போட்டு வேறு பாத்ரத்தில் தர்ப்பணம் செய்யலாம்,

7. தேவருஷிபித்ருதர்ப்பணம் செய்த பிறகு கரையில் யக்ஷ்மதர்ப்பணம் செய்யவேண்டியது.

8. யக்ஷ்மதர்ப்பணம் செய்தபிறகு கரையில் சரீரம் அசையாமல் ஜலத்திற்கு கொஞ்சதூரத்தில் நின்றுகொண்டு பூநூலை இடமாக தரித்து தலையின் நுனிமயிரால் முன்புறமாக பூமியில் ஜலம் விழும்படியாகச் செய்யவேண்டியது.

9. இவ்விதம் விழும் ஜலத்தால் நம் வம்சத்தின் பித்ருக்களில் எவர்கள் மரங்களாகவும், கொடிகளாகவும், பக்ஷிகளாகவும், ஸர்ப்பாதிகளாகவும் இருக்கிறார்களோ அவர்கள் த்ருப்தியடைகிறார்கள்.

10. முகத்திலிருந்து விழும் ஜலத்தால் தேவர்களும், சிகையிலிருந்து விழும் ஜலத்தால் பித்ருதேவதைகளும் த்ருப்தியடைகிறார்கள்.

11. ஶிகையின் ஜலம் பின்புறமாக விழுந்தால் அந்த ஜலம் கள்ளுக்குச்சமமாகிறது.

12. ஶிகோதகமானது முன்புறமாக விழுந்தால் கங்கை, காவேரி முதலிய புண்யதீர்த்தங்களுக்குச் சமானம்.

𑌯𑍇 𑌕𑍇 𑌚𑌾𑌸𑍍𑌮𑌤𑍍𑌕𑍁𑌲𑍇 𑌜𑌾𑌤𑌾 𑌅𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 𑌗𑍋𑌤𑍍𑌰𑌿𑌣𑍋 𑌮𑍃𑌤𑌾𑌃।
𑌤𑍇 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌤𑍁 𑌮𑌯𑌾 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌨𑌿𑌷𑍍𑌪𑍀𑌡𑌨𑍋𑌦𑌕𑌮𑍍॥

13. பிறகு கரையிலிருந்தபடியே தலை முடிந்துகொண்டு நின்றபடியாய் உத்தரீய வஸ்த்ரத்தை நான்காக மடித்துப் பிழிய வேண்டும்.

14. அந்த வஸ்த்ரஜலத்தை நம் வம்சத்தில் முன்பிறந்தவரும், புத்ரனில்லாமல் மறித்தவர்களுமான பித்ருக்கள் க்ருஹித்துக்கொள்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

15. பிழிந்த வஸ்த்ரத்தை இடது கையின் முழங்கைக்குக்கீழும், மணிக்கட்டுக்கு மேலுமாக வைத்துக்கொண்டு இருமுறை ஆசமனம் செய்யவேண்டியது.

16. தலைமயிரையும், ஈரவஸ்த்ரத்தையும் உதருதல் கூடாது.

17. ஈரவஸ்த்ரத்தால் தலையைத் துவட்டக்கூடாது.

18. உலர்ந்த வஸ்த்ரம், வைத்துக்கொண்டே துவட்டிக் கொள்ளவேண்டியது.

19. ஜலத்தினின்றுங் கரையேறி வஸ்த்ரத்தின் நுனியை மட்டும் பிழிந்து, உடனே ஆசமனஞ் செய்து அதன் பிறகு உலர்ந்த வஸ்த்ரோத்தரீயங்களை தரித்துக்கொண்டு பிறகு ஸ்நானவஸ்த்ரத்தைப் பிழிந்து ஆசமனஞ் செய்ய வேண்டியது.

## 15. வஸ்த்ரங் கட்டிக்கொள்ளவேண்டிய முறை.

1. இரண்டு வஸ்த்ரம் தரித்துக்கொள்ளவேண்டியது. இடுப்பில் வஸ்த்ரம் கட்டிக்கொள்ளும்பொழுது காலைத் தூக்கக் கூடாது.

𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌧𑌾𑌰𑌣𑌕𑌾𑌲𑍇𑌤𑍁 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾𑌸𑌂 𑌵𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤𑍍 ।
𑌵𑌾𑌮𑌂 𑌵𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌸 𑌭𑌵 𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌤𑌕𑌃 ॥

2. மேல் வஸ்த்ரத்தை இடுப்பிலும், இடுப்புவஸ்த்ரத்தை மேலிலும் தரித்துக்கொள்ளக் கூடாது.

3. ஸ்நாநஞ் செய்த ஈரவஸ்த்ரத்தை உயரத்தூக்கிப் போடவேண்டியது.

4. கீழாகப் போட்டால் மறுபடியும் ஸ்நானஞ்செய்ய வேண்டியது.

5. 𑌨𑌦𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌸𑍍𑌨𑌾𑌨𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌯𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌨𑌾𑌨𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌶𑍋𑌧𑌯𑍇𑌤𑍍 ॥

ஆனால் நதிகளிலும், மஹிமை பெற்ற புண்யதீர்த்தங்களிலும் ஸ்நாநஞ்செய்தால் கீழாக விஸர்ஜனஞ் செய்யலாம்.

6. சிவப்பு, நீலம் இந்த வஸ்த்ரங்களை தரிக்கலாகாது.

7. தர்ப்பணகாலத்தில் வெண்பட்டு மிக ச்லாக்யம்.

8. பிறர் வஸ்த்ரத்தை தரித்துக்கொள்ளக்கூடாது.

9. புதியவஸ்த்ரந் தரித்துக்கொண்டு விவாஹம் முதலிய கர்மங்களைச் செய்யலாம்.

## 16. 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌣𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ।

'𑌶𑌾𑌨𑍍𑌤𑍀𑌵𑍋 𑌹𑌵𑍍𑌯𑌾 𑌮𑌨𑍍𑌤𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 । 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌂 𑌹𑌿𑌨𑍋𑌮𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌸𑍁 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌃 । 𑌸𑌤𑍇𑌨 𑌸𑌤𑍍𑌯𑌮𑍃𑌤𑌸𑌾𑌵

𑌆𑌯𑌣𑍁 । 𑌶𑍁𑌚𑌿𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌶𑍍𑌶𑍁𑌚𑌯𑌃 𑌪𑌾𑌵𑌕𑌾𑌃 ॥ 𑌅𑌗𑍍𑌨𑌿𑌶𑍍𑌶𑍁𑌚𑌿𑌵𑍍𑌰𑌤𑌤𑌮𑌶𑍍𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌶𑍁𑌚𑌿𑌃 𑌕𑌵𑌿𑌃 । 𑌶𑍁𑌚𑍀 𑌰𑍋𑌚𑌤 𑌆𑌹𑍁𑌤𑌃 ॥ 𑌉𑌦𑌗𑍍𑌨𑍇 𑌶𑍁𑌚𑌯𑌸𑍍𑌤𑌵 𑌶𑍁𑌕𑍍𑌰𑌾 𑌭𑍍𑌰𑌾𑌜𑌂𑌤 𑌈𑌰𑌤𑍇 । 𑌤𑌵 𑌜𑍍𑌯𑍋𑌤𑍀𑌂𑌷𑍍𑌯𑌰𑍍𑌚𑌯𑌃’ ॥

## 17. 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑍍 ॥

‘𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌾 𑌸𑌵𑌿𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌸𑌵𑍇𑌽𑌶𑍍𑌵𑌿𑌨𑍋𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍂𑌷𑍍𑌣𑍋 𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌾𑌦𑌦𑍇’ ॥

## 18. 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌧𑍂𑌨𑌨𑌮𑍍 ॥

‘𑌅𑌵𑌧𑍂𑌤𑌂 𑌰𑌕𑍍𑌷𑍋𑌽𑌵𑌧𑍂𑌤𑌾 𑌅𑌰𑌾𑌤𑌯𑌃’ ॥

## 19. வஸ்த்ரத்தை ஸூர்யனுக்குக் காண்பிவிக்க மந்த்ரம்.

‘𑌤𑌰𑌣𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌤𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌕𑍃𑌦𑌸𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯 । 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌾𑌭𑌾𑌸𑌿 𑌰𑍋𑌚𑌨𑌮𑍍 ॥ 𑌉𑌦𑍁 𑌤𑍍𑌯𑌂 𑌜𑌾𑌤𑌵𑍇𑌦𑌸𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 𑌕𑍇𑌤𑌵𑌃 । 𑌦𑍃𑌶𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌯 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑍍’ ॥

## 20. வஸ்த்ரந் தரித்துக்கொள்ள மந்த்ரம்.

‘𑌆𑌵𑌹𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌤𑌨𑍍𑌵𑌾𑌨𑌾 । 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾 𑌚𑍀𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿 𑌮𑌮 𑌗𑌾𑌵𑌶𑍍𑌚 । 𑌅𑌨𑍍𑌨𑌪𑌾𑌨𑍇 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾’ ॥

## 21. கட்டிக்கொள்ளக்கூடாத வஸ்த்ரங்கள்.

1. நனைக்காத வஸ்த்ரம், வண்ணானால் வெளுக்கப்பட்டு நனைத்து மடிபண்ணாதவஸ்த்ரம், சண்டாளன் முதலியவர்களால் நெய்த வஸ்த்ரம் இவைகள் எந்த கர்மாவுக்கும் அர்ஹங்களல்ல.

2. ஆட்டுமயிரால் நெய்யப்பட்ட கம்பளம், தலைப்பில்லாதவஸ்த்ரம், தையல்வஸ்த்ரம் இப்படிப்பட்ட வஸ்த்ரங்கள் தர்மவிரோதமுள்ள நீசவஸ்த்ரங்கள்.

3. மடிவஸ்த்ரமில்லாத பக்ஷத்தில் விழுப்புவஸ்த்ரத்தை ப்ரணவம் அல்லது வ்யாஹ்ருதிகளைச் சொல்லி தீர்த்தத்தினால் ப்ரோக்ஷித்து (ஸூர்யரச்மியில் காண்பிவித்து) கட்டிக்கொள்ளலாம்.

4. ஈரவஸ்த்ரத்தை ஏழு தடவை உதறினால் அந்த வஸ்த்ரம் உலர்ந்தவஸ்த்ரத்திற்குச் சமானமாகும்.

5. வெண்பட்டு, கம்பளம் இவைகள் முன் தரிக்கப்பட்டிருந்தாலும் சுத்தமானதுகள்.

## 22. நக்னத்வலக்ஷணம்.

1. கச்சமில்லாதவன், ஒரு தலைப்பை விட்டுக் கச்சந்தரிப்பவன், குறுக்காய்க் கச்சந்தரிப்பவன், தலைப்புகளெல்லாவற்றையும் சேர்த்து பின்புறத்தில் ஒரே கச்சமாக சொருகிக்கொள்பவன், ❋ கடிஸூத்ரத்தில் கச்சத்தைச் சொருகிக்கொள்பவன் இவ்வைந்துபேர்களும் * "நக்னன்" என்று சொல்லப்படுவார்கள்.

2. கச்சம், உத்தரீயம் இல்லாதவர்களும் நக்னரென்று சொல்லப்படுவார்கள்.

3. கடிஸூத்ரமில்லாதவர்களும், நக்னரென்று சொல்லப்படுவார்கள். அவர்கள் எவ்வித ச்ரௌதஸ்மார்த்த கர்மங்கள் செய்தாலும் ப்ரயோஜனமில்லை.

4. கச்சம் அவிழ்ந்து விழாமல் கருவிகளால் இருகக்கட்டிக் கொண்டு அதன்பேரில் கச்சத்தை சொருகிக்கொண்

---

❋ கடிஸூத்ரம்—இடுப்பில் தரிக்கப்பட்ட கயிறு.

* "நக்னன்"— நிர்வாணன் (வஸ்த்ரமில்லாதவன்.)

டால் அது 'ஆஸுரம்' எனப்படும். ஆகையால் அது விலக்கத் தக்கது.

## 23. உத்தரீயமன்றியில் செய்யத்தகாத கர்மங்கள்.

தானம், அத்யயனம், போஜனம், ஆசமனம், மல மூத்ரவிஸர்ஜனம், ஜபம், ஹோமம், தர்ப்பணம், ச்ராத்தம், தர்மம், தேவபூஜை, நமஸ்காரம் இவைகளைச்செய்யும்போது உத்தரீயமில்லாமல் செய்யவே கூடாது.

## 24. ஸ்நானவஸ்த்ரத்தைப் பிழியவேண்டிய நியமம்.

1. காலைஸந்த்யையை உபாஸிப்பதற்கு முன்பும், மத்தியான்ஹஸந்த்யையை உபாஸித்தபின்பும், ச்ராத்தத்தில் ச்ராத்தமான பிறகும் ஈரவஸ்த்ரத்தைக் கரையில் பிழிய வேண்டியது.

2. வண்ணான்துறையில் ஒருபோதும் ஸ்நாநஞ்செய்யவே கூடாது. ஆனால், பத்துமுழம் தள்ளி விட்டு ஸ்நானம் செய்யலாம்.

## 25. ஸ்நான நியமத்தில் விசேஷங்கள்.

1. ஸ்நாநஞ் செய்வதற்கு பரிசல், ஓடம் முதலியவைகளால் நதியை தாண்டி அப்புறஞ் செல்லலாகாது.

2. பிறருடைய ஆஸனம், படுக்கை, வாஹனம், கூபம், பூந்தோட்டம், வீடு இவைகளை எவனொருவன் அனுபவிக்கிறானோ அவனுடைய புண்யத்தில் நாலில் ஒருபாகத்தை அவற்றிற்குச் சொந்தக்காரன் அடைகிறான்.

3. பொதுவான நதி, தடாகம் முதலியவையில்லாவிட்டால், பிறரால் அமைக்கப்பட்ட தடாகத்தில் ஸ்நானஞ்

செய்யலாம். ஆனால், 10 அல்லது 5-கை மண்ணையெடுத்துக் கரையில் போட்டு விட்டு ஸ்நானஞ்செய்யவேண்டும்.

4. பிறர் கிணற்றில், ஸ்நானஞ் செய்ய நேர்ந்தால், மூன்று குடம் ஜலத்தையெடுத்துக் கீழே கொட்டிவிட்டுப் பிறகு இலை, பட்டை முதலியவைகளால் செய்யப்பட்ட பாத்ரங்களால் ஜலத்தையெடுத்து ஸ்நானஞ் செய்யவேண்டும்.

5. ஒரு ப்ராம்ஹணனல் தர்மத்திற்காகவும், வெகு ஜனங்களுக்கு உபகாரத்திற்காகவும், வெட்டப்பட்ட வாபீ, கூப, தடாகங்களில் முன் சொல்லியபடி செய்யாமலே ஸ்நானஞ் செய்யலாம். தோஷமில்லை.

6. சூத்ரன், சண்டாளன் முதலானவர்களால் தர்மத்திற்காக வெட்டப்பட்ட வாபீ, கூப, தடாகங்களில் ப்ராம்ஹணர்கள் ஸ்நானஞ் செய்யவே கூடாது.

7. நதி ஸமீபத்திலிருந்தால் தடாகம், கிணறு முதலியவைகளில் ஸ்நானஞ் செய்யக் கூடாது.

8. பெரிய ஏரிகளிலும், தடாகங்களிலும் தீர்த்தமிருக்கும்போது அல்பமாயிருக்குந் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்யக்கூடாது.

9. அரசமரம், ஸமுத்ரம் இவ்விரண்டும், எப்போதும் ஸேவிக்கத்தகுந்ததேயன்றி ஒருக்காலமும் ஸ்பர்சிக்கத்தகுந்ததில்லை. ஆனால், சனிக்கிழமையில் அரசமரத்தையும், பர்வகாலங்களில் ஸமுத்ரத்தையும், ஸ்பர்சிக்கலாம். மற்ற காலங்களில் புல் நுனியாலுங்கூடத் தொடக்கூடாது.

10. ஸ்நானபேதங்களின் பெயர்கள்:— ஸ்நானம் என்பது முக்யமென்றும், கௌணமென்றும் இருவகைப்படும். முக்யமென்பது ஆறுவகைப்படும். அதாவது:— (1) நித்

யம், (2) நைமித்திகம், (3) காம்யம், (4) க்ரியாங்கம், (5) மலாபகர்ஷணம், (6) க்ரியாஸ்நாநம் என்று 6-வகை.

### நித்யஸ்நானம்

தினந்தோறும் காலையிலும், மாத்யாஹ்னிககாலத்திலும் செய்யப்படும் ஸ்நானம் நித்யஸ்நானமென்று சொல்லப்படும்.

### நைமித்திக ஸ்நானம்.

சூத்ர சண்டாளாதிகளின் தீண்டலால் செய்யப்படும் ஸ்நானம் நைமித்திகமென்று சொல்லப்படும்.

நிமித்தத்தைப் பற்றிச் செய்யும் ஸ்நானமும் நைமித்திகமென்று சொல்லப்படும்.

### காம்ய ஸ்நானம்

புண்யபலனை உத்தேசித்துச் செய்யும் ஸ்நானம் காம்யமென்று சொல்லப்படும்.

### க்ரியாங்க ஸ்நானம்

ஒரு க்ரியையின் ஆரம்பத்தில் செய்யும் ஸ்நானம் க்ரியாங்கமென்று சொல்லப்படும்.

### மலாபகர்ஷண ஸ்நானம்.

எண்ணை முதலியது தேய்த்துக்கொண்டு செய்யும் ஸ்நானம் மலாபகர்ஷணமென்று சொல்லப்படும்.

### க்ரியா ஸ்நானம்.

புண்யதீர்த்தம், நதி இவைகளில் செய்யும் ஸ்நானம் க்ரியாஸ்நானம் என்று சொல்லப்படும்.

11. போஜனஞ் செய்தவர்களும், ரோகிஷ்டர்களும், நேத்ரரோகமுள்ளவர்களும், கர்ணரோகமுள்ளவர்களும், பீநஸ ரோகமுள்ளவர்களும், அஜீர்ணரோகமுள்ளவர்களும், மாத்யாஹ்நிகஸ்நானம் செய்யவேண்டியதில்லை.

12. ப்ராம்ஹணர்கள் மந்த்ரபூர்வகமாய் ஸ்நானம் செய்யவேண்டியது. ஸ்த்ரீகளுக்கு இந்த நியமமில்லை. சூத்ரர்கள் மௌனமாக ஸ்நானம் செய்ய வேண்டியது.

13. நதி, நதம், தடாகம், தேவகாதம், மலையருவி, கிணற்றில் இழுத்த ஜலம் இவைகளில் ஸ்நானம் செய்யலாம்.

14. ஸமுத்ரத்தில் விழாமல் தானே வற்றும் நதிகளில் ஸ்நானஞ் செய்தல் மூன்று நாள் பலனைக்கொடுக்கும்.

15. ஸமுத்ரஸங்கமமுள்ளநதிகளில் ஸ்நானம் செய்தல் ஒருபக்ஷத்தின் பலனைக் கொடுக்கிறது.

16. **மஹாநதியின் லக்ஷணம்:—** பர்வதத்தில் உற்பத்தியாகி ஸமுத்ரத்தில் ஸங்கமமாகிற நதிக்கு மஹாநதி யென்று பெயர்.

17. **ஸ்ரோதஸ்:—**இது மலையிலாவது, பூமியிலாவது உற்பத்தியாகி நதியில் கலந்துபோகும் மழைநீர்ப் பெருக்குக்குப் பெயர்.

18. **ஸரஸ்:—** இது மலையின் அடிவாரத்திலாவது, உச்சியிலாவது வ்ருத்தாகாரமாய் ஒரு காலத்திலும் வற்றாமலும், விசாலமானதாயும், தாமரைகளடர்ந்ததுமான தீர்த்தத்திற்குப் பெயர்.

19. **தேவகாதம்:—** இது மலையிலாவது பூமியிலாவது வற்றாமலிருக்கிற தீர்த்தத்திற்குப் பெயர்.

20. நாளம்:— இது வ்யவஸாயத்திற்காக நதிமுதலிய விடங்களிலிருந்து கொண்டு வந்து சேர்க்கப்பட்ட ஜலம். அதாவது:— ஏரி முதலியவைகளுக்குப் பெயர்.

21. தடாகம்:— இது கிராமம், வனம் இவைகளில் தங்கி இருக்கும் ஜலத்திற்குப் பெயர்.

22. குண்டம்:— இது படித்துறைகள் கட்டப்பட்டதான குளத்திற்குப் பெயர்.

23. தாரை:— ஆதாரம் ஒன்றுமில்லாமல் தானுகப்பெருகி பூமியில் விழும் ஜலத்திற்குப் பெயர்.

24. கூபம்:— இது வ்ருத்தமாய் செங்கல் முதலியவைகளால் கட்டப்பட்டு கீழாக ஜலமுள்ள கிணற்றின் பெயர்.

25. ஞாயிற்றுக்கிழமை செவ்வாய்க்கிழமை இவ்வாரங்களோடு கூடிய பர்வங்களில் ஸந்ததியைக் கோருகிறவர்கள் ஸமுத்ரஸ்நானம் செய்யக்கூடாது. அப்பேர்ப்பட்ட பர்வங்களில் க்ரஹணம் நேர்ந்தால் ஸ்நானம் செய்யலாம்.

26. சதுர்தசீவிஶமான பர்வத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது. ஆனுல், செவ்வாய்க்கிழமை நேர்ந்தால் சதுர்தசி போனபிறகு ஸ்நானம் செய்யலாம்.

27. க்ருஷ்ணுங்காரக சதுர்தசியில் ஸமுத்ரஸ்நானம் செய்தால் ஜந்மாந்தரீயமான பாபங்கள் நீங்கிவிடும். ஆனுல், பர்வஸம்பந்தங் கூடாது.

28. இவ்விஷயங்களில் ஸேது, கங்காஸங்கமம், காவேரீ ஸங்கமம் இந்த இடங்களில் நியமமே கிடையாது. திதி வாராதிதோஷங்கள் யாதொன்றுங் கிடையாது. எப்போதும் ஸ்நானம் செய்யலாம்.

ஸமுத்ர தீர்த்தம்.

29. ஸமுத்ரஜலம் ஆசமனத்திற்கு அர்ஹமில்லை. ஆனால், ஸ்நானங்கதர்ப்பணங்களும், பித்ராதி திலதர்ப்பணங்களும் செய்யலாம்.

## 26. வெந்நீர் ஸ்நானம்.

1. ரோகிகள் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். ரோகமில்லாதவர்களும் அவகாஹஸ்நானத்திற்கு நதீ, தடாகங்களில்லாவிட்டால் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். ஆனால் ஜனனத்திலும், மரணத்திலும், ஸங்க்ரமணாதி புண்யகாலங்களிலும், ச்ராத்ததினத்திலும், பிறந்த நாளிலும், தீட்டுப்பட்டாலும், ஞாயிற்றுக் கிழமையிலும், க்ரஹணத்திலும், பூர்ணிமையிலும், அமாவாஸ்யையிலும் ஒருக்காலும் வெந்நீரில் ஸ்நானம் செய்யக்கூடாது.

2. புண்யதீர்த்தம், கோயில், சயனம், ப்ராம்ஹணர்களின் வீடு இந்த இடங்களுக்குப் போனால் கால்களை அலம்பாமல் போகக்கூடாது.

3. வஸ்த்ரம் தரித்த பிறகு இரண்டுதடவை ஆசமனம் செய்யவேண்டியது.

4. ஒருவன் ஸ்நானம் செய்யும்போது அவன் பின்புறத்திலிருந்து ஸ்நானம் செய்யலாகாது.

5. தாய் தந்தைகள் ஜீவித்திருந்தால் தர்சத்தில் நைமித்திகஸ்நானம் செய்யக்கூடாது.

6. க்ருஹஸ்தன் ஸங்கல்பமில்லாமல் ஒரு கர்மாவையும் செய்யக்கூடாது.

## 27. ஸம்பர்க்காசௌச விஷயத்தில்.

1. சண்டாளர் முதலியவர்களால் தீண்டப்பட்டவனுடைய ஸம்பந்தமுள்ளவர்கள் மூன்று மனிதர்கள் வரையிலும் ஸ்நானஞ் செய்யவேண்டும். 4-வது மனிதன் கைகால்களை அலம்பிக்கொண்டு ஆசமனஞ்செய்து தீர்த்தத்தை ப்ரோக்ஷணஞ் செய்துகொண்டால் போதுமானது.

2. ஸூதகத்துடன் கூடியவன், தூரஸ்த்ரீ, ப்ரஸவித்தவள் இவர்களைத்தீண்டியவனை புத்திபூர்வகமாயில்லாமல் வேறொருவன் அறியாமல் தீண்டினால் ஆசமனஞ்செய்தால் போதுமானது.

## 28 சண்டாள தர்சன, ஸ்பர்ச, ஸம்பாஷணாதிகளில் ப்ராயச்சித்தம்.

1. சண்டாளனை நெருங்கினால் ஸ்நானஞ் செய்யவேண்டியது. அவனுடன் பேசினால் உடனே ப்ராம்ஹணனுடன் பேசவேண்டியது. அவனைப்பார்த்தால் பகலில் ஸூர்யனையும், இரவில் சந்த்ரனையும் தர்சிக்கவேண்டும்.

2. ஸூர்யசந்த்ரர்கள் இல்லாத காலத்தில் அக்னியை தர்சிக்க வேண்டியது அவச்யம்.

3. சூத்ரனைத்தொட்டால் ஒரு முழுக்கும், தூரஸ்த்ரீ, சண்டாளர் இவர்களைத் தொட்டால் 32-முழுக்கும் ஒரே மூச்சில் முழுகவேண்டியது.

4. சேரிக்கு 200-அடிகள் விலகவேண்டும்.

5. கடைத்தெரு, பட்டணம் இவைகளில் எவ்வளவு விலக ஸௌகர்யப்படுகிறதோ அதுவரையிலாவது அவச்யம் விலகவேண்டியது.

6. சண்டாளர்களின் நிழலை மிதித்தால் உடனே ஸ்நானம் செய்யவேண்டியது. ஆனால், 40-அடி தூரத்திற்கு மேற்பட்டிருந்தால் ஸ்நானஞ் செய்யவேண்டியதில்லை.

**7. ஒரே ஆஸனத்தில் சூத்ராதிகளோடு உட்காரலாம்.**

கோரை முதலியவைகளால் செய்யப்பட்ட ஆஸனத்திலும், மரஸம்பந்தமானதிலும், தொடக்கூடாத சூத்ராதிகளுடன் உட்காருவதினால் தோஷமில்லை.

## 29. ஶாவாஶௌசவிஷய꞉ ॥

1. சவமிருக்கும் வீட்டிற்குள் போனாலும், ச்மசானத்திற்குப்போனாலும், மத்தியில் ரொம்பதூரத்திலிருந்து துக்கப்ரச்னஞ்செய்தாலும் ஸ்நானஞ் செய்யவேண்டியது.

2. **தசாஹமத்தியில் துக்கப்ரச்னஞ் செய்தால்:—** தசாஹம் வரையில் துக்கப்ரச்னஞ் செய்தாலும் ஸ்நானஞ் செய்யவேண்டியது.

## 30. நிசி என்பது.

1. ராத்ரியில் முன் யாமம், கடைசி யாமம் இவைகளைத்தள்ளி மத்தியிலிரண்டு யாமங்களுக்குப் பெயர்.

2. எந்த நிமித்தத்தாலும், நிசியில் ஸ்நானஞ் செய்யக்கூடாது. ஆவச்யகமானால், பகலில் நதிகளிலிருந்து கொண்டுவந்ததீர்த்தத்தாலும், அதில்லாவிட்டால் நதியில் ஸ்வர்ணத்தைப்போட்டு விட்டாவது அக்னிஸந்நிதானத்திலாவது எடுக்கப்பட்ட தீர்த்தத்தாலும் ஸ்நானம் செய்யவேண்டியது.

3. க்ரஹணகாலத்தில் அவச்யம் ஸ்நானஞ் செய்யவேண்டியது. ரோகிஷ்டனாயிருந்தால் வெந்நீரிலாவது செய்யவேண்டியது.

## 31. ஹிரண்யரூபமாக ச்ராத்தஞ் செய்ய வேண்டிய காலங்கள்.

புத்ரஜனன காலத்திலும், க்ரஹண புண்யகாலத்திலும், ஹிரண்யச்ராத்தம் அவச்யம் செய்யவேண்டியது.

## 32. க்ரஹணகால நியமம்.

1. க்ரஹணத்தின் ஆத்யந்தபுண்யகாலம் முழுவதும் தூங்கக்கூடாது.

2. க்ரஹணத்தில் ஸ்பர்சிக்க ஆரம்பித்தவுடன் ஸ்நானம் செய்யவேண்டியது.

3. ஸ்பர்சித்த பிறகு ஹோமம் செய்யவேண்டியது. மோக்ஷத்திற்குத் துவக்கமானவுடன் தானம், ஜபம், தர்ப்பணம் இவைகளைச் செய்யவேண்டியது. மோக்ஷமான பிறகும் ஸ்நானஞ் செய்யவேண்டியது.

4. ஞாயிற்றுக்கிழமையில் ஸூர்யக்ரஹணமும், திங்கட்கிழமையில் சந்த்ரக்ரஹணமும் நேர்ந்தால் சூடாமணி புண்யகாலம் என்று பெயர்.

5. இது, மற்றகாலங்களில் உண்டாகும் க்ரஹணபுண்யகாலங்களைவிட கோடிப்பங்கு அதிகமான புண்யகாலமாகும்.

## 33. ஸங்க்ரமணதி புண்யகாலங்களின் பெயர்.

1. அயனம்-2, விஷுவம்-2, ஷடசீதி-4, விஷ்ணுபதி-4, ஆக 12.

2. உத்தராயணம், தக்ஷிணாயனம் என அயனம் 2.

3. துலாவிஷு, சைத்ரவிஷு என விஷு 2.

4. மிதுனம், கன்னி, தனுசு, மீனம், இவைகளில் ஸூர்யன் ப்ரவேசிக்குங் காலம் ஷடசீதி. இவை 4.

5. வ்ருஷபம், ஸிம்ஹம், வ்ருச்சிகம், கும்பம், இவைகளில் ஸூர்யன் ப்ரவேசிக்கும் காலம் விஷ்ணுபதி. இவை நான்கு.

## 34. புண்யகாலத்தைத் தெரிந்துகொள்ளுதல்.

1. உத்தராயணம் வந்த பிறகு புண்யகாலம். தக்ஷிணாயனம் வருவதற்கு முந்தியே புண்யகாலம்.

2. உத்தராயணத்திற்கு வந்தபின் 20-நாழிகையும், தக்ஷிணாயனத்திற்கு வருமுன் 20-நாழிகையும், மேஷம், துலாம் இவைகளுக்கு வருமுன் 10-நாழிகையும், பின் 10-நாழிகையும், ஷடசீதிக்குப் பிறகு 60-நாழிகையும், விஷ்ணுபதிக்கு முன் 16-நாழிகையும், பின் 16-நாழிகையும் புண்யகாலங்கள்.

3. இவைகளெல்லாம் விசேஷமாய்ப் பகலில் நேரிடும் ஸங்க்ரமணங்களுக்கு உரியதாகும்.

4. ராத்ரி காலங்களில் ஸங்க்ரமணம் ஏற்படுவதைப் பற்றி:—

அயனங்கள் தவிர, மற்ற 10-ஸங்க்ரமணங்கள் இரவின் பிற்பாதியில் ஸம்பவித்தால் அவற்றிற்கு மறுநாளில் புண்யகாலம்.

ராத்ரியின் முன் பாதியில் ஸம்பவித்தால் முதல் நாளில் புண்யகாலம்.

முதல் நாளாயிருந்தால் மாத்யான்ஹிககாலத்திலும், மறுநாளாக இருந்தால் சூர்யன் உதித்து 5-நாழிகைக்குள்ளும் அநுஷ்டிப்பது ரொம்ப புண்யப்ரதம்.

ராத்ரியிலும் உதயத்திலும் ஸம்பவித்த தக்ஷிணாயனத்திற்கு முந்தியதினமும், ராத்ரியிலும், ப்ரதோஷகாலத்திலும் ஸம்பவித்த உத்தராயணத்திற்கு மறுதினமும் புண்யகாலம்.

5. ஸங்க்ரமணபுண்யகாலங்களுக்கு விதிக்கப்பட்ட நாழிகைகளை மூன்றாகப் பிரித்து விஷ்ணுபதியில் மத்யகாலமும், ஷடசீதி விஷுக்களில் கடைசிபாகமும், அயனங்களில் பூராவும் உத்தமமான புண்யகாலம்.

6 அயனங்களில் கோடிப்பங்கும், மற்றவைகளில், 1000-பங்கும், புண்யபலன்கள் வ்ருத்தியடைகின்றன.

7. ஆகாமாவை:— என்பது ஆஷாடம், கார்த்திகம், மாகம், வைசாகம் என்ற நாலுமாதங்களின் முதல் அக்ஷரங்கள். இவை ஷஷ்டி மாதங்களின் பூர்ணிமைகளுக்குப் பெயர் ஆகா மாவை கொ ந்ஸா தஜ தி லெஜஃநிஹாரதத்தில் யக்ஷவூஹும். ஸவுஜந்வஸா கூஷ்ஷீ யஃ ஆகாமாவெ நஜஜதி ॥ ஷஷ்டி பூர்ணிமைகளில் அவச்யம் ஸ்நானம் செய்யவேண்டியது.

## 35. ரஜஸ்வலை.

1. சண்டாளனுக்கு 32-அடிகளும், ரஜஸ்வலைக்கு 16-அடிகளும் விலகவேண்டும்.

2. ஸ்த்ரீகள் ரஜஸ்வலைகளாக இருந்து ஸ்நானம் செய்த தினம் முதல் 15-வது நாளில் ரஜஸ்வலைகளானால் 1-நாள் தீட்டுண்டு. 16-வது நாளில் ரஜஸ்வலைகளானால் 2-நாள் தீட்டுண்டு. அதற்குமேல்பட்டால் 3-நாள்களுக்குத் தீட்டுண்டு. 15-நாள்களுக்குட்பட்டால் தீட்டில்லை.

3. தூரஸ்த்ரீ, 4-வது தினத்தில், ஸுமங்கலியானால் 60-மண்ணும், விதவையானால் 120-மண்ணும் இட்டு சௌசஞ்செய்யவேண்டியது.

4. 24-தடவை சரீரத்தில் மண்ணிட்டு 100-முழுக்கும் செய்யவேண்டியது.

5. 5-வது தினத்தில் ஸ்நானம் செய்த பிறகு தான் தேவபித்ருகார்யங்களில் யோக்யதையுண்டு.

6. தூரஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்ளக் கூடாது.

7. தூரமாயிருக்குங் காலத்தில் ஏதாவது ஆசௌசம் நேர்ந்தால் அநேக த்வாரங்களுள்ள சல்லடை முதலான பாத்ரங்களால் ஸ்நானம் செய்து வேறு வஸ்த்ரம் தரிக்காமல் இருக்கவேண்டியது.

8. ஸுமங்கலிகள் ஸ்நானம் செய்தவுடன் ஸந்தானத்தைக் குறித்து ஸூர்யனை உத்தேசித்து ப்ரார்த்தித்து 3-கபளம் அன்னம் சாப்பிடவேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் மஹாதோஷமுண்டு.

9. தூரஸ்த்ரீகள் ஸங்கவகாலத்திற்குப் பிறகு ஸ்நானம் செய்யவேண்டியதென்று சிலர் கொள்கை.

10. யாத்ரை, மார்கம், கலகம், வீடுகள் தீப்பற்றுதல், தேவர்களின் உத்ஸவம், விவாஹம், யாகம், மங்களங்கள், புண்யதீர்த்தம் இவைகளில் தீண்டல் தோஷமில்லை.

11. தேவஸேவைக்காக வந்தவர்களும், தேவாலயஸமீபத்தில் உள்ளவர்களுமாகிய சண்டாளர் முதலியவர்களை ஸ்பர்சித்தாலும் ஸ்நானம் செய்யக்கூடாது.

12. நைமித்திகஸ்நானத்தை உடனே செய்யவேண்டியதே தவிர, ஒரு முஹூர்த்தங்கூட தாமதிக்கக்கூடாது.

## 36. காம்யஸ்நானங்கள்.

1. பூசம், ஜன்மநக்ஷத்ரம், வ்யதீபாதம், வைத்ருதி, அமா, ஞாயிறு, செவ்வாய், சனி இவைகளில் நதியில் ஸ்நானம் செய்வது அதிக புண்யப்ரதம்.

2. சைத்ரக்ருஷ்ணசதுர்தசியில் ஶிவஸந்நிதானத்தில் உள்ள தடாகத்தில் ஸ்நானம் செய்வது அதிக விசேஷம்.

3. மாகசுக்லஸப்தமியில் அருணோதயகாலத்தில் ஸ்நானம் செய்வது மிகுந்த புண்யத்தைக் கொடுக்கும்.

4. புனர்பூசம், புதவாரங் கூடிய சைத்ரசுக்லாஷ்டமி திதியில் செய்யும் ஸ்நானமானது யாகபலனைக்கொடுக்கும்.

5. நெல்லிக்கனியால் ஸ்நானம் செய்தால் விஷ்ணு த்ருப்தியடைந்து மிகுந்த ஸம்பத்தைக்கொடுக்கிறார். ஆனால் ஷஷ்டி, ஸப்தமி, நவமி, தசமி, த்ரயோதசி, அமா, பூர்ணிமா, ஸங்க்ரமணம், ஞாயிறு, த்விதீயை இவைகளில் அவ்வித ஸ்நானம் கூடவே கூடாது.

6. குருவாரமும், அமாவாஸ்யையுங் கூடிய காலத்தில் அரசமரத்து நிழலிலிருந்து செய்யும் ஸ்நானம் ப்ரயாகஸ்நானத்திற்குச் சமானம்.

7. இலவு, புளி, வேம்பு, புங்கு, கடுக்காய், கோவிதாரம், விளா, எருக்கு, இலந்தை, தானீ, வெண்கருங்கிளா, பருத்தி இவைகளின் நிழலில் ஸ்நானம் செய்யவேகூடாது.

8. மாகமாஸம்:— இது தைமீ அமாவாஸ்யை கழித்த மறுநாள் முதல் மாசிமீ அமாவாஸ்யை பர்யந்தம் உள்ள காலத்திற்குப் பெயர்.

9. அந்த மாகமாஸத்தில் ஸூர்யன் பாதி உதயமாகுங்கால் ஸ்நானம் செய்து தானங்கள் செய்தால் அக்ஷயமான பலனைக் கொடுக்கின்றன. ஆனால், இந்தக் காலம் ஸ்த்ரீகளுக்கு உரித்ததே தவிர, புருஷர்களுக்கல்ல.

10. புருஷர்களுக்கோவெனில் ஸூர்யோதயமாகி $1\frac{1}{2}$-நாழிகை பர்யந்தம் காலமிருப்பதால் உதயத்தில் உபஸ்தானம் செய்து ஜபத்தை முடித்துவிட்டு பிறகு ஸங்கல்பம் செய்து ஸ்நானம் செய்யலாம்.

**𑌮𑌾𑌘𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃 ॥**

𑌮𑌾𑌘𑌮𑌾𑌸𑍇 𑌰𑌟𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌪𑌃 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌭𑍍𑌯𑍁𑌦𑌿𑌤𑍇 𑌰𑌵𑍌 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌘𑍍𑌨𑌂 𑌵𑌾 𑌸𑍁𑌰𑌾𑌪𑌂 𑌵𑌾 𑌕𑌂𑌪𑌤𑌨𑍍𑌤𑌂 𑌪𑍁𑌨𑍀𑌮𑌹𑍇 ॥
𑌮𑌕𑌰𑌸𑍍𑌥𑍇 𑌰𑌵𑍌 𑌮𑌾𑌘𑍇 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌚𑍍𑌯𑍁𑌤 𑌮𑌾𑌧𑌵 ।
𑌸𑍍𑌨𑌾𑌨𑍇𑌨𑌾𑌨𑍇𑌨 𑌮𑍇 𑌦𑍇𑌵 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌫𑌲𑌦𑍋 𑌭𑌵 ॥
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌚𑍍𑌯𑍁𑌤 𑌨𑌿𑌮𑌜𑍍𑌜𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑍁𑌭𑍋𑌦𑌕𑍇 ।
𑌅𑌨𑍇𑌨 𑌮𑌾𑌘𑌸𑍍𑌨𑌾𑌨𑍇𑌨 𑌸𑍁𑌪𑍍𑌰𑍀𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑌰 ॥

11. அப்யுதிதகாலமென்பது:—உதயத்திற்கு 1½-நாழிகைக்கு முன்னும், 1½-பின்னும் உள்ள காலம்.

12. நித்யகர்மானுஷ்டானத்தை விட்டு மாகஸ்நானம் மட்டில் பண்ணுவதில் ப்ரயோஜனமில்லை.

13. மாகஸ்நானத்திற்கு ஆரம்பதினத்தில், 30-நாளும் செய்கிறேனென்று ஸங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம் செய்யவேண்டியது. ஸ்நானம் செய்து முடிவாகும் காலத்தில் தம்பதிகளுக்குப் போஜனமளித்து நாநாவிதங்களான தானங்கள் செய்வதுந் தவிர துப்பட்டி, போர்வை முதலானவைகளும் தானம் செய்யவேண்டியது.

14. நித்ய நைமித்திக காம்ய ஸ்நானங்களுக்கு அங்கமான தர்ப்பணம் உண்டு.

15. ராத்ரியில் எண்ணெ தேய்த்து ஸ்நானம் செய்யக் கூடாது.

16. சிசுக்கள், ரோகிஷ்டர்கள் இவர்களுக்கு காலதோஷம் பார்க்கவேண்டியதில்லை.

17. ஜனனம், மரணம், பல் துலக்குதல், ஸம்போகம், எண்ணெ தேய்த்துக்கொள்ளுதல், உதயஸ்நானம் இவைகளைச்

செய்யும் ஸமயத்தில் எந்த திதியோ அதை அனுஸரித்தே விதி நிஷேதங்களை அனுஷ்டிக்கவேண்டும்.

## 32. எண்ணெ தேய்த்துக்கொள்வதற்கு அர்ஹமல்லாத திதி, வார, நக்ஷத்ரங்கள்.

1. ஞாயிறு, செவ்வாய், வியாழன், வெள்ளி, ப்ரதமை, ஷஷ்டி, ஸப்தமீ, அஷ்டமீ, ஏகாதசி, த்வாதசி, அமா, சதுர்தசி, பூர்ணிமா, உத்திரம், கேட்டை, திருவோணம், திருவாதிரை, ஸங்க்ரமணம், ஜன்மநக்ஷத்ரம், வ்யதீபாதம், ஆசௌசம் இவைகளில் எண்ணெ தேய்த்து ஸ்நானம் செய்யக்கூடாது.

2. அமா, பூர்ணிமா, சதுர்தசி, த்வாதசி, அஷ்டமீ, ஸப்தமீ, ஷஷ்டீ, ஸங்க்ரமணம் இவைகளில் தைலத்தைத் தொடவுங் கூடாது. எண்ணெ சாப்பிடவும் கூடாது.

3. ஞாயிறன்று எண்ணெ தேய்த்துக் கொண்டால் வருத்தமுண்டாகும். திங்களில் காந்தி, செவ்வாயில் அற்பாயுசு, புதனில் ஸம்பத்து, வ்யாழனில் ஹானிஉம், வெள்ளியில் வ்யாதி, சனியில் ஸர்வகார்யஜயமும் உண்டாகும்.

4. சித்ரை, ஹஸ்தம், திருவோணம் இவைகளில் அப்யஞ்ஜனமும், விசாகம், சதயம் இவைகளில் க்ஷௌரமும், மகம், உத்திரம், கார்த்திகை இவைகளில் ஸ்த்ரீஸம்போகமும் அவச்யம் விலக்கப்படவேண்டும்.

## 33. திதி, வார, நக்ஷத்ர, யோக, கரணங்களுக்குள் வாரம் முக்யம்.

1. திதி வார நக்ஷத்ர யோககரணங்களில் வாரமே பலமுடையது. தைலத்தை நிஷேதித்தால் எள்ளெண்ணெக்கு

நிஷேதம். அப்யங்கநிஷேதம் சொல்லுமிடங்களில் எள்ளெண்ணெ, கடுகுஎண்ணெ முதலியவைகளுக்கும் நிஷேதம்.

2. உபவாஸமிருப்பவன், க்ஷௌரம் செய்துகொண்டவன், வ்ரதம் அநுஷ்டிப்பவன் ஆகிய இவர்கள் எண்ணெயைத் தொட்டால் லக்ஷ்மீவிலாஸங் குறையும்.

3. எல்லாதோஷங்களுக்கும் ப்ராயச்சித்தமுண்டு. உஷஃகாலம், ப்ராதஃகாலம் இவைகளில் எண்ணெ தேய்த்துக் கொள்பவனுக்கு * ப்ராயச்சித்தமேயில்லை. ஆனால், நரக சதுர்தசி தவிர்த்து.

## 34. தீபாவளியில் தைலஸ்நானத்தின் மஹிமை.

1. தீபாவளியில் தைலத்தில் லக்ஷ்மியும், வெந்நீரில் கங்கையும் இருக்கிறார்கள். ஆகையால் வெந்நீரிலேயே ஸ்நானம் செய்யவேண்டியது.

2. உதித்து 6-நாழிகைக்கு மேலும், மாலையில் அஸ்தமனத்திற்கு 6-நாழிகை முந்தியுமாக எண்ணெ தேய்த்து ஸ்நானஞ்செய்வதற்குறியகாலம்.

3. ஸூர்யன் ஸ்வாதீநக்ஷத்ரத்திலிருக்கையில் சந்த்ரன் கூடுகிறதினமாகிய தீபாவளியில் ஆல், அரசு, புரசு, அத்தி, மாவலங்கை இந்த ஐந்து பட்டைகளுடன் வெந்நீர் போட்டு ஸ்நானஞ் செய்யவேண்டியது.

𑌆𑌶𑍍𑌵𑌯𑍁𑌕𑍍𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑍇 𑌤𑍁
𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌧𑍂𑌦𑌯𑍇 ।
𑌤𑍈𑌲𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌜𑌨𑍈𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍈𑌃
𑌮𑌹𑌾𑌸𑍍𑌨𑌾𑌨𑌸𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

---

* ப்ராயச்சித்தமேயில்லையென்றால் அஸாத்யமென்றறியவும்.

4. வாஸனைத்தைலம், புஷ்பவாஸனையடங்கிய தைலம், வைத்யமுறைப்படி காய்ச்சிய தைலம், நெய் இவைகளைத் தேய்த்துக்கொள்வதில் திதி தோஷமில்லை.

5. பிணத்துடன் சென்று திரும்பி வந்தவனும், க்ஷௌரஞ் செய்துகொண்டவனும், எண்ணை, காய்ச்சினதைலம் முதலியவைகளையும் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ் செய்யக்கூடாது.

6. கஞ்சி, நெய், ஜலம் இவைகளில் ஒன்றை எண்ணையுடன் கலந்து தேய்த்துக்கொண்டால் திதிதோஷம் பார்க்க வேண்டியதில்லை.

7, ஞாயிற்றுக்கிழமையில் புஷ்பத்தையும், செவ்வாய்க்கிழமையில் மண்ணையும், வ்யாழக்கிழமையில் அருகையும், வெள்ளிக்கிழமையில் கோமயத்தையும் சேர்த்துத் தேய்த்துக் கொண்டால் வாரதோஷமில்லை.

8. உப்பு அல்லது வெல்லம் சேராத எள்ளை, எண்ணை தேய்த்துக்கொண்டு சாப்பிடக்கூடாது.

9. ராத்ரிகாலத்தில் எள் ஸம்பந்தமுள்ள பக்ஷணம் முதலியதையும் புஜிக்கவே கூடாது.

10. எண்ணை தேய்த்துக்கொண்டு, எடுத்துவைக்கப்பட்டஜலத்திலும், ஓடும் ஜலத்திலும் ஸ்நானஞ் செய்யலாம்.

11. பாத்ரங்களில் எடுத்துவைக்கப்பட்ட ஜலத்தை ஒரு ராத்ரிக்குப் பிறகு உபயோகித்தல் கூடாது. அது சுத்தமல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது.

12. ப்ராம்ஹணர்களுக்குத் தைலாப்யங்கஞ் செய்வித்தானுகில் (100) நூறு வருஷம் கங்காஸ்நானஞ் செய்த பலனை அடைகிறன்.

## 35. தீர்த்தயாத்ரை.

1. தீர்த்தயாத்ரைக்குப் போகும்போது குடை, பாத ரக்ஷை, வாஹனம், பல்லக்கு, டோலி முதலியவைகளன்னியில் போகவேண்டும்.

2. குடை பிடித்துக்கொண்டால் 4-ல் ஒருபங்கு பலனை இழந்துவிடுகிறான். பாதரக்ஷைகளைத் தரித்துக்கொண்டால் பாதி பலனையும், வாஹனம், குதிரை, காளைமாடுகளில் சென்றால் முக்கால்பங்கு பலனையும், மனிதர்களால் சுமக்கப்படும் பல்லக்கு, டோலி முதலியவைகளில் சென்றால் முழுபலனையும் இழந்துவிடுகிறான்.

3. ரிஷபம் முதலியவைகள் பூட்டிய வண்டிகளில் ஏறிக் கொண்டால் ஒருபலனுங் கிடையாமற் போவதுமன்றி, ரிஷபம் முதலியவைகளின் சரீரத்தில் எவ்வளவு ரோமங்களிருக்கின்றனவோ, அவ்வளவு வருஷம் நரகத்திலிருப்பார்கள்.

4. ஒருவன் பிறரின் உதவியால் தீர்த்தயாத்ரையைச் செய்வானாகில் அவன் பதினாறில் ஒரு பங்கு பலனை அடைகிறான்.

5. ஒருவன் ஒரு கர்மாவைச் செய்துகொண்டிருக்கும் போது மத்தியில் தீர்த்தஸ்நானஞ் செய்தால் பாதி பலனை அடைகிறான்.

6. வேறு ஒருவனுக்கு ஸஹாயமாய் கங்காதி புண்ய தீர்த்தயாத்ரைக்குச் சென்றால், அவன் நித்யஸ்நானபலனை அடைகிறானே தவிர, தீர்த்தஸ்நானபலனை அடைகிறதில்லை.

7. மாதா, பிதா, ஸஹோதரர்கள், குரு இவர்களில் எவர்களை உத்தேசித்து ஸ்நானம் பண்ணுகிறானோ, அவர்கள் அந்த ஸ்நானத்தில் 12-ல் ஒருபங்கு பலனை அடைகிறார்கள்.

8. ஒருவன், தீர்த்தயாத்ரைக்குப் போகிறவனைப்பார்த்து எனக்காக ஒரு ஸ்நானம் செய்துவரவேணுமென்று ப்ரார்த்தித்து அவன் ஸ்நானஞ்செய்தால் அவன் எட்டிலொரு பங்கு பலனை அடைகிறான்.

9. ஒருவன் தான் செய்த புண்யத்தைப் பிறருக்கு தானஞ்செய்யவே கூடாது.

10. ஆசார்யன், தாய், தந்தை இவர்களுக்குத் தன் புண்யத்தை ஸமர்ப்பிக்கலாம். ஆனால் அவர்களால் உத்தரவு கொடுக்கப்பட்டாலும் பாபத்தை ஸமர்ப்பிக்கவே கூடாது.

11. குடும்பஸ்தர்கள் தீர்த்தயாத்ரைக்குப் போகவேண்டுமானால் வீட்டை பாழ்போட்டுவிட்டு யாத்ரை செய்யவே கூடாது.

12. ஸர்வகாலமும் ஸம்பூர்ணமாய் ஜலமுள்ள கிணறு, வாபி, தடாகங்களில்லாவிட்டால் ஆடிமாதத் துவக்கத்திலும், நதிகளில் ஸ்நானஞ் செய்யலாம். கங்கைக்குமட்டில் ஷி தோஷமில்லை.

## 36. கௌணஸ்நானம்.

1. கௌணஸ்நானம் 8-வகைப்படும்.

(1) வாருணம், (2) ஆக்நேயம், (3) ப்ராம்ஹம், (4) வாயவ்யம், (5) திவ்யம், (6) காபிலம், (7) ஸாரஸ்வதம், (8) காயத்ரம் என்று எட்டு பேதங்களாகின்றன.

2. ஜலத்தில் (இறங்கி அவகாஹ) ஸ்நானஞ் செய்வது வாருணஸ்நானமென்று சொல்லப்படும். ரோகாதிகளால் இதைச்செய்ய அசக்தர்கள் மற்ற ஸ்நானங்களைச் செய்யலாம்.

3. மந்த்ரத்துடன் விபூதியினால் சரீரம் முழுமையும் பூசிக்கொள்வது ஆக்நேயஸ்நானமென்று சொல்லப்படும்.

4. ஆபோஹிஷ்டாமயோபுவ: இத்யாதி மந்த்ரங்களால் ப்ரோக்ஷித்துக்கொள்வது ப்ராம்ஹஸ்நானமென்று சொல்லப்படும்.

5. பசுவின் குளம்படித்தூளியைப் பூசிக்கொள்வது வாயவ்யஸ்நானமென்று சொல்லப்படும்.

6. வெய்யலுடன் கூடிய மழையில் நனைவது திவ்ய ஸ்நானமென்று சொல்லப்படும்.

7. ஈர வஸ்த்ரத்தினால் சரீரத்தைத் துடைத்துக் கொள்வது காபிலஸ்நானமென்று சொல்லப்படும்.

8. ஸூர்யன் அஸ்தமனமடைந்த பிறகு பெரியோர்களின் வாக்யத்தால் சுத்தனாவது ஸாரஸ்வதஸ்நானமென்று சொல்லப்படும்.

9. தீர்த்தத்தை எடுத்து காயத்ரியால் பத்துத் தடவை அபிமந்த்ரித்து ப்ரோக்ஷித்துக் கொள்வது காயத்ரஸ்நாநமென்று சொல்லப்படும்.

10. அசக்திவிஷயத்திற்குத் தக்கபடி கழுத்துவரையிலாவது, இடுப்பு வரையிலாவது நனைத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஆக்நேயம் முதலிய ஸ்நானங்களைச் செய்யலாம்.

இவைகளெல்லாம் கௌணஸ்நானங்களென்று சொல்லப்படுகின்றன.

## 37. புண்ட்ரதாரணவிதி:।

1. **புண்ட்ரதாரணம்** என்பது நெற்றிக்கிட்டுக் கொள்வது. அவரவர்கள் குலாசாரப்படி ஊர்த்வபுண்ட்ரம், அல்லது த்ரிபுண்ட்ரத்தை தரிக்கவேண்டும்.

2. ச்ராத்தகாலத்தில் சிலர் புண்ட்ரம் தரித்துக்கொள்வதும், சிலர் தரிக்காமலிருப்பதும் தங்கள் குலாசாரத்தைப் பொருத்த விஷயம்.

3. **பஸ்மத்தை எடுக்க மந்த்ரம்:—** பஸ்மேதி ஸ்மரதே தத்தே நித்யம் ஸர்வயஜ்ஞக்ருதம் பவேத் ॥

4. விபூத்யபிமந்த்ரணம்—அக்நிரிதி பஸ்ம । வாயுரிதி பஸ்ம । ஜலமிதி பஸ்ம । ஸ்தலமிதி பஸ்ம । வ்யோமேதி பஸ்ம । ஸர்வம் ஹ வா இதம் பஸ்ம ॥ ஓம் ॥

5. கோபீசந்தநாபிமந்த்ரணம்- கோபீசந்தந பாபக்ந விஷ்ணுதேஹஸமுத்பவ । சக்ராங்கித நமஸ்துப்யம் தாரணாந்முக்திதோ பவ ॥ ஶங்கசக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத । கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதம் ॥

6. தீபத்தின் சுடர், தீபத்தின் எண்ணெ, தீபத்தின் பஸ்மம், இவைகளைக் கையால் தொடக்கூடாது. தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும்.

7. த்ரிபுண்ட்ரத்தை தரித்துக்கொண்டு அதன்மேல் ஊர்த்வபுண்ட்ரத்தை தரிக்கக் கூடாது.

8. ஊர்த்வபுண்ட்ரம் தரித்த பிறகு அதன்மேல் த்ரிபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளலாம்.

9. ஊர்த்வபுண்ட்ரத்தை பஸ்மாவினால் தரித்துக்கொள்ளக்கூடாது. த்ரிபுண்ட்ரத்தை ம்ருத்திகையால் தரித்துக் கொள்ளக்கூடாது.

## 38. ஸந்த்யாவந்தனஞ் செய்யக்கூடிய காலம்.

1. நக்ஷத்ரப்ரகாசம் மழுங்கினது முதல் ஸூர்ய உதயமாகிற வரையில் காலையில் ஸந்த்யாவந்தனம் செய்யக்கூடிய காலம். ஸாயங்காலத்தில் அர்த்தமண்டலஸமயத்தில் ஸந்த்யாவந்தனம் செய்யவேண்டியது.

2. நக்ஷத்ரப்ரகாசகாலம் துவக்கி (உதயத்திற்கு 2-நாழிகை முன்) ஸூர்ய உதயமாகிறவரையில் காலையிலும், ஸூர்யனுடன் கூடிய காலம் துவக்கி நக்ஷத்ரதர்சனம் வரையில் மாலையிலும் காயத்ரியை ஜபிக்கவேண்டியது.

## 39. ப்ராம்ஹணர்கள் நித்யஞ் செய்யவேண்டிய கர்மங்கள்.

1. ஸ்நானம், ஸந்த்யா, ஜபம், ஹோமம், தேவபூஜை, அதிதிபூஜை, வைச்வதேவம் இந்த 6-ம் ப்ராம்ஹணர்கள் தினந்தோறுஞ் செய்யவேண்டிய கர்மங்கள்.

2. ஸந்த்யாகாலம் $3\frac{3}{4}$-நாழிகை என்பது ஸந்த்யாவந்தனத்திற்கல்ல; மற்ற கர்மாக்களுக்குச் சொல்லப்பட்டது.

3. உதயத்திற்கு முன் ஒரு நாழிகைமுதல் உதயத்திற்குப்பிறகு 2-நாழிகை வரையில் ஸங்கடவிஷயத்தில் கௌணகாலம் என்று சொல்லப்படுகிறது.

4. மத்யாஹ்னகாலமே முக்யம். $1\frac{1}{2}$-யாமம் முதல் 15-நாழிகை வரையிலும் மாத்யாஹ்னிககாலம். அதற்குப் பிறகு ஸாயங்காலம் வரையில் கௌணகாலம்.

5. வெளியில் சென்றே ஸந்த்யாவந்தனஞ் செய்தல் அதிச்லாக்யம்.

6. காலையில் நின்றுகொண்டும், மத்யாஹ்ன ஸாயங்காலங்களில் உட்கார்ந்துகொண்டும் காயத்ரியை உபாஸிக்க வேண்டியது.

7. ஆசௌசகாலத்தில் ஸந்த்யாவந்தனமந்த்ரத்தை ஸ்மரிக்க வேண்டியதே தவிர, உச்சரிக்கக்கூடாது.

8. காலையில் அர்க்யம் விடுவதில் புருவம் வரையில் தூக்கிக் கொஞ்சம் வணங்கி நின்றுகொண்டு விடவேண்டும். மத்யான்ஹத்தில் வணங்காமல் நினறுகொண்டு அர்க்யம் விட வேண்டும். ஸாயங்காலத்தில் உட்கார்ந்துகொண்டு அர்க்யத்தைத்தூக்கி விடவேண்டியது. ஜலத்திலேயே அர்க்யத்தை விடவேண்டியது. ஜலமில்லாத பக்ஷத்தில் ஸ்தலத்தை சுத்தி செய்து அதில் விடலாம். ஸாயங்காலத்தில் அர்க்யத்தைக் கரையிலேயே விடவேண்டியது அவச்யம்.

9. கட்டைவிரலும், ஆட்காட்டிவிரலும் சேர்ந்தால் அது ராக்ஷஸமுத்ரையென்று சொல்லப்படுகிறது: அந்த முத்ரையுடன் யாதொரு கர்மத்தையும் செய்யவேகூடாது.

10. அர்க்யத்தைத் தூக்கிக்குதிகால் பூமியில் படாமல் எழும்பி நின்று ஜலமத்தியில் விடவேண்டியது.

11. ஸந்த்யாவந்தனத்தை கிழக்கு, அல்லது வடக்கு முகமாய் இருந்து செய்யவேண்டியது.

12. அர்க்யத்தை ஸூர்யனுக்கு எதிராக விடவேண்டும்.

13. அர்க்யத்திற்குப்பிறகு ஆத்மப்ரதக்ஷிணம் செய்ய வேண்டியது. பிறகு ஆத்மபரிஷேசனம் செய்து ஆசமனஞ் செய்யவேண்டும்.

14. ஸந்த்யாவந்தனஜபம் செய்யும்போது தர்ப்பபவித்ரத்தையாவது தர்ப்பத்தையாவது தரிக்கவேண்டியது.

15. செவிடு, குருடு, ஊமை, பைத்யம் முதலான காரணத்தால் தோஷங்களுடையவனாக இருந்தாலும், 7-நாள் ஸந்த்யாவந்தனஞ் செய்யாவிட்டால் புனருபநயனம் செய்ய வேண்டியது.

16. ஸங்க்யை இல்லாமல் செய்த ஜபமும், தீர்த்த மில்லாமல் கொடுத்த தானமும் நிஷ்பலமாகும்.

## 40. ஜபத்திற்கு யோக்யமான ஆஸனங்களும் ஸ்தலங்களும்.

1. அக்னிசாலை, தீர்த்தக்கரை, தேவாலயம், புண்ய தீர்த்தங்கள், பசுவின் கொட்டாரம், ஸித்தக்ஷேத்ரம். சூர்யன், அக்னி, ருத்ரன், தேவர் இவர்களின் ஸன்னிதானத்தில் எதிர்முகமாக இருந்து ஜபிக்கவேண்டும். அரசு, பில்வம், துளசி, வனபுஷ்பம் இவைகள் சூழ்ந்த இடத்திலும் ஜபம் செய்வது ச்லாக்யம். வீட்டைக்காட்டிலும் மற்றதெல்லாம் விசேஷமே. ஸௌகர்யப்படாவிட்டால் வீட்டில் செய்யலாம்.

2. விஷ்ணுஸன்னிதி அளவற்ற பலனைக்கொடுக்கும்.

3. ஜபாரம்பத்திற்குமுன் பூமியை இடதுகாலால் 3-தடவை உதைக்கவேண்டும். '𑌅𑌪𑌸𑌰𑍍𑌪𑌨𑍍𑌤𑍁 𑌯𑍇 𑌭𑍂𑌤𑌾 𑌯𑍇 𑌭𑍂𑌤𑌾 𑌭𑍂𑌮𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 । 𑌯𑍇 𑌭𑍂𑌤𑌾 𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍁 𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌯𑌾' என்றமந்த்ரத்தால்.

4. ஜபாரம்பத்தில் நமஸ்காரம் செய்வதற்கு மந்த்ரம்:—
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌤𑌲𑌾𑌶𑍇𑌷𑌾 𑌤𑌲𑌾𑌲𑍋𑌕𑌾𑌲𑍋𑌕𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌃 ।
𑌯𑍇 𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥

5. ஜபத்திற்கு ஆஸனம் போட்டுக்கொள்ள வேண்டி யது. வ்ருஷ்டி கூயா யுதா ஜொகா ஷெவி கூம் விஷ்ணு நா யுதா । கூம் வ யாரய ஊர்ம் ஷெவி வவித்ரும் கூரா வா ஸநம் ॥

6, ஜபாரம்பத்திற்கு முன் சொல்லவேண்டிய மந்த் ரங்கள். உரு ஹூதவிஸாவாஷ்யா யெ வ வெ ஹூதி யாரகா: । வடிதெஷாவிரொயென ஸுருஹகூக்ஷ ஸஊர ஹெ ॥ கூவக்ரஷு ஹூதாதிவிஸாவாஸுவக்ஷதாதிஸு । ஸவெக்ஷாவிரொயென ஸுருஹகூக்ஷ ஸஊரஹெ ॥ ஹூ தவெுதவிஸாவா யெ யெ ஹூதா யெ நிஸாவரா: । ஸவெக்ஷாவிரொயென ஸுருஹகூக்ஷ ஸஊரஹெ ॥

7. **ஜபத்திற்குரிய ஆஸனங்கள்:—** தர்ப்பாஸனம், மான் தோல், வஸ்த்ரம், புலித்தோல், கம்பளம் இவ்விதமான ஆஸனத்திலிருந்து ஜபம் செய்யவேண்டியது.

8. **ஆஸனத்தை உபயோகிக்கத் தகுந்தவர்கள்:—** யோகத்தை விரும்புகிறவன் புலித்தோலையும், யதிகள், யாகஞ் செய்தவர்கள், ப்ரம்ஹசாரிகள் இவர்கள் மான்தோலையும் உப யோகிக்கலாம். வஸ்த்ரம் ரோகத்தைப்போக்கும். கம்பளம் துக்கத்தை விலக்கும்.

9. ப்ராணாயாமஞ்செய்யும் முறை:— ப்ராணாயாமஞ் செய்வதில் கட்டைவிரல், பவித்ரவிரல், சுண்டுவிரல் இவை களால் மூக்கைப் பிடித்துக்கொண்டு செய்யவேண்டியது. ஆட்காட்டிவிரல், பாம்புவிரல் இவ்விரண்டும் மூக்கில் படக் கூடாது.

10. **ஸூர்யனுக்கு அபிமுகமாகவே ஜபிக்கவேண்டும்:—** குசாஸனத்திலாவது குசத்திற்கு மேற்கொண்ட ஆஸனத்திலாவது, கிழக்குமுகமாகவாவது, அல்லது சூர்யனுக்கு எதிர்முகமாகவாவது, இரு ஸந்த்யைகளிலும் ஜபஞ் செய்யவேண்டியது.

11. காலை ஜபத்தை நின்றுகொண்டு ஸூர்யதர்சனமாகும்வரையிலும், மாலை ஜபத்தை உட்கார்ந்துகொண்டு நக்ஷத்ரதர்சனமாகும் வரையிலும் செய்யவேண்டியது.

12. மத்யான்ஹத்திலும் உட்கார்ந்துகொண்டே ஜபத்தைச்செய்யவேண்டும்.

13. கௌணகாலத்திலும் நின்றுகொண்டு ஜபிக்கவேண்டும்.

14. காயத்ரியைப் பாதம் பாதமாகப் பிரித்தே ஜபிக்கவேண்டியது. பிரிக்காமல் ஜபித்தால் ப்ரம்ஹஹத்யாதோஷத்தை அடைகிறான்.

15. மந்த்ரத்தை நன்றாக உச்சரித்து ஒவ்வொரு அக்ஷரத்தையும் திருத்தமாய் வாக்கினல் சொல்வது வாசிகம். இது அதமகாயத்ரீஜபமென்று சொல்லப்படும்.

16. மிகவும் ம்ருதுவாகவும் கொஞ்சம் உதடுகள் அசையும்படிக்கும் தன் செவிக்குமட்டும் த்வனி கேட்கும்படிக்கும் ஜபிப்பது உபாம்சு. இது மத்யமகாயத்ரீஜபமென்று சொல்லப்படும்.

17. மந்த்ரத்தின் ஒவ்வொரு அக்ஷரங்களையும், ஒவ்வொரு பதங்களையும் மனதால் சிந்தித்து ஜபிப்பதே மான

ஸம். இதுதான் உத்தமகாயத்ரீஜபமென்று சொல்லப்படு கிறது.

18. மானஸமென்று சொல்லப்படுகிற உத்தமமான ஜபமே ச்ரேஷ்டமானது. இந்த விதியானது எல்லா மந்த்ரங்களுக்கும் ஸமானம்.

19. வாசிகம் 1 மடங்கு பலனேயும், உபாம்சு 100 மடங்கு பல்னேயும், மானஸம் 1000 மடங்கு பலனேயும் கொடுக்கிறது.

20. வாசிகமென்று சொல்லப்படுகிற அதமஜபமானது ஆபிசாரகர்மாக்களுக்கு ச்லாக்யம்.

21. காலேயில் மூக்குக்கு ஸமமாக கை இருக்கவேண்டும். மத்யான்ஹத்தில் மார்புக்கு ஸமமாக கை இருக்கவேண்டியது. ஸாயங்காலத்தில் நாபிக்கு ஸமமாக கை இருக்க வேண்டும். இவ்விதமாயிருந்துகொண்டு ஜபம் செய்ய வேண்டும்.

22. தொனியுடனும், கைகளே மூடிக்கொள்ளாமலும், சிரஸை மூடிக்கொண்டும் ஜபத்தை செய்யவேகூடாது.

23. ஜபகாலத்தில் நாபிக்குக் கீழ்ப்பட்ட அவயவங்களே தொடக்கூடாது. தொட்டால் இரு கைகளேயும் அலம்பவேண்டியது. அல்லது வலது செவியைத்தொட வேண்டும்.

24. **உத்தரீயத்தை இடேப்பில் கட்டிக்கோண்டே செய்ய வேண்டிய கர்மாக்கள்:—** ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், தேவ பூஜை, ஹோமம், ஜபம் இவைகளேச்செய்யும்போதும், குரு,

தேவதை இவர்களை தர்சிக்கும்போதும் கண்டாவ்ருதமாக உத்தரீயத்தை தரித்துக்கொள்ளக்கூடாது.

25. குரு, பகவத்பக்தன், ப்ராம்ஹணன், தேவாலயம், ஜலம், அரசு, ஸூர்யன, அக்னி இவர்களுக்குப் பின்புறத்தைக் காட்டிக்கொண்டு ஜபம் செய்யக்கூடாது.

26. ஈரவஸ்த்ரத்துடன் ஜபிக்கவேண்டுமோனல்:— ஈரவஸ்த்ரத்தைக் கட்டிக்கொண்டால் ஜலமத்தியிலிருந்து ஜபிக்கலாமேயொழிய, கரையிலிருந்துகொண்டு ஜபிக்கக்கூடாது.

## 41. ஜபமாலைக் குறிய ஸங்க்யைகளும், உத்தம, மத்யம, அதம பேதங்களும்.

1. ஜபமாலை வைத்துக்கொண்டு ஜபம் செய்வது மெத்த ச்லாக்யம். அது 108, அல்லது 54, அல்லது 27 மணிகள் கொண்டதாக இருக்கவேண்டும். 108 மணிகளிருந்தால் உத்தமம். 54 மணிகளிருந்தால் மத்யமம். 27 மணிகளிருந்தால் அதமமாகும்.

2. ஜபத்திற்குறிய மாலைகளின் பெயர்கள்:— புத்ரஜீவிமணி, சங்குமணி, பவளமணி, ஸ்படிகமணி, முத்துமணி, தாம்ரமணி, பொன்மணி, ருத்ராக்ஷமாலை, தர்ப்பையின்முடி, துளசிக்கட்டையால் செய்தமணி, வெள்ளிமணி, வேப்பங்கொட்டைமணி, இந்திராக்ஷமணி, ரெத்னமணி இவைகளால் ஜபம் செய்யலாம்.

3. இதுகளில் எது கிடைத்தாலும் ச்லாக்யம். முன் சொல்லியது அகப்படாவிட்டால் பின் சொல்லப்பட்டது ச்ரேஷ்டம்.

4. வெண்மையான கயற்றில் மணிகளை ஒன்றின்மேலொன்று படாமல் கோர்த்து பிறகு ஒரு தனி மணியை அந்த மாலையின் முனையில் சிகரம்போல் சேர்க்கவேண்டியது. அதற்கு மேரு என்று பெயர். ஒவ்வொரு மணிக்கும் மத்தியில் முடி போடவேண்டும்.

5. கட்டைவிரலின் மத்தியில் மாலையை வைத்துக்கொண்டு நடுவிரலின் நுனியால் தள்ளிக்கொண்டு ஜபஞ்செய்யவேண்டியது. இடது கையால் மாலையைத்தொடக்கூடாது.

6. ருத்ராக்ஷமாலையால் ஜபம் செய்வதும், அதை தரிப்பதும் மஹாபுண்யம்.

7. துளஸிமணி ஜபத்திற்கு ச்லாக்யம். அதை தரிப்பது பக்தவிஷயம். வைதிகமல்ல.

8. கைவிரல்களின் ரேகைகளால் எண்ணிக்கொண்டு ஜபிக்கலாம். அதன் பலன் அபாரம்.

9. ஜபகாலத்தில் கைவிரல்களை நீட்டி மடக்கி எண்ணுவது கூடாது. அப்படி எண்ணினுல் அந்த பலன் அஸுரர்களுக்கு என்று சொல்லப்படுகிறது.

10. காயத்ரியை ஜபிக்கும்போது விரல்களின் பர்வங்களால் ஜபிப்பது ரொம்ப உத்தமம்.

11. மற்ற மந்த்ரங்களுக்கு இந்த வ்யவஸ்தை சொல்லப்படாவிட்டாலும், இவ்விதஞ்செய்வதே ச்லாக்யம்.

12. ரேகையால் எண்ணுங் க்ரமம்:— பவித்ரவிரலின் நடுரேகையில் துவக்கி ஆட்காட்டிவிரலின் மூலம்வறையில்

உள்ள 10 ரேகைகளிலும் எண்ணலாம். அல்லது பவித்ரவிரல் மூலம் முதல் துவக்கி பாம்புவிரல் மூலம்வரையிலுள்ள 10 ரேகைகளிலும் எண்ணலாம். நடுவிரல் மூலம் முதல் துவக்கி ஆட்காட்டிவிரல் மூலம் வரையிலுள்ள 10 ரேகைகளிலும் எண்ணலாம். பவித்ரவிரலின் மத்யரேகை முதல் துவக்கி பவித்ரவிரலின் மூலம் வறையிலெண்ணினுல் 12 எண் ஆகிறது. இவ்விதம் 9 தடவை எண்ணினுல் 108 ஆகிறது. இவ்விதம் செய்வது ச்லாக்யமென்று சிலர் மதம்.

13. தனக்கு மூன்று வயது மூத்தவர்களையே நமஸ்காரம் செய்யலாம். தமயன் விலக்கு.

14. ஜலத்தில் நின்று ஜபஞ்செய்தால் உபஸ்தானத்திற்காகக் கரையேறவேண்டியதில்லை. ப்ரதக்ஷிணமுஞ் செய்யவேண்டியதில்லை.

## 42. ப்ரோக்ஷிப்பதற்கு அர்ஹமல்லாத தீர்த்தங்கள்

சிசு, கன்யகை, உபநயனமாகாதவன் இவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்த்தமும், ஒரு பாத்ரத்தில் இருந்து மற்றொரு பாத்ரத்தில் எடுக்கப்பட்ட தீர்த்தமும், ஒற்றை வஸ்த்ரத்துடன் கொண்டுவரப்பட்ட தீர்த்தமும், இடது கையால் கொண்டுவரப்பட்ட தீர்த்தமும், வெண்கலம், இரும்பு இந்தப் பாத்ரங்களில் கொண்டுவரப்பட்ட தீர்த்தமும் ப்ரோக்ஷணஞ்செய்வதற்கு அர்ஹமல்ல.

## 43. ஔபாஸனஞ் செய்வது.

1. காலை மாலைகளில் ஸந்த்யாவந்தனம் செய்தபிறகு ஔபாஸனஞ் செய்யவேண்டியது.

2. க்ருஹஸ்தன், யவை அல்லது அரிசியால் ஔபாஸனத்தை உபாஸிக்கவேண்டியது. யஜமானனே ஔபாஸனத்தை உபாஸிக்கவேண்டியது.

3 ஔபாஸனாக்னியில் செய்யவேண்டிய கர்மாக்கள். ஆபஸ்தம்பிகளுக்கு:—

நூதன க்ருஹப்ரவேசம், ஸர்ப்பபலி, ஈசானபலி, வைச்வதேவம், கணஹோமம், கூச்மாண்டஹோமம், ஸ்தாலீபாகம், பும்ஸவனம், ஸீமந்தம், நாந்தி, மஹாளயம், அஷ்டகைகள், பார்வணச்ராத்தம், ஸபிண்டீகரணம்.

## 44. ஸமிதாதானம்.

ப்ரம்ஹசாரிகள் ஸமிதாதானத்தை ஸமித்தால் செய்யவேண்டும்.

## 45. பிறர் ஔபாஸனத்தைச் செய்வதற்கு அதிகாரமுள்ளவர்கள்.

1. ஔபாஸனத்தைச் செய்ய ஸௌகர்யப்படாவிட்டால் பிறரைக்கொண்டு செய்விக்கலாம். அப்படிச் செய்தவற்கு யோக்யமானவர்கள்:— புத்ரன், ஸஹோதரன், குரு, மருமான், மாப்பிள்ளை, சிஷ்யன், இவர்களைக்கொண்டு ஔபாஸனத்தை செய்விக்கலாம்.

2. பத்னியால் ஔபாஸனம் செய்யப்படுமானால் வைதிக மந்த்ரமன்னியில் (தந்த்ரத்துடன்) உபாஸிக்கலாம்.

3, ஒருவன் 12 நாள் ஔபாஸனஞ்செய்யாமல் விடுவானேயாகில் அவன் சூத்ரனாகிறான்.

அக்னியுடன் அக்னியைச் சேர்க்கலாகாது. ஜலத்தால் அக்னியை அணைக்கலாகாது. அணைத்தால் குல்மரோகமுண்டாகும்.

4. ஒளபாஸனஹோமத்தில் உதிதஹோமமென்றும், அநுதிதஹோமமென்றும் இருவகை உண்டு.

(A) ஸூர்யன் உதயமான பிறகு ஹோமஞ்செய்வது உதிதஹோமம்.

(B) உதயத்திற்கு முந்தி ஹோமஞ்செய்வது அநுதிதஹோமம். அவரவர்கள் சாகையில் சொல்லியபடி அனுஷ்டிக்கவேண்டும்.

5. காலையிலும், மாலையிலும் ஸந்த்யாவந்தனஜபாதிகளை முடித்துக்கொண்டே ஒளபாஸனஞ்செய்யவேண்டியது.

6. ஒளபாஸனத்திற்குக்காலம் தவறினால் காலையில் 12 நாழிகைக்குள்ளும், ராத்ரியில் 9 நாழிகைக்குள்ளும், செய்யலாம்.

7. கௌணகாலத்திலும் செய்யத்தவறினால் ப்ராயச்சித்தஞ் செய்துகொண்டு பிறகு செய்யவேண்டும்.

8. ஒளபாஸனஞ்செய்வதற்கு விசேஷமான ஆபத்தால் தடையேற்பட்டால் முதல்நாள் கர்மாவை மருநாள் காலையில் ஒரு யாமத்திற்குள் செய்யலாம். கடந்ததைச் செய்துவிட்டு பிறகு ப்ராப்தகாலத்ததைச் செய்யலாம். ஆனால், ராத்ரியில் ஸூர்யநமஸ்காரத்தையும், ப்ரம்ஹயக்ஞத்தையும் செய்யவேகூடாது

## 46. ஹோமார்ஹமான ஸமித்துகள்.

(1) புரசு, (2) கருங்காலி, (3) அரசு, (4) வன்னி, (5) அத்தி, (6) நாயுருவி, (7) எருக்கு, (8) அருகு, (9) தர்ப்பம், இந்த ஒன்பது ஸமித்துக்களும் ஹோமார்ஹங்கள்.

## 2. 𑌸𑌮𑌿𑌦𑍍𑌗𑍍𑌰𑌹𑌣𑌕𑍍𑌰𑌮𑌃 ।

𑌸𑌮𑌿𑌧𑌃 𑌪𑌾𑌵𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌃 𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌾𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃 ।
𑌯𑌾𑌷𑍍𑌟𑌾𑌃 𑌹𑌾𑌰𑌾𑌣𑌿 𑌹𑍋𑌮𑌾𑌯 𑌶𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌣𑌾𑌃 𑌋𑌕𑍍𑌷𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ॥

3, **ஸமித்தின் லக்ஷணம்:—** ஸமித்தானது தோலுள்ளதாயும், ஒழுங்கானதாயும், ஒரே அளவுள்ளதாயும், பச்சையாக இருந்து பிறகு காய்ந்ததாயும், தாரதம்யமில்லாததாயும், தர்ஜநீவிரல் மொத்தமுள்ளதாகவும், ஒடிக்கப்படாததாயும், இருகிளைகளில்லாததாயும், புழு முதலியவைகளால் தோஷப்படாததாயும், கொழுந்திலைகளுள்ளதாயும், வீர்யமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

4 **ச்ரௌதகர்மாவுக்கு ஸமித்தின் அளவு:—** ச்ரௌதகர்மாவுக்கு 10 அங்குலம், அல்லது 12 அங்குலம், அல்லது ஒட்டை அளவு நீளமுள்ளதாக இருக்கவேண்டும். இத்மத்திற்கு இரண்டு மடங்கும், பரிதிக்கு 3 மடங்கும் நீளம் இருக்கவேண்டும்.

5. **ஸ்மார்த்த கர்மாவில் ஸமித்தின் அளவு:—** ஸ்மார்த்தகர்மாவில் ஐந்து அங்குலம் (ஒட்டை) ஸமித்தும் இத்மமும், 10 அங்குலம் பரிதியும் இருக்கவேண்டியது.

6. **அர்ஹமல்லாத ஸமித்துக்கள்:—** மலையத்தி, புங்கை, வாகை, கொன்னை, கருவளி இவைகளும், க்ரயத்திற்கு வாங்கின ஸமித்துக்களும் ஹோமார்ஹங்களல்ல.

7. ஹோமத்திற்குப் பசுவின் நெய்யே ச்லாக்யம். அது கிடைக்காவிட்டால் எருமையின் நெய்யால் செய்யலாம்.

8. ஹோமஞ்செய்வதற்கு தான்யமானல் 100 கொண்டதும், அன்னமானல் 200 கொண்டதும் ஒரு ஆஹுதிப்ரமாணம் ஆகிறது.

9. **ஆஹுதியின் ப்ரமாணம்:—** மயிலினது முட்டையளவுள்ளதாக இருக்கவேண்டும்.

10. கை, முகம், விசிறி இவைகளால் அக்னியை ஜ்வாலை செய்யக்கூடாது.

11. **பலவகை தர்மங்கள்:—** தமனி (ஊதுகுழை) யால் அக்னியை ஜ்வாலைசெய்யவேண்டியது. கால்களை அக்னியில் காய்ச்சக்கூடாது. பூமியில் அக்னியை வைக்கக்கூடாது. அக்னியை தாண்டக்கூடாது. அக்னியை மிதிக்கக்கூடாது. புகையுடன்கூடிய அக்னியில் ஹோமஞ்செய்யக்கூடாது.

12. ஹோமத்தை அவரவர்கள் க்ருஹ்யத்தில் கண்டபடி செய்யவேண்டியது.

13. விவாஹகாலத்தில் அக்னியின் மேற்குபாகத்தில் ஹோமம் செய்யவேண்டியது.

14. யஜ்ஞத்தில் அக்னியினுடைய மத்யபாகத்தில் ஹோமம் செய்யவேண்டியது.

15. உபநயனத்தில் அக்னியின் வடபாகத்தில் ஹோமம் செய்யவேண்டியது.

16. பித்ருகார்யத்தில் அக்னியின தென்பாகத்தில் ஹோமம் செய்யவேண்டியது.

17. காம்யகர்மங்களில் அக்னியின் ஆக்நேயபாகத்தில் ஹோமம் செய்யவேண்டியது.

18. கொடுங்கர்மாவில் அக்னியின் ஈசானபாகத்தில் ஹோமம் செய்யவேண்டியது.

19. அக்னியில் ஹோமம் செய்யும்போது ஹோம த்ரவ்யத்தை இடது கையினுல் ஸ்பர்சித்துக்கொண்டே ஹோமம் செய்யவேண்டியது.

20. ஔபாஸனுக்னியை ஸமித்தில் ஸமாரோபணம் செய்துகொண்டால் ஹோமமில்லாமல் 4 தினத்திற்கு மேற் பட்டால் லௌகிகாக்னியாகும்.

21. ஔபாஸனுக்னியில் இரண்டு நாள் ஹோமம் செய்யப்படாவிட்டாலும், தம்பதிகள் பிரிந்திருந்தாலும் அது லௌகிகாக்னியாகும்.

22. அக்னியை உபாஸித்துவருபவன் மத்தியில் நின் ருல் மூன்றுநாளுக்குள் ஆரம்பித்து ஹோமம் செய்யவே ண்டும்.

23. 3 நாளுக்குள் ஹோமம் செய்யாவிட்டால் ப்ரா யச்சித்தமுண்டு.

24. 12 தினத்திற்கு மேற்பட்டால் மறுபடி ஆதானம் செய்துகொண்டே ஔபாஸனஞ் செய்யவேண்டியது.

25. ❋ ஆதானஞ்செய்து ஹோமத்திற்குத் துடங்கி ஞல் முதல் நாள் மாலையின் ஆஹுதிகளைச் செய்துவிட்டு பிறகு அன்று காலையின் ஆஹுதிகளைச் செய்யவேண்டியது.

26. ஸ்தாலீபாகஞ் செய்யும் முறை:— சதுர்தசி, பர்வம், ப்ரதமை, இவைகளில் ஹோமம்செய்துதான் ஸ்தாலீபாகம் செய்யவேண்டியது.

27. இத்மம் 17 ஸமித்துக்கொண்டதாக இருக்கவே ண்டியது.

---

❋ இது ஶௌநகரின் மதமானதால் ஸாவ்ர்த்ரிகமல்ல.

28. உபநயனத்தில் 7 பலாசஸமித்துக்களை ஈரமாகவே ஹோமஞ்செய்யவேண்டியது.

## 47. ப்ரம்ஹயக்ஞம்.

1. ப்ரம்ஹயக்ஞம் செய்யவேண்டிய முறை:— மாத்யான்ஹிகம் செய்தபிறகு வடக்குமுகமாக இருந்து வலது துடையை மேலும், இடது துடையைக் கீழுமாக வைத்துக்கொள்ளவேண்டியது.

2. கம்பளத்தில் உட்கார்ந்துகொண்டு ப்ரம்ஹயக்ஞத்தைச் செய்யக்கூடாது.

3. ப்ரம்ஹயக்ஞத்தை வெளியில் செய்யும்போது மந்த்ரங்களை மத்யம ஸ்வரத்துடன் சொல்லவேண்டும்.

4. ப்ரம்ஹயக்ஞத்தை வீட்டிற்செய்தால் மந்த்ரத்தை மனதிற்குள் ஜபிக்கவேண்டியது.

5. ப்ரம்ஹயக்ஞஞ் செய்வதற்கு அனத்யயனதோஷங் கிடையாது.

6. ப்ரம்ஹசாரிகளும் நித்யம் ப்ரம்ஹயக்ஞஞ் செய்யவேண்டியது அவச்யம்.

### 7. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑌜𑍍𑌞𑌤𑌰𑍍𑌪𑌣𑌕𑌾𑌰𑌿𑌕𑌾 ।

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌂 𑌸𑍋𑌮𑌂 𑌮𑍋𑌮𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑍍 𑌋𑌷𑍀𑌨𑍍 𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌚𑌾𑌪𑌿 𑌚
𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌂 । 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍁𑌵𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍 𑌏𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑍍
𑌤𑌥𑍋𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵 𑌸𑌹𑌸𑍍𑌵𑌧𑌾𑌭𑌿𑌂 𑌚 ॥

8. ப்ரம்ஹயக்ஞத்திற்கு அனத்யயனம் இரண்டு உண்டு.

1-வது, தனக்கு ஆசௌசம் நேரிட்ட காலங்களில் ப்ரம்ஹயக்ஞத்தைச் செய்யக்கூடாது.

❋ 2-வது, க்ராமத்தில் சவமிருந்தால் அப்போதும் ப்ரம்ஹயக்ஞத்தைச் செய்யக்கூடாது.

## 48. பூஜைக்கு அர்ஹமல்லாத புஷ்பங்கள்.

1. பாத்ரமன்னியில் கையில் பரித்துவைத்துக்கொள்ளப்பட்டதும், வஸ்த்ரத்தில் கொண்டுவரப்பட்டதும், தானுகவே உதிர்ந்ததுமாகிய புஷ்பம் தேவார்ஹமல்ல. தேவாலயத்திலுள்ள பூந்தோட்டத்தில் உண்டான புஷ்பங்கள் க்ருஹத்திலுள்ள தேவர்களின் பூஜைக்கு அர்ஹமல்ல.

2. தாமரை, பில்வம், துளஸி, இவைகளுக்கு பழமையின் தோஷங்கிடையாது.

3. துளஸி, பில்வம் இவைகளுக்கு நிர்மால்யதோஷங் கிடையாது.

4. ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, மன்வாதி, யுகாதி, மத்யான்ஹத்திற்குப் பிறகு, ஸங்க்ரமண புண்யகாலங்கள், பர்வாக்கள், த்வாதசி, இரவு, இரண்டு ஸந்த்யாகாலங்கள், இவைகளில் துளஸியை எடுக்கக்கூடாது.

## 49 த்ரிகாலஸந்த்யாவந்தனங்களைச் செய்ய வேண்டிய கால நிர்ணயம்.

1. ப்ராதஸ்ஸந்த்யையை நக்ஷத்ரஸஹிதகாலத்திலும், மாத்யான்ஹிகத்தை ஸ்நானஞ்செய்த பிறகும், ஸாயம்ஸந்த்யையை ஸூர்யஸஹிதமான காலத்திலும் அநுஷ்டிக்க வேண்டும்.

---

❋ இது க்ராமவிஷயம். பட்டணத்திற்கல்ல.

2. எப்போதும் காயத்ரியை ஜபிக்கும்போது நின்று கொண்டே ஜபிக்கவேண்டியது.

3. ஈர வஸ்த்ரத்துடன் ஜபிக்கவேண்டுமானால் ஜலத்தில் நின்றுகொண்டே ஜபிக்கவேண்டியது.

4. ஸூர்யாபிமுகமாக ஜபிக்கவேண்டியது.

5. ப்ரம்ஹயக்ஞத்தை மாத்யான்ஹிகஞ் செய்தபிறகே செய்யவேண்டியது.

6. $1\frac{1}{2}$-யாமத்திற்கு மேற்பட்டகாலம் மாத்யான்ஹிககாலம். அப்போது மாத்யான்ஹிகஸ்நானஞ்செய்யலாம்.

7. கரையிலிருந்துகொண்டே ஜலத்தில் தர்ப்பணஞ் செய்யக்கூடாது. ஒரு பாத்ரத்திலிருந்து தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு பொன், வெள்ளி, தாம்ரம், வெண்கலம் அத்திக்கட்டையால்செய்த பாத்ரம், கட்கமானின் கொம்புப்பாத்ரம் இவைகளில் தர்ப்பணம் செய்யலாம்.

## திலத்தை வைத்துக்கொள்ளவேண்டிய இடம்.

8. திலதர்ப்பணஞ் செய்யும்போது இடது கையின் அங்குஷ்டமூலத்தில் எள்ளை வைத்துக்கொண்டு தர்ப்பணம் செய்யவேண்டியது.

9. தர்ப்பணகாலத்தில் திலத்தை கல், வஸ்த்ரம், இலை இவைகளில் வைத்தால் அது புழுவுக்கு ஸமானம்.

10. ரோமங்களடர்ந்த அவயவங்களில் வைத்த எள் புழுவுக்கு ஸமானம்.

11. கட்டைவிரலையும், தர்ஜநீவிரலையும் சேர்த்து எள்ளை எடுக்கவே கூடாது. வலதுகையின் கட்டை விரலால் மட்டும் எள்ளை எடுக்கவேண்டும்.

12. ஸப்தமி, ஞாயிறு, ஜன்மநக்ஷத்ரம், இந்த தினங்களில் வீட்டில் திலத்தினால் தர்ப்பணம் செய்யக்கூடாது.

13. அன்று திலதர்ப்பணத்தை வீட்டிற்கு வெளியிலேயே செய்வது ச்லாக்யம்.

14. வீட்டில் திலதர்ப்பணம் செய்யும்படி நேர்ந்தால் ஒரு பாத்ரத்தில் தீர்த்தம் எடுத்து அதில் எள்ளைக் கலந்து வேறொரு பாத்ரத்தில் தர்ப்பணம் செய்யலாம்.

15. திலதர்ப்பணத்தை நிஷேதிக்கப்பட்ட காலத்தில் அரிசியுடன் கலந்த எள்ளினால் தர்ப்பணம் செய்யலாம்.

## 50. யம தர்ப்பணம்.

1. 𑌯𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 ॥ 𑌨𑍀𑌲𑌪𑌰𑍍𑌵𑌤𑌸𑌙𑍍𑌕𑌾𑌶 𑌰𑍁𑌦𑍍𑌰𑌕𑍋𑌪𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵 । 𑌕𑌾𑌲𑌦𑌣𑍍𑌡𑌧𑌰 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍 𑌵𑍈𑌵𑌸𑍍𑌵𑌤 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ॥

2. நரகசதுர்தசியிலும், க்ருஷ்ணாங்காரகசதுர்தசியிலும் யமதர்ப்பணம் செய்யவேண்டும்.

3. உபவீதியாகவாவது, ப்ராசீனாவீதியாகவாவது திலத்துடன் யமதர்ப்பணம் செய்யலாம்.

4. 𑌯𑌮𑌨𑌾𑌮𑌜𑌪𑌃 ॥ 𑌯𑌮𑍋 𑌨𑌿𑌹𑌨𑍍𑌤𑌾 𑌪𑌿𑌤𑍃𑌧𑌰𑍍𑌮𑌰𑌾𑌜𑍋 𑌵𑍈𑌵𑌸𑍍𑌵𑌤𑍋 𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑌃 । 𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌪𑍋 𑌦𑌤𑍍𑌤𑌕𑍃𑌤𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍀 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤 𑌏𑌤𑌦𑍍𑌦𑌶𑌕𑍃𑌜𑍍𑌜𑌪𑌨𑍍𑌤𑌿 ॥

## 51. பீஷ்ம தர்ப்பணம்.

1. மாகமாஸசுக்லாஷ்டமியில் பீஷ்மதர்ப்பணம் செய்யவேண்டும்.

2. 𑌭𑍀𑌷𑍍𑌮𑌤𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 𑌵𑍈𑌯𑌾𑌘𑍍𑌰𑌪𑌦𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌯 𑌸𑌾𑌙𑍍𑌕𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌵𑌰𑌾𑌯 𑌚 । 𑌅𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌸𑌲𑌿𑌲𑌂

𑌭𑍀𑌷𑍍𑌮𑌵𑌰𑍍𑌮𑌣𑍇 ॥ 𑌗𑌙𑍍𑌗𑌾𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌶𑌨𑍍𑌤𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌰𑌾𑌯 𑌚 । 𑌅𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌚 𑌭𑍀𑌷𑍍𑌮𑌾𑌯 𑌪𑍍𑌰𑌦𑌾𑌸𑍍𑌯𑍇𑌽𑌹𑌂 𑌤𑌿𑌲𑍋𑌦𑌕𑌮𑍍 ॥

3. மன்வாதி யுகாதிகளில் தர்ப்பணம் செய்யவேண்டியது. ரதஸப்தமியும் மன்வாதியானதால் அதில் சிஷ்டர்கள் பீஷ்மதர்ப்பணஞ் செய்கிறார்கள்.

4. 𑌰𑌥𑌸𑌪𑍍𑌤𑌮𑍀 𑌮𑌾𑌘𑌶𑍁𑌕𑍍𑌲𑌸𑌪𑍍𑌤𑌮𑍀 ॥ இது ஸூர்ய க்ரஹணத்துக்குச்சமானம். அருணோதயஸமயத்தில் ஸ்நானம் செய்தால் கோடிபுண்யம் உண்டு. ஏழு எருக்கு இலைகளை (கிடைக்காவிட்டால் இலந்தை இலைகளை) தலையில் வைத்துக்கொண்டு அதின் பேரில் கோமயப்பிள்ளையாரையும் அருகம்புல்லையும் அக்ஷதையையும் வைத்துக்கொண்டு ஸ்நானம் செய்யவேண்டியது.

## 52. 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃 ॥

1. 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌰𑍂𑌪𑌾𑌯 𑌰𑌸𑌾𑌨𑌾𑌂 𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃 । 𑌅𑌰𑍁𑌣𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌹𑌰𑌿𑌵𑌾𑌸 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ॥

2. 𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌸𑌪𑍍𑌤 𑌸𑌪𑍍𑌤𑌦𑍍𑌵𑍀𑌪𑍇 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑍇 । 𑌸𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌕𑌪𑌰𑍍𑌣𑌮𑌾𑌦𑌾𑌯 𑌸𑌪𑍍𑌤𑌮𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌾𑌚𑌰𑍇 ॥

3. 𑌜𑌨𑌨𑍀 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌪𑍍𑌤𑌮𑍀 𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌿𑌕𑌾 । 𑌸𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌿𑌕𑍇 𑌦𑍇𑌵𑌿 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌤𑍃𑌕𑍇 ॥

4. 𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 𑌦𑍇𑌵𑌿 𑌸𑌪𑍍𑌤𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑍇 । 𑌸𑌪𑍍𑌤𑌜𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌹𑌰 𑌸𑌪𑍍𑌤𑌮𑌿 𑌸𑌤𑍍𑌵𑌰𑌮𑍍 ॥

5. 𑌯𑌦𑍍𑌯𑌜𑍍𑌜𑌨𑍍𑌮𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌮𑌯𑌾 𑌸𑌪𑍍𑌤𑌸𑍁 𑌜𑌨𑍍𑌮𑌸𑍁 । 𑌤𑌨𑍍𑌮𑍇 𑌶𑍋𑌕𑌂 𑌚 (𑌰𑍋𑌗𑌂 𑌚) 𑌮𑍋𑌹𑌂 𑌚 𑌮𑌾𑌕𑌰𑍀 𑌹𑌨𑍍𑌤𑍁 𑌸𑌪𑍍𑌤𑌮𑍀 ॥

6. 𑌸𑌤𑍍𑌯𑌮𑍀 𑌸𑌤𑍍𑌯𑌜𑌨𑌨𑍀 𑌸𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍀 ।
𑌸𑌤𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌪𑌤𑍍𑌰𑌸𑍍𑌨𑌾𑌨𑍇𑌨 𑌮𑌮 𑌪𑌾𑌪𑌂 𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑌤𑍁 ॥

**𑌅𑌰𑍍𑌘𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃 ॥**

7. 𑌸𑌤𑍍𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌹𑌶𑍍𑌚𑍇𑌤 𑌸𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌨 ।
𑌸𑌤𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌹𑌿𑌤𑍋 𑌦𑍇𑌵 𑌗𑍃𑌹𑌾𑌣𑌾𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌦𑌿𑌵𑌾𑌕𑌰 ॥
𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌇𑌦𑌮𑌰𑍍𑌘𑍍𑌯𑌮𑍍 ॥௩॥

8. 𑌸𑍍𑌨𑌾𑌤𑍋𑌽𑌹𑌂𑌰𑌯𑌸𑌤𑍍𑌯𑌮𑍋𑌂𑌪𑍍𑌰𑌭𑌾𑌕𑌰𑌦𑌿𑌵𑌾𑌕𑌰 ।
𑌗𑍃𑌹𑌾𑌣𑌾𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌦𑌿𑌵𑌾𑌕𑌰 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ॥
𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌇𑌦𑌮𑌰𑍍𑌘𑍍𑌯𑌮𑍍 ॥௩॥

9. 𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌮𑍁𑌨𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌗𑍁𑌪𑍍𑌤𑍇 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑌿 । 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑍇 𑌦𑍇𑌵𑌿 𑌤𑍍𑌰𑌿𑌵𑍇𑌣𑍍𑌯𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ॥ 𑌤𑍍𑌰𑌿𑌵𑍇𑌣𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃 𑌇𑌦𑌮𑌰𑍍𑌘𑍍𑌯𑌮𑍍 ॥௩॥

## 53. திலதர்ப்பணம் செய்யவேண்டியகாலம்.

1. *அமா, அஷ்டகை, ஸங்க்ரமணங்கள், வ்யதீபாதம், க்ரஹணம் இவைகளில் ஸ்நானமானவுடன் தர்ப்பணஞ்செய்யவேண்டியது.*

| 2. **யுகாதிபுண்யகாலங்கள்.** | **அவைகளின் காலங்கள்.** |
|---|---|
| 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑌾𑌦𑌿𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑌾𑌲𑌃 | 𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑌶𑍁𑌕𑍍𑌲𑌨𑌵𑌮𑍀 |
| 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑍁𑌗𑌾𑌦𑌿𑌃 | 𑌵𑍈𑌶𑌾𑌖𑌶𑍁𑌕𑍍𑌲𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 |
| 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑌯𑍁𑌗𑌾𑌦𑌿𑌃 | 𑌮𑌾𑌘𑌾𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾 |
| 𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑌾𑌦𑌿𑌃 | 𑌭𑌾𑌦𑍍𑌰𑌪𑌦𑌕𑍃𑌷𑍍𑌣𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑍀 |
| 3 **மந்வாதிகளின் பெயர்கள்.** | **தத்காலங்கள்.** |
| 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑌿𑌃 | 𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑌶𑍁𑌕𑍍𑌲𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍀 |
| 𑌸𑍍𑌵𑌾𑌰𑍋𑌚𑌿𑌷𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑌿𑌃 | 𑌆𑌶𑍍𑌵𑌯𑍁𑌜𑌶𑍁𑌕𑍍𑌲𑌨𑌵𑌮𑍀 |
| 𑌉𑌤𑍍𑌤𑌮𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑌿𑌃 | 𑌚𑍈𑌤𑍍𑌰𑌶𑍁𑌕𑍍𑌲𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 |

| | |
|---|---|
| தாமஸோ மநு: | பாத்ரபதஶுக்லத்ருதீயா |
| ரைவதோ மநு: | பௌஷ்யஶுக்லைகாதஶீ |
| சாக்ஷுஷோ மநு: | ஆஷாடஶுக்லதஶமீ |
| வைவஸ்வதோ மநு: | மாகஶுக்லஸப்தமீ |
| ஸூர்யஸாவர்ணிகோ மநு: | ஶ்ராவணக்ருஷ்ணாஷ்டமீ |
| தக்ஷஸாவர்ணிகோ மநு: | கார்த்திகபௌர்ணிமா |
| ப்ரஹ்மஸாவர்ணிகோ மநு: | பால்குநபௌர்ணிமா |
| தர்மஸாவர்ணிகோ மநு: | ஆஷாடபௌர்ணிமா |
| ருத்ரஸாவர்ணிகோ மநு: | பால்குநாமாவாஸ்யா |
| பௌத்யோ மநு: | ஜ்யேஷ்டபௌர்ணிமா |
| ரௌச்யோ மநு: | சைத்ரபௌர்ணிமா |

4. ஹிரண்யச்ராத்தம் செய்தால்:— ஹிரண்ய ச்ராத்தங்களில் எல்லாவற்றிலும் ச்ராத்தத்திற்குப் பிறகு திலதர்ப்பணம். ப்ரத்யாப்திக ச்ராத்தத்திற்கு மறுநாள் நிஷித்த திதிவாரமாயிருந்தாலும் அவச்யம் திலங்களினால் தர்ப்பணஞ் செய்யவேண்டியது.

5. விகிரம், பிண்டதானம், தர்ப்பணம், ஸ்நானம் இவைகளில் ஆசமனம் செய்து பிறகு தர்ப்பங்களை விஸர்ஜனம் செய்யவேண்டியது.

## 54. வஸ்த்ரத்தைப்பிழியும் முறை.

வஸ்த்ரத்தை கரையிலேயே பிழியவேண்டும். காலையில் அனுஷ்டிக்கும் கர்ம்மாவுக்கு முந்தியும், மத்யாஹ்னத்தில் ப்ரம்ஹயக்ஞத்திற்குப் பிறகும், வஸ்த்ரத்தைக் கரையில் பிழியவேண்டியது. வஸ்த்ரத்தை நாலாக மடித்துக் கரையில் பிழியவேண்டியது. பிறகு இடது கை மணிக்

கட்டுக்கும், முழங்கைக்கும் மத்தியில் வைத்துக்கொண்டு இரு தடவை ஆசமனஞ்செய்தால் தான் சுத்தனாகிறான்.

## 55. பூஜார்ஹமல்லாத புஷ்பங்கள்.

1. சூத்ரன் கொண்டுவந்த புஷ்பம், க்ரயத்திற்கு வாங்கியபுஷ்பம், அன்யர்கள் கொடுத்த புஷ்பம், இவைகள் பூஜைக்கு அர்ஹமல்ல.

2. தான் வைத்துப்பயிர்செய்த புஷ்பம் உத்தமம்.

3. வனங்களில் உண்டாகும் புஷ்பம் மத்யமம்.

4. க்ரயத்திற்கு வாங்கிய புஷ்பம் அதமம்.

5. பிறருடைய புஷ்பம் அதமாதமம்.

6. தாமரை மொட்டு, ஜண்பகமொட்டு இவைகளைத் தவிர, மற்ற புஷ்பங்களின் மொட்டுகளால் பூஜிக்கலாகாது.

7. சிகப்பு குங்குமப்பூ, தாழம்பூ, இவைகள் தவிர, மற்ற முள்ளடர்ந்த புஷ்பங்கள் பூஜைக்குக்கூடாது.

8. வாஸனை அற்றது, வெடிப்பான வாஸனையுள்ளது, உலர்ந்தது, காந்தியற்றது, பூமியில் விழுந்தது, இதழற்றது, தேவதாந்தரத்தைப்பூஜித்து மிகுந்தது, மலராதது, கிரிகர்ணிகை, எருக்கு, ஊமத்தை இவைகள் கூடாது.

யந்த்ரம், விக்ரஹம், பட்டயம் இவைகளுக்கு தினந்தோறும் அபிஷேகம் செய்யவேண்டியதில்லை. பர்வகாலங்களிலும், அழுக்கடைந்த காலங்களிலும் அபிஷேகஞ்செய்ய வேண்டியது.

## 56. ஸாளக்ராமபூஜையின் முறை.

1. ஸாளக்ராம பூஜையில் ஆவாஹனம், விஸர்ஜனம், ஸம்ப்ரோக்ஷணம், ப்ரதிஷ்டை முதலியவைகள் கிடையாது.

## 57. துலஸீக்ரஹணமந்த்ர: ॥

துலஸ்யம்ருதஜந்மாஸி ஸதா த்வம் கேஶவப்ரியா ।
கேஶவார்த்தம் சிநோமி த்வாம் வரதா பவ ஶோபநே ॥

மோக்ஷைகஹேதோ தரணீப்ரஸூதே
விஷ்ணோஸ்ஸமஸ்தஸ்ய குரோ: ப்ரியே தே ।
ஆராதநார்த்தம் புருஷோத்தமஸ்ய
லுநாமி பத்ரம் துலஸி க்ஷமஸ்வ ॥

ப்ரஸீத மம தேவேஶி ப்ரஸீத ஹரிவல்லபே ।
க்ஷீரோதமதநோத்பூதே துலஸி த்வம் ப்ரஸீத மே ॥

## 58. பில்வக்ரஹணமந்த்ர: ॥

நமஸ்தே பில்வதரவே ஶ்ரீபலோதயஹேதவே ॥
ஸ்வர்காபவர்கரூபாய நமோ மூர்த்தித்ரயாத்மநே ॥
ஸம்ஸாரவிஷவைத்யஸ்ய ஸாம்பஸ்ய கருணாநிதே: ।
அர்ச்சநார்த்தம் ஹரிஷ்யாமி த்வத்பத்ரம் தத் க்ஷமஸ்வ மே ॥

## 59. விஷ்ணுபூஜார்ஹமான புஷ்பங்கள்.

1. ஜாதிமல்லிகை.
2. மல்லிகை.
3. காட்டுமல்லிகை.
4. பாதிரி.
5. அரளி.
6. செம்பருத்தி.
7. நெய்பூஷணி.
8. மலைமல்லிகை.
9. நந்தியாவட்டை.
10. கோங்கிலவு.
11. விளா.
12. புன்னை.

13. ஜம்பகம்.
14. குருந்தை.
15. மருதை.
16. அசோகம்.
17. குரிஞ்சி.
18. வில்வம்.
19. வன்னி.
20. கரிசாலை.
21. துளஸி.
22. கருந்துளஸி.
23. பச்சிலை.
24. தாழை
25. வெண்மை, சிவப்பு நிறமான தாமரை
26. கருப்பு, சிவப்புகளான உத்பலங்கள்.
27. நீர்கடம்பு.
28. கடம்பு.
29. மகிழம்பூ.
30. செங்கழனீர்.
31. துரோணபுஷ்பம்.
32. ஜாஜிபுஷ்பம்.
33. கல்ஹாரம்.
34. குந்தம்.
35. புரசு.

---

## 60. 𑌦𑍇𑌵𑌪𑍂𑌜𑌾𑌤𑍀𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌣𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ॥

𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰 ।
𑌦𑍇𑌹𑌿 𑌦𑍇𑌵 𑌮𑌮𑌾𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌂 𑌯𑍁𑌷𑍍𑌮𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌨𑌿𑌷𑍇𑌵𑌣𑍇 ॥
𑌅𑌕𑌾𑌲𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌹𑌰𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑌮𑍍 ॥
𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

## 61. 𑌪𑍂𑌜𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌾 ॥

𑌅𑌪𑌰𑌾𑌧𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑍇𑌽𑌹𑌰𑍍𑌨𑌿𑌶𑌂 𑌮𑌯𑌾 ।
𑌦𑌾𑌸𑍋𑌽𑌯𑌮𑌿𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌷𑌮𑌸𑍍𑌵 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 ॥
𑌭𑌗𑌵𑌨𑍍 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍇𑌶 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌸𑌿 𑌸𑌨𑌾𑌤𑌨 ।
𑌕𑍍𑌷𑌮𑌸𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍇𑌶 𑌭𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥
𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑍋 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌯𑌨𑍍𑌨𑍍𑌯𑍂𑌨𑌾𑌦𑌿 𑌕𑍃𑌤𑌂 𑌮𑌯𑌾 ।
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍇𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌜𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ॥

கூ௨ூாவ ூணடி ||

ஸாயஂவா(அ)ஸாயஂவா கூ௨ூ யத்ருஷ்டாவசிஷ்டம் ஜயா |
தத்ஸர்வம் ஹரதே விஷ்ணோ க்ருஹாணாராயணம் ௨௨ ||

1. விஷ்ணுவை அகாலத்தில் தர்சிப்பதும், நமஸ்கரிப்பதும், ஒரு கையால் நமஸ்கரிப்பதும், ஜந்மாந்தரத்திலுள்ள புண்யத்தை அபஹரிக்கும்.

2. மாம்பழம், கரும்பு, தாம்பூலம், அபிஷேகதீர்த்தம் இவைகள் பானஞ்செய்யப்பட்டால் பிறகு ஆசமனஞ் செய்யவேண்டுவதில்லை.

3. விஷ்ணுபூஜாதீர்த்தபானத்தில் கையலம்பக்கூடாது.

4. கோடிஜந்மஸு ஸஞ்சிதம் ஹ்ருதம் பிஷே பஜநாரோ: | லஹஸ்ராஸ்யாவஸநம் பாபம் சிநேநைநே கேந ஹ்ருதே ||

5. தனுர்மாஸத்தில் ஒருநாள் விடியற்காலம் செய்யும் பூஜையானது ஆயிரம் வருஷம் பூஜைசெய்த பலனைக்கொடுக்கிறது.

## 62. சிவபூஜைக்கு அர்ஹமல்லாதவைகள்.

1. தாழை, குருக்கத்தி, குருந்தை, மா, முல்லை, எள், வாகை, செம்பருத்தி, இந்த புஷ்பங்கள் சிவபூஜைக்கு அர்ஹமல்ல. எருக்கு மிக்க ச்லாக்யம்.

2. காட்டுப்பயர், வரகு, கேழ்வரகு, கொள், தினை, இவைகள் ஸ்வாமிநிவேதனத்திற்கு யோக்யமில்லை- கருப்பு தான்யமுங் கூடாது.

3. மூன்று வருஷங்களுக்கு மேற்பட்ட தான்யங்கள் தேவார்ஹமல்ல. ஒருமாதத்திற்கு மேற்பட்ட அரிசியும் நைவேத்யார்ஹமல்ல.

## 63. வைச்வதேவம்.

1. ஒரு வீட்டில் ஒரே சமையலில் உண்பவர்கள் பலராயினும் ஒருவரே வைச்வதேவம் செய்யவேண்டியது.

2. வைச்வதேவபலி இலந்தைக்கனியளவு இருக்க வேண்டியது.

3. ச்ராத்ததினத்தில் வைச்வதேவஞ் செய்யவேண்டிய விஷயத்தில்:—

ச்ராத்ததினத்தில் வைச்வதேவத்தை பித்ருசேஷான்னத்தினலேயே செய்யவேண்டும் என்றும், தனியன்னத்தினல் செய்யவேண்டுமென்றும் இருப்பதில், தனியன்னத்தினல் தான் செய்யவேண்டுமென்பது ஸித்தாந்தமாகத்தெரிகிறது. ஏனெனில்; ஸம்ஸ்காரமில்லாத அன்னத்தைப் புஜிக்கக்கூடாதென்று விதியிருப்பதாலும், பித்ருசேஷபோஜனம் சிலருக்கு மட்டுமே விஹிதமானதாலும், தனியன்னத்தில் செய்ய வேண்டுமென்று ந்யாயமேற்பட்டது.

## 64. யதிக்கும் ப்ரம்ஹசாரிக்கும் பிக்ஷைகொடுக்கும் முறை.

1. யதிகளுக்கும், ப்ரம்ஹசாரிகளுக்கும் பிக்ஷைபோடுவதில் முதலில் அவர்கள் கையில் கொஞ்சம் தீர்த்தத்தை விட்டுப்பிறகு பிக்ஷையைக்கொடுத்து மறுபடியும் கையில் கொஞ்சம் தீர்த்தம் விடவேண்டியது. (பிக்ஷை மூன்றுதடவை கொடுக்கவேண்டும். பிக்ஷையென்பது கபளம்.)

2. வைச்வதேவஞ்செய்வதற்கு முன் பிக்ஷுகர்கள் பிக்ஷைக்கு வந்துவிட்டால் வைச்வதேவத்திற்காக எடுத்து வைத்து இருக்கும் அன்னத்தில் பிக்ஷை போடவேண்டியது.

3. வைச்வதேவத்திற்கு முன் பிக்ஷை போடமாட்டோ மென்று சொல்வது பாபப்ரதம்.

## 65. போஜனம்.

1. பகலில் ஒரே வேளையும், இரவில் ஒரே வேளையும் போஜனம் செய்யவேண்டியது. ஸந்தி, விடியற்காலம், நடு இரவு இவைகளில் போஜனஞ் செய்யக் கூடாது.

2. போஜனம் செய்யும்போது கால்களையும், கைகளையும் சுத்திசெய்துகொண்டு இருமுறை ஆசமனம் செய்து பிறகு புஜிக்கவேண்டியது.

3. போஜனத்திற்காக இலைபோடுமிடத்தில் ஜலத்தால் நாற்கோணமாக இலையின் மட்டத்திற்கு மெழுக வேண்டியது. போஜனபாத்ரத்திற்கு அதிகமுங்கூடாது. குறைச்சலுங்கூடாது.

4. ஆஸனத்திலிருந்து போஜனஞ் செய்யும்போது ஆஸனத்தில் பாதங்களை வைத்துக்கொண்டு புஜிக்கக்கூடாது.

5. இலைகளை ஆஸனமாகப் போட்டுக்கொண்டு போஜனஞ் செய்யக் கூடாது.

6. தாமரையிலை, புரசிலை, இவைகளில் க்ருஹஸ்தன் புஜிக்கக்கூடாது. ப்ரம்ஹசாரிகளும், யதிகளும் புஜிக்கலாம்.

7. 20-பலத்திற்கு மேற்பட்ட வெண்கலபாத்ரத்தை க்ருஹஸ்தன் உபயோகிக்கலாம்.

8. ப்ரம்ஹசாரிகளும், யதிகளும், விதவைகளும், வெண்கலபாத்ரத்தில் போஜனஞ் செய்யக் கூடாது.

9. பலா, மா, தென்னை, வாழை, வில்வம் இவைகளினிலைகளில் போஜனம் செய்யலாம்.

10. ஆல், எருக்கு, சிறுகுமிழ், அரசு, நீர்ச்சேம்பு, மாம்பழக்கொன்னை, புங்கை இவைகளில் புஜிக்கலாகாது. புஜித்தால் தோஷமுண்டு.

11. இரும்புப்பாத்ரமும், அது ஸம்பந்தமுள்ளதும், கையில் வாங்கிச்சாப்பிடுவதும், வஸ்த்ரத்தில் வைத்துக் கொண்டு சாப்பிடுவதுங் கூடாது.

12. எந்த இலைகளிலும் பின்புறத்தில் புஜிக்கலாகாது.

13. தாமரையிலையில் மட்டும் பின்புறத்தில் புஜிக்கலாம்.

14. தாம்ரபாத்ரத்தில் க்ருஹஸ்தன் புஜிக்கக் கூடாது.

15. விதவைகள் தாம்ரபாத்ரத்தில் புஜிக்கலாம்.

16. ஒருவன் போஜனபாத்ரத்தில் மற்றவன் புஜிக்கலாகாது.

## 66. பரிஷேசநம் ।

1. பரிஷேசநம்— 'பூர்ப்புவஸ்ஸுவ:' என்று பரிஷேசனம் செய்து காயத்ரியால் ப்ரோக்ஷணம் செய்ய வேண்டியது. பிறகு மற்ற மந்த்ரங்களால் பரிஷேசனம் செய்யவேண்டியது.

2. கையிலுள்ள தீர்த்தத்தால் பரிஷேசனம் செய்து மிகுந்த ஜலத்தை ஆபோசனத்திற்கு உபயோகிக்கக்கூடாது.

3. ப்ராணாஹுதி செய்யும் அன்னத்தை நாவினாலே யே விழுங்கவேண்டியது. பற்களால் ஸ்பர்சிக்கக் கூடாது.

4. ஆபோசனம் வாங்குவதற்கு முன் பரிஷேசனத்திற்கு வெளியில் சித்ரபலி போடவேண்டும். அதன் முறை.

சித்ராய நம:, சித்ரகுப்தாய நம:, யமாய நம:, * ஸர்வேப்யோ பூதேப்யோ நம:, என்று நான்கு பலிகளை வைக்க வேண்டியது. வைச்வதேவஞ் செய்யாதவர்கள் இதையாவது செய்யவேண்டியது அவச்யம்.

5. சாப்பாட்டில் பலிஹரண மந்த்ரம்:—

யத்ரக்வசன ஸம்ஸ்தானாம் க்ஷுத்த்ருஷ்ணோபஹதாத்மனாம் |
பூதானாம் த்ருப்தயே தோயம் இதமஸ்து யதாஸுகம் ||

6. இலையை இடது கையின் பெருவிரல், தர்ஜனீ, நடுவிரல் இம்மூன்று விரல்களினாலாவது, தர்ஜனீ, நடுவிரல் இவ்விரண்டினாலாவது, அல்லது நடுவிரல் மட்டினாலாவது தொட்டுக்கொள்ள வேண்டியது.

7. இடது புறத்தில் வைத்திருக்கும் தீர்த்தத்தினால் ஆபோசனம் செய்தால் கள் குடித்தற்குச் சமானம்.

8. ஆபோசனத்திற்கு தீர்த்தத்தை கையில் வாங்கின் பிறகு போதாதென்று மறுபடியும் போட்டுக்கொண்டால் அதுவும் கள் குடிப்பதற்குச் சமானம்.

9. தீர்த்தம், பால், நெய், பாயஸம், ஆபோசனம் இவைகளை உருஞ்சி சப்தத்துடன் புஜிக்கலாகாது.

10. ப்ராணாஹுதிக்கு முன் நெய்யினால் அபிகாரம் பண்ணவிட்டால் பிறகு நெய் போட்டுக்கொள்ளக் கூடாது.

11. பரிஷேசனம் பண்ணுவதற்கு முன் உப்புஸம்பந்தமான பதார்த்தங்களை பரிமாரக்கூடாது.

12. ஸவ்யாங்குஷ்டேன ஹஸ்தேன ம்ருதுவச்சேந வர்ணினா | பதாங்குஷ்டிப்ரேண க்ராஸம் க்ருத்வாஸ் ப்ரக்ஷி

* 'யமராஜாய நம:' என்று அதிகமாய் சிலர் படிக்கின்றனர்.

ணம் ॥ ஆரப்ய தக்ஷிணே பார்ச்வே ஸமம் குர்யாத் ப்ரதக்ஷிணம் ॥

என்ற வசனப்படி வலதுபக்கம் எதிர்முனையில் ஆரம்பித்து பரிஷேசனம் செய்து இலையைப் பிடித்துக்கொண்டிருக்கும் கைக்குப் பின்புறமாய்க் கொண்டுபோய் ஆரம்பித்தவிடத்தில் முடிக்கவேண்டியது.

13. ப்ராணாஹுதியின் ஸங்க்யையும் விதியும்:—

ப்ராணாஹுதிகளின் முதலாவதாஹுதியில் தர்ஜனீ, நடுவிரல், கட்டைவிரல் இவைகளாலும், இரண்டாவதில் நடுவிரல், பவித்ரவிரல், கட்டைவிரல் இவைகளாலும், மூன்றுவதில் சுண்டுவிரல், பவித்ரவிரல், கட்டைவிரல் இவைகளாலும், நான்காவதில் தர்ஜனீ நீங்கலாக மற்றவிரல்களாலும், ஐந்தாவதில் ஐந்து விரல்களாலும் அன்னத்தை யெடுத்து பல்லில்படாமல் விழுங்கவேண்டியது. ஐந்து விரல்களால் ஐந்தையும் செய்யலாம்.

## 67. பேசக்கூடாத காலங்கள்.

1. ஸ்நானஞ் செய்யுங் காலத்தில் பேசக் கூடாது. பேசினால் அவனுடைய சக்தியை வருணன் அபஹரித்துக் கொள்கிறான்.

2. ஹோமஞ் செய்யுங் காலத்தில் பேசக்கூடாது. பேசினால் அவனுடைய ஸம்பத்தை அக்னி அபஹரித்துக் கொள்கிறான்.

3. போஜனஞ் செய்யுங் காலத்தில் பேசக்கூடாது. பேசினால் அவனுடைய ஆயுளை ம்ருத்யு அபஹரித்துக்கொள்கிறான். ஆகையால் இக்காலங்களில் மௌனமாக இருக்க

வேண்டியது. ஆனால் போஜனகாலத்தில் மௌனமாக இருக்க வேண்டும் என்பது ப்ராணாஹூதிகாலம் வரையில் தான். அதன்பிறகு க்ருஹஸ்தனுக்கு காஷ்டமௌனமாக இருப்பது கூடாது. அப்படி மௌனமாக இருந்தால் மஹாபாபத்தை அடைகிறான். ஹூங்காரம் பண்ணினாலும் மௌனத்திற்குக் குறைவு நேரிட்டு மஹாதோஷம் ஸம்பவிக்கும்.

## 68. சாப்பிடக்கூடாத விஷயங்கள்.

1. பல்லினால் கடித்து கீழே வைக்கப்பட்டதும், வாயில்போன அன்னத்தின் மிச்சமும் உச்சிஷ்டமெனப்படுவதால் மறுபடி அவைகளை புஜிக்கக்கூடாது.

2. கையில் அன்னத்தை வைத்துக்கொண்டு புஜிப்பதும், சப்தத்துடன சாப்பிடுவதும், விரல்களை விரித்துக் கொண்டு சாப்பிடுவதும் கோமாம்ஸபக்ஷணத்திற்கு ஸமானமாகும்.

3. ஈரவஸ்த்ரத்துடன் புஜிக்கக் கூடாது. ஒற்றை வேஷ்டியுடன் புஜிக்கக்கூடாது.

4. தெருக்கதவைச் சாற்றுமலும், சந்த்ரிகையின் வெளிச்சத்திலும், கொள்ளிக்கட்டையின் வெளிச்சத்திலும், ப்ரதோஷகாலத்திலும், நிசியிலும், மாடியிலும், புஜிக்கக் கூடாது.

5. இலையில் ஒன்றும் மீதியின்றி புஜிக்கக்கூடாது.

தன்பெண்சாதி பார்த்துக்கொண்டிருக்க புஜிக்கக் கூடாது. அப்படிப் புஜித்தால் வீர்யமில்லாத பிள்ளை பிறக்கும்.

6. ஸ்த்ரீகளுடன் புஜிக்கக் கூடாது. தாய், ஸஹோதரி, பத்னி, மற்ற எந்த ஸ்த்ரீகளுடனும் புஜிக்கக் கூடாது.

7. பத்னியானவள் சாப்பிடும்போதும், கொட்டுவாய் விடும்போதும், சரீரஸௌகத்திற்கு ஏற்றவாறு உட்கார்ந்திருக்கும்போதும் அவளைப்பார்க்கலாகாது.

8. **பத்னியுடன் புஜிக்குங் காலங்கள்:—** விவாஹம், யாத்ரை, வழிநடக்குங் காலம் இச்சமயங்களில் பத்னியுடன் புஜிக்கலாம்.

9. சமையல் பாத்ரத்திலிருந்து வேறொரு பாத்ரத்தில் அன்னத்தை எடுத்து அதில் பாக்கி இல்லாமல் சூத்ரனுக்குப் போட்டுவிடவேண்டியது. அதில் பாக்கியிருப்பதுதான் சூத்ரசேஷம்.

10. சமயல் செய்த பாத்ரத்தில் இருக்கப்பட்ட அன்னத்திற்கு சேஷதோஷமில்லை. அது சாப்பிடத்தக்கதே.

11. ஒருபந்தியில் முன்னதாக சாப்பிடலாகாது. அப்படிச் சாப்பிட்டால் அந்தப் பந்தியிலுள்ள மற்றவர்களின் பாபத்தை அடைகிறான்.

12. ஒரு பந்தியில் புஜிப்பவர்களில் ஸ்நேகம், பயம், பணம், எந்தக்காரணத்தினாலாவது பந்தி பேதமாய் பரிமாறினால் ப்ரம்ஹஹத்யாதோஷத்தை அடைகிறான்.

13. அன்னத்தைப் பரிமாறிய பிறகு பரிஷேசனபூர்வகமாகப் புஜிக்கவேண்டியது. ச்ராத்தத்திலுமப்படியே.

14. ஒரு பந்தியில் புஜிப்பவர்கள் ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்ளலாகாது. தொட்டுக்கொள்வாராகில் உடனே புஜிக்குமன்னத்தை எறிந்துவிடவேண்டியது. அப்படி எறிந்துவிடாமல் போனால் மறுபடி வேறு அன்னத்தையும்,

சாகம் முதலியவைகளையும் போட்டுக்கொள்ளாமல் இலையி லுள்ளதுகளை மாத்ரம் புசித்துவிட்டு எழுந்து கைகால் முகம் இவைகளை சுத்திசெய்துகொண்டு ஆசமனம் செய்து பிறகு நூற்றியெட்டு காயத்ரீ ஜபிக்கவேண்டியது. ச்ராத்தத்திலும் அப்படியே செய்யவேண்டும்.

15. சாப்பிடும்போது இடதுகையால் தீர்த்தத்தைச் சாப்பிடலாகாது. ஆனால் வலதுகையினால் இலையைப்பிடித் துக்கொண்டு இடதுகையால் தீர்த்தஞ்சாப்பிடலாம்.

ஒருமுறை பானஞ் செய்த பாத்ரத்தில் மிகுந்த தீர்த் தத்தை மறுபடி பானஞ் செய்யலாகாது.

அதையே சாப்பிடும்படி நேர்ந்தால் அந்தப்பாத்ரத்தி லுள்ள தீர்த்தத்தில் கொஞ்சம் பூமியில் கொட்டிவிட்டு பிறகு அதைப்பானஞ் செய்யலாம். இதேமாதிரிதான் பாதப்ர க்ஷாளன தீர்த்தத்திற்கும் விதி.

16. போஜனகாலத்தில் தீபம் அணைந்துவிட்டால் போஜனபாத்ரத்தைக் கையால் எடுத்துக்கொண்டு ஸூர் யனை மனதால் த்யானித்து மறுபடி தீபம் ஏற்றி மிகுதி அன் னத்தைப்புஜிக்கலாம். மறுபடி வேறு அன்னம் போட்டுக் கொள்ளலாகாது.

17. **கையால் பரிமாரக்கூடியவைகள்:—** தைலபக்வமான பதார்த்தங்கள், அபக்வமானவைகள். அதாவது— பழம் வகையறுக்களை மட்டும் கையினால் பரிமாரலாமேயொழிய, மற்ற எதையும் தர்வியினலல்லாமல் கையால் பரிமாருதல் ஆகாது. நாணல், இரும்பு இவைகளை தர்வியாக உபயோகிக் கலாகாது.

18. எக்காளம், இயந்திரம், வண்டி, உரல், செக்கு, ஆலை, சூத்ரன், இவைகளின் சப்தம் கேட்கும்போது புஜிக்கலாகாது.

19. பழம், பக்ஷணம், இவைகளை குழந்தைகளுக்கு முந்தியும், மற்றவைகளைப் பெரியோர்களுக்கு முந்தியும் பரிமாரவேண்டியது.

20. ஸுகத்தைக்கோருகிறவர்கள் தயிரன்னம், பாலன்னம் சாப்பிட்ட பிறகு தீர்த்தத்தைச் சாப்பிடலாகாது.

21. தயிர், நெய், பால், தேன், கனி, மா, பாயஸம், இவைகளை இலையில் மீதிவைக்காமலே புஜிக்கவேண்டும். எரியக்கூடாது.

22. கையிலெடுத்த அன்னத்தில் மயிர் காணப்பட்டால் அவ்வன்னத்தை எரிந்துவிடவேண்டியது.

23. சாப்பிடும்போது வாயில் மயிர் அகப்பட்டால் உடனே உமிழ்ந்து பிறகு நெய்யைச் சாப்பிடவேண்டியது. அன்னத்திலும் பஸ்மத்தைப் போட்டாவது, அல்லது ஜலத்தினால் ப்ரோக்ஷணஞ் செய்தாவது சாப்பிடவேண்டியது.

24. பால், தயிர், நெய், எண்ணெய் இவைகளுடன் ஸம்பந்தப்பட்ட பழமையான அன்னம் முதலியவைகளுக்கு பழமையின்தோஷமே கிடையாது.

25. கடையில் வாங்கப்பட்ட எண்ணெய், நெய் முதலியவைகளுக்கு தீர்த்தம் கொஞ்சம் சேர்ந்தால் சுத்தியாகிறது.

## 26. புஜிக்கத்தகுந்த வஸ்துக்கள்

1. பாகல், அதன்பேதங்களுள்பட
2. சிறுகிழங்கு.
3. மா, அதன்பேதங்களுள்பட.
4. பலா, (இருவகை) அதாவது—நாட்டுப்பலா, காட்டுப்பலா
5. வாழை, அதன் பேதங்களுள்பட.
6. பரங்கி, பூஷணி.
7. வெள்ளிரி.
8. கண்டங்கத்திரி.
9. கக்கரி.
10. தேங்காய்.
11. புளி.
12. அவரை, அதன் பேதங்களுள்பட
13. இலந்தை.
14. சுக்கு.
15. சேம்பு.
16. இஞ்சி.
17. நெய்தல் கிழங்கு.
18. உருண்டைமுள்ளி.
19. கடலுப்பு.
20. சாமை.
21. சாமைக்கீறை.
22. கருஞ்சிரகம்.
23. அகத்தி.
24. பிரம்பு.
25. புளிமாதுளை.
26. கடுகு.
27. பயரு.
28. துவரை.
29. கொள்.
30. உளுந்து.
31. சிறுபாலைக்கீறை.
32. சுரையிலை.
33. கொத்தமல்லி.
34. விஷ்ணுக்ராந்தி.
35. ஒற்றைக்கிழங்குகள்.
36. கடுக்காய்.
37. விளா.
38. திராக்ஷை.
39. நாவல்.
40. பேரீச்சை.
41. மிளகு, சீரகம்.
42. மொச்சை.
43. தட்டைப்பயரு.
44. எள்.
45. எருமைப்பால்.
46. பசுவின்பால்
47. ஆட்டினபால்.
48. பொன்னங்காணி.

புஜிக்கத்தகுந்த வஸ்துக்கள் (துடர்ச்சி)

49. தூதுவளை.
50. நார்த்தை.
51. வல்லாறை.
52. மரமஞ்சள்.
53. தித்திப்புமாதுளை.
54. நெல்லி.

இவைகளை போஜனத்தில் உபயோகித்துக்கொள்ளலாம்.

27. மரங்கள் அசுத்தமான இடங்களில் முளைத்திருப்பினும், அவைகளின் புஷ்பங்கள், கனிகள் இவைகள் உபயோகிக்கத்தகுந்ததேயாகும்.

28. போஜனப்ரகரணத்தில் நிஷேதிக்கப்பட்ட வஸ்துக்களாவன:— உள்ளி, செம்முருங்கை, வெங்காயம், சுரை, முள்ளங்கி, கத்தரிக்காய், கன்றுபோட்டு 10-நாளாகாத பசுவின் பால், எருமைப்பால், ஆட்டுப்பால், நீர்ச்சேம்பு, வால் நீண்ட கருப்புநெல், நாய்க்கடுகு, சிறுகும்மட்டி, தேத்தாங்கொட்டை, கோவை, தும்பைக்கீறை, அத்தி, நெய்க்கசண்டு, பிண்ணுக்கு, நீர்கலக்காத மோர், அப்போது ஆடிய என்ணெய், கன்றுசெத்த பசுவின் பால், தானுக ஒழுகவிடும் பசுவின் பால் இவைகள் போஜனத்தில் நிஷேதிக்கப்பட்டவைகள்.

29. உத்தராபோசனதீர்த்தமிகுதியை முன்வைத்த பலிக்கு ஸமீபத்தில் விடவேண்டியது.

30 உத்தராபோசனமீதிஜலத்தை கீழேவிடுவதற்கு மந்த்ரம்.

𑌰𑍌𑌰𑌵𑍇𑌽𑌪𑍁𑌣𑍍𑌯𑌨𑌿𑌲𑌯𑍇 𑌪𑌦𑍍𑌮𑌾𑌰𑍍𑌬𑍁𑌦𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 ।
𑌅𑌰𑍍𑌥𑌿𑌨𑌾𑌮𑍁𑌦𑌕𑌂 𑌦𑌤𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌯𑍍𑌯𑌮𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍁 ॥

31. உத்தராபோசனஞ் செய்துவிட்டு போஜனபாத்ரத்தைத்தொடக்கூடாது. தொட்டால் உடனே ஸ்நானஞ் செய்யவேண்டும்.

32. சாப்பிட்டு வாயை அலம்பும்போது தர்ஜனிவிர லால் துலக்கினுல் நரகத்தை யடைவான்.

33. பெண்ணின் புருஷன் (ஜாமாதா) விஷ்ணுவுக்கு ஸமானன். அவனுக்குக்கோபத்தை உண்டாக்கக் கூடாது.

34. பெண்ணுக்கு ப்ரஜை உண்டாகும் வரையில் தகப்பன் பெண்வீட்டில் புஜிக்கக்கூடாது.

35. புஜித்த உடனேயே உட்காருகிறவனுக்கு வயத்தில் ரோகம் உண்டாகிறது. வேகமாய் நடந்தால் மிருத்யு பயமுண்டாகிறது. நின்ருல், ஆயுர் வ்ருத்தி யுண்டாகிறது. தூங்கினுலும், ஓடினுலும் மிருத்யு பயம் உண்டாகிறது. புஜித்தவுடன் மிருதுவாய் 100-அடிகள் நடந்து பிறகு ராஜாவைப்போல் ஸுகமாக உட்கார்ந்திருக்கவேண்டியது.

36. பகலில் தூங்கக்கூடாது. தூங்கினுல் ஆயுளை இழக்கிருன்.

37. சாப்பிட்ட பிறகு ஸ்மரித்து கண்ணைத்துடைக்கவேண்டும்

𑌶𑌰𑍍𑌯𑌾𑌤𑌿𑌂 𑌚 𑌸𑍁𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌚𑍍𑌯𑌵𑌨𑌂 𑌶𑌕𑍍𑌰𑌮𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 ।
𑌭𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑍍𑌮𑌰𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨 𑌹𑍀𑌯𑌤𑍇 ॥

38. சாப்பிட்ட பிறகு வயிற்றைத் தடவவேண்டியது

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌯𑌯𑌤𑍁 𑌧𑌾𑌤𑍂𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌂 𑌪𑌵𑌨𑍇𑌰𑌿𑌤𑌃 ।
𑌦𑌤𑍍𑌤𑌾𑌵𑌕𑌾𑌶𑍋 𑌨𑌭𑌸𑌾 𑌜𑌰𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇 𑌸𑍁𑌖𑌮𑍍 ॥
𑌅𑌨𑍍𑌨𑌂 𑌬𑌲𑌾𑌯 𑌮𑍇 𑌭𑍂𑌮𑍇𑌰𑌪𑌾𑌮𑌗𑍍𑌨𑍍𑌯𑌨𑌿𑌲𑌸𑍍𑌯 𑌚 ।
𑌭𑌵𑌤𑍍𑌵𑍇𑌤𑌤𑍍𑌪𑌰𑌿𑌣𑌤𑌂 𑌮𑌮𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌂 𑌸𑍁𑌖𑌮𑍍 ॥
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑌸𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑍁𑌦𑌾𑌨𑌵𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌅𑌨𑍍𑌨𑌂 𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌕𑌰𑌂 𑌚𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑌮𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌂 𑌸𑍁𑌖𑌮𑍍 ॥

சூமஷ்த்ரஸ்ந்ரிஷ-ஃஸஷா நஷஸ்வ ஹ-க்த்ர ஃயாஃந்நம் ஜஸய க்ஷநஶெ
ஷிழ் । ஸ-வம்வ ஒஃ தத்வஸிணாஃஸம்ஹவம் யஹ்க்ஷநஸொாமம்
ஃஃ வாஹ்ஸ- ஒஜஒஹ ॥

விஷ்ண-ஹஸ்ஸஃஒஷ்ஸத்ரி யஒஜஹஒஜஹீ ஞூயாநஹ-ஞெதா ஹம
வாநு யஒஒயக: । ஸஒதிஹ்ந ஒதநாத்த்ஃஒஶஷஃளு ஃாஒஸா
மிஜம் ஒஃ வஸிணாஃஒஃத- ॥

விஷ்ண-ஸத்தா யஒஒயவாளும் வஸிணாஃஸ்வ ஒஒவ யத: ।
ஸஒதிஹ்ந ஒதந ஒஃ ஹ-க்தும் ஜீய-க்ஷவளுஃிஜம் தயா ॥

## 69. தாம்பூலம்.

1. வெற்றிலையின் மூலத்தில் வ்யாதியும், நுனியில் பாபங்களும் இருக்கின்றன. வெற்றிலையின் நரம்பானது புத்தியை அழிக்கும்.

2. சூர்ணம்வைத்திருந்த வெற்றிலையை உட்கொண்டால் அது ஆயுளை அபஹரிக்கும்.

3. சிவப்படாத பாக்கும், அலம்பப்படாத வெற்றிலையும், சோதிக்கப்படாத சூர்ணமும் தோஷத்தை உண்டு பண்ணும்.

4. வெற்றிலையை வாயிற்போட்டுக்கொள்ளாமல் பாக்கைமட்டும் போட்டுக்கொண்டு எவனொருவன் கடிக்கிருனே அவன் ஏழு ஜந்மங்களில் தரித்ரனுகப்பிறந்து நரகத்தில் மூழ்கிருன்.

5. வெற்றிலையின் முன்புறத்தில் சூர்ணத்தைத்தடவக்கூடாது.

6. வெற்றிலையை வெளிப்புறமாகவும் மடிக்கக்கூடாது.

7. காலையில் பாக்கையதிகமாகவும், பகலில் சூர்ணத்தை யதிகமாகவும், இரவில் வெற்றிலையை யதிகமாகவும் உபயோகிக்கவேண்டும்.

## 70. படுக்கை

1. தூங்கக்கூடாதவிடங்கள்:— ஸந்த்யாகாலத்திலும், மலையிலும், ஆகாசம்பார்த்தும், தேவாலயங்களிலும், தான்யத்தின்மேலும், மரத்துநிழலிலும், ஒடிந்தகட்டிலின் மீதும், யானை தந்தங்களால் அமைக்கப்பட்டபடுக்கையிலும், புரசமரத்தால் கால்கள் செய்யப்பட்ட கட்டிலிலும், அத்தி, ஆல், இச்சி, அரசு, நாவல் இவைகளால் செய்யப்பட்ட கட்டிலும், சருங்கல் பீடம் அமைக்கப்பட்ட கட்டிலிலும், நித்ரைசெய்யக் கூடாது. ஈரக்காலுடன் படுக்கக்கூடாது.

### 2. படுக்கையில் ஜபிக்க வேண்டிய மந்த்ரம்

ஸர்பாபஸர்ப பத்ரம் தே தூரம் கச்ச மஹாயஶ: ।
ஜநமேஜயஸ்ய யஜ்ஞாந்தே ஆஸ்தீகவசநம் ஸ்மர ॥

ஜரத்காரோர் ஜரத்காரௌ ஸமுத்பந்நோ மஹாயஶா: ।
ஆஸ்தீக: ஸத்யஸந்தோ மாம் பந்நகேப்யோऽபிரக்ஷது ॥

நர்மதாயை நம: ப்ராத: நர்மதாயை நமோ நிஶி ।
நமோஸ்து நர்மதே துப்யம் த்ராஹி மாம் விஷஸர்பத: ॥

3. தன் வீட்டில் கிழக்கில் தலைவைத்தும், மாமனார் வீட்டில் தெற்கில் தலைவைத்தும், யாத்ரையில் மேற்கில் தலைவைத்தும் படுக்கவேண்டியது. ஒருபோதும் வடக்கில் தலைவைத்துப் படுக்கலாகாது.

## சில்லரை தர்மங்கள்.

1. சூர்யனை உதிக்கும்போதும், அஸ்தமிக்கும் போதும், ஆகாசத்தின் நடுவில் இருக்கும்போதும், ஜலத்திலும் பார்க்கலாகாது.

2. க்ரஹணம் பிடிக்கும்போது சூர்யசந்த்ரர்களைப் பார்க்கலாகாது.

3. பசு, தேவதை, ப்ராம்ஹணன், நெய், மது, ப்ரஸித்தமான வ்ருக்ஷங்கள் இவைகளை ப்ரதக்ஷிணமாகவே செல்லவேண்டியது.

4. அக்னியை வாயினுல் ஊதக்கூடாது. தாண்டக்கூடாது. அக்னியில் காலைக்காய்ச்சக்கூடாது. அசுத்தமான வஸ்துக்களை போடக்கூடாது. அக்னியை பூமியில் வைக்கக்கூடாது.

5. தனக்கென்று பூமாலையை தொடுக்கக்கூடாது.

6. தீர்த்தத்தில் உமியக்கூடாது.

7. பாழ்வீட்டில் ஒருவனய் தூங்கக்கூடாது.

8. தூங்குகிறவனை எழுப்பக்கூடாது. அதிலும் பெரியோரை எழுப்பக்கூடாது.

9. துரஸ்த்ரீயினிடத்தில் பேசக்கூடாது.

10. பிறருடைய நிலத்தில் மேய்ந்துகொண்டிருக்கும் பசுவை தடுக்கக்கூடாது. வேறொருவரிடத்தில் சொல்லவும் கூடாது.

11. ஆகாசத்தில் இந்த்ரதனுஸ்ஸைப் பார்த்தால், அதைப் பிறருக்குக் காண்பிவிக்கக்கூடாது.

12. பிறர் தரித்ததான பாதரக்ஷை, வஸ்த்ரம், பூனூல், மாலை, கமண்டலு இவைகளைத் தரிக்கக்கூடாது.

13. இளம் வெயில் காயக்கூடாது. பிணப்புகை மேலே படக்கூடாது.

14. நகம், மயிர் இவைகளை கிள்ளக்கூடாது. பற்களால் நகங்களை கடிக்கக்கூடாது. துரும்புகளைக் கிள்ளக்கூடாது. மண்ணாங்கட்டி ஓடு இவைகளை நொருக்கக்கூடாது. புஷ்பத்தை வெளியில் தெரியும்படி தரிக்கக்கூடாது.

15. எருதுகளின் முதுகின்மேல் ஏறக்கூடாது.

16. க்ராமத்தையாகிலும் வீட்டையாகிலும் வழிதப்பி ப்ரவேசிக்கக்கூடாது.

17. ராத்ரிகாலத்தில் மரத்தின் நிழலை விலக்கவேண்டியது.

18. தானாகவே பாதரக்ஷை செய்யக்கூடாது.

19. ஒருக்காலமும் சூதாடக்கூடாது.

20. கைகளால் நீந்தி நதிகளை தாண்டக்கூடாது.

21. சூத்ரனுக்கு புத்தி சொல்லக்கூடாது. தர்மத்தையும் வ்ரதத்தையும் உபதேசிக்கக்கூடாது.

22. தேவதைகள், பிதா, குரு இவர்களுடைய நிழலை தாண்டக்கூடாது.

23. கபிலைப்பசுவின் நிழலையும் தாண்டக் கூடாது.

24. ஸத்யத்தையே சொல்லவேண்டும். ஆனாலும் ப்ரியத்தையே சொல்லவேண்டும். ஸத்யமாயிருந்தாலும் ப்ரியமில்லாததைச் சொல்லக்கூடாது. ப்ரியமாயிருந்தாலும், ஸத்யமில்லாததைச் சொல்லக்கூடாது.

25. ஒருவனை பாபி என்றாவது, பாபியல்லவென்று வது சொல்லக்கூடாது.

26. எப்பொழுதும் சுபவார்த்தைகளையே சொல்ல வேண்டும்.

27. நாஸ்திகபுத்தி, வேதநிந்தை, தேவதூஷணம், த்வேஷம், டம்பம், கோபம், க்ரூரம் இவைகளை விட்டுவிட வேண்டியது.

28. கேசம், நகம், மீசை இவைகளை க்ருஹஸ்தன் 3-பக்ஷத்திற்கு மேல்படாமல் வபனம் செய்துகொள்ளவேண் டியது.

29. ஜலத்திலும், எண்ணெயிலும் நிழலைப் பார்க்கக் கூடாது.

30. காலினாலேயே காலைத்தேய்த்துக் கழுவக் கூடாது.

31. தீர்த்தத்தில் வாயைக் கொப்பளிக்கக் கூடாது.

32. அக்னியோடு அக்னியைக்கலக்கக்கூடாது. அணைக் கவும் கூடாது. வஸ்த்ரத்தால் விசிரவுங் கூடாது.

33. காலை மாலைகளிற் பிக்ஷையளிப்பதற்காக தெருக்கதவு களை சாற்றக் கூடாது.

34. பற்களை நெறிக்கக்கூடாது. வாயைக் கையினால் மறைத்துக்கொள்ளாமல் கொட்டாவி விடக்கூடாது.

35. ஸ்த்ரீகளை ஒருபோதும் நம்பக்கூடாது.

36. வஸ்த்ரமில்லாதவனையும், கச்சமில்லாதவனையும், கௌபீனத்தை மாத்ரம் தரித்தவனையும், மூதேவி வந்த டைகிறாள்.

37. விளக்கு நிழல், மனிதர் நிழல், வஸ்த்ர தீர்த்தம், மயிர் ஜலம், ஆட்டின் புழுதி, கழுதையின் புழுதி, வார் கோலின் புழுதி, ஸ்த்ரீகளின் பாததுளி, முறக்காத்து இவைகள் மேலேபட்டால் ஸம்பத்து துலைந்தே போய்விடும்.

38. பார்யையுடன் கூடயிருந்து புஜிக்கக்கூடாது.

39. பகலில் தூங்கக்கூடாது. இரவில் பூமியைக் கீறக் கூடாது. பசுக்களை தொடக்கூடாது.

40. தானிமரம், விளாமரம் இவைகளின் நிழலை அணு க்கக்கூடாது.

41. பசுவிற்கும் அந்தணர்க்கும் மத்யத்திலும், அந்த ணர்க்கும் அக்னிக்கும் மத்யத்திலும், தம்பதிகளுக்கு மத்யத் திலும், குரு சிஷ்யர்களுக்கு மத்யத்திலும், நந்தி சங்கரர் களுக்கு மத்யத்திலும் போகக்கூடாது.

42. ஆயுள், பொருள், வீட்டின்ரஹஸ்யம், மந்த்ரம், ஔஷதம், ஸங்கமம், தானம், மானம், அவமானம், இந்த ஒன்பதையும் மறைத்துக் காறகவேண்டியது.

43. பிறர் வீட்டிலிருந்து அக்னியை ஒருபோதும் கொண்டுவரக்கூடாது.

44. புருஷர்கள் தீபத்தை அணைக்கக்கூடாது.

45. ஸ்த்ரீகள் பூஷணிக்காயை உடைக்கக்கூடாது.

46. தும்மும்போது "ஶதம்ஜீவ" என்று சொல்லி யும், இடறினால் அவ்விடத்திலுள்ள புழுதியை நெற்றியில் இட்டும், கோட்டுவாயி விட்டால் விரலைச்சொடுக்கியும் பரி ஹாரம் செய்யவேண்டியது.

47. தகப்பன், அல்லது தமயன் இருந்தால் தர்ஜனியில் வெள்ளியைத் தரிக்கக்கூடாது.

48. சதுர்த்தி, ஷஷ்டி, சதுர்த்தசீ இவைகளில் 54-ம், ஸப்தமியில் 27-ம், அமா, பூர்ணிமா, ப்ரதமை இவைகளில் 36-ம், த்ரயோதசி, விஷு இவைகளில் 28-ம் என்ற கணக்குடன் ஸாயங்காலத்தில் காயத்ரீஜபம் செய்யவேண்டியது.

49. எப்போதும் ப்ராதக்காலத்தில் 108-காயத்ரீ ஜபிக்கவேண்டியது. ஆசௌசகாலத்தில் 10-காயத்ரீ ஜபிக்கவேண்டியது.

50. நாலுமாதங்களுக்கொருதடவையும், உபாகர்மதினத்திலும், ஸூதகநிவ்ருத்தியிலும், அறுந்துபோனகாலத்திலும் வேறு யஜ்ஞோபவீதம் தரித்துக்கொள்ளவேண்டியது.

51. அஷ்டமி, சதுர்தசி, அமா, பூர்ணிமா, ஸங்க்ரமணம், மந்வாதி, யுகாதி, ஞாயிற்றுக்கிழமை இவைகளில் இரவில் போஜனம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ஏகாதசியில் அஹோராத்ரமும் போஜனம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. 8-வயதிற்கு மேற்பட்டு 80-வயதிற்குட்பட்டவர்கள் எல்லோரும் ஏகாதசியில் உபவாஸமிருக்கவேண்டும். மேற்கண்ட தினங்களைத் தவிர மற்ற தினங்களின் ராத்ரியிலும், பரேஹநி தர்ப்பணத்தின் ராத்ரியிலும், போஜனநிஷேதமாவது, பலாஹாரநியமமாவது வேண்டியதில்லை.

52. நிசியில் மூத்ரோத்ஸர்க்கம் செய்தால் ஆசமனம் வேண்டுவதில்லை. செய்யவுங் கூடாது.

53. நிசியில் ஸ்நானஞ் செய்யக்கூடாது. அப்படிச் செய்யநேர்ந்தால் அக்னி ஸந்நிதியில் செய்யவேண்டியது.

54. ஸுஹ்ருத்பந்துக்களை வழியனுப்பிய பிறகும், பூஜை செய்த பிறகும், ஸ்நானஞ் செய்யக்கூடாது.

55. ஞாயிறிலும், ஸப்தமியிலும், நெல்லிக்காய் சேர்க்கக்கூடாது.

56. ராத்ரியில் நெல்லிக்காய், இஞ்சி, நெல்வருத்தமா இவைகளை உபயோகிக்கக்கூடாது.

57. மஞ்சள், நெய், பொடி, உப்பு, தான்யம், மருந்து, பாக்கு, வெல்லம் இவைகட்கு பாகதோஷமில்லை.

58. தீர்த்தம், கிழங்கு, நெய், பால், ஹவிஸ், மருந்து, பழம் இவைகளைச் சாப்பிடுவதினால் வ்ரதபங்கம் நேரிடமாட்டாது. இதரர்களின் இஷ்டத்திற்காக ச்ராத்தபோஜனஞ் செய்தாலும், வ்ரதபங்கம் நேரிடமாட்டாது.

59. சாப்பிடும்போது பூர்வாபோசனஜலத்தை முழுவதும் சாப்பிடவேண்டியது. உத்தராபோசனஜலத்தை பாதியுட்கொண்டு பாதியை பூமியில் விடவேண்டியது.

60. மூத்ரசௌசத்தில் 4 தடவையும், மலசௌசத்தில் 8 தடவையும், போஜனமானபின் 12 தடவையும், தந்ததாவனமானபின் 16 தடவையும், கண்டூஷஞ் செய்யவேண்டியது.

61. நதிகளில் புதுஜலம் வந்தவுடன் 10 நாளும், ஆடி மாதம் பிறந்து 3 நாளும் ஸ்நானஞ்செய்தலாகாது. ஆனால் உபாகர்மஸ்நானம், க்ரஹணஸ்நானம், ப்ரேதஸ்நானம், ஸங்க்ரமணஸ்நானம் முதலியவைகளைச்செய்யலாம்.

62. ஸூர்யக்ரஹணத்திற்கு முன் 4 யாமம் சாப்பிடக்கூடாது. சந்த்ரக்ரஹணத்திற்கு முன் 3 யாமம் சாப்பிடக்கூடாது. க்ரஸ்தாஸ்தமன சந்த்ரக்ரஹணத்தில் பகலில் உபவாஸமிருந்து ஸாயங்காலத்தில் சந்த்ரனைக்கண்டு

ஸ்நானஞ்செய்தபிறகுதான் சாப்பிடவேண்டும். அப்படியே க்ரஸ்தாஸ்தமனஸூர்யக்ரஹணத்திலும் ராத்ரியில் சாப்பிடாமலிருந்து மருநாள் காலையில் ஸ்நானஞ்செய்து ஸூர்யனைப் பார்த்துவிட்டு சாப்பிடவேண்டும்.

63. வெண்கலப் பாத்ரத்தில் எடுக்கப்பட்ட இளநீர் கள்ளுக்குச் சமமாகும். தாம்ரபாத்ரத்தில் புஷ்பம், சந்தனம் இவைகளையும் வைக்கக்கூடாது.

64. தேவர்கள், பித்ருக்களுக்கன்னியில் தனக்கென்று திலான்னம் பாயஸம் இவைகளைச்செய்து சாப்பிடக்கூடாது.

65. த்வாதசியில் ச்ரவணநக்ஷத்ரம் சேர்ந்தால் அதற்கு, "ச்ரவணத்வாதசி" என்று பெயர். அதில் உபவாஸமிருக்க வேண்டியது. அது மெத்த புண்யப்ரதம். உபவாஸமில்லாவிடில் தோஷமுண்டு. சிரவணநக்ஷத்ரமானது ஏகாதசி, த்வாதசி இரண்டிலும் தொட்டுக்கொண்டிருந்தால் மேலே கண்ட த்வாதசியைக்காட்டிலும் ச்ரேஷ்டமானது. இதைமட்டில் சிலர் அனுஷ்டிக்கிறார்கள். ஏகாதசி, ச்ரவணத்வாதசி இவ்விரண்டும் முதல் நாளும், மறுநாளுமாக வரும்பக்ஷத்தில் ஏகாதசியில் உபவாஸமிருக்கவேண்டியதில்லை. அந்தப் பலன் ச்ரவணத்வாதசியில் உபவாஸமிருப்பதால் கிடைத்துவிடுகிறது.

66. அல்ப த்வாதசியில் அருணோதயத்தில் ஸ்நானம், தேவபூஜை, தானம், ஹோமம் இவைகளெல்லாவற்றையும், முடித்துக்கொள்ளலாம். த்வாதசியிலேயே பாரணை செய்யவேண்டும். காலமில்லாவிட்டால் துளஸீதீர்த்தத்தைப் பானஞ்செய்துவிட்டுப் பிறகு போஜனஞ்செய்யலாம்.

67. தீட்டிலும் ஏகாதசி வ்ரதம் உண்டு.

68. அடிக்கடி தீர்த்தம் சாப்பிடுதல், பகலில் நித்ரை செய்தல், தாம்பூலம், இவைகள் உபவாஸத்தில் கூடாது. உபவாஸதினத்தில் பல் துலக்கவும் கூடாது.

69. த்வாதசிபாரணையில் காட்டுவாழையை விலக்க வேண்டும். த்வாதசிபாரணையில் சில தோஷநிவ்ருத்திக்காக துளஸி, காசாந்தழை, சுண்டக்காய், ஆத்திக்கீரை, நெல்லிக்காய் இவைகளையும், அல்லது இவைகளில் ஏதேனும் ஒன்றையாவது புஜிக்கவேண்டும்.

70. த்வாதசியில் பகலில் நித்ரை, பரான்னம், இரண்டு தடவை சாப்பாடு, ஸ்த்ரீஸம்போகம், தேன், வெங்கலம், மாம்ஸம், எண்ணை இந்த எட்டையும் நீக்கவேண்டும்.

71. த்வாதசியின் முதல் பாதத்திற்கு "ஹரிவாஸரம்" என்று பெயர். அதில் பாரணை செய்யலாகாது

72. உள்ளிப்பூண்டு, வெங்காயம் இவைகளைப் புத்திபூர்வகமாய்ச் சாப்பிட்டால் ஸுராபானத்திற்குச் சமானம்.

73. வெங்கலத்தில் வைத்த இளநீரும், உப்புக்கலந்த பாலும், வண்ணான் துறையில் ஸ்நானம் செய்தலும், தாம்ர பாத்ரத்தில் வைத்த பாலும், கையின் நகத்தின் நுனியினால் ஜலத்தைப் பானம்பண்ணுதலும், இடதுகையினால் தீர்த்தத்தை எடுத்துச்சாப்பிடுதலும் கள்ளுக்குச்சமானம்.

74. ப்ராம்ஹணர் குடித்துமிருந்த தீர்த்தத்தைச் சாப்பிட்டால் அது கள்ளுக்குச் சமானம். ஆனால், ஸங்கடவிஷயத்தில் அந்த தீர்த்தத்தில் கொஞ்சம் கீழே கொட்டிவிட்டு பாக்கியைச் சாப்பிடலாம்.

75. சிவனுக்கு மட்டில் நிவேதனம் செய்யப்பட்ட அன்னம், தீர்த்தம் வகையறு இவைகள் ஒன்றையேனும் சாப்பிடலாகாது. ஸாளக்ராமத்தோடு கூடிய சிவநிவேதனத்தைப் புஜித்தால் விசேஷபலனைக்கொடுக்கிறது.

76. 'ஆயஸே பாத்ரஸ்திதம் தோயம் ஸப்தம்யாம் பாநுவாஸரே।
தாத்ரீபலம் திலம் வாபி ராத்ரௌ தயி திவா பய: ॥௧॥

கரேண மதிதம் தக்ரம் ஸர்வதா ஸம்த்யஜேத்।
ஸர்ஷபம் ச ஸதா த்யாஜ்யம் ராத்ரிகாலே த்வநாபதி ॥

அஷ்டம்யாம் நாரிகேலம் ச த்வாதச்யாம் ச படோலிகா ।
ப்ருஹதீ ச த்விதீயாயாம் கூஷ்மாண்டம் ப்ரதிபத்யபி ॥௨॥
த்ரபுஸம் சைவ பஞ்சம்யாம் ஸுராபாநம் ஸமீரிதம்' ॥

இரும்புப் பாத்ரத்திலுள்ள தீர்த்தமும், ஸப்தமி திதி ஞாயிற்றுக்கிழமை இவ்விரண்டிலும் நெல்லிக்காயும், ராத்ரியில் எள்ளும், தயிரும், பகலில் பாலும், கையினால் கொழப்பிய மோரும், ஆபத்தில்லாத ராத்ரி காலத்தில் கடுகும், அஷ்டமியில் தேங்காயும், த்வாதசியில் புடலங்காயும், த்விதீயையில் கண்டங்கத்திரிக்காயும், ப்ரதமையில் பூஷணிக்காயும், பஞ்சமியில் வெள்ளரிக்காயும் சாப்பிடுதல்கள் சாப்பிடுவதற்குச் சமம் என்று சொல்லப்பட்டது.

### 77. ஸௌரமானப்ரகாரம் அனுஷ்டிக்க வேண்டிய வ்ரதாதிகள்

தாநஸ்நாநோபவாஸாத்யம் க்ருத்திகாதீவ தைவச ।

யநாசதிநாஸி ஹரெஃ வசுஜா ஸிவராத்ரிவ்ரதம் தயா ॥
ஸஞாரசாநெந கதவ்யம் வாமஹ்ராசாநெ நகாரயெக ॥

78. சந்த்ரதர்சனதினத்தில் பிறைபார்ப்பதின் பலன்.

ஞாயிறு = சுகமுண்டாகும்.
திங்கள் = அதிகப்ரயோஜனமில்லை.
செவ்வாய் = மரணக்கேழ்வையுண்டாகும்.
புதன் = பயமுண்டாகும்.
வியாழன் = தனமுண்டாகும்.
வெள்ளி = தேஜஸ் உண்டாகும்.
சனி = ரோகமுண்டாகும்.

79. ஷுாமெ வணாசாவாரம் வாமெ தஷ ஜுகூ । வதெந வாஷசாவாரம் வயிஸிஷ்ஹவஷாவரெக॥

தன் க்ராமத்தில் பூராவும், இதர க்ராமத்தில் அதில் பாதியும், பட்டணங்களில் அதில் பாதியும், மார்கத்தில் சூத்ரன் போலவும் ஆசாரம் கொண்டாடுவது போதுமானது.

80. தெவாலயெ நதீதீரெ தடாகெஷ்வஸ்வஸஷியள । ஆதூவஷக்ஷிணம் காயாக வஹஹதாயாதம் ஹவெக॥

கோவில், நதி, குளம், அரசமரம் இவைகளின் ஸன்னிதியில் தன்னைத்தானே ப்ரதக்ஷிணம் செய்துகொண்டால் மஹாதோஷம் உண்டு.

81. கணெ வஷம் மஜெ மாஸம் ஸிவாயாம் தஉவீஷஜு । ஜொஹாஜாரயமெத விவஃ ஸவெ ஸம்தொ ந ஸம்ஸயஃ ॥

82. கர்ப்பிணியுடையவன், ஸமுத்ரஸ்நானம், தூரதேசயாத்ரை, சவவஹனம் இவைகளைச் செய்யக்கூடாது.

83. வ்யதீபாதத்தின் 4-வது பாதம், அமாவாஸ்யையின் முதல்பாதம், திருவோணநக்ஷத்ரத்தின் மத்யபாகம் இம் மூன்றும் புஷ்யமாஸம் அல்லது மாகமாஸத்தில் ஞாயிற்றுக் கிழமையின் உதயகாலத்தில் சேர்ந்தால் அர்த்தோதயம் என்றும், திங்கட்கிழமை உதயத்தில் சேர்ந்தால் மஹோதயம் என்றும் சொல்லப்படும்.

பாதஸ்யாந்த்ய: வ்யதீபாதாத்யஸ்ஸூர்யா: ஶ்ரோணார்த்த
ஸ்யம் ஸார்க்ஷபேஷ்யாத்யஸ்து । ஸாகேநாப்யர்கபர்வண்யர்த்தோ
தயஞ்ச மாஸே த்ரி மாகே தம் மஹாவ்யதீபாதக: ॥

84. அர்த்தோதயமஹோதயஸ்நாநாங்கதர்ப்பணம் ।
(ஸத்வம் ததி ஶங்கஞ்ச க்ஷீரம் பாத்ரம் கரேண ஜலம் ।
அக்ஷதாம்ஶ்சார்க்யதாநாய க்ருஹ்ணீதார்த்தோதயே ரவே: ॥)

திவாகர நமஸ்துப்யம் தேஜோராஶே ஜகத்ப்ரபோ । க்ருஹாணார்க்யம் மயா தத்தம் அக்ஷய்யம் திவாகர ॥ திவாகராய நம: இதமர்க்யம் ॥ ஏவம் த்ரி: ॥௧॥

அத்ரிகோத்ரஸமுத்பூத அம்ருதாம்ஶோ நிஶாகர । அர்க்யம் க்ருஹாண ஶஶிந் ஸோமாயாத்ர நமோஸ்து தே ॥ ஸோமாய நம: இதமர்க்யம் ॥ ஏவம் த்ரி: ॥௨॥

ஶ்ரவணர்க்ஷ நமஸ்துப்யம் ஜநார்த்தந । க்ருஹாணார்க்யம் மயா தத்தம் லக்ஷ்மீகாந்த நமோஸ்து தே ॥ லக்ஷ்மீகாந்தாய நம: இதமர்க்யம் ॥ ஏவம் த்ரி: ॥ ॥௩॥

ஸஹஸ்ரபாஹோ ஸர்வாத்மந் வ்யதீபாத மஹாபல । க்ருஹாணார்க்யம் மயா தத்தம் யமராஜ நமோஸ்து தே ॥ யமராஜாய நம: இதமர்க்யம் ॥ ஏவம் த்ரி: ॥௪॥

திதிதாரகவாராணாம் யேஷாம் வாரேஶ்வர: । ஶாஸ
க்ஷயநகாலேஷு க்ருஹ்ணாதி ஸ்ப்ருஶ்ய நக்ஷத்ரஸ்ய தே ॥
வாரேஶ்வராய நம: ஸ்த்ரீவஶ்யம் ॥ ஶுபம் ஸ்ரீ: ॥ ॥௫॥

**ஹாரீத:** - ஜந்மர்க்ஷே ஜந்மமாஸே ச ஜந்மவாரே ச க்ருதம்
ப்ரயோ । தவ பாபாம்ப்ரஜந்து நிஶ்சா ஸக்ஷத்ரஸ்ய
தே ॥ ॥௬॥

தாரகாணாஞ்ச ஸர்வாணாஞ்ச ஸர்வாவக: ।
ஶம் வாஹி ரோஹிணீகாந்த காலாயேஶ நக்ஷத்ரஸ்ய தே ॥

யதோயா விஹிதம் கிஞ்சித் தத்ஸர்வம் ஶிஹாஸ்ய தே ।
க்ருதிநாம் கல்பவ்ருக்ஷோஸி கலாந்த ஸம்ஹிதா ॥௭॥

ஶாஸபத்தாகாலேஷு பாபம் நாஶய மே ஶிவ ॥

**ஶாந்தி**— ஸர்வணம் பாயஸம் காம்ஸ்யம் த்ரவ்யா
ணேவஸேத் த்விஜ: । ஸர்வஷ்டிஸோபஶாந்தோஹ்யஸம்பதா
யாஷ்யமஸய ॥ த்ருதீய த்விஜ ஸம் ஹி தேஹி மே ஸ
ர்வமங்கலம் ॥ த்ருதீய நக்ஷத்ரஸ்யம் தேவதேவ திவாகர ।
ஸர்வா க்ருதஞ் யத்பர்ணம் தத்ஸர்வம் வாக்ஷயம் குரு ॥
ஸர்வாகர நக்ஷத்ரஸ்யம் தேவதேவ நிஶாகர । ஸர்வா க்ரு
தஞ் யத்பர்ணம் தத்ஸர்வம் வாக்ஷயம் குரு ॥

**ஸம்ஸ்ருதி:** - ஶுபம் ய: குர்யாத்தஸ்யார்த ஶமேதா
த்யஶோபாதயே । ஜஹாத்யா ஸகலாந்த ஹோமாந்த க்ருதே
ஶிவஸர்வம் வ்ரஜேத் ॥

85. கடனில் மீதிவைப்பது நெருப்பில்லாமலே தஹிக்கும்.

86. ஆயுஸ், தனம், வீட்டில் கலகம், மந்த்ரம், ஔஷ
தம், ஸம்போகம், தானம், மானம், அவமானம், இந்த ஒன்ப
தும் ரஹஸ்யமாய் இருக்கவேண்டியது.

87. இளம்வெயில் காய்தலும், பிணப்புகை மேல்படுகிறதும், தன்னைக்காட்டிலும் வயதில் பெரியவளை கல்யாணஞ் செய்து அவளுடன் ஸம்போகம் செய்வதும், கலங்கியஜலத்தை சாப்பிடுவதும், இரவில் தயிரன்னம் சாப்பிடுவதும், இந்த ஐந்தும் தினம் தினம் ஆயுளைச்குறைக்கும்.

88. ஸாயங்காலவெயில் காய்தலும், ஹோமப்புகை மேல்படுதலும், தனக்குச் சிறியவளை கல்யாணஞ் செய்து அவளுடன் ஸம்போகஞ் செய்தலும், நிர்மலமான ஜலத்தைச் சாப்பிடுதலும், இரவில் பாலன்னம் சாப்பிடுதலும் இந்த ஐந்தும் ஆயுளை தினம் தினம் வ்ருத்தி செய்யும்.

89. அதிதி வாசலில் நிற்கும்போது ஒருவன் சாப்பிட்டால் அந்த ஆபோசனம் கள்ளுக்கு ஸமானமாகும். அந்த அன்னம் கோமாம்ஸஸமானமாகும்.

90. ஒருபோதும் கடன் வாங்கக்கூடாது. கடனில் மிச்சமும் வ்ரணத்தில் மிச்சமும் வைக்கக்கூடாது. வரவு மிஞ்சி செலவு செய்யக்கூடாது. பிராணனைக்காட்டிலும் மானம் பெரியது. நாளைக்கு வருவது நம்மதென்று இருக்கக்கூடாது. தேகம் அனித்யம். த்ரவ்யம் நிலையில்லாதது. தர்மத்தை நினைத்தவுடனே செய்யவேண்டியது.

91. கல்லின்மேல் வைத்த சந்தனத்தைப் பூசிக்கொள்வதும், பூனை தின்ற அன்னத்தைச்சாப்பிடுதலும்,நீரில் தன் நிழலைப்பார்த்தலும் இந்த மூன்றும் இந்த்ரனுடைய ஐச்வர்யத்தையும் போக்கிவிடும்.

92. ஆட்டின் கால் தூளியும், கழுதையின் கால் தூளியும், துடைப்பத்தின் தூளியும், ஸ்த்ரீகளுடைய பாததூளியும் இந்த நான்கும் மேலேபட்டால் இந்த்ரனுடைய ஐச்வர்யத்தையும் போக்கிவிடும்.

93. பிறருக்கு உபகாரஞ் செய்வதே புண்யம். பிறருக்கு உபத்ரவம் செய்வதே பாபமாகும். ப்ராம்ஹணனுடைய தனம் விஷத்துக்குச் சமானமாகும்.

94. வண்டிக்கு அஞ்சுமுழமும், குதிரைக்குப் பத்து முழமும், யானைக்கு ஆயிரம் முழமும் விலகவேண்டும். துஷ்டனுக்கோ அவனிருப்பிடம் விட்டு வெகு தூரம் விலகவேண்டும்.

95. தேளுக்கு விஷம் கொடுக்கில். ஈக்கு விஷம் தலையில். பாம்புக்கு விஷம் பல்லில். துர்ஜனனுக்கோ ஸர்வாங்கத்திலும் விஷம்.

96. கடன் வைத்த தகப்பன் சத்ரு. அக்னிஹோத்ரம் செய்யும் இடத்திற்குப் போகும்போதும், க்ருஹம், புண்யக்ஷேத்ரம், கர்ப்பவதி, கிழவர், ராஜா, தைவம், குரு, இவர்களிடத்திற்குப் போகும்போதும் வெறும் கையாய்ப் போகக் கூடாது.

97. தரித்ரனுக்குக் கொடுக்கும் தானமும், பூஜையில்லாக்கோவிலுக்குப் பூஜையுண்டாக்குதலும், அனுதப்ரேதத்தை ஸம்ஸ்காரம் செய்வதும் அச்வமேதபலத்துக்கு ஸமானமாகும்.

98. அழுக்கு வஸ்த்ரம் தரிப்பவனும், பல் தேய்க்காதவனும், பெரும் உண்டி சாப்பிடுபவனும், காலை மாலை தூங்குகிறவனும் இவர்கள் குணசாலிகளாயிருந்தாலும் லக்ஷ்மி அவர்களை விட்டு விலகிப்போவாள்.

99. கொம்புள்ள ப்ராணிகளின் ஸமீபத்தில் போகக்கூடாது. ஒருவன் என்ன துர்குணமுள்ளவனாயிருந்தாலும் காஷாயதண்டங்களை தரிப்பவனாகில் பூஜ்யனாவான்.

100. துர்ப்பிக்ஷகாலத்தில் அன்னதானம் செய்யவேண்டியது. பிறருடைய மனேவியை தாயார்போலவும், பிறருடைய த்ரவ்யத்தை ஓட்டாஞ்சல்லிபோலவும் நினைக்கவேண்டியது.

101. யோகிகளுக்கும், கிழவர்களுக்கும், சிறுவர்களுக்கும் வ்ரதநியமங்கள் வேண்டியதில்லை. ஒருபோதும் கோபம் கூடாது.

102. கோபத்தை பாபமென்றே சொல்லப்படுகிறது.

103. எப்போதும் சிந்தனை கூடாது.

104. கன்றுக்குட்டியின் கயிற்றை தாண்டலாகாது. மழையில் ஓடலாகாது.

105. ஒற்றை வஸ்த்ரத்தோடு புஜிக்கலாகாது. நக்நனாய் ஸ்நானஞ் செய்யக்கூடாது.

106. வெகுபேர்களுடைய கூட்டத்தில் சாப்பிடக்கூடாது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கலாகாது. கெட்ட கதைகளைச் சொல்லலாகாது.

107. ஆடுகளின் மத்தியிலும், பசுக்களின் மத்தியிலும், தம்பதிகளின் மத்தியிலும், குருசிஷ்யர்களின் மத்தியிலும், நந்திசங்கரர்களின் மத்தியிலும் போகலாகாது. போனல் பூர்வஜன்மத்தில் செய்த புண்யங்களெல்லாம் போய்விடும்.

108. குரு, பசு, தைவம், தீர்த்தம், வ்ருக்ஷம் இவைகளை, வழியில் போகும்போது கண்டால் ப்ரதக்ஷிணமாகப் போகவேண்டும்.

சில்லரைதர்மங்கள் முற்றிற்று.

# த்ரவ்ய சுத்தி விஷயம்.

1. பதார்த்தங்கள் அசுத்தமாவது பல விதம்.

1. சூத்ராதிகள் தொடுவது.

2. சண்டாளர், ரஜஸ்வலே, நாய் முதலான ப்ராணிகள் தொடுவது.

3. சூத்ரனுடைய எச்சில் ஸம்பந்தப்படுவது.

4. இரண்டாவது பாராவில் கண்டவர்களுடைய எச்சில் ஸம்பந்தப்படுவது.

5. மலமூத்ராதிகளுடைய ஸம்பந்தம் ஏற்படுவது.

6. த்ரவ பதார்த்தங்களில் எறும்பு முதலான ப்ராணிகள் விழுந்துவிடுதல்.

2. அசுத்தப்படுவது என்பது:—

இது அல்பம் என்றும், பஹுளம் என்றும் இருவகைப்படும்.

1. அல்பமாவது:— நகம், கோழை, கண்ணீர், வேர்வை இவைகளுடைய ஸம்பந்தத்தினுல் உண்டாவது.

2. பஹுளமாவது:— மலம், மூத்ரம், இந்த்ரியம், ரக்தம், கள்ளு இவைகளுடைய ஸம்பந்தம் ஏற்படுவது.

3. அல்பகாலம் தெரியாத்தனமாய்த் தொடுவது அல்பம். தெரிந்தே வெகுகாலம் தொட்டுக்கொண்டிருப்பது பஹுளம்.

4. தங்கம், நவரத்னம், கருங்கல் இவைகள் அசுத்தங்களானால் மண் கரைத்த ஜலத்தினால் அலம்பி விபூதியினால் தேய்த்துவிட்டால் சுத்தமாகின்றன. சங்கம், முத்து முதலியவைகளும் மேல்கண்டபடியே சுத்தமாகின்றன.

5. தாம்ரம், இரும்பு, வெங்கலம், பித்தளை, ஈயம் இவைகள் அல்பதூஷிதமானால் உப்பு புளி கலந்த ஜலத்தினால் அலம்பினால் சுத்தமாகிவிடும். மலமூத்ராதிகளினால் அசுத்தமானால் கடசலில் கொஞ்சம் கொடுத்து 21 தடவை விபூதியினால் தேய்த்து அலம்பவேண்டியது. கோழை முதலானதினால் அல்பதூஷிதமானாலும் மேலேகண்டபடியே செய்யவேண்டியது.

6. ரஜஸ்வலையினால் உச்சிஷ்டமானால் ஒரு தடவை பஞ்சகவ்யத்தில் முழுகவைத்திருந்து எடுத்து மண், ஜலம், விபூதி இவைகளினால் 21 தடவை அலம்பவேண்டியது.

7. எப்போதும் வெங்கலம் பஸ்மத்தினாலும், தாம்ரம் புளியினாலும் சுத்தமாகிறது. வெங்கலத்தில் கள்ளு ஸம்பந்தப்பட்டாலும், மலமூத்ராதிகள் பட்டாலும், அக்னியில் காய்ச்சி கடசலில் கொடுத்தால் சுத்தியாகிறது. நாய் தொட்டால் உப்புஜலத்தினால் பத்துத்தடவை அலம்பவேண்டியது. வெங்கலபாத்ரத்தில் சூத்ரனுடைய உச்சிஷ்டம் பட்டாலும், வாய் கொப்பளித்தாலும், கால் அலம்பினாலும் ஆறு மாஸத்திற்கு பூமியில் புதைத்துவைத்து மறுபடி எடுத்து மேலே கண்டபடியே சுத்திசெய்யவேண்டியது.

8. தந்தம், எலும்பு, கொம்பு, வெள்ளி, தங்கம், சங்கம், மணிபாத்ரங்கள் இவைகளை ஜலத்தினால் அலம்பினால் போதுமானது.

9. இரும்பு, ஈயம், பித்தளை இவைகள் அக்னியில் காய்ச்சினால் சுத்தமாகின்றன. எண்ணெய், நெய் அசுத்தமானால் ஸ்வல்பமாயிருந்தால் தள்ளிவிடவேண்டியது. அதிகமாயிருந்தால் அனலில் கொஞ்சம் காய்ச்சவேண்டியது. இந்த சுத்திகளெல்லாம் எப்போதும் நியதமல்ல. எப்போதாவது நேர்ந்த விஷயம். குருணிக்கு மேல்பட்ட எண்ணெய் முதலான த்ரவ பதார்த்தங்கள் எறும்பு முதலானவைகளால் அசுத்தப்பட்டால் வஸ்த்ரத்தினால் வடிக்கட்ட சுத்தியாகும்.

10. பால் முதலியவைக்கு ஒரு பாத்ரத்திலிருந்து மற்றொரு பாத்ரத்தில் மாற்றுவதும் சுத்தி. அதிகமாக அசுத்தப்படுத்தப்பட்டால் காய்ச்ச சுத்தமாகும். தங்கம், நவாத்னுதி வகையறு உச்சிஷ்ட ஸம்பந்தப்பட்டால் கோமயத்தினாலேயும், பஸ்மாவினாலேயும் அலம்பவேண்டியது. தாம்ரம் வெள்ளி இவைகளை புளியினால் அலம்பவேண்டியது. தங்கமும், நவரத்னமும் மலமூத்ராதிகளினால் தூஷிதமானால் கோமூத்ரத்திலாவது மஹாநதியிலாவது ஏழு நாள் முழுகவைத்திருந்து எடுத்து சுத்திசெய்யவேண்டியது. எல்லா சுத்திகளிலும் முதலில் மண் ஜலமிவைகளினால் அலம்பவேண்டியது.

11. உருப்படியாகச் செய்யப்படாத உலோகங்கள், மரங்கள் இவை அசுத்தமாகிற விஷயத்தில் கடசலில் பிடிக்கவேண்டியது. ஸ்வர்ணம், வெள்ளி, தாம்ரம் இவைகள் சண்டாளன், ரஜஸ்வலை இவர்களால் உச்சிஷ்டமானால் இருபத்தொரு தடவை பஸ்மத்தினாலும், புளிஜலத்தினாலும் அலம்பி மேலேகண்டபடி சுத்திசெய்யவேண்டியது. ஸ்வல்பகாலத்துக்கு தூஷிதமாயிருந்தால் கடசல் பிடித்தால் போதும். வெகு காலத்துக்கு அப்படியிருந்தால் அழித்து வேறாகப் பண்ணவேண்டியது. அல்லது ஆறுமாஸம் பூமி

யில் புதைத்துவைத்து பிறகு எடுத்து சுத்திசெய்யவேண்டியது. வெங்கலம், பித்தளை இவைகள் நாயினுலாவது சூத்ரனுலாவது ஏதாவது ஒருஸமயம் ஸ்பர்சிக்கப்பட்டால் பஸ்மாவினுல் பத்துத்தடவை தேய்த்து அலம்பவேண்டியது.

12. நெய், வெண்ணெய் இவைகளுக்கு நாய், காக்கை இவைகளினுல் அசுத்தியானுல் அதை வஸ்த்ரத்தினுல் வடிக்கட்டி அந்தமிச்சத்தை நெய், வெண்ணேயுடன் கலந்து எல்லாவற்றையும் அக்னியில் காட்டி காயத்ரியால் அபிமந்த்ரணம் செய்து ப்ரோக்ஷிக்கவேண்டியது.

13. பால், தயிர், மோர், தைலம் இவைகள் இரண்டு மரக்காலுக்கு மேற்பட்டிருந்தால் மேலே நெய்க்குச் சொன்ன சுத்தியே போதுமானது. பால், தயிர் சூத்ரனுடைய பாத்ரத்திலிருந்து ப்ராம்ஹணனுடைய பாத்ரத்தில் மாற்ற சுத்தமாகும். வெண்ணெய், நெய், எண்ணே இவைகளுக்கும் இப்படியே.

14. வெண்ணேயைச் சண்டாளன் தொட்டுவிட்டால் ஜலத்தில் போட்டு மறுபடி அதை எடுத்துக்கொள்ளவேண்டியது.

15. நெய், மோர் அல்பமாயிருந்து அசுத்தமானுல் அவைகளை த்யாகம் செய்யவேண்டியது. அதிகமாய் இருந்தால் மேலே சொல்லிய ப்ரகாரம் வேரு பாத்ரத்தில் மாற்றவேண்டியது. மரசாமான்கள் பஹுளமாக தூஷிக்கப்பட்டால் அவைகளைச் செதுக்கவேண்டியது.

16. வெல்லம், உப்பு, இவைகளை அனலில் காட்டி எடுக்கவேண்டியது. படுக்கை முதலான கம்பளங்கள் அசுத்தமானுல் ஜலத்தால் ப்ரோக்ஷித்தால் போதுமானது. வஸ்த்ரங்கள் அல்பதூஷிதமானுல் நனைத்தலம்பினுல் போதுமானது. அதிக தூஷிதமானுல் வண்ணுனுக்குப் போட்டு அலம்புவதால் சுத்தமாகும்.

17. தான்யக்குவியல் அல்பதூஷிதமானல் எவ்வளவு மட்டில் தோஷப்பட்டதோ அதைமட்டில் எடுத்துவிட்டு மற்றதை ப்ரோக்ஷிக்கவேண்டியது. எவ்வளவுமட்டில் தூஷிதமாயிற்று என்று தெரியாவிட்டால் எல்லாவற்றையும் ப்ரோக்ஷணம் செய்தால் போதும். யக்ஞபாத்ரம் மூத்ரபுரீஷாதிகளினல் தூஷிதமானல் இழைப்புளியினல் இழைத்துவிடவேண்டியது. ஆட்டுமயிர் கம்பங்கள் அசுத்தமானல் கோமூத்ரத்தில் உவர் மண்ணைக் கரைத்து ப்ரோக்ஷணஞ் செய்யவேண்டியது. மரையுருவிகளுக்கு வில்வப்பழத்தினல் தேய்ப்பதே சுத்தி. பஞ்சுஸம்பந்தமான பதார்த்தங்களை வெயிலில் காட்டி ப்ரோக்ஷணஞ் செய்யவேண்டியது. மூங்கில் சம்பந்தமான பதார்த்தங்கள் அல்பதூஷிதமானல் அலம்பிவிடவேண்டியது. அதிக தூஷிதமானல் தள்ளிவிடவேண்டியது. தாம்ரம், வெள்ளி, தங்கம் வகையரு பாத்ரங்கள் அதிக தூஷிதமானல் முன்சொன்னபடி சுத்திசெய்வதுடன் பாத்ரங்களில் தணலைப்போட்டு சுத்தி செய்யவேண்டியது.

18. நெல்குத்த உதவக்கூடிய சல்லடை, முறம் வகையரு இவைகள் அல்பதூஷிதமானல் அலம்பவேண்டியது. அதிக தூஷிதமானல் எறிந்துவிடவேண்டியது.

19. கறிகாய்கள், பழங்கள், கிழங்குகள் இவைகளுக்கு அலம்புவதே சுத்தி. மண்பாத்ரங்களை விழுப்பானல் நெருப்பில் காய்ச்சவேண்டியது. மற்றபடி அசுத்தியானல் தள்ளிவிடவேண்டியது.

20. பயறு, உளுந்துமுதலிய தான்யங்களில் அல்ப அசுத்திக்குப் ப்ரோக்ஷணம். சண்டாள ஸ்பர்ச உச்சிஷ்டமானல் தள்ளிவிடவேண்டியது. அதிகமாயிருந்தால் உச்சிஷ்டமானவரையில் எடுத்துவிட்டு பாக்கியை ப்ரோக்ஷணஞ் செய்யவேண்டியது.

21. விரகு அசுத்தமானல் சந்த்ர ஸூர்ய கிரணங்களும் காற்றும் தான் சுத்திசெய்கிறது.

22. பூமியானது மொழுகிப் பெருக்குவதினுலும், நெருப்புப் படுவதினுலும், காலத்தினுலும், பசுமாட்டுக் குளம்பு படுவதினுலும், மண் இடுவதினுலும் சுத்தமாகிறது.

ஒவ்வொருநாளும் வீட்டை மொழுகிப் பெருக்கவேண்டியது. ஸாயங்காலத்திலும் பெருக்கித்தீபம் ஏற்றவேண்டியது.

23. ப்ரஸவித்த இடத்தை 20-நாள் சென்றபிறகு மண்ணைச் சுரண்டிவிட்டு புதுமண் இடவேண்டியது. பசுமாட்டை அதில் போகும்படி செய்து புண்யாஹவாசனஜலத்தால் ப்ரோக்ஷிக்கவேண்டியது.

24. ஜனனமரணங்கள் உண்டான வீட்டில் தீட்டுப் போன பிறகு மண்ணைத் தெளித்து புண்யாஹவாசனம் செய்யவேண்டியது.

25. சண்டாளர், வீட்டிற்குள் தெரியாத்தனமாய் புகுந்துவிட்டால் மண்பாண்டங்களை விஸர்ஜனம் செய்யவேண்டியது. எண்ணெ நிறைந்த மண்பாண்டங்களை விஸர்ஜனம் செய்யவேண்டியதில்லை. கோமயத்தினுல் ப்ரோக்ஷணம் செய்து பசுமாட்டை நெடுக மிதிக்கும்படி செய்யவேண்டியது. பசுமாடுகள் த்ருப்தியாக குடிக்கத்தகுந்த ஜலம் இருக்கும் குளம், குட்டை இவைகளில் இருக்கப்பட்ட ஜலம் எப்போதும் சுத்தம். வற்றிப்போய் அல்பஜலம் இருந்து சண்டாளனுல் தொடப்பட்டால் அதைத் தொடக்கூடாது. அதிகமாக ஜலம் இருக்கிற குளம் குட்டை மடு இவைகளில் பூனை, நாய் இவைவிழுந்து மரணமடைந்தால் 100-குடம் ஜலத்தை எடுத்துக்கொட்டிவிட்டு பஞ்சகவ்யஜலத்தினுல் ப்ரோக்ஷணஞ்செய்யவேண்டியது.

26. கிணற்றில் ஜீவப்ராணிகள் விழுந்து இறந்துவிட்டால் கிணற்றை முழுவதும் இறைத்துவிட்டு நெருப்பை கொளுத்திப் போட்டு பஞ்சகவ்யஜலத்தை அதில் விட வேண்டியது. மனுஷ்டன் விழுந்து இறந்தாலும் இதேவிதி.

27. ப்ராம்ஹணனுக்கு நாபிக்குக்கீழ்ப்பட்ட இடத்தில் புண் உண்டாகி க்ருமியுண்டாகிவிட்டால் கோமூத்ரம் தயிர் பால் நெய் இவைகளில் மூன்றுநாள் ஸ்நானம் செய்து அதையே சாப்பிட்டால் தோஷம் நிவ்ருத்தியாகிறது. அதற்கு மேல் கழுத்துக்குக் கீழ்மட்டும் உண்டானால் மேலே கண்டபடி ஆறுநாள் இருக்கவேண்டியது. தலையில் உண்டாகிவிட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரம் செய்யவேண்டியது.

28. தாம்ரத்தினால் செய்யப்பட்ட கமண்டலுவில் எப்போதும் ஜலம் இருந்துகொண்டிருக்குமாதலால் பானம் சந்த்யாவந்தனம் இவைகளை சந்தேகமன்னியில் செய்யலாம்.

29. நெருப்பு எப்போதும் சுத்தம். ப்ராம்ஹணனின் பாதம் சுத்தம். பசுவின் பின்பாகம் சுத்தம் ஆடு, குதிரைகளின் முகம் சுத்தம். ஸ்த்ரீகளின் ஸர்வாங்கமும் சுத்தம்.

30. ரோகிஷ்டன், பாலன், சமயல்கட்டில் இருக்கும் ஸ்த்ரீ இவர்களுடைய சுத்தியைப்பற்றி விசாரிக்கக்கூடாது.

31. கடைத்தெருவில் வாங்கப்படும் எல்லா பதார்த்தங்களும் சுத்தம். ப்ரும்ஹசாரி வாங்கும் பிக்ஷை சுத்தம். பிறந்த குழந்தை சுத்தம்.

32. ஈ, பசு, குதிரை, ஸூர்யகிரணம், தூளி, வாயு, அக்னி இவைகள் எல்லாம் எப்போதும் சுத்தம். ஆஸனம், சயனம், வாகனம், ஓடம், மார்க்கம் இவைகளில் இருக்கப்பட்ட த்ருணங்கள் சண்டாளனால் ஸ்பர்சிக்கப்பட்டிருந்தாலும் வாயுவினால் சுத்தம். லோஹங்களினால் செய்யப்பட்ட ப்ரதிமை

அல்பமாக அசுத்தமானால் பஸ்மாவினால் தேய்த்து பஞ்சகவ்யத்தினால் ஸ்நானம் செய்விக்கவேண்டியது.

33 கறுங்கல் சிலைகள் அல்பமாக அசுத்தமானால் புத்துமண் ஜலத்தால் அலம்பி பஞ்சகவ்யத்தால் ஸ்நானம் பண்ணிவைத்தால் சுத்தி. மலமூத்ராதிகளினால் அசுத்தியானால் பஞ்சகவ்யத்தில் ஐந்துநாள் போட்டிருந்து கோமூத்ரம், சாணம், புற்றுமண் இவைகளினால் அலம்பி மறுபடி ப்ரதிஷ்டை செய்யவேண்டியது.

34. உபநயனத்துக்கு முந்தின பாலன், விவாஹத்திற்கு முந்தின கன்னிகை இவர்கள் ஸதா சுத்தர்கள்.

35. மூஞ்சூறு, வண்டு வகையறா, ஈ, அந்து, பசு, யானை இவைகள் எப்போதும் சுத்தங்கள் தான். ஜலத்தில் இருக்கிற ஸர்வஜீவன்களும் பதார்த்தங்களும் ஸதா சுத்தங்களே.

𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇 𑌆𑌹𑍍𑌨𑌿𑌕𑌕𑌾𑌣𑍍𑌡𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

தர்மசாஸ்த்ரச் சுருக்கத்தில் ஆன்ஹிககாண்டம்.

முற்றுப்பெற்றது.

# தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.

(மூன்றாவது)

## ஆ செள ச கா ண் ட ம்.

### 1. ஞா திகள்.

1. ஜ்ஞாதிகள் என்பது இருவகைப்படும். முதலாவது ஸபிண்டர்கள், அதாவது பத்துநாள் தாயாதர்கள். 2-வது ஸமானோதகர்கள், அதாவது மூன்று நாள் தாயாதர்கள். அவர்களுள் ஸபிண்டர்கள் என்பது கூடஸ்தனிலிருந்து ஏழுதலைமுறை வரையில் உள்ளவர்கள். ஸமானோதகர்கள் எட்டாவது தலைமுறைமுதல் பதினான்கு தலைமுறை வரையிலுள்ளவர்கள்.

2. ஒருவனுக்கு பிதா, பிதாமஹன், ப்ரபிதாமஹன், புத்ரன், பௌத்ரன், ப்ரபௌத்ரன் இவனுள்பட ஏழு தலைமுறை.

3. தகப்பன் பிள்ளைகளும், அண்ணன் தம்பிகளும் தாயாதர்களே.

### 2. பிறப்புத்தீட்டு.

1. நாலாவது மாஸத்தில், கர்ப்பத்தின் விச்சித்தி உண்டானால் பிதாவுக்கு ஸ்நானம். மாதாவுக்கு 4-நாள் தீட்டு. 5-வது 6-வது மாஸங்களில் விச்சித்தியுண்டானால் பிதாவுக்கும், ஸபிண்டர்களுக்கும் ஸ்நானம். 5-6-வது மாஸங்களில் பிண்டம்போல் விழுந்தால் மேற்சொன்னவர்களுக்கு 3 நாள் தீட்டு. மாதாவுக்கு 5-வது மாஸத்தில் 5-நாள் தீட்டு. 6-வது மாஸத்தில் 6-நாள் தீட்டு.

2. 7-வது மாஸம் முதல், பிறந்தது பிள்ளையானால் மாதாபிதாக்களுக்கும், ஸபிண்டர்களுக்கும் பத்துநாள் தீட்டும், ஸமானோதகர்களுக்கு 3 நாள் தீட்டுமுண்டு.

3 புருஷசிசுவானால் 30 தினங்களுக்குப் பிறகும், ஸ்த்ரீ சிசுவானால் 40 தினங்களுக்குப் பிறகும், மாதாவுக்கு பாண்டஸ்பர்சயோக்யதை உண்டாகும்.

4. ஸ்த்ரீசிசு பிறந்தால், அதன் பின்னோதரனுள்பட ஸஹோதரன், தகப்பன், பின்னோதரனுள்பட சிறியதகப்பன், பெரிய தகப்பன், பின்னோதரனல்லாத சிறியதகப்பன், பெரியதகப்பன் பிள்ளைகள், பிதாமஹன், அந்தப்பிதாமஹனுடைய பின்னோதரர்களுள்பட ஸஹோதரர்கள், இவர்களுக்குப் பத்துநாள் தீட்டு.

5 பின்னோதரரான, சிறியதகப்பன் பெரியதகப்பன் பிள்ளைகளுக்காவது, பிதாமஹனுடைய ஸஹோதரர்களின் பிள்ளைகளுக்காவது, சிசுவின் ஸஹோதரனுடைய பிள்ளைகளுக்காவது தீட்டில்லை.

6. பெண்கள், தாய் தகப்பன் வீட்டில் ப்ரஸவித்தாலும், அவர்களின் த்ரவ்யச் சிலவினால் வேறு இடத்தில் ப்ரஸவித்தாலும், தாய் தகப்பன்களுக்கு 3 நாள் தீட்டு.

7. ஒரு ஸ்த்ரீ, தன் ஸஹோதரன், சிறிய தகப்பன், பெரியதகப்பன், அம்மான் முதலிய பந்துக்கள் வீட்டில் ப்ரஸவித்தாலும், அவர்களின் த்ரவ்யச்சிலவினால் வேறு எந்தவிடங்களில் ப்ரஸவித்தாலும், 1 நாள் தீட்டு.

குறிப்பு:— பட்டியலைப் பார்க்க.

8. உபநயனமில்லாதவனுக்கும், ப்ரம்ஹசாரிக்கும் தீட்டில்லை.

9. ஜனனுசௌசத்திற்கு அதிக்ராந்தாசௌசமில்லை. பிதாவுக்கு மட்டில் ஸ்நானமுண்டு.

10. ஜனனத்தில் பிதாவுக்கு 2 நாழிகை சுத்தி. வெகு தூரத்தில் இருந்தால் ஒருநாள் சுத்தி. அல்பதூரத்திலிருந்தால் ஒரு பகல் சுத்தி.

## 3. இறப்புத் தீட்டு.

### (1) 10-நாள் தீட்டு.

1. தசராத்ரஜ்ஞாதிகளின் மரணத்தில் 10 நாள் ஆசௌசம்.

2. பிறந்து பத்துநாள்களுக்குமேல், புருஷசிசுவின் மரணத்திலும், விவாஹம் வரையில் ஸ்த்ரீப்ரஜையின் மரணத்திலும், தாய், பிதா, பின்னேதரப்ராதா, ஸஹோதரப்ராதா இவர்களுக்கு 10 நாள் தீட்டு.

3. 7 வயதிற்குட்பட்டு உபநயனமான தசராத்ரஜ்ஞாதிகளின் பிள்ளைகள் இறந்தால் 10 நாள் தீட்டு.

4. 7 வயது முதல், உபநயனமானுலும், ஆகாமலிருந்தாலும் புருஷப்ரஜையின் மரணத்தில் 10 நாள் தீட்டு.

### (2) புருஷர்களுக்கு மூன்றுநாள் தீட்டு.

1. மாதாமஹன்.
2. மாதாமஹீ.
3. அம்மான்.
4. அம்மாமி.

# ஸ்த்ரீஜனனத்தில் இன்னின்னாருக்குத் தீட்டு என்பதைக் காட்டும் பட்டியல்.

**135**-ம் பக்கம் பார்க்க.




***N. B:***— 5-வது வனுக்குப் பெண் பிறந்தால் 2, 3, 4, 5, 6, 7, 14, 15, 16, இவர்களுக்கு 10-நாள் தீட்டு. மற்றவர்களுக்கில்லை. 7-வது வனுக்குப் பெண் பிறந்தால் 2, 3, 4, 5, 6, 7, 17, இவர்களுக்கு 10-நாள் தீட்டு. மற்றவர்களுக்கில்லை.

5. மாமனர்.

6. மாமியார்.

7. தாயின் ஸஹோதரி.

8. தகப்பனின் ஸஹோதரி.

9. உபநீதனுன மருமான்.

10. உபநீதனுன தௌஹித்ரன்.

11. உபநீதனுன ஸமாநோதகன்.

12. விவாஹமான பெண்.

13. ஸஹோதரி.

14. ஜனகமாதா.

15. ஜனகபிதா.

16. தத்தனுனபிள்ளை.

17. 25-வது மாஸம் முதல் 6 வருஷம் முடிய அனுபநீதனுன தசராத்ர ஜ்ஞாதிகளின் பிள்ளை.

18. 24 மாஸங்களுக்குட்பட்டு சௌளமாகிவிட்ட ஜ்ஞாதிகளின் பிள்ளை.

19. 7_வது வருஷம் முதல் விவாஹம் வரையில் தசராத்ரஜ்ஞாதிகளின் பெண். ❊

20. ஸமாநோதகர்களுக்கு:—

1. ஏழுவயதிற்குட்பட்டு உபநயனமான ஜ்ஞாதிகளின் பிள்ளை.

2. ஏழுவயதுமுதல் உபநயனமானுலும் ஆகாவிட்டாலும் ஜ்ஞாதிகளின் பிள்ளை. இவர்களின் மரணத்தில் 3-நாள் தீட்டு.

---

❊ ஸ்த்ரீ சிசுவிஷயத்தில் 3-தலைமுறைவரையில் தான் ஸாபிண்ட்யமென்பதை கவனிக்கவும்.

## (3) புருஷர்களுக்குப் * பக்ஷிணித் தீட்டு.

1. அத்தையின் பிள்ளை, பெண்.
2. அம்மானுடைய பிள்ளை, பெண்.
3. தாய் ஸஹோதரியின் பிள்ளை, பெண்.
4. ஸஹோதரியின் பெண்.
5. ஸஹோதரனுடைய கல்யாணமான பெண்.
6. பித்ருவ்யனுடைய பெண்.
7. பௌத்ரீ.
8. தௌஹித்ரீ.
9. 3-வயதிற்குமேல் உபநயனமில்லாத மருமான், தௌஹித்ரன்.

இவர்கள் மரணத்தில் பக்ஷிணி ஆசௌசம்.

அருணோதயத்திற்கு அருணோதயம் ஒருநாளாகக் கணக்குச் செய்பவர்கள் இரவில் எப்போது இறந்தாலும், இதை ஒருகாலமாக வைத்துக்கொள்ளவேண்டியது.

மற்ற, ராத்ரி $18\frac{3}{4}$-நாழிகைக்குமேல் நேரிடுவதை மறுநாளில் சேர்த்துக் கணக்குச் செய்பவர்கள் மறுநாள் முதற்கொண்டே கணக்குச் செய்துகொள்ள வேண்டியது.

## (4) புருஷர்களுக்கு 1-நாள் தீட்டு.

1. ஸபத்னீமாதாவின் ஸஹோதரன், ஸஹோதரி, பெண்.
2. மேற்கண்ட மூவருடைய பெண், பிள்ளை.
3. மைத்துனன்.
4. பின்னோதரர்களான சிறிய தகப்பன், பெரியதகப்பன், இவர்களின் பெண்.

---

* குறிப்பு:— பக்ஷிணி என்பது, இரண்டு இரவும் ஒருபகலும், அல்லது ஒரு இரவும் இரண்டு பகலும் உள்ளகாலம்.

5. பின்னோதரப்ராதாவின் பெண்.

6. பின்னோதர அத்தை.

7. மேற்படியாளுடைய பெண், பிள்ளை.

8. ஸபத்னீமாதாவின் தகப்பன், தாயார்.

9. 25-வது மாதம் முதல் 6-வருஷம் முடிவு வரையில் விவாஹமாகாத ஜ்ஞாதியின் பெண்.

10. ஜநக ப்ராதா.

11. ஜநக ஸபிண்டன்.

12. பத்னீ, அவள் ஸந்ததி இரண்டுமில்லாத விஷயத்தில் மாமனார், மாமியார்.

13. 6-மாஸத்திற்கு மேல் 24-மாஸத்திற்குள்பட்ட சௌளமாகாத ஜ்ஞாதியின் பிள்ளை.

இவர்கள் மரணத்தில் 1-நாள் ஆசௌசம்.

## 5. ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவுடன் ஏற்படும் தீட்டைத்தவிர தனிமையாக ஏற்படும் தீட்டுகள்.

### 1. ஸ்த்ரீகளுக்கு 3 நாள் தீட்டு.

1. உபநயனமான ஸோதரன்.

2. உபநயனமான மருமான்.

3. உபநயனமான ஸோதரியின் பிள்ளை.

4. * ஸபத்னீமாதா.

இவர்கள் மரணத்தில் மூன்று நாள் ஆசௌசம்.

---

* குறிப்பு:— ஆசௌசகாண்டத்தில் பின்னமாதாவுக்கு 1-நாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாதாவின் ஜாரபுருஷனுடைய பத்னி "பின்னமாதா" என்று அர்த்தம் பண்ணப்பட்டிருக்கிறது.

## 2. ஸத்ரீகளுக்கு பக்ஷிண்யாசௌசம்.

1. பித்ருவ்யன்.
2. தாயின் ஸஹோதரி.
3. மாதுலன்.
4. அத்தை.
5. மேற்கண்ட நால்வருடைய பிள்ளை, பெண்.
6. பிதாமஹன்.
7. பிதாமஹீ.
8. மாதாமஹன்.
9. மாதாமஹீ.
10. ஸஹோதரீ.
11. மேற்படியாள் பெண்.
12. மருமாள்.

இவர்களின் மரணத்தில் ஸ்த்ரீகளுக்கு பக்ஷிணித் தீட்டு.

---

அகவிவேசனக்காரர், ஸபத்னீமாதாவின மரணத்தில் ஸபத்னியினுடைய பெண்ணிற்கு 1-நாளும், ஸபத்னியினுடைய பெண் மரணத்தில் ஸபத்னிக்கு ஒரு நாளும் தீட்டு என்று சொல்லியிருக்கிறார். அது பிசகு. ஏனெனில், ஸபத்னியினுடைய பெண் இறந்தால் அந்தப் பெண்ணினுடைய தகப்பனாகிய தன் பர்த்தாவுக்கு 3-நாள் தீட்டு இருக்க, இவளுக்குமட்டில் 1-நாள் தீட்டுச்சொல்லக் காரணமில்லை.

அகபஞ்சஷஷ்டிக்காரர் இவ்விஷயத்தில் 3 நாள் தீட்டுச் சொல்லியிருக்கிறார்.

இத்யாதி காரணங்களைக்கொண்டு 3-நாள் தீட்டு என்பது ஸித்தாந்தம்.

## 3. ஸ்த்ரீகளுக்கு 1-நாள் தீட்டு.

1. ஸபத்னீமாதாவின் புத்ரன், புத்ரீ, பகிநீ, ஸஹோதரன்.

2. மேற்சொன்ன நால்வரின் பெண்கள், பிள்ளைகள்.

3. பின்னோதரபித்ருவ்யன்.

4. பின்னோதர அத்தை.

5. மேற்படி இருவர்களுடைய பெண்கள், பிள்ளைகள்.

6. ஸபத்னீமாதாவின் தாய், தகப்பன்.

இவர்கள் மரணத்தில் 1-நாள் ஆசௌசம்.

குறிப்பு:— இறப்புத்தீட்டுச் சொன்னவர்களில் பிள்ளைகள் பெண்கள் என்று சொல்லியிருப்பதில், பிள்ளைகள் உபநயனமானவர்கள், பெண்கள் விவாஹமானவர்கள் என்று அறிந்துகொள்க.

## 4. தீட்டுச்சேர்க்கை.

### (1) பிறப்புத்தீட்டில் பிறப்புத்தீட்டு.

1. 3-நாள் தீட்டில் மற்றொரு 3-நாள் தீட்டு வந்தால் அது முன்தீட்டோடு போய்விடும்.

2. 10-நாள் தீட்டில் மற்றொரு 10-நாள் தீட்டு வந்தால் அது முன் தீட்டோடு போய்விடும்.

3. 3-நாள் தீட்டின் மத்தியில் 10-நாள் தீட்டு வந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது வந்தாலும் 10-நாள் தீட்டின் முடிவில்தான் தீட்டுப்போகும்.

4. ஒரு தீட்டின் நடுவில் ஒரு சிசு பிறந்தால், அதன் தாய், தகப்பன் இவர்களுக்கு மட்டில் பிறந்தது முதல் 10-நாள் தீட்டு உண்டு.

5. 10-நாள் தீட்டின் 10-வது நாள் ராத்ரியில் மற்றொரு ஸமமான தீட்டு வந்தால், பிறகு 2 நாளும், 10-வது நாள் ராத்ரியின் 4-வது யாமத்திலாவது, அருணோதயத்திலாவது வந்தால் பிறகு 3-நாளும் அதிகத்தீட்டு உண்டு.

6. 10-நாள் திட்டின் மத்தியில் 3-நாள் தீட்டு எப்போது வந்தாலும், அதற்காக விசேஷமொன்றுமில்லை.

7. ஒருவன் தனக்கு சிசு பிறந்து தீட்டுக்காத்துக்கொண்டிருக்கும்போது 10-வது நாள் ராத்ரியில் எப்போதானாலும் வேறு ஜனனாசௌசம் வந்தால் அதிகத்திட்டில்லை.

8. ஒரு தீட்டுக்காத்துக்கொண்டிருக்கும்போது, இந்தத்தீட்டின ஆரம்பத்திற்கு முந்தியே ஜனனமானதாக ஒரு தீட்டு பிந்திவந்தால் பிந்திக்கேட்ட தீட்டின் முடிவிலேயே தீட்டுப்போய்விடும். (ஸம்பவத்திற்கே ப்ராதான்யம், ச்ரவணத்திற்கில்லை யென்றபடி.)

9. ஒருவனுக்கு இரட்டைப்பிள்ளைகள்பிறந்து ஜனனமானதில் ஒன்று முதல் நாளும், மற்றொன்று மருநாளுமாக ஏற்படுகிற விஷயத்தில் ஸமமான தீட்டுகளில் முன் வந்த தீட்டோடு பின் வந்த தீட்டுப்போய்விடும் என்கிற ந்யாயத்தினால் முதலில் பிறந்த சிசுவின் காலத்தை ஒட்டி தீக்ஷா நிவ்ருத்தி, தீட்டுப்போக்குதல் முதலான விஷயங்களை அனுஷ்டிக்கவேண்டியது.

ஆனால், தாயாருக்கு மட்டில் பின்னாடிப்பிறந்தது முதல் 11-வது நாளில் தான் தீட்டுப்போகும்.

ஸூதிகாசௌசமானதினால்.

## 2. பிறப்புத்தீட்டும், இறப்புத்தீட்டும்.

1. பிறப்புத் தீட்டைக்காட்டிலும் இறப்புத் தீட்டு பலமானது. இறப்புத்தீட்டுடன் பிறப்புத்தீட்டுப்போய்விடும்.

பிறப்புத்தீட்டுடன் இறப்புத்தீட்டுப் போகாது.

2. ஆனால், ஒருவன் தனக்கு சிசு பிறந்து தீட்டுக் காத்துக்கொண்டிருக்கும்போது ஜ்ஞாதிமரணாசௌசம் ஏற்பட்டால் அது ஜனனாசௌசத்தோடு போய்விடும்.

வூ ஊாணவவநழ ॥

ஜநநாஶௌவஒெஷ்ைதூ ஜ்ஞாதீநாம் ஒரணெ ஸதி ।
வடிவ-ாஶௌவெந ஜநகஃ ஜ்ஞாதீநாம் ஈவநாவூூஹிஃ ॥

ஜநநாஶௌவமத்தியில் ஜ்ஞாதிமரணாசௌசம் ஏற்பட்டால், அது தாய் தகப்பனார்களுக்கு மட்டில் பிறப்புத்தீட்டோடுபோய்விடும். மற்றவர்களுக்கு இறப்புத் தீட்டின் முடிவில் சுத்தி.

3. தாய், தகப்பன், தங்களுக்கு சிசு பிறந்து தீட்டுக் காத்துக்கொண்டிருக்கும்போது அந்த சிசுவானது இறந்தால் இறப்புத்தீட்டு அதிகமில்லை. 10-வது நாளில் சிசு இறந்தால் 2-நாளும், அன்று 8-வது யாமத்தில் இறந்தால் 3-நாளும் அதிகத்தீட்டு உண்டு.

மற்றவர்களுக்கு அதிகத்தீட்டுக் கிடையாது.

4. ஜ்ஞாதிமரணாசௌசமத்தியில் சிசு பிறந்தால், தாய் தகப்பன்களுக்கு மட்டில் பிறந்தது முதல் 10-நாள் தீட்டு உண்டு.

5. ஒருவனுக்கு மாதாபிதாக்களின் மரணாசௌசமத்தியில் சிசு பிறந்தால் அந்த ஜனனாசௌசம் மரணாசௌசத்தோடு போய்விடும். சிசுவின் தாயாருக்குமட்டும் ஜனனம் முதல் 10-நாள் தீட்டு உண்டு.

6. ஸமமாயிருந்தாலும், அல்பமாயிருந்தாலும், இறப்புத் தீட்டுடன் பிறப்புத் தீட்டுப் போய்விடும்.

7. பிறப்புத்தீட்டுள்ள ஜ்ஞாதிகளுக்கு 10-நாளுக்குள் அந்த சிசு மரித்தால் இறப்புக்காகத் தீட்டில்லை.

## 3. இறப்புத்தீட்டில் இறப்புத்தீட்டு.

1. 10-நாள் தீட்டில் வேறொரு 10-நாள் தீட்டு வந்தால் முந்திய தீட்டோடு பிந்திய தீட்டும் போய்விடும்.

2. 3-நாள் தீட்டில் 10-நாள் தீட்டு வந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது வந்தாலும், 10-நாள் தீட்டின் முடிவிலேயேதான் தீட்டுப்போகும்.

3. ஜ்ஞாத்யாசௌசத்தில் மாதாபிதாக்கள் இறந்தால் பிள்ளைகளுக்கும், பத்னி இறந்தால் பர்த்தாவுக்கும், பர்த்தா இறந்தால் பத்னிக்கும், பிள்ளை, பெண், இறந்தால் தாய் தகப்பன்களுக்கும், மரணம் முதல் 10-நாள் ஆசௌசமுண்டு. ஜ்ஞாத்யாசௌசத்தோடு நிவ்ருத்தியில்லை.

4. 10-நாள் தீட்டில் 10-வது நாள் ராத்ரியில் வேறொரு ஸமமான தீட்டு வந்தால் 2-நாளும், அன்று ராத்ரி 4-வது யாமத்திலாவது, அருணோதயத்திலாவது வந்தால் 3-நாளும் அதிகாசௌசமுண்டு.

5. 10-நாள் தீட்டில் 3-நாள் தீட்டு எப்போது வந்தாலும், அதற்காக அதிகாசௌசமில்லை.

6. பிதா இறந்து 10-நாளைக்குள் மாதா இறந்தால் பிதாவின் ஆசௌசகாலத்திற்கு மேல் பக்ஷிண்யாசௌசம் அதிகமுண்டு. மாதாவின் தசராத்ரமத்தியில் பிதா இறந்

தால் பிதாவின் மரணதினம் முதல் 10-நாள் ஆசௌச முண்டு.

7. பிதாவின் தசமதினத்தில் மாதா எப்போது இறந்தாலும் அதற்காக பக்ஷிண்யாசௌசமே தவிர அதிகமில்லை.

8. தாய் தகப்பன் இறந்து 10-நாளுக்குள் பத்னீ, பிள்ளை, பெண் இவர்கள் இறந்தால் முந்திய ஆசௌசத்தோடு பிந்திய ஆசௌசமும் போய்விடும். 10-வது நாளில் இறந்தால் முன் சொல்லியபடி 2, அல்லது 3-நாள் அதிகமாக ஆசௌசமுண்டு.

9. தாய், தகப்பன், பத்னீ, பர்த்தா, பிள்ளை, பெண் இவர்கள் இறந்த 10-வது நாளில் வேறு ஜ்ஞாதிமரணம் ஏற்பட்டால் முந்தியதீட்டோடு பிந்தியதீட்டும் போய்விடும்.

10. 10-நாள் ஆசௌசம் கார்த்துக்கொண்டிருக்கும் போது வேறொருவனை தஹனஞ்செய்ய நேர்ந்தால் தஹன தினம் முதல் 10-நாள் ஆசௌசம். மறுபடியும் வேறு தஹனஞ்செய்ய நேர்ந்தால் முன் ஆசௌசத்தோடு பிந்திய ஆசௌசமும் போய்விடும்.

ஒரு மரணத் தீட்டு கார்த்துக்கொண்டிருக்கும் போது அந்தத் தீட்டின் ஆரம்பத்திற்கு முந்தியே இறந்ததாக வேறு ஒரு தீட்டுவந்தால் பிந்திக்கேட்ட தீட்டின் முடிவிலேயே முந்திக்கேட்ட தீட்டும் போய்விடும். ஸம்பவத்திற்கே ப்ராதான்யம். ச்ரவணத்திற்கில்லை யென்றபடி.

இதற்கு வசனம்.

பூர்வாசௌசை: பரம் ப்ராப்தா பரா சௌசை: பூர்வப்ராப்தா |
சுத்தாஹேநைவ பூர்வஸ்ய சேஷ்யாஹாந்தே: பரப்ரூதே: ||

## 5. அதிக்ராந்தாசௌசம்.

1. 10-நாள் ஆசௌசத்தை 10-நாள்களுக்குப்பிறகு 3-மாதங்களுக்குள் கேட்டால் 3-நாள் ஆசௌசம். பிறகு 6-மாதங்களுக்குள் கேட்டால் பக்ஷிண்யாசௌசம். பிறகு ஒருவர்ஷத்திற்குள் கேட்டால் 1-நாள் ஆசௌசம். பிறகு கேட்டால் ஸ்நானமாத்ரம்.

2. 3 நாள் ஆசௌசத்தை 3 நாளுக்குமேல் 10 நாளுக்குள் கேட்டால் 1-நாள் ஆசௌசம். பிறகு கேட்டால் ஸ்நானமாத்ரம்.

3. பக்ஷிணித்தீட்டை பக்ஷிணிக்குமேல் 10 நாள்களுக்குள் கேட்டால் ஒரு காலம். அதாவது:— பகலில் கேட்டால் பகல், ராத்ரியில் கேட்டால் ராத்ரி. பிறகு கேட்டால் ஸ்நானமாத்ரம்.

4. 25-வது மாதம் முதல் 6-வது வர்ஷம் முடிவு வரையில் ஜ்ஞாதியின் பிள்ளை இறந்தால் அவன் அநுபநீதனானால் 3-நாள் ஆசௌசமுண்டென்று சொன்னதற்கு அதிக்ராந்தாசௌசங் கிடையாது.

5. ஒருநாள் ஆசௌசத்திற்கு அதிக்ராந்தாசௌசங் கிடையாது.

6. மாதாபிதாக்களின் மரணத்தில் மூத்தபுத்ரனுக்கும், பர்த்தாவின் மரணத்தில் பத்னிக்கும், எப்போது கேட்டாலும் 10-நாள் ஆசௌசமுண்டு.

7. ஸபத்னீமாதாவின் மரணத்தை ஒரு வர்ஷம் சென்றபின் கேட்டால் 3-நாள் ஆசௌசம். ஸஹகளத்ரங்

களுக்கும் 3-நாள் ஆசௌசம். ஒரு வர்ஷத்திற்குள் கேட்டால் 10-நாள் ஆசௌசம்.

8. மாதாபிதாக்களுக்கு மூத்தபுத்ரனால் க்ருத்யங்கள் செய்யப்பட்டு பிறகு 2-வது முதலான பிள்ளைகள் ஒரு வர்ஷத்திற்குமேல் கேட்டால் 3-நாள் ஆசௌசம்.

9. க்ருத்யம் செய்யப்பட்டிருந்தாலும், செய்யப்படாமலிருந்தாலும், மாதாபிதாக்களின் மரணத்தை மூத்தகுமாரன் எப்போது கேட்டாலும் கேட்டதுமுதல் 10-நாள் தீட்டுக் காத்து ஸபிண்டீகரணம் முதலான யாவற்றையும் செய்ய வேண்டியது.

10. ஸஹோதரமரணவிஷயத்தில் க்ருத்யம் செய்யப்பட்டிருந்தால் 6-மாதத்திற்குள் கேட்டால் 3-நாள் ஆசௌசம். பிறகு கேட்டால் பக்ஷிண்யாசௌசம். க்ருத்யம் செய்யப்படாத விஷயத்தில் க்ருத்யம் செய்யும் ஸஹோதரனுக்கு எப்போதும் 10-நாள் ஆசௌசம். மற்றஸஹோதரர்களுக்கு 6-மாதத்திற்குள் 10-நாளும், ஒரு வர்ஷத்திற்குள் 3-நாளும் ஆசௌசம்.

11. 10-நாள் தீட்டை 10-வது நாள் ராத்ரியிலும், 3-நாள் தீட்டை 3-வது நாள் ராத்ரியிலும், கேட்டால் உதக தானத்திற்காக மருநாளும் ஆசௌசமுண்டு.

12. அதிக்ராந்தாசௌச முள்ளவனுடைய த்ரவ்யாதிகளுக்குத் தீட்டில்லை.

13. அதிக்ராந்தாசௌசத்திற்கு வாஸோதகமில்லை.

14. அதிக்ராந்தாசௌசமும் பிறப்பு இறப்புத்தீட்டுகளும் சேர்ந்தால், அதிக்ராந்தாசௌசத்தையும் தாத்காலிக

மான தீட்டாகபாவித்து தாத்காலிகதீட்டுச்சேர்க்கையில் என்னவிதியோ அதையே இதற்கும் அனுஷ்டிக்கவேண்டியது.

## 6. ஆசௌசமில்லாதவர்கள்.

அநுபநீதன், ப்ரம்ஹசாரீ இவர்களுக்கு ஸம்ஸ்காராதிகளால் தத்தத் காலத்தில் வரும் ஆசௌசத்தைத் தவிர, மற்ற காலங்களில் ஆசௌசங் கிடையாது.

## 7. மற்றவைகள்.

1. தீட்டுத்தெரிந்தபின் தீட்டில்சாப்பிட்டால் அன்று முழுவதும் தீட்டைக்கார்க்கவேண்டும். மருநாளில்தான் தீட்டுப்போகும்.

2. தீட்டுப்போகுந் தினத்தில் ஸங்கவகாலம் வந்த பிறகு (6-நாழிகைக்கு மேல்) தான் ஸ்நானஞ் செய்யவேண்டியது.

3. ❋ ஜனனம், மரணம், ரஜஸ் இவைகள் ஸூர்யோதயத்திற்கு 11¼-நாழிகைக்கு முன் ஏற்பட்டால் முதல் நாள் முதல் கணக்கு. பிறகு ஆனால் மருநாள் முதல் கணக்கு. அருணோதயம் முதல் கணக்கிடுபவர்களும் சிலர் உளர்.

4. ப்ரேதத்தின் பின்சென்றாலும், க்ஷௌரஞ்செய்துகொண்டாலும், புனஸ்நானஞ் செய்யவேண்டியது.

5. ஸன்யாஸிகள், தங்கள் பிள்ளை பெண்கள் இறந்ததற்கு ஸ்நானஞ்செய்யக்கூடாது. மாதாபிதாக்கள் இறந்ததாகக் கேழ்விப்பட்டால் உடனே ஸசேல ஸ்நானஞ் செய்யவேண்டியது.

---

❋ குறிப்பு:— ராத்ரியின் வ்ருத்தி க்ஷயங்களை அனுஸரித்த யாமத்தின் நாழிகையைக்கொண்டு கணக்கிடவேண்டும்.

6. க்ராமத்திற்குள் சவம் இருந்தால் ஹோமஞ்செய்தலும், சமையல்செய்தலும், சாப்பிடுதலுங்கூடாது. ஆனால் 11-விற்கடை அளவுக்கு ஒதுங்கின வேறு வீதியில் முன் சொல்லியவைகளைச் செய்யலாம். (1-விற்கடை 8-அடி.)

7. ஸன்யாஸியின் சவம் க்ராமத்திற்குள் இருந்தால் யாதொரு தோஷமுங் கிடையாது. ஹோமம் முதலியவைகளைச்செய்யலாம்.

8. சூத்ரசவம் க்ராமத்திற்குள்ளிருந்தால் அது இருக்கும் வீட்டிற்குமாத்ரம் தோஷமுண்டு.

9. நானூறு (400) ப்ராம்ஹணர்கள் உள்ள ஊரில் 11-விற்கடை தூரம் இல்லாவிட்டாலும், "நாராசத்தால்" பிரிக்கப்பட்ட வேறு வீதியில் தோஷமில்லை.

10. ஆயிரம் (1000) ப்ராம்ஹணர்கள் உள்ள ஊரில் ஒரே கூரையாயிருக்கும் பக்ஷத்தில் 30-விற்கடைக்கு மேற்பட்டால் தோஷமே இல்லை.

11. பட்டணங்களுக்கு சவதோஷமே இல்லை.

12. ஆசௌசமுள்ள ஒருவன் பலத்த வ்யாதியினால் ஆசௌசம்போகும் தினத்தில் ஸ்நானம் செய்யமுடியாவிட்டால், அவனுக்காக வேறொருவன் 10-தடவை ஸ்நானமும் ஆசமனமும் செய்யவேண்டியது. ஒவ்வொருதடவையிலும் ஆசௌசியைத்தொட்டுவிட்டு ஸ்நானம் செய்யவேண்டியது. ஒவ்வொரு தடவையிலும் ஆசௌசியானவன் வெவ்வேறு சுத்தவஸ்த்ரம் தரிக்கவேண்டியது. இப்படிச்செய்த பிறகு புண்யாஹவாசனத்தால் சுத்தனாகிறான். அவன் வபனம் செய்துகொள்ளவேண்டியவனாக இருந்தாலும் அது ஆவச்யகமில்லை.

13. ரஜஸ்வலையான ஸ்த்ரீயானவள் நாலாவது தினத்தில் ரோகத்தினுல் ஸ்நானஞ்செய்ய முடியாவிட்டால் முன் பாராவில் சொல்லியபடி வேறொரு ஸ்த்ரீயைக்கொண்டு 12 தடவை ஸ்நானஞ் செய்விக்கவேண்டியது. ஒவ்வொரு தடவையிலும் ரஜஸ்வலை வேறு சுத்தவஸ்த்ரம் தரிக்கவேண்டியது. பிறகு யதாசக்தி தானத்தினுலும், புண்யாஹவாசனத்தினுலும், சுத்தையாகிவிடுகிருள்.

## 8. ச்ராத்தமத்யத்தில் ஆசௌசம் நேரிட்டால், கர்த்தாவுக்கும். போக்தாவுக்கும் தீட்டில்லாத காலங்கள்

ச்ராத்தம்:— ஶ்ராஜ்ஞ ( ஸஂகூஓ ) வாவ-ிணவியா ெநந கூஷுகுஷிஷெ ‖ என்று ஸங்கல்பஞ்செய்த பிறகு ச்ராத்தகர்த்தாவுக்கு ஆசௌசம் நேர்ந்தால் ச்ராத்தம் முடியும் வறையில் தீட்டில்லை. ஸவதா க்ஷணஃக்ஷதஷ்வ்யஃ என்ற பிறகு போக்தாவுக்கு ஆசௌசம் நேர்ந்தால் விஸர்ஜனமாகும் வறையில் திட்டில்லை.

## 9. விவாஹமத்யத்தில் ஆசௌசமும், மாதாபிதாக்களின் மரணமும் நேரிட்டால்.

விவாஹத்தில் சேஷஹோமம் முடிவுவறையில் தீட்டில்லை. அதற்குள் மாதா பிதாக்களின் மரணம் நேர்ந்தால் அந்தக்கர்மாவைச் செய்துவிட்டு சேஷஹோமம் செய்யவேண்டியது. தம்பதிகளுக்குள் மரணம் ஏற்பட்டால் சேஷஹோமம் வறையில் கர்மசேஷத்தைச் செய்துவிட்டுப் பிறகு தஹனம் செய்யவேண்டியது.

## 10. யாகதீக்ஷாமத்யத்தில் ஆசௌசம் நேர்ந்தால்.

1. யாகதீக்ஷையின் மத்யத்தில் மாதாபிதாக்களின் மரணம் நேர்ந்தால்,பல பிள்ளைகளிருந்தால் மற்ற பிள்ளைகளைக்

கொண்டு கர்மம் செய்யவேண்டியது. ஒரே பிள்ளையானால் தீக்ஷாரூபத்தை வைத்துவிட்டு ஸம்ஸ்காரஞ் செய்யவேண்டியது. ஸ்நானஞ் செய்யக்கூடாது. பிறகு யாகசாலைக்குவந்து தீக்ஷாரூபத்தை மந்த்ரபூர்வகமாய் சுத்தி செய்யவேண்டியது.

## 11. இதர விஷயங்கள்.

1. ச்ராத்தம் முதலியவற்றிற்கு தீட்டுக்கு முன் சேகரித்த பதார்த்தத்திற்கு தோஷமில்லை.

2. ஸன்யாஸியின் மரணத்தில் ஜ்ஞாதிகளுக்குத் தீட்டில்லை. ஸ்நான மாத்ரம்.

3. மாப்பிள்ளை இறந்தால் மாமனார், மாமியார், மச்சின்ன் இவர்களுக்குத் தீட்டில்லை. ஸ்நானமாத்ரம்.

4. ராஜாங்கத்தாரால் கொலை தண்டனை அடைந்தவனுக்கு உடனே கர்மஞ்செய்யலாம்.

5. தைவாதீனமாய் துர்மரணம் அடைகிறவன் விஷயத்தில் தீட்டு, உதகதானம் முதலிய எல்லாமுண்டு. வேணுமென்று சாகிறவன் விஷயத்தில் தீட்டில்லை. தகனம் முதலானது ஒன்றுமில்லை.

6. ஜாதிப்ரஷ்டர்கள், வ்யபிசாரிகள் இவர்கள் விஷயத்தில் அவர்களை அமந்த்ரகமாக தஹனஞ் செய்து ஒருவருஷம், அல்லது 6_மாஸம் சென்ற பிறகு நாராயணபலி செய்துவிட்டு 3_நாள் தீட்டுக்கார்த்து கர்மங்கள் செய்யவேண்டியது. துர்மரணம் செய்துகொண்டவனுக்கும் இப்படியே செய்யவேண்டியது. ஜ்ஞாதிகளுக்குத் தீட்டில்லை.

7. துர்மரணமடைந்தவன்விஷயத்தில் ஜ்ஞாதிகளுக்கு ஸ்நானத்தால் சுத்தி. ஒரு வருஷம், 6_மாதம், 3_மாதமா

வது கழித்து "நாராயணபலி" செய்து 3-நாள் தீட்டைக் கார்த்து 2-வது நாள் ஸஞ்சயனம், 3-வது நாள் உதகதானம், 4-வது நாள் ச்ராத்தம் செய்யவேண்டியது.

8. தேஹம் அனித்யமானதால் துர்ம்ருதனுக்கு 24 நாள் சென்ற பிறகாவது கர்மம் செய்யவேண்டியது. இந்த 24-நாளுக்குள் தாய், தகப்பன் ச்ராத்தம் வந்தால் ச்ராத்தம் செய்துவிட்டுப்பிறகு கர்மம் செய்யவேண்டியது.

மற்ற ச்ராத்தமானால் பிந்தியே செய்யவேண்டியது.

9. க்ருத்யம் செய்பவனுக்கு ஏகோத்திஷ்டத்தின் முடிவில் தான் தீண்டல் போகும்.

10. ஸமானோதகர்களுக்கு உபநயனத்திற்கு முன் மரணத்திற்குத் தீட்டில்லை. ஸ்நானமாத்ரம்.

11. விவாஹமான பெண்கள் மரணவிஷயத்தில் ஜ்ஞாதிகளுக்கு தீட்டில்லை.

12. ஜனனத்தீட்டுள்ளவனைத்தொடலாம். அதனால் தோஷமில்லை. ஆனால் தகப்பனை மட்டில் ஜனனநிமித்தம் ஸ்நானம் செய்வதற்கு முன் தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டியது. ஜனனசௌசமுள்ளவன் கர்மாக்களுக்கு அர்ஹமில்லையே தவிர, தொட்டால் குற்றமில்லை.

13. இரட்டையாகப் பிறந்தால் தகப்பனை 10-நாள் வரையில் தொடக்கூடாது. மரணசௌசமுள்ளவனைத் தொடக்கூடாது. அஜ்ஞானத்தால் தொட்டால் ஸ்நானஞ்செய்யவேண்டியது. வேணுமென்று தொட்டால் ப்ராயச்சித்தமுண்டு.

14. ஆசௌசமுள்ள ஒருவன் வேறு ஆசௌசமுள்ளவனைத் தொடக்கூடாது.

15. ஆசௌசமுள்ளவன் வீட்டிற்கும், அவன் சாமான்களுக்கும் தீட்டுண்டு.

தீட்டில்லாத ஒருவன் வீட்டில் ப்ரஸவம், அல்லது மரணம் ஏற்பட்டால் அவ்வீட்டிற்குத்தீட்டில்லை. ஆனால், அந்த வீட்டில் ப்ரேதக்ருத்யம் நடந்தால் தீட்டுண்டு.

16 ப்ரம்ஹசாரிகள் க்ருத்யம் செய்தாலொழிய உதக தானம் செய்யக்கூடாது.

17. விவாஹதீக்ஷை, யாகதீக்ஷை இவைகளின் மத்யத்தில் மரணாசௌசங் கேட்கப்பட்டால் தீக்ஷைமுடிந்தபின் பாக்கிநாள் தீட்டுண்டு. தீக்ஷையின் முடிவிற்குள் ஆசௌச காலம் நீங்கிவிட்டால் பிறகு அதிக்ராந்தாசௌசமுண்டு.

18. உபநயனமாகாதவன் மரணத்தில் தாய், தகப்பன், ஸஹோதரர்கள் தவிர, மற்ற ஜ்ஞாதிகளுக்கு அதிக்ராந்தாசௌசங் கிடையாது.

19. கர்ப்பதீக்ஷையுள்ளவன் தானம் வாங்கக்கூடாது. தூரயாத்ரையும் செய்யக்கூடாது.

20. சவத்திற்கு முன்னடியாவது, பக்கத்திலாவது போகக்கூடாது.

21. சவத்திற்குப் பின் ஜ்ஞாதியல்லாதவன் சென்றால் ஸ்நானஞ்செய்து ஈர வஸ்த்ரத்தை அவிழ்த்துவிட்டு உலர்ந்த வஸ்த்ரம் தரித்துக்கொண்டு அக்னியைத்தொட்டு நெய்யைக் கொஞ்சம் சாப்பிட்டு 3-ப்ராணாயாமங்களைச் செய்து மறுபடி ஸ்நானஞ் செய்யவேண்டியது

22. ருத்ரபூமிக்குப்போய்விட்டு ஸ்நானஞ் செய்யாமல் ஊருக்குள் போகக்கூடாது.

23. தாயாதியல்லாத மற்றவர்கள், க்ரியை ஆரம்பத்திற்கு முன் ஸ்நானஞ்செய்தால் சுத்தர்களே. க்ரியை ஆரம்பித்துவிட்டால் தஹனமான பிறகே ஸ்நானஞ் செய்யவேண்டியது.

24. துக்கப்ரச்னதினத்தில் ஸஞ்சயனத்திற்கு முன்னுல் ஸ்நானமும், பின்னுல் ஆசமனமும் செய்யவேண்டியது: ஆசமனம் செய்வதே போதும். ஸ்நானம் செய்ய வேண்டியதில்லை. துக்கப்ரச்னதினத்தில் தானம், ச்ராத்தம் முதலானதுகள் செய்யக்கூடாது. அதனுல்தான் ச்ராத்த தினத்தன்று துக்கங் கேழ்க்கக்கூடாது.

25. ப்ராம்ஹணன் அல்லாத மற்ற ஜாதியாரை துக்கங்கேட்டால் ஸஞ்சயனத்திற்கு முன்னுல் 3-நாளும், பின்னுல் 1-நாளும் ஆசௌசமுண்டு.

26. ஜ்ஞாதியல்லாத ஒரு சவத்தை பகலில் சுமந்தால் பகல் முழுவதும், ராத்ரியில் சுமந்தால் ராத்ரி முழுவதும், ஊருக்கு வெளியில் உபவாஸமிருந்து பிறகு ஸ்நானம்செய்து பஞ்சகவ்யம் சாப்பிடவேண்டியது. ப்ராம்ஹணர்களால் புண்யாஹவாசனஞ் செய்துகொள்ளவேண்டும்.

27. பழய சவத்தையும், தூரஸ்த்ரீசவத்தையும், ப்ரஸவித்தவள் சவத்தையும், கர்ப்பிணீசவத்தையும் ஜ்ஞாதியல்லாத ஒருவன் சுமந்தால் பஞ்சகவ்ய ப்ராசனஞ்செய்து, பசுமாட்டுக்குப் புல் வாங்கிப்போட்டு, தனக்கு சக்தியுள்ள மட்டும் காயத்ரீஜபம்செய்து, நெருப்பைத்தொட்டு, நெய்யைக் கொஞ்சம் ப்ராசனம் செய்யவேண்டியது. பூநூலும் வேறு தரிக்கவேண்டும். பிறகு ப்ராம்ஹணர்களால் புண்யாஹவாசனம் செய்துகொள்ளவேண்டியது.

28. பார்யை கர்பிணியாகவிருக்கும்போதும், தன்னுடைய தகப்பன், பிள்ளையில்லாத தமயன், பிள்ளையில்லாத மாமன், இவர்கள் சவத்தைச் சுமக்கலாம்.

ப்ரம்ஹசாரியானவன் தாய், தகப்பன் சவத்தைச் சுமக்கலாம். மற்ற சவங்களைச் சுமக்கக்கூடாது.

29. அனுதமான ப்ராம்ஹணசவத்தைச் சுமந்தால் ஸ்நானஞ்செய்து அக்னியைத்தொட்டு ப்ராணயாமஞ்செய்து வேப்பிலையைத்தின்று உமிழ்ந்தால் சுத்தனாகிவிடுகிறான்.

30. தெரியாத்தனமாய் மநுஷ்யனுடைய நைப்பில்லாத இலும்பைத் தொட்டுவிட்டால் ஆசமனம்செய்து பசுமாட்டைத் தொடவேண்டியது. அல்லது, ஸூர்யனையாவது பார்க்கவேண்டியது. மன:பூர்வமாய்த்தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும்.

31. எண்ணைதேய்த்து ஸ்நானஞ்செய்த பிறகும், வாந்தி செய்தபிறகும், க்ஷௌரஞ் செய்துகொண்டபிறகும், ஸ்த்ரீ ஸம்போகஞ்செய்தபிறகும், ஜலமலவிஸர்ஜனஞ்செய்தபிறகும் ஆசமனம் செய்யவேண்டியது. அக்காலங்களில் ஆசமனம் செய்யாவிடில் அவன் 3-நாள் அசுசியாவான்.

தீட்டுக்காரர்கள் கோவிலுக்குள் போகக்கூடாது.

32. தீட்டுக்காரன் தீட்டில்லாதவனையும், தீட்டில்லாதவன் தீட்டுக்காரனையும், நமஸ்காரம் செய்யவே கூடாது.

33. ஜனனாசௌசம் மரணாசௌசம் இரண்டிலும், ஏகாதசீ, த்வாதசீ வ்ரதத்தை விடக்கூடாது.

34. சாவுதீட்டுக்காரர்கள் ப்ரதிதினம் ஸ்நானஞ்செய்ய வேண்டும். பூமியிலேயே படுக்கவேண்டும்.

35. ப்ராம்ஹணர்கள் தீட்டுப்போன பிறகு ஜலத்தைத் தொடவேண்டியது.

36. ரஜஸ்வலை ஸங்கவகாலத்திற்குப் பிறகுதான் ஸ்நானஞ் செய்யவேண்டியது.

37. சிசுக்கள் இறந்து வநநம (அதாவது புதைத்தல்) செய்வதாக இருந்தால் கனனஞ்செய்த தினம்முதல் தீட்டைக்கணக்கிடவேண்டியது. இறந்தது முதலல்ல.

## 38. இறந்த வீடுகளில் ஸந்யாஸிகள் பிக்ஷை செய்யவேண்டியதைப்பற்றி.

விப்ராகாரேஷு த்ருஜேத்பிக்ஷாம் ஶாதஷ்ணாவஸைவவா ।
ஶாவஸூதகயோர்ஹாயத்யாஸ்ஞஜம் ஹூதகவர்த்யோ: ।
க்ஷேத்ரஷாம்வந்யவதர்ணாம் ஶாவெஸெநெகெநஸூஷ்யதி ॥

## 39. அங்குலம், விதஸ்தி முதலியவைகள்.

3-நெல் நீளம் = 1-அங்குலம்.
12-அங்குலம் = 1-விதஸ்தி.
2-விதஸ்தி = 1-அரத்னி.
2-அரத்னி = 1-கிஷ்கு.
2-கிஷ்கு = 1-தநுஸ்.
2000-தநுஸ் = 1-குரோசம்.
4-குரோசம் = 1-யோஜனை.

அதாவது 12-மயில், 213-கஜம், 1-அடி.

இதி ஸ்ம்ருதி ஸங்க்ரஹே ஆஶௌசகாண்ட: ஸமாப்த: ॥

---

தர்மசாஸ்த்ரச்சுருக்கத்தில் ஆசௌசகாண்டம் முற்றுப்பெற்றது.

௨

# தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.

(நான்காவது)

## ச்ராத்த காண்டம்.

### 1. ப்ராயஶ்சித்தாதிகள்.

1. க்ருச்ச்ராதிகளின் ஸ்வரூபம்:— த்வாதஶாப்தக்ருச்ச்ரம், ஷடப்தக்ருச்ச்ரம், த்ர்யப்தக்ருச்ச்ரம், அப்தக்ருச்ச்ரம், என்று க்ருச்ரங்கள் ப்ராயச்சித்தங்களில் ஏற்பட்டிருக்கின்றன.

2. அப்தக்ருச்ச்ரம் என்பது 30-ப்ராஜாபத்யக்ருச்ச்ரம்.

க்ருச்ச்ரப்ரத்யாம்நாயங்கள்-

3. ஒரு ப்ராஜாபத்யக்ருச்ச்ரத்திற்கு 10000-காயத்ரீ,

10000 காயத்ரீ = 200-ப்ராணாயாமங்கள்,

200-ப்ராணாயாமங்களுக்கு = 1000-திலஹோமம்,

1000-திலஹோமங்களுக்கு = 30-வேதபாராயணங்கள்.

30-வேதபாராயணஸ்தானத்தில் 60, அல்லது 24,

{ 12-ப்ராம்ஹணபோஜனம், அல்லது கன்றுடன் கூடிய ஒரு பசுவின் தானம், அல்லது ஒரு விராகன் பொன்தானம்.

இவைகள் சக்திக்குத்தக்கவாறு விதிக்கப்படுகின்றன.

4. பூரட்டாதி, உத்திரட்டாதி, இந்த நக்ஷத்ரங்களில் இறந்தால் பூமிதானம் செய்யவேண்டும்.

5. புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, இந்த நக்ஷத்ரங்களில் இறந்தால் ஹிரண்யதானம் செய்யவேண்டும்.

6. செவ்வாய், வியாழன், வெள்ளி இவ்வாரங்களில் இறந்தால் அந்தந்த க்ரஹத்திற்கு ப்ரீதிகரமானதை தானம் செய்யவேண்டும்.

7. கர்மஞ்செய்ய அதிகாரம் வேண்டி 7, 5, அல்லது 3-க்ருச்ரமூல்யமாவது தானஞ்செய்யவேண்டும்.

8. இறந்து 25-நாழிகைக்குள் தஹனஞ் செய்யவேண்டியது. இல்லாவிட்டால் பர்யுஷித தோஷமுண்டாகும்.

பகலிலிறந்தால் பகலிலும், ராத்ரி 9-நாழிகைக்குள்ளிறந்தால் ராத்ரியிலும், தகனம் செய்யவேண்டியது.

பர்யுஷித சவத்திற்கு, 3-க்ருச்ரம் தத்தம் செய்துவிட்டு, பஞ்சகவ்யத்தால் ஸ்நானம் செய்வித்து, பாவனங்களான மந்த்ரங்களால் அபிமந்த்ரித்துப்பிறகு சுத்த ஜலத்தால் ஸ்நானம் செய்துவைக்கவேண்டியது.

9. தக்ஷிணாயனம், க்ருஷ்ணபக்ஷம், ராத்ரி, ஊர்த்வோச்சிஷ்டம், அதோச்சிஷ்டம், கட்வாதிகளில் மரணம், இவைகளில் ஒவ்வொன்றிற்கும் 3-அல்லது ஒரு க்ருச்ரமாவது தத்தம் செய்து மந்த்ரவத்தாய் ஹோமம் செய்யவேண்டும்.

## 2. ஸம்ஸ்காரம்.

1. உபநயனமாகாதவன் வேதமந்த்ரத்தை உச்சரிக்கக்கூடாது. ஆனால் மந்த்ரஞ் சொல்லக்கூடியவனாயிருந்தால் தாய், தகப்பன் க்ருத்யத்தைச் செய்யலாம்.

சௌளமாகாதவனுக்கு தாய், தகப்பன் க்ருத்யத்திலும் வபனம் கூடாது.

2. புத்ரன் முதலியவர்கள் ஸன்னிதியில், அதாவது ஸமீபத்தில் இல்லாவிட்டால், பத்னீ பர்த்தாவின் ப்ரத்யாப்திக ச்ராத்தத்தைச் செய்யவேண்டியது.

3. பர்த்தாவுக்கு பத்னீ க்ருத்யஞ்செய்யும் விஷயத்தில் அவள் பஹிஷ்டையாகிவிட்டால் ப்ரேதத்தை மந்த்ரமில்லாமல் தஹனஞ்செய்து ஐந்தாவது நாளில் ப்ராஜாபத்ய க்ருச்ரஞ்செய்து மந்த்ரபூர்வகமாய் தஹனம் முதலானதைச்செய்ய வேண்டியது.

4. பர்த்தாவுக்கு பத்னீ க்ருத்யம் செய்யும் விஷயத்தில் அவள் ப்ரஸவித்துவிட்டால் ப்ரேதத்தை மந்த்ரமில்லாமல் தஹனம்செய்து தீட்டுப்போனபின் ப்ராஜாபத்ய க்ருச்ரம்செய்து மந்த்ரபூர்வமாக மூன்று நாளில் தஹனம் முதலான யாவற்றையும் செய்யவேண்டியது.

## 3. ஸம்ஸ்காராக்னிகளின் பெயர்கள்.

1. 1-நிர்மதனுக்னி. 2-ஔபாஸனுக்னி. 3-உத்தபனுக்னி. 4-கபாலாக்னி. 5-துஷாக்னி.

நிர்மதனுக்னி என்பது = அரணி கடைந்து எடுக்கப்பட்ட அக்னிக்குப்பெயர். அது ஆஹிதாக்னிகளின் விஷயம்.

ஔபாஸனுக்னி என்பது = தம்பதிகளாயிருந்து ஔபாஸனுதிகள் செய்துவரும் அக்னிக்குப்பெயர்.

உத்தபனுக்னி என்பது = தர்ப்பங்களில் முதலில் நெருப்பைக்கொளுத்தி, அதிலிருந்து மறுபடியும் வேறு தர்ப்பங்களில் கொளுத்தி, அதிலிருந்து 3-வது தடவை வேறு தர்ப்பங்களில் கொளுத்தி எடுக்கப்பட்ட அக்னிக்குப்பெயர்.

கபாலாக்னி என்பது = ஒரு வாணலியை அடுப்பில் வைத்து எரியவிட்டு அதில் வரளித்தூள், அல்லது கரியைப் போட்டு நெருப்பு உண்டாக்கியெடுக்கும் அக்னிக்குப்பெயர்.

துஷாக்னி என்பது = ஒரு வாணலியை அடுப்பில் வைத்து எரியவிட்டு உமியைப்போட்டு உண்டாக்கி யெடுக்கும் அக்னிக்குப்பெயர்.

## 4. ஸம்ஸ்காரஞ்செய்வதற்கு அக்னி நிர்ணயமும், ப்ரேத க்ரியைகளும்.

1. தம்பதிகளை தஹனம் செய்ய ஔபாஸநாக்னி.

2. விதுரனையும், விதவையையும், ஸமாவர்த்தனமாகியும் விவாஹஞ்செய்துகொள்ளாதவன், கதளீ விவாஹஞ்செய்தவன் இவர்களையும் தஹனம்செய்ய உத்தபநாக்னி.

3. ப்ரம்ஹசாரியை தஹனம்செய்ய கபாலாக்னி.

அனுபநீதர்களையும், விவாஹமாகாத பெண்களையும் தஹனம் செய்ய துஷாக்னி.

4. புருஷன ஸன்யாஸம் வாங்கிக்கொண்ட பிறகு பத்னீ இறந்தால் ஔபாஸநாக்னியினாலேயே தஹனம் செய்ய வேண்டியது.

5. எந்த கர்மாவிலும் ஸ்நானம், ஆசமனம், ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், ப்ராணாயாமம் இவைகளை வலம்போட்டுக் கொண்டே செய்யவேண்டியது.

6. ப்ரேதத்தை சுமந்துகொண்டு போகிறவர்களும், ஜ்ஞாதிகளும் பூநூலை மாலையாகப் போட்டுக்கொண்டு போக வேண்டியது.

7. ஆவாஹனம், அர்க்யம், ஸங்கல்பம், பிண்டப்ரதானம், திலோதகம், ஆஸனம், பாத்யம் இவைகளில் கோத்ரம் பெயர் இவைகளைச்சொல்லியே செய்யவேண்டியது.

8. ஸ்த்ரீஸம்போகம் ஸ்த்ரீப்ரஜைகளின் ஜாதகர்ம முதலான ஸம்ஸ்காரங்கள், ப்ரேதத்தை வஹித்தல், மனுஷ்ய கர்ம, இவைகளில் பூநூலை நிவீதம் செய்துகொண்டு செய்ய வேண்டியது.

9. ச்மசானத்தில் வன்னிமரத்தின் கிளையால் ஸ்தலத்தை சுத்தி செய்யவேண்டியது. அதாவது:— „அபேத

வித" என்ற மந்த்ரத்தினல் மூன்று தடவை துடைக்கவேண்டியது

10. ஆஸந்தி அத்திமரத்தினலிருக்கவேண்டியது.

11. ப்ரேதத்தின் முகத்தை மூடவேண்டியது. கால் பக்கத்தில் நுணியுள்ளதாக மூடவேண்டியது.

12. எவ்விதத்திலும், க்ராமத்திலிருந்து ப்ரேதத்தை எதிர்முகமாய் கொண்டுபோகக்கூடாது. அப்படிக்கொண்டு போனல் க்ராமம் நசித்துவிடும்.

13. ச்மசானத்திற்குக் கொண்டுபோகும் வழியில் 3-இடத்தில் சவத்தை கீழே வைத்து பலி போடவேண்டும்.

14 அக்னி கீழே விழுந்துவிட்டால் ப்ராயச்சித்தம் செய்து, ப்ரேதாஹுதிமுதல் எல்லா கர்மங்களும் செய்ய வேண்டியது

15. துளஸீகாஷ்டத்தை சிதையில் போடக்கூடாதென்றும், போடவேண்டுமென்றுமிருப்பதால் ஸமவிகல்பம்.

16. ப்ரேதத்தின்மேல் வஸ்த்ரமில்லாமல் தஹனம் செய்யக்கூடாது. மேலேபோட்டிருக்கும் வஸ்த்ரத்தில் பாதியைக்கிழித்து எடுத்து எறிந்துவிடவேண்டியது.

17. எப்போதும் ஆதித்யாபிமுகமாய் தஹனத்தைச் செய்யவேண்டியது. ஆனல், மேற்கு முகமாயிருந்தே அக்னி ப்ரதானம் செய்வதும் சிலரின் ஆசரணையிலிருக்கிறது.

* விஷ்ணுவாஹாவகெ நஜஹ ஸாயம்ஶாயத்ரு வெவவ। வெெ
தரகூம் ஓஹநம் வெவவ கூயபூாக ஷூதர்ஜீ வொஷிஜ: ॥

வெஷ்ணாயதீக்ஷிதீயத்தில், ஶாயத்ரீமுதலான உஹாஉநங்களை ஸமயபூாஹிஉவமாக ஜபிக்கவேண்டுமென்றிருப்

---

* இந்த ச்லோகம் தீக்ஷிதீயக்ரந்தத்திலில்லை.

பதோடு ஊஹநமும் ஸாபிண்ட்யாஹிஷேவமாகவே செய்யவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

18. உதகதானம், ஸ்நானம் முதலியவைகளை கனிஷ்ட க்ரம்மாய் செய்யவேண்டியது.

ச்மசானத்திற்குப் போகும்போது கனிஷ்டன் முன்னாலும், வீட்டிற்குப் திரும்பும்போது மூத்தவன் முன்னாலும் போகவேண்டியது. ஜ்ஞாதிகளுக்கும் இதே விதிதான்.

19. சவானுகமனம், க்ஷௌரம் இவைகளுக்கு புனஸ்நானம் செய்வதில் முதல் ஸ்நானத்திற்கும், நைமித்திகஸ்நானங்களுக்கும் ஸ்நாநாங்க தர்ப்பணங் கிடையாது.

புனஸ்நானத்தில் உலர்ந்த வஸ்த்ரந் தரித்துக்கொள்ளவேண்டியது. அல்லது எழுதடவை வீசியாவது ஈரவஸ்த்ரத்தை கட்டிக்கொள்ளவேண்டியது.

20. எல்லா புத்ரர்களும், தாய் தகப்பன் விஷயத்திலும் ராத்ரி தஹனமானல் இரண்டு யாமத்திற்குமேல் வபனம் செய்துகொள்ளக்கூடாது.

21. மாத்ரு பித்ரு தீக்ஷாங்கியமம் மூத்தபிள்ளையைத்தவிர, மற்ற பிள்ளைகளுக்குக் கிடையாது என்பது சிலர் மதம். எல்லோருக்குமுண்டென்பது சிலர்மதம்.

22. ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி இந்த மாஸங்களிலும், க்ருஷ்ணபக்ஷத்திலும், ப்ரதமை, ஷஷ்டி, அஷ்டமீ இந்த திதிகளிலும், * ரிக்ததிதிகளிலும், ஞாயர், செவ்வாய், சனி இவ்வாரங்களிலும், விஷுபுண்யகாலத்திலும், குரு, சுக்ரன் இவர்களின் மௌட்யகாலங்களிலும், காலையில் மூன்றேமுக்கால் ($3\frac{3}{4}$-) (2) நாழிகைக்குள்ளாகவும், அசுபநக்ஷத்ரங்

* ரிக்ததிதி என்பது = சதுர்த்தீ, நவமீ, சதுர்தசீ.

களிலும், மாத்ரு பித்ரு ச்ராத்தத்திற்கு ஒரு மாஸம், அல்லது ஒரு பக்ஷத்திற்குள்ளும் க்ஷௌரம் செய்துகொள்ளவே கூடாது. ஆனால்;

* தநு:கும்பயோராத்யம் க்ருத்வா பூர்வார்த்தம் வர்ஜயேத்ஸ:।
கடகஸ்யோத்தரார்த்தம் ஸகலாம் கந்யாம் வர்ஜயேத் ॥

என்கிற வசனப்படி ஸங்கடவிஷயத்தில் மார்கழி, மாசி இந்த இரண்டு மாஸங்களின் முன்பாதியையும், ஆடி மாஸத்தின் பின்பாதியையும், புரட்டாசிமாஸம் பூராவையும் விலக்கவேண்டியது.

23. க்ஷௌரம் செய்துகொண்டு ஸ்நானம்செய்தபிறகு வீட்டுவாசலிலிருந்து நக்னப்ரச்சாதனச்ராத்தம் செய்யவேண்டியது.

அதன் பிறகு நதீதீரம் போய் பாஷாணஸ்தாபனஞ் செய்து வாஸோதகம் மூன்று, திலோதகம் மூன்று செய்து, வீட்டில் பாஷாணஸ்தாபனம் செய்து, வாஸோதகம் மூன்று செய்து, பிறகு பிண்டம், பலி இவைகளை கொடுக்கவேண்டியது. வீட்டில் திலோதகதானங் கிடையாது.

திலோதகம் முதலாவது நாளில் மூன்று இரண்டாவது நாளில் நான்கு. இவ்விதம் தினம் ஒவ்வொன்று கூடச் சேர்த்து வந்தால் 10 நாள்களில் 75-திலோதகஞ்செய்யவேண்டும். 11-வது நாளில் திலோதகம் கிடையாது. பிண்டம் கோழிமுட்டையளவு இருக்கவேண்டும். பித்தளைப் பாத்ரத்திலாவது, மண் பாத்ரத்திலாவது பிண்டத்திற்குப் பாகம் செய்யவேண்டியது.

---

* இந்தச்லோகம் தீக்ஷிதீயக்ரந்தத்தில் காணப்படவில்லை.

ப்ரதிதினமும் பலிக்காக ஒரு பிண்டத்தையும் கொடுக்கவேண்டியது.

24. உபநயன மாகாதவர்களுக்கு பிண்டத்தை பூமியில் வைக்கவேண்டியது.

உபநயனமானவர்களுக்கு பிண்டத்தை தர்ப்பையில் வைக்கவேண்டியது.

ஓரே பிண்டம் வைக்கும்போது குதிரைக்குளம்பு பரிமாணம் இருக்கவேண்டியது.

வர்ஷாப்திகச்ராத்தத்தில் விளாம்பழம், அல்லது வில்வப்பழம் அளவு இருக்கவேண்டியது.

மஹாளயத்தில் இலந்தைப்பழ ப்ரமாணமிருக்கவேண்டும்.

ஏகோத்திஷ்டத்திலும், ஸபிண்டீகரணத்திலும் தேங்காய் ப்ரமாணம் இருக்கவேண்டியது.

கர்த்தாவைத் தவிர, வேறு ஒருவரும் பிண்டங்கொடுக்கக்கூடாது.

பிண்டத்தை முதல் நாள் வைத்த இடத்திலேயே 10-நாளும் வைக்கவேண்டியது. ஸ்தலபேதங் கூடாது.

பாஷாணஸ்தாபனத்தை வீட்டிற்கு வெளியில் செய்யவேண்டியதே தவிர, வீட்டிற்குள் செய்யவேகூடாது.

25. இறந்துபோனவனுக்காக ஒருவன் கண்ணீர் ஜலத்தைவிட்டால் அந்த ஜலத்தை ப்ரேதம் சாப்பிடும். ஆதலால் அது கூடாது.

26. நவச்ராத்தம் 5, அல்லது 6, என்பது ஸூத்ரத்திற்குத் தகுந்தபடி ஏற்பட்டிருக்கிறது. ஆபஸ்தம்பீயர்களுக்கு

ஆறு. ஒத்தப்படை நாளில் செய்யவேண்டியது நின்று போனால் பிந்தியாவது 11-வது நாளிலாவது சேர்த்துச்செய்ய வேண்டியது

27. கர்த்தாவுக்கும், ஜ்ஞாதிகளுக்கும், தஹனதினத்தில் சாப்பாடு கூடாது. 10-நாள்வரையிலும் ஏகவாரபோஜனம் செய்யவேண்டியது.

28. தஹனம் செய்ததினத்தில் வீட்டில் சமையல் செய்யக் கூடாது. தீட்டுக்காரர்கள் சமையல் செய்து சாப் பிடவும் கூடாது.

29. ஒரு ஸூத்ரக்காரனுக்குக் கர்த்தா, வேறு ஸூத்ரக் காரனாகயிருந்து ஸம்ஸ்காராதிகளைச் செய்கிற விஷயத்தில், இறந்தவனுடைய ஸூத்ரத்தினால் ப்ரதமாப்திகம் வரையில் செய்து, ஆப்திகம் முதல் கர்த்தா தன் ஸூத்ரத்தினால் செய்ய வேண்டியது.

30. இறந்தவனுக்கு அவனுடைய ஸூத்ரத்தினாலேயே தஹனம் முதலான ஸம்ஸ்காரங்களுஞ் செய்யப்படவேண் டியது. தஹனகாலத்தில் அவனுடைய ஸூத்ரங் கிடைக்கா விட்டால் அன்யஸூத்ரத்தால் செய்யலாம்.

அப்படி தஹனம் செய்யப்பட்டு பிறகு நடுவில் ஸ்வ ஸூத்ரங் கிடைத்தாலும் அதனால் செய்யாமல் அன்யஸூத்ரத் தினாலேயே ஏகோத்திஷ்டம் வரையில் செய்யவேண்டியது. எப்படியானாலும் ஸபிண்டீகரணத்தை ம்ருதனுடைய ஸூத்ரத் தினாலேயே செய்யவேண்டியது.

31. ஆனால், யஜுர்வேதிகளுக்கு போதாயனஸூத்ரத் தினால் செய்யப்பட்டாலும், ஸ்வஸூத்ரத்தால் செய்யப்பட்

டதுபோலாகும். நடுவில் ஸ்வஸூத்ரங் கிடைத்தாலும் அதைக்கொண்டு மேல் க்ரியைகளை நடத்தலாம்.

32. அன்யனால் தஹனம் செய்யப்பட்டபிறகு, முக்ய கர்த்தா (பிள்ளையைத்தவிர) 10-நாளுக்குள்வந்தால் புனர் தஹனமில்லை. ஸஞ்சயனம் முதல் யாவற்றும் செய்யவேண்டியது.

ஸஞ்சயனத்திற்குப் பிறகு வந்தால் பிண்டோதகம் முதலான யாவற்றும் செய்யவேண்டியது.

மந்த்ரமில்லாமல் தஹனம் செய்யப்பட்டு பத்து நாளைக்குள் ஸஞ்சயனத்திற்கு முன் புத்ரன் வந்தால் அஸ்தி ஸம்ஸ்காரம், ஸஞ்சயனம் முதலானதைச்செய்து அன்று வரையிலுள்ள உதகபிண்டம் வகைராக்களைச்செய்து 11-வது நாள் சூன்யம் செய்து 12-வது நாள் ஸபிண்டீகரணம் செய்யலாம்.

33. அன்யனால் தஹனம் செய்யப்பட்ட பிறகு 10 நாளுக்குள் பிள்ளை வந்துவிட்டால் புனர்தஹனம், வபனம் முதலான யாவற்றும் செய்யவேண்டியது. 10-நாளோடு தீட்டுப் போகும். 12-வது நாள் ஸபிண்டீகரணம் செய்யலாம்.

ஸஞ்சயனத்திற்குப் பிறகு 10-நாளுக்குள்ளாவது 10-வது நாளிலாவது வந்தால் பிண்டோதகம் முதலான யாவற்றையும் பாக்கி நாளில் செய்யவேண்டியது.

அந்தந்தகாலத்தில் பிண்டோதகம் முதலான யாவற்றையும் செய்து, 11-வது நாளில் சூன்யம்செய்து கேட்டது முதல் 10-நாள் தீட்டுக்கார்த்து பிறகு "சூவர்த்தான்யம்" செய்து த்ரிபக்ஷாதிகாலத்தில் ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டியது.

12-வது நாளில் ஸபிண்டீகரணம் செய்யக்கூடாது.

புனர்தஹனம் கிடையாது.

❋ 'ஸகோத்ராணாம் ஸுதாநாம் தத்வநீதாநாம் வ ஸர்வஶ: | ஸபிண்டீகரணம் ப்ராக்ஸ்யாதாஹ ந ஸபிண்டிதே நஶராத்ரத:' ॥ என்கிற வசனப்படி,

மாமனார், மாமியார் இறந்த விஷயத்தில் நாட்டுப் பெண்களுக்கு, அவர்களின் பர்த்தா க்ருத்யஞ்செய்தாலும் செய்யாவிட்டாலும், பிள்ளைகளைப்போலவே ஸஞ்சயனத்திற்குமுன் கேட்டால் 10-நாளோடு தீட்டுப்போய்விடும். ஸஞ்சயனத்திற்குப் பிறகு கேட்டால் கேட்டதுமுதல் 10-நாள் தீட்டுண்டு.

34. அன்யனால் தஹனம் செய்யப்பட்டு ஸஞ்சயனத்திற்குமுன் 10-வதுநாள் ராத்ரியிலாவது, 11-வதுநாள் காலையிலாவது புத்ரன் வந்தால் 11-வது நாள் காலையில் புனர்தனம், வபனம் முதலிய யாவற்றையும் செய்து ஆத்யஶ்ராத்தத்தையும் செய்து, கேட்டதுமுதல் 10-நாள் தீட்டுக்கார்த்து உதகதானம் மட்டில் செய்துவந்து தீட்டுப்போன பிறகு ஆவ்ருத்தாத்யம் செய்து த்ரிபக்ஷாதிகாலத்தில் ஸபிண்ட கரணத்தைச் செய்யவேண்டியது.

35. ஸஞ்சயனத்திற்குப்பிறகு 11-வதுநாளில் வந்தால், வபனம் செய்துகொண்டு வ்ருஷோத்ஸர்ஜனம், ஆத்யச்ராத்தம் இவைகளைச்செய்து, கேட்டதுமுதல் 10-நாள் தீட்டுக்கார்த்து உதகதானம் மட்டில் செய்து, தீட்டுப்போனபிறகு ஆவ்ருத்தாத்யமும், த்ரிபக்ஷாதிகாலத்தில் ஸபிண்டீகரணமும் செய்யவேண்டியது.

---

❋ இந்தவசனம் தீக்ஷிதீயக்ரந்தத்தில் இல்லை.

36. அன்யர்கள் செய்கிற விஷயத்தில் புத்ரன் ஸஞ்சயனத்திற்கு முன்வந்தால் புனர்தஹனம் முதற்கொண்டும், பிறகு வந்தால் புனர்தஹனமன்னியிலும், மற்றதெல்லாவற்றையும் செய்யவேண்டியது.

37 கனிஷ்டனால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு 10-நாளுக்குள் ஸஞ்சயனத்திற்கு முன் ஜ்யேஷ்டன் வந்தால் வபன ஸஞ்சயனங்களைச் செய்து கடந்த பிண்டோதகங்களை ஒரே தடவையில் செய்து பாக்கி நவச்ராத்தாதிகளை அந்தந்தகாலத்தில் செய்து 11-வது நாளில் ஆத்யத்தையும், ஆவ்ருத்தாத்யத்தையும் செய்து 12-வது நாளில் ஸபிண்டீகரணத்தைச் செய்ய வேண்டியது.

38. ஸஞ்சயனத்திற்குப் பிறகு 10-நாள்களுக்குள் வந்தால் மேலே 34-ம் பாராவில் சொல்லியபடி செய்யவேண்டியது.

ஸஞ்சயனத்திற்கு முன்வந்தால் 10-நாளோடு தீட்டு நிவ்ருத்திக்கும். பிறகு வந்தால் கேட்டது முதல் 10-நாள் தீட்டு உண்டு.

39. கனிஷ்டனால் 9-நாள் க்ரியைகள் செய்யப்பட்டு 10-வது நாள் ஜ்யேஷ்டன வந்தால் கண்டம் வரையில் வபனம் செய்துகொண்டு 9-நாள் உதகபிண்டங்களை ஒரே தடவையாகச்செய்து, 10-வது நாள் உதகம், பிண்டம், ப்ரபூதம் முதலியவைகளைச்செய்து ஸர்வாங்க வபனத்துடன் சாந்தி ஹோமத்தைச்செய்து, 11-வது நாளில் ஆத்யச்ராத்தத்தைச் செய்து கேட்டது முதல் 10-நாள் தீட்டைக்கார்த்து பிறகு ஆவ்ருத்தாத்யத்தையும், த்ரிபக்ஷாதிகாலத்தில் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டியது.

புத்ரனைத்தவிர, வேறு கர்த்தாவானல் 10-நாளோடு தீட்டுப்போகும்.

40. கனிஷ்டன் செய்யும் விஷயத்தில், 11-வது நாளில் ஜ்யேஷ்டன் வந்தால் வபனம் செய்துகொண்டு வ்ருஷோத்ஸர்ஜனம், ஆத்யச்ராத்தம் இவைகளைச்செய்து கேட்டது முதல் 10-நாள் தீட்டுக்காத்து உதகதானத்தை மட்டில் செய்து (பிண்டமில்லை) தீட்டுப் போனபிறகு ஆவ்ருத்தாத்யத்தையும், த்ரிபக்ஷாதிகாலத்தில் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டியது.

41. ஜ்யேஷ்டனல் செய்யப்படுகிற விஷயத்தில் கனிஷ்டனுக்கு உதகமாத்ரம். ஸஞ்சயனத்திற்கு முன் கேட்டால் 10-நாளோடு தீட்டுப்போய்விடும். பின் கேட்டால் கேட்டது முதல் 10-நாள் தீட்டும், உதகதானம் மட்டுமுண்டு.

42. அன்யனலாவது, கனிஷ்டனலாவது ஸபிண்டீகரணமும் செய்யப்பட்ட பிறகு ஜ்யேஷ்டன் வந்தால் வபனம் செய்துகொண்டு 10-நாள் உதகதானம் செய்து, 11-வது நாளில் வாஸஸ்தரணத்தைச் செய்யவேண்டியது.

43. அன்யர்களால் செய்யப்பட்டதில் ஜ்யேஷ்டன் வராமல் கனிஷ்டன் வந்தால் மேலேகண்டமாதிரி செய்து ஸபிண்டீகரணத்தை பார்வணமாகச் செய்யவேண்டியது.

44. ஸபத்னீபுத்ரனல் க்ரியைகள் செய்யப்பட்ட மாதாவின் விஷயத்தில் ஔரஸபுத்ரனை ஜ்யேஷ்டனுகவும், ஸபத்னீபுத்ரனை கனிஷ்டனுகவும் பாவித்து மேலேசொல்லிய ந்யாயங்களை அவர்கள் விஷயத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது.

45. தேசாந்தரம் போனவன் செய்தி 12 வர்ஷங்களுக்கு கேழ்க்கப்படாவிட்டால் 13–வது வர்ஷத்தில் க்ருத்யம் செய்யவேண்டியது. நாராயணபலி செய்து தர்ப்பையைக் கட்டி தஹனம் செய்யவேண்டியது. பிறகு மூன்று நாளில் மற்ற கர்மாக்களைச் செய்யவேண்டியது.

46. தகப்பன் விஷயத்தில் 15–வர்ஷம் சென்று 16–வது வர்ஷத்தில் பலாசபர்ணப்ரதிக்ருதி செய்து தகனம் முதலான யாவற்றையும் 10–நாட்களில் செய்யவேண்டியது.

47. தேசாந்தரம் போனவன் விஷயத்தில், அவன் போன மாதம், திதி இவைகளை வைத்துக்கொண்டு க்ரியாரம்பம் செய்யவேண்டியது. மாதம் தெரியாவிட்டால் ஆடி, புரட்டாசி, மாசி, இம்மாதங்களில் செய்யவேண்டியது.

48. திதி தெரியாவிட்டால் க்ருஷ்ணபக்ஷம் அஷ்டமி, ஏகாதசி, அமாவாஸ்யை இவைகளிலொன்றில் செய்யவேண்டியது.

49. இறந்துபோனதாக ஸமாசாரம் தெரிந்தவிஷயத்தில் மாஸம், திதி தெரியாவிட்டால் மேற்கண்ட மாதிரியாகவே செய்யவேண்டியது.

50. தாய், தகப்பன் தவிற, மற்றவனுக்கு ஒருவன் க்ருத்யம் செய்து கொண்டிருக்கும்போது வேறொருவனுக்கு க்ருத்யம் செய்யும்படி நேர்ந்தால் முதற் க்ருத்யத்துடன் இரண்டாவது க்ருத்யத்தையும் முடிக்கவேண்டும்.

51. ஏகோத்திஷ்டமாத்ரம் அததின் 11–வது நாளில் செய்யவேண்டியது.

52. தாய், தகப்பன் இவர்களுக்குமட்டில் இறந்துபோனது முதற்கொண்டே கார்யங்களைச் செய்யவேண்டியது.

53. தம்பதிகள் ஒரே காலத்தில் மறித்தாலும், ஒருவரை தஹனம் செய்வதற்குள் மற்றொருவர் மறித்தாலும், இருவரையும் சேர்த்தே தஹனம் முதலிய கர்மங்களைச் செய்யவேண்டியது. மந்த்ரங்களை இரட்டித்துச் சொல்ல வேண்டியது.

குண்டம் ஒன்று. அதே குண்டத்தில் கற்களை தனித் தனி நடவேண்டியது. அன்னம், சிலாகுண்டம், சிதை, சாந்தி, ஸஞ்சயனம் இவைகள் ஒன்று.

திலோதகம், பிண்டம், ஸோதகும்பம், நவச்ராத்தம், ஏகோத்தரவ்ருத்தி, ஷோடசம் இவைகளைத் தனித்தனியே செய்யவேண்டியது. ஸபிண்டீகரணம் ஒன்று, நிமித்தவரணம் இரண்டு.

பிதாமஹன், பிதாமஹீ இவர்களுக்கும் இப்படியே.

54. ஸங்காதமரணவிஷயத்தில் இறந்த வரிசைப்படிக்கும், சம்பந்தக்ரமப்படிக்கும், க்ருத்யம் செய்யவேண்டியது.

55. துர்மரணத்தை அடைந்தவர்களுக்கு க்ருத்யம் காலாந்தரத்தில் செய்யப்படவேண்டு மென்றிருந்தாலும், ப்ராயச்சித்தம் செய்தால் உடனேயும் செய்யலாமென்றிருக்கிறது.

ப்ராயச்சித்தமாவது:—

ப்ராஜாபத்யம்— ௫

தப்தம் க௫

சாந்த்ராயணம்— ௫

ப்ராஜாபத்யக்ருச்ரம் 3—கொண்டது—ஒரு தப்தக்ருச்ரம். வாம் சாந்த்ராயணமும் அதுபோலவே.

ஆக 65-ப்ராஜாபத்யக்ருச்ரங்களை அனுஷ்டிக்கவேண்டியது.

56. முக்யகர்த்தாவுக்கு பலமான வ்யாதி முதலியவற்றால் முதல் நாளில் வபனம் செய்துகொள்ள முடியாவிட்டாலும், 10—வது நாளில் வபனம் செய்துகொள்ளமுடியாவிட்டாலும், முதல் நாள் அக்னிப்ரதானத்திற்கே யோக்யதையில்லாவிட்டாலும், யோக்யதை வந்த பிறகு 10—நாளுக்குள்பட்டால் புனஸ்ஸம்ஸ்காரம் முதல் செய்யவேண்டியது. 10—நாளுக்கு மேல்பட்டால் 3—நாளில் எல்லாவற்றையும் செய்யவேண்டியது.

## 5. தஹநம்।

இது இருவகைப்படும்.

1. ஸஜாதஹநம், புனர்தஹநம்.

அவற்றில் புனர்தஹனம் இருவகைப்படும்.

1. அஸ்திதஹநம், அதாவது தஹநம் செய்யப்பட்டவர்களுடைய எலும்புகளைச் சேர்த்து புருஷாக்ருதியாகச் செய்து தஹநம் செய்வது.

2. புரசு இலைகளினாலாவது தர்ப்பைகளினாலாவது புருஷாக்ருதியைச்செய்து தஹநம் செய்வது. இதைத்தான் தர்ப்பஸம்ஸ்காரம் என்று சொல்வது.

இந்த ஸம்ஸ்காரத்திற்கு

1. பதிபிண்டம் பொங்குதல்.
2. வேஷ்டி விசுருதல்.

3 காலைச்சேர்த்துக் கட்டுதல்.
4. ப்ரதக்ஷிணம் செய்தல்.
5. நவத்வாரத்திலும் நெய்விடுதல்.
6. ஹஸ்தம் துடைத்தல்.
7. வேஷ்டி போர்த்தல்.
8. ஸம்மார்ஜனம்.
9. உபஸ்தானம்.
10. தலை பிரித்து முடிதல்.
11. அப்ரதக்ஷிணம்.
12. பதிபிண்டம்.

ஆகிய இவைகள் கிடையாது.

सर्वश्रवणस्नानाद्यं पादयोर्बन्धनं नहि ।
प्रदक्षिणाज्यसेकश्च हस्तसंमार्जनं नहि ॥
उपस्थानक्रियायां च केशस्योद्बन्धनं नहि ।
संमार्जनं नवस्थानं पातनं वाप्रदक्षिणम् ॥
सज्जीयेच्च पतिपिण्डं च पापासौ पतितस्य च ॥

6. துர்மரணமடைந்தவனுடைய ஸம்ஸ்காரம்.

1. மரிக்கவேணுமென்ற இச்சையால் இறந்தவன் விஷயத்தில் உடனே தீட்டுப்போய்விடும். தஹநம் இல்லை. ஸ்ம்ஸ்கார உதகதாநம் கூடாது. ஸக்ரமமாக தஹநம் செய்யவேண்டியது. தேஹம் பஸ்மமாகும் வரையில் தான் தீட்டு. ஒரு வர்ஷம் அல்லது ஆறு மாஸம், அல்லது மூன்று மாஸம், அல்லது ஒண்ணரை மாஸம், அல்லது இருபத்திநாலு நாள் சென்றபிறகு க்ருத்யம் செய்யவேண்டியது. நாராயணபலிசெய்துவிட்டு க்ருத்யம் செய்யவேண்டியது. உடனே செய்யவேண்டியதாயிருந்தால் அஞ்சு மடங்கு ப்ராயச்சித்தம் செய்து பிறகு ஸம்ஸ்காரம் முதல் செய்யலாம்.

2. ஒரு வர்ஷம் சென்ற பிறகாவது, ஆறுமாஸம் சென்ற பிறகாவது செய்வதாயிருந்தால், மூன்று நாள் தீட்டுக்கார்த்து நாலாம் நாள் ஸ்நாநம் செய்யவேண்டும். இது மாதா பித்ருக்கள் விஷயம். மற்றவர்களுக்கு ஒரே நாள் தான் தீட்டு.

3. ஒரு வர்ஷம் சென்றபின் செய்வதாயிருந்தால் ஒரே நாளில் பிண்டங்களைக் கொடுக்கவேண்டியது. மறுநாள் ஏகோத்திஷ்டத்தையும் மூன்றும் நாள் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டியது.

### 7. பதிதனுடைய ஸம்ஸ்காரம்.

பதிதனை ஸம்ஸ்காரம்செய்யும் விஷயத்தில் இவனுக்கு ஸபிண்டீகரணம் கிடையாது. நாராயணபலிமட்டுமே.

### 8. தேசாந்தரம்போய் இறந்தவர்களுடைய ஸம்ஸ்காரம்.

1. தேசாந்தரம் போனவர்கள் தாய் தகப்பன் தவிர மற்றவர்களானால், 12-வர்ஷம் யாதொரு ஸமாசாரமும் தெரியாமலிருந்தால்,நாராயணபலிசெய்துவிட்டு க்ருத்யம் மூன்று நாளில் செய்யவேண்டியது. தாய் தகப்பன் விஷயத்தில் 15-வர்ஷம் சென்றபிறகு 16-வது வர்ஷத்தில் க்ரியைகளை ஆரம்பித்துச் செய்யவேண்டியது. 10-நாள் தீட்டுக்கார்த்து செய்யவேண்டியது. நாராயணபலியை முதலில் செய்துவிட்டுத்தான் க்ரியையை ஆரம்பிக்கவேண்டியது.

2. காலாந்தரத்தில் க்ருத்யம் செய்வதாயிருந்தால் மாஸம், பக்ஷம், திதி, வாரம், யோகம் இவைகளை கவனித்து நாள்பார்த்தே செய்யவேண்டியது.

### 9. புனர் தஹனம்.

1. அன்யனால் தகன ஸஞ்சயனங்கள் செய்யப்பட்ட பிறகு புத்ரனாவது அல்லது வேறு முக்யகர்த்தாவாவது க்ரியைகள் செய்வதாயிருந்தால் புனர்தஹன மில்லை.

2. அன்யனால் தஹனம் செய்யப்பட்ட பிறகு (புத்ர னல்லாத) முக்யகர்த்தா மேல் க்ரியையைச் செய்யவேண்டிதா யிருந்தால் புனர்தஹன மில்லை.

3. கனிஷ்டனால் தஹனம் செய்யப்பட்டு ஜ்யேஷ்டன் பிறகு செய்வதாயிருந்தால் புனர்தஹனமில்லை.

4. அன்யனால் தஹனம் செய்யப்பட்டு புத்ரன் க்ரியை செய்வதாயிருந்தால் புனர்த்தஹனம் உண்டு.

5. மந்த்ரமில்லாமல் தஹனம் செய்யப்பட்டவர்களுக்கு மேல் க்ரியையை செய்வதில் புனர்தஹனம் உண்டு.

6. இறந்தவனுக்கு ஏற்பட்ட அக்னியைத் தவிற வேறு அக்னியால் தஹனம் செய்யப்பட்டால் புனர்தஹனம் செய்ய வேண்டும்.

7. தஹனத்தில் அங்கவைகல்யம் ஏற்பட்டால் புனர் தஹனம் உண்டு.

இதற்கு வசனம்:—

ஸ்வீயஸஞ்யநே காயெ ஶரீரம் த்ருஷ்டா கயம் ஹவேத் ।
ஸூத்ரோக்தவிதினா ஶத்ருணா ப்ரநஷ்டேஹநஶாபயேத் ॥

8. தஹநம் செய்யப்பட்டு ஸஞ்சயனம் ஆகாமலும் உதகதானம் பூர்த்தி செய்யப்படாமலும் 11-ம் நாள் ஆத்ய ச்ராத்தம் செய்யப்படாமலும் இருக்கிற விஷயத்தில் புனர்தஹ னம் செய்யவேண்டியது.

## 10. பாலகஸம்ஸ்காரணவிஷயம்.

1. ஆணானாலும், பெண்ணானாலும், 23-மாஸம் பூர் ணமாவதற்குள் இறந்துபோனால் அவர்களுக்கு கநந ஸம்ஸ்காரம் செய்யவேண்டியது.

2. 24_வது மாஸம் முதல் உபநயனம் முடிவு வரையில் துஷாக்னியினால், "அஸ்மாத்த்வமதிஜாதோஸி" என்கிற மந்த்ரத்தால் ஏகாஹுதியாய் தஹனம் செய்யவேண்டியது.

3. 25_வது மாஸம் முதல் 36_வது மாஸம் முடிவுவரையில் திலோதகமும் பிண்டங்களுமுண்டு. தர்ப்பமும் மந்த்ரமுமில்லை.

4. 37_வது மாஸம் முதல் 48_வது மாஸம் முடிய திலோதகபிண்டதானமும், நாராயணபலியுமுண்டு.

5. உபநயனம் முதல் 12_வது வயதுவரையில் ஸபிண்டீகரணத்தைத் தவிர, மற்ற தஹன ஸஞ்சயன வாஸோதக திலோதக பிண்ட பலிப்ரதான ஏகோத்திஷ்ட ஷோடச ச்ராத்த நவச்ராத்தங்களை மந்த்ரவத்தாய் செய்யவேண்டியது.

6. 49_வது மாஸம் முதல் அஸ்திஸஞ்சயனம் (தசி [illegible]) செய்யவேண்டியது.

7. 61_வது மாஸம் முதல் அப்தச்ராத்தம் உள்பட எல்லாம் தந்த்ரமாக மந்த்ரமில்லாமல் செய்யவேண்டியது. அதாவது நக்நம், நவச்ராத்தம், ஏகோத்தரவ்ருத்தி, வ்ருஷோத்ஸர்ஜனம், அப்திகம் ||

8. 85_வது மாஸம் முதல் மேலே சொன்ன எல்லாவற்றோடு ஷோடசமும் செய்யவேண்டியது. எல்லாம் தந்த்ரமாகச் செய்யவேண்டியது.

9. 97_வது மாஸம்முதல் பாஷாணஸ்தாபனம் செய்து ஸகலமும் மந்த்ரவத்தாய்ச் செய்யவேண்டியது.

10. உபநயனமாகாத ஆணுக்கும் விவாகமாகாதபெண்ணுக்கும் எத்தனை வயதானாலும் நாராயணபலியைத் தவிர

ஸபிண்டீகரணம் ஆப்திகம் ப்ரத்யாப்திகம் இவைகள் கிடையாது. துஷாக்னியால்தான் தகனம்.

11. 4-வது வயதுமுதல் அநுபநீதன், அநூடா இவர்களுக்கு நாராயணபலி செய்யவேண்டியது.

## 11. நாராயணபலி: ||

1. யதிமரணத்திலும் பாலம்ருதியிலும் ஸஹஸ்ரபோஜனம் முதலிய காம்யானுஷ்டானங்களிலும் நாராயணபலி செய்யவேண்டியது.

2. யதிமரணத்தில் நாராயணபலியில், சுக்லக்ருஷ்ண பக்ஷங்களில் கேசவாதிகள் 12, விச்வம்பரர் 1, ஆக 13. ஆராதனத்தில் சுக்லபக்ஷமானால் கேசவாதிகள் 12. க்ருஷ்ணபக்ஷமானால் ஸங்கர்ஷணாதிகள் 12.

3. பாலம்ருதியில்:- ப்ரஹ்மா 1, விஷ்ணு 1, ருத்ரன் 1, வஸ்வாதிவித்யக்கள் 1, ப்ரேதராஜா 1, யமன் 1, ப்ரேதநாராயணன் 1, கேசவாதய: 1, ஆக 8.

ப்ரஹ்மா விஷ்ணுஶ்ச ருத்ரஶ்ச வஸ்வாதிவிதரஸ்ததா |
ப்ரேதராஜோ யமஶ்சைவ ப்ரேதநாராயணஸ்ததா || கேசவாதீந் வரேத் ஸம்யக் ப்ராக்ஸம் நாராயணாவர்ணதே | நாராயணம் ஸமுத்திஶ்ய விப்ராநஷ்டௌ து போஜயேத் ||

4. ஸஹஸ்ரபோஜனவிஷயத்தில் கேசவாதிகள் 12-தான்.

5. புருஷனானாலும், ஸ்த்ரீயானாலும் 12-வது வயதிற்குள் விவாஹமாய்விட்டால் ஸபிண்டீகரணாந்தம் ஸர்வமும் செய்யவேண்டியது.

6. 2-வயதிற்குள்பட்டபெண் விவாஹமாய் மறித்தால், வநநம் செய்து உடனே எடுத்து ஸமந்த்ரகமாய் தஹநாதி ஸபிண்டீகரணாந்தம் எல்லாவற்றையும் செய்யவேண்டியது.

## 12. ஸஂவயநம் ॥

1. அஸ்திஸஞ்சயனம் பூர்வாஹ்ணத்தில் செய்யவேண்டியது. மத்யாஹ்னத்தில் செய்தால் மத்யமம். அபராஹ்ணத்தில் செய்தால் அதமம்.

2. ப்ராம்ஹணர்களுக்கு நாலாவது நாளில் அஸ்திஸஞ்சயனம் செய்யவேண்டும்.

ஆனுல், போதாயனம், ஸத்யாஷாடம், பாரத்வாஜம், ஆபஸ்தம்பம் இந்த ஸூத்ரக்காரர்கள் 2-ம் நாளில் செய்யவேண்டியது.

3. தாய், தகப்பன் தவிர, மற்றவர்களுக்கு வெள்ளிக்கிழமையில் ஸஞ்சயனம் செய்யவே கூடாது.

4. மற்றவர்களுக்கு ஊர்சம், ஸங்க்ரமணம் இவை குருக்கிட்டு காலமில்லாவிட்டால் வெள்ளிக்கிழமை தோஷம் பாராமல் ஸஞ்சயனம் செய்து க்ரியையை முடித்துவிடவேண்டியது.

5. ஊர்சம் வகையராவுக்குப் பிந்தி க்ரியையை ஆரம்பிக்கும் பக்ஷத்தில் வெள்ளிக்கிழமையில் ஸஞ்சயனம் செய்யக் கூடாது.

6. புனர்தஹனத்தில் உடனே ஸஞ்சயனம் செய்யவேண்டியது. 'ஸஂவயநஂ கரிஷ்யே' என்று ஸங்கல்பம்செய்து கொண்டு பாலினுல் ப்ரோக்ஷணஞ்செய்து கவஸ்ரஜேத்யாதிமந்த்ரங்களினுல் மூன்று ஆஜ்யாஹுதிகள்செய்து உத்திஷ்டாத இதி மந்த்ரத்தை ஜபிக்கவேண்டியது. மற்றதுகள் அப்படியே.

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍇𑌨𑌾𑌪𑍇 𑌸𑌜𑍍𑌯𑍈𑌷𑍍𑌠𑍍𑌯 𑌇𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌣 𑌪𑍌𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 । 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾-
𑌤𑍀𑌹𑌾𑌰𑍍𑌕𑌾 𑌉𑌦𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌾 𑌇𑌤𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑍁𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂, 𑌸𑌰𑍍𑌵-
𑌭𑌨𑍍𑌯𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥

## 13. 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌃 ॥

1. (1) ஔரஸ புத்ரன்.
பலரிருந்தால் மூத்தவன்.

(2) இரட்டைப்பிள்ளைகளாயிருந்தால் பிந்திப்பிறந்தவனே மூத்தவன்.

(3) பல பெண்ஜாதிகளிருந்து எல்லோரும் புத்ரவதிகளாயிருந்தால் வயதில் பெரியோனே மூத்தவன்.

(4) ஸ்வீகாரம் செய்துகொண்ட பின் ஔரஸன்பிறந்தால் ஔரஸனே கர்த்தா.

(5) ஒருவனுக்கு இரண்டு பெண்ஜாதிகளிருந்து மூத்தாளை வைத்துக்கொண்டு ஸ்வீகாரம் செய்து பிறகு இளையாளுக்குப் பிள்ளை பிறந்தால் தகப்பன் விஷயத்திலும் இளையாள் விஷயத்திலும் ஔரஸனே கர்த்தா என்பதில் ஸந்தேஹமில்லை.

மூத்தாள் விஷயத்திலும் அவனேதான். ஸ்வீக்ருதன் கர்த்தாவாகமாட்டான்.

2. பௌத்ரன்.
3. ஷ்டியான் பிள்ளைகள்.
4. ஊத்தன்.
5. ஷ்டியான் பிள்ளைகள்.

6. யஜ்நஹாஸீ ஊளஹித்ரு:
7. தௌஹித்ரன்.
8. பத்னி, (பலபேரிருந்தால் மூத்தாள்.)
அவிபக்த குடும்பத்தில் ப்ராதா.
9. ஸ்த்ரீகள் விஷயத்தில் அவள் வயற்றில் பிறந்த ஆண் ஸந்ததிவர்க்க மில்லாவிடில் ஸபத்னீபுத்ரன்.
10. பர்த்தா.
11. ஊ¬ஹிதா.
12. ப்ராதா, (ஸ்த்ரீகள் விஷயத்தில் எல்லாவற்றிற்கும் பர்த்தாவினுடைய என்று சேர்த்துக்கொள்ளவேண்டியது.) (இது சிலர்மதம்.)
13. ஷெடியான் பிள்ளைகள்.
14. அஸோதரப்ராதா.
15. ஷெடியான் பிள்ளைகள்.
16. பிதா.
17. மாதா.
18. ஸ்னுஷா, (நாட்டுப்பெண்.)
19. பௌத்ரீ.
20. தௌஹித்ரீ.
21. பௌத்ரஸ்ய பத்னீ
22. தத்புத்ரீ.
23. தத்தனுடைய பத்னீ.
24. பகினீ, (தங்கை, தமக்கை.)
25. பாகினேய:, (மருமான.)
26. ஸபிண்டன்.
27. ஸமானோதகன்.

28. மாத்ருஸபிண்டஃ.

29. தத்ஸமாநோதகஃ.

30. ஜாமாதா.

31. ஸவா.

❊ 32. தனஹாரீ.

## 14. ஶிஶ்ராஜிவிவய ஓூாஸஃ ॥

1. க்ருத்யம் செய்துகொண்டிருக்கும்போது வாஸோதகத்திற்காக வைத்துக்கொண்டிருக்கும் வஸ்த்ரம், பிண்டம் பொங்கும் பாத்ரம், கையில் வைத்துக்கொண்டிருக்கும் சொம்பு, நட்டபாஷாணம் இவைகள் காணுமல் தவறினல் கடந்த பிண்ட திலோதகங்களை மறுபடி செய்யவேண்டியது.

2. நதிக்கரையில் நட்ட கல் காணுவிடில் மந்த்ரவத்தாய் வேறு கல்லை நட்டு, அடிமுதல் வாஸோதகதிலோதகங்களைச் செய்யவேண்டியது.

3. மற்றது எது கெட்டுப்போனலும் அடி முதல் எல்லாவற்றையும் இரண்டிடத்திலும் செய்யவேண்டியது.

4. பிண்டம் உடைந்து போனலாவது காக்கை முதலிய ஜந்துக்களால் தூஷிக்கப்பட்டாலாவது உடனே வேறு பிண்டம் வைக்கவேண்டியது.

5. கர்த்தா வேறு பட்டால் முன் நடப்பட்ட கல்களை எடுத்தெறிந்துவிட்டு வேறு கல்களை நட்டு அடிமுதல் எல்லாவற்றையும் செய்யவேண்டியது.

---

❊ குறிப்பு:— கர்த்தாக்களில் ஒரே அந்தஸ்தில் பலபேர்களிருந்தால் தகப்பன் வழி, தாய் வழியைக்கவனிக்காமல் வயதில் மூத்தவர்களே கர்த்தாவாக ஆகிறார்கள்.

## 15. 𑌭𑍂𑌤𑌬𑌲𑌿𑌃 ।

தர்சஸங்க்ரமணங்களுக்காக நடுவில் க்ரியையை முடித்துவிட்டாலும் ப்ரபூதபலிப்ரதானம், பாஷாணோத்தாபனம் இவைகளை மட்டும் 10-வது தினத்திலேயே செய்யவேண்டியது.

## 16. 𑌉𑌦𑌕𑌦𑌾𑌨𑌂 ॥

1. அவரவர்களுக்கு ஏற்பட்ட ஆசௌசத்தின் முடிவு தினத்தில் உதகதானம் செய்யவேண்டியது.

2. தாய், தகப்பன் தவிர மற்றவர்களுக்கு தர்சஸங்க்ரமணங்கள் நடுவில் வந்தால் அதற்கு முந்தியே க்ரியையை முடித்துவிடவேண்டியது. ஜ்ஞாதிகளும் உதகதானத்தை முடித்துவிடவேண்டியது.

தர்சஸங்க்ரமணங்களுக்குப் பிறகு க்ருத்யம் ஆரம்பிப்பதானுல் க்ரமப்படி செய்யவேண்டியது.

கர்த்தாவோடுகூட ஜ்ஞாதிகள் உதகதானத்தை முடிக்காமல் 10-வது நாளில் செய்வதாயிருந்தால் பாஷாணஸ்தாபனகுண்டத்தில் செய்யக்கூடாது என்பது பெரியோர்களின் கொள்கை.

3. ப்ரேதத்திற்கு பசி தாகம் அதிகம். ஆனதால் தர்சஸங்க்ரமணங்களுக்கு முந்தியே முடித்துவிடவேண்டியது முக்யபக்ஷம். பிறகு ஆரம்பிப்பது கௌணபக்ஷம்.

4. தசராத்ரஜ்ஞாதிகள் 10-வது தினத்திலும், த்ரிராத்ரஜ்ஞாதிகள் 3-வது தினத்திலும் உதகதானத்தைச் செய்யவேண்டியது.

5. ஆசௌசஸன்னிபாதவிஷயத்தில் தனித்தனியே ஒவ்வொன்றிற்கும் உதகதானம் செய்யவேண்டியது.

6. உதகதானம் செய்யத்தவரிப் போய்விட்டால் மறு நாளில் உதகதானத்தைச்செய்து அன்றும் தீட்டுக்கார்க்க வேண்டியது.

7. தர்சஸங்க்ரமணங்கள் இரண்டும் நடுவில் வந்து விட்டால், தர்சம் ஸங்க்ரமணத்திற்குப் பிறகு வந்தாலும், அதற்கு முன்வந்தாலும் தர்சத்திலேயே க்ரியையை ஸமாப்தி செய்யவேண்டியது.

8. ஸங்க்ரமணமாத்ரம் நடுவில் வந்தால் அதில் க்ரியை யை ஸமாப்தி செய்யவேண்டியது.

9. பிதாவின் தசாஹமத்யத்தில் மாதாவின் மரண மேற்பட்டிருக்கும் பக்ஷத்தில் பிதாவின் தசம தினத்திலே யே மாதாவுக்கும் உதகபிண்டஸமாபனம் செய்யவேண்டியது.

---

குறிப்பு:— தர்சஸங்க்ரமணங்களுக்காக க்ரியைகள் முடிக் கும்பக்ஷத்தில் ஜ்ஞாதிகளும் முடித்துவிடவேண்டியது.

கர்த்தா முடிக்காவிட்டால் ஜ்ஞாதிகள் முடித்துவிடவே ண்டுமென்று சாஸ்த்ரமிருக்கிறது.

ஆனால், அது கர்த்தாவோடுகூட முதல் தினத்தில் கண் டாதுபரி வபனம் செய்துகொண்டு ப்ரதிதினம் உதகதானம் செய்கிறவர்களின் விஷயம்.

சிஷ்டாசாரத்தில் 10-வது நாள் வபனம் செய்து கொள்ளுகிறது என்கிற விஷயம் அனுஷ்டானத்தில் இருந்து கொண்டு வருவதினால் மேலே சொன்ன சாஸ்த்ரம் இவர் களுக்கு உரித்தாகமாட்டாது.

**10.** 'ஸமாபனம்' என்று சொல்லியவிடத்தில் உதகதானம், பிண்டதானம், ஏகோத்தரவ்ருத்திச்ராத்தம் இவைகளைமட்டும் ஆகர்ஷித்து முடிக்கவேண்டுமேயல்லாது நவச்ராத்தங்களை ஆகர்ஷிக்கக்கூடாது.

அவைகளை ஸ்வகாலங்களிலாவது, **11**-வது தினத்திலாவது செய்யவேண்டியது.

**11.** விவாஹதீக்ஷையின் மத்தியில் ஏற்பட்ட ஜ்ஞாதிமரணத்திற்கு **30**-உதகதானம் மட்டில் செய்யவேண்டியது.

## 17. வபநம் ||

1. ஜநநாசௌச மரணாசௌசமத்யத்தில், விதியினால் அன்னியில் வபனம் செய்துகொள்ளக்கூடாது.

2. தகப்பனும் பிள்ளைகளும், ஒரே வயற்றில் பிறந்த ப்ராதாக்களும், ஒரே தினத்தில் வபனம் செய்துகொள்ளக்கூடாது. ஒருவனால் வரிக்கப்பட்டு ச்ராத்தத்தில் சாப்பிடவும் கூடாது.

3. வயதில் தனக்குப் பெரியோர்களான தசராத்ர ஜ்ஞாதிகளின் மரணத்திலும், மாதாமஹன், மாதாமஹீ, மாதுலன், மாதுலானீ, ச்வசுரன், மாமியார், பித்ருபகிநீ, மாத்ருபகிநீ, ஸீமந்தஜாபகிநீ, ஜனகமாதா, ஜனகபிதா இவர்களின் மரணத்திலும் வபனம் செய்துகொள்ளவேண்டியது.

குறிப்பு:— ஜ்யேஷ்டப்ராத்ரூணாம் ஜநகப்ராத்ரூணாம் மாத்ருஷ்வஸ்ரூணாமபி தத்வதீநாம் । மாதாமஹஸ்யாபி பிதாமஹஸ்ய ததீயபத்ந்யாஶ்ச வபநஞ்ச விதேயம் ||

தத்வதீநார்ஜிதேத்யத: ஶிஷ்டாசாராபாவாதுபேக்ஷ்யம் ॥ "ஜ்யேஷ்டஸ்வஸுஸ் தத்துஹிதுஸ் தத்பர்துர் வபநம் பவேத்" । ஜ்யேஷ்டஸ்வஸுஸ் தத்துஹிது: என்று ஏகவசனமாகச் சொல்லியிருப்பதினால் 'ஸீமந்தஜாதா ஸ்வஸா' என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸீமந்த ஜாதையான தமக்கையின் மரணத்தில் மட்டில் வபனமுண்டென்று ஏற்படுகிறது. ❋

4. மாமனார், மாமியார் இவர்களுக்கு ஒருநாள் தீட்டுக் கார்க்கும் விஷயத்தில் வபனமில்லை.

5. வயதில் சிறியவர்களான பித்ருவ்யன், மாதுலன், மாதுலானீ, மாமனார், மாமியார், பித்ருபகினீ, மாத்ருபகினீ, ஸபத்னீமாதா, பித்ருவ்யபத்னீ, ஜ்யேஷ்டப்ராத்ருபத்னீ, இவர்களுக்கு க்ருத்யம் செய்தால் வபனமுண்டு. இல்லாதபக்ஷத்திலில்லை.

6. மேலே சொல்லப்பட்டவர்கள் உபநயனமாகாதவர்களானால் கர்த்தாவுக்கும் வபனமில்லை.

ஸ்த்ரீகளுக்கு உபநயனஸ்தானத்தில் விவாஹம்சொல்லப்பட்டிருக்கிறது.

7. மேல் சொல்லப்பட்டவர்களுக்கு கர்த்தா வேறு இருக்க, ஏதோ காரணவசத்தால் தஹனம் மட்டில் செய்யும்படி நேர்ந்தால் தஹனாங்கவபனமில்லை.

8. த்ரிராத்ரஜ்ஞாதிகளின் மரணத்தில் வபனமில்லை.

9. க்ருத்யம் செய்தால் மூத்தவர்கள் விஷயத்தில் வபனமுண்டு.

---

❋ பேதமில்லாமல் தமக்கைகளின் மரணத்தில் வபனம் சிஷ்டாசாரத்திலிருக்கிறது.

10. அதிக்ராந்தாசௌசத்திலும் வபனமுண்டு.

11. தீக்ஷாமத்யத்தில், வபனப்ரஸக்தியுள்ள ஜ்ஞாத்யாதி மரணத்தில் வபனமில்லை. தாய், தகப்பன் மரணத்தில் வபனமுண்டு. மற்றவர்களுக்கானால் க்ஷௌரம் வேண்டியதில்லை.

12. தாய் இறந்து 10-நாளுக்குள் தகப்பன் இறந்தால் கர்த்தாவுக்கு தஹனாங்கவபனமில்லை.

தகப்பன் இறந்து 10-நாளைக்குள் தாய் இறந்தால் வபனமுண்டு.

13. கர்ப்பதீக்ஷை, விவாஹதீக்ஷை இவைகளின் மத்யத்தில் மாதாமஹாதிகளிறந்து க்ருத்யம் செய்யும்படி நேர்ந்தால் வபனமுண்டு. இல்லாதபக்ஷத்தில் இல்லை.

14. மாதாபித்ருதீக்ஷையில் ஷஷ்டி விஷயத்தில் வபனமில்லை.

15. அபரவிஷயத்தில் வெள்ளிக்கிழமையில் க்ஷௌரம் செய்துகொள்ளவே கூடாது. மாதாபிதாக்கள் விஷயத்தில் ஷஷ்டி நிஷேதமில்லை.

16. புத்ரனைத்தவிர, மற்றவர்கள் க்ருத்யம் செய்யும் பக்ஷத்தில் வெள்ளிக்கிழமையிலாவது, ராத்ரியிலாவது தஹனம் ஏற்பட்டால் தஹனாங்கவபனத்தை மறுநாள்செய்துகொள்ள வேண்டியது.

17. தசமதினமாவது, வபனப்ரஸக்தியுள்ள 3-வது தினமாவது வெள்ளிக்கிழமையாயிருந்தால் அதற்கு முதல் நாளே வபனம் செய்துகொள்ளவேண்டியது.

அன்றபதினமே ச்ரவணமானல் மருநாள் வபனம் செய்துகொள்ளவேண்டியது.

“𑌜𑌨𑌨𑍇 𑌮𑌰𑌣𑍇𑌚𑍈𑌵 𑌦𑌶𑌾𑌹𑌨𑌿 𑌵𑌪𑌨𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇”

ஜனனம், மரணம் இவ்விரண்டிலும் 10–வது நாளில் வபனம் செய்துகொள்ளவேண்டுமென்கிற வசனம் பொதுவசனம். மரணநிமித்தக்ஷௌரம் வெள்ளிக்கிழமையில் கூடாது என்பது விசேஷவசனம்.

18. உதகதான ப்ரஸக்தியில்லாமல் வபனம் மட்டிலுள்ள 3 நாள் தீட்டை 3–வது நாளான வெள்ளிக்கிழமையில் கேட்டால் அதற்கு மருநாள் க்ஷௌரஞ்செய்துகொண்டு ஸ்நானம் செய்தால் அன்றே தீட்டுப்போய்விடும்.

19. 10–வது தினத்தில் க்ஷௌரம், உதகதானம் இவைகளுக்குக் காலமில்லாமல் கேட்டால் மருநாள் க்ஷௌரம், உதகதானம் இவைகளைச்செய்து அன்று தீட்டுக்கார்க்கவேண்டும். மருநாள் தீட்டுப்போய்விடும்.

20. இறந்தவன் வயதில் பெரியவனு? இல்லையா? என்று ஸந்தேகம் உண்டானல் வபனம் செய்துகொள்வதே உசிதம்.

21. ஆசௌச ஸந்நிபாதத்தில், அநேக ஆசௌசங்களுக்கும் க்ஷௌரம் ஒன்றுதான்.

22. மாதாபிதாக்களின் மரணவிஷயமான ஆசௌசத்தில் வபனப்ரஸக்தியுள்ள மாதாமஹாதிமரணத்தில் வபனமில்லை.

23. பத்னீ, புத்ரன், புத்ரி இவைகளின் மரணாசௌசமத்யத்தில் மாதாமஹாதிகளின் மரணம் நேர்ந்தால் அதற்கும் வபனங் கிடையாது.

ஆனால், கர்த்தாவாக விருந்தால் தஹனாங்கவபனமும், க்ரமப்படி ஸர்வாங்கவபனமும், உதகதானம் முதலியவைகளுமுண்டு.

**24.** ஒருவனுக்கு பத்நீ, புத்ரன், புத்ரி இவர்கள் மரணத்தில், இவனே கர்த்தாவாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் வபனமில்லை.

**25.** மஹாதீக்ஷையுள்ளவனுக்கு பத்நீமரணத்தில் இவனே கர்த்தாவாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், வபனமில்லை. தீக்ஷா நிவ்ருத்தி ஆசௌசத்திற்குப் பிறகுதான்.

**26.** உதகதான ப்ரஸக்தியில்லாத மாதுலாதி மரணத்தை 3-வது நாள் ராத்ரியில் கேட்டால் மருநாள் வபனம் செய்துகொண்டு ஸ்நானம் செய்தால் தீட்டுப்போய்விடும்.

அன்று ச்ராத்தமாயிருந்தாலும் வபனம் செய்துகொண்டுதான் ச்ராத்தம் செய்யவேண்டியது.

**27.** **12**–வது தினத்தில் ஸபிண்டீகரணம் செய்யாவிட்டால் தாய், தகப்பன் விஷயத்தில் மட்டும் பிறகு க்ஷௌரம் செய்துகொண்டுதான் ஸபிண்டீகரணம் செய்யவேண்டியது.

மற்றவர்களுக்கானால் க்ஷௌரம் வேண்டியதில்லை.

**28.** மரணாசௌசத்தில் ஜீவபித்ருகனுக்கு வபனங் கிடையாது. "நஜீவபித்ருகெ꞉ காயஂ ஶாவெ க்ஷௌரஂ கதாசந | யதி காயஂதாஷ் புநொஷெந காமக்ஷயகாரஂ ஹவெத்" என்கிற வசனப்படி. ஆனால் கர்த்ருத்வம் ஏற்பட்டு க்ருத்யம் செய்தால், வயதில் பெரியவர்கள் விஷயத்தில் தஹனாங்கவபனமும், **10**-வது நாள் ஸர்வாங்கவபனமும் ஆவச்யகமேயாகும்.

**29.** ஒருவனுக்கு இரண்டு பத்னிகள் இருந்து இருவர்

---

குறிப்பு:— ஒருவனுக்கு இரட்டைப்பிள்ளை பிறந்து ஜனனமானதில் ஒன்று முதல் நாளும் மற்றொன்று மறுநா

களும் ப்ரஸவித்தால் ஜ்யேஷ்டபத்னியின் ப்ரஸவத்தை அனு ஸரித்து தீக்ஷையை நிவ்ருத்தி செய்துகொள்ளவேண்டும்.

30. மாதாபிதாக்களுக்கு க்ருத்யஞ் செய்யும் புத்ரர்களைத்தவிர மற்ற எவர்களும் எக்காரணத்தினாலும் ராத்ரியில் வபனம் செய்துகொள்ளக்கூடாது.

31. 24 மாஸம் பூர்த்தியாவதற்குள் சௌளமாகாத சிசுவுக்கு தாய், தகப்பன் கிருத்யத்தில் வபனம் கிடையாது. 25–வது மாதம் பிறந்ததுமுதல் சௌளம் ஆனாலும் ஆகாவிட்டாலும் தஹனாங்கவபனம் உண்டு.

32. [illegible] முதலாவது ஐட்டத்துக்கு (174-வது பக்கம் பார்க்க.) புத்திரனுக்காவது, அல்லது வேருகர்த்தாவுக்காவது, புனர்தகனம் இல்லாவிட்டாலும், கழுத்துக்குமேல் க்ஷௌரம் செய்துகொண்டு க்ரியையை ஆரம்பிக்கவேண்டியது.

33. இரண்டாவது ஐட்டத்துக்கு புத்ரனல்லாது வேறு கர்த்தாவுக்கு புனர்தஹனம் இல்லாவிட்டாலும் கழுத்துக்குமேல் க்ஷௌரம் செய்துகொண்டு க்ரியையை ஆரம்பிக்கவேண்டியது.

---

ளும் ஏற்படுகிற விஷயத்தில் ஸமமான தீட்டுகளில் முன் வந்த தீட்டோடு பின் வந்த தீட்டும் போய்விடுமென்கிற ந்யாயத்தால் முதல்பிறந்த சிசுவின் காலத்தை ஒட்டி தீக்ஷா நிவ்ருத்தி, தீட்டுப்போகுதல் முதலான விஷயங்களை அனுஷ்டிக்கவேண்டியது.

34. மூன்று, நான்கு, ஐந்து ஐட்டங்களுக்கு கழுத்துக்குமேல் க்ஷெளரம் செய்துகொண்டு க்ரியையை ஆரம்பிக்கவேண்டியது.

35. 6, 7, 8_வது ஐட்டங்களுக்கு ஏற்கனவே 10_நாள் அல்லது அதற்குள்பட்டு தகனமாய் இருந்தால் க்ஷெளரமில்லை. பத்து நாளுக்கு மேல்பட்டால் உண்டு.

## 18. தீட்டுச்சேர்க்கையில் வபநமும், உதகதாநமும்.

1. வபனம், அல்லது உதகதானமுள்ள 3-நாள் தீட்டு மத்யத்தில் 3-நாள் உள்ள ஜனனுசெளசம் வந்தாலும், பின் சொல்லியதில் முன்சொல்லியது வந்தாலும் மரணுசெளசம் பலமானதால் மரணுசெளசத்தின் 3_வது தினத்தில் வபனத்தையோ, உதகதானத்தையோ செய்யவேண்டியது.

2. வபனமுள்ள 3_நாள் ஆசெளசமத்யத்தில் உதகதானமட்டிலுள்ள 3_நாள் ஆசெளசம் வந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது வந்தாலும் இரண்டு தீட்டுகளும் ஒன்ருய்ப்போய்விடுமாதலால் வபனமுள்ள ஆசெளசத்திற்கு முதலில் வபனம் செய்துகொண்டு உதகதானமுள்ள ஆசெளசத்திற்கு உதகதானம் செய்யவேண்டியது.

3. வபனமுள்ள 3_நாள் தீட்டுடன் அதேவிதமான தீட்டுகள் சேர்ந்தாலும், உதகதானமுள்ள 3_நாள் தீட்டுச் சேர்ந்தாலும், இரண்டு தீட்டுகளும் ஒன்ருய்ப்போய்விடுமாதலால் வபனம் ஒன்றுதான். உதகதானத்தை மட்டும் தனித்தனியே செய்யவேண்டியது.

4. வபனமுள்ள, அல்லது உதகதானமுள்ள 3_நாள் தீட்டுமத்யத்தில் 10_நாள் ஜனனத்தீட்டு வந்தாலும், பின்

சொல்லியதில் முன் சொல்லியது வந்தாலும் மரணசௌசத்துடன் ஜனனசௌசமும் போய்விடும். ஆதலால் 3_வது நாளில் வபனத்தையோ, உதகதானத்தையோ செய்துகொள்ள வேண்டியது.

5. வபனமுள்ள அல்லது உதகதானமுள்ள 3_நாள் அல்லது 10_நாளுள்ள தீட்டுமத்யத்தில் தனக்கே சிசு பிறந்தாலும், பின் சொல்லியதில் முன்சொல்லியது நேர்ந்தாலும், கர்ப்பதீக்ஷயின் தீட்டு பலமானதால் வேறுதீட்டுக்கு க்ஷௌரமில்லை. 3, 10_நாள் தீட்டின் 3_வது 10_வது நாளிலாவது பிறப்புத்தீட்டுடன் போவதாயிருந்தால் 10_வது நாளில் உதகதானம் மட்டில் செய்துவிட்டு பிறகு கர்ப்பதீக்ஷாநிவ்ருத்தியைச் செய்துகொள்ளவேண்டியது.

6. வபனமுள்ள 3_நாள் தீட்டுமத்தியில் வபனமில்லாத அல்லது வபனமுள்ள 10_நாள் தீட்டுவந்தாலும், பின் சொல்லியதில் முன்சொன்னது வந்தாலும் 10_நாள் தீட்டு பலமானதால் 3_நாள் தீட்டுக்கு வபனமில்லை.

7. உதகதானமுள்ள 3_நாள் தீட்டுமத்யத்தில் 10_நாள் தீட்டு வந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது வந்தாலும் 3_வது நாளிலாவது, 10_வது நாளோடு அதுவும் போவதாய் இருந்தால் 10_வது நாளிலாவது உதகதானம் தனித்தனியாய்ச் செய்யவேண்டியது.

8. வபனமுள்ள, அல்லது உதகதானமுள்ள 3-நாள் தீட்டுமத்யத்தில் தாய், தகப்பன் இறந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது நேர்ந்தாலும், 3-நாள் தீட்டிற்கு வபனங்கிடையாது. 3-வது நாளிலாவது, 10-வது நாளோடு சேர்ந்துபோவதாயிருந்தால் அன்றுவது உதகதானம் தனித்தனியாய்ச் செய்யவேண்டியது.

9. வபனமுள்ள, அல்லது உதகதானமுள்ள 3-நாள் தீட்டுமத்யத்தில் பத்னி, பிள்ளை, பெண், இறந்தாலும், பின் சொல்லியதில் முன் சொன்னது வந்தாலும், கர்த்தா இவனே யானாலும், வேறு இருந்தாலும் வபனமில்லை. உதகதானம் மட்டில் முன்பாராவில் சொல்லியபடி செய்யவேண்டியது.

10. வபனம், உதகதானமுள்ள 10-நாள் தீட்டின் மத்யத்தில் தாய், பத்னி, பிள்ளை, பெண் இறந்தாலும், பின்சொல்லியதில் முன் சொல்லியது சேர்ந்தாலும், பத்நீ முதலியவர்களுக்கு இவனே கர்த்தாவாக யிருந்தாலும், வேறு கர்த்தா யிருந்தாலும் வபனம் கிடையாது. உதகதானம் மட்டில் அந்தத்தீட்டின் 10-வது நாளிலாவது, தாய், தகப்பன் வகையரு தீட்டோடு போவதாயிருந்தால் இந்த 10-வது நாளிலாவதுசாந்திஹோமத்திற்குப் பிறகு தனியாய் செய்யவேண்டியது. பத்னிவகையரு மரணத்தில் ஜ்ஞாதிமரணத்திற்கு வபனம் இல்லை.

11. வபனம் சுத்யர்த்த மென்றும், உதகதானத்திற்கு அங்கமென்றும் சொல்லப்படுகிறது. சிலர் சுத்யர்த்தமென்று ஆசரிக்கிறார்கள். சிலர் வயதில் பெரியவர்களுக்கு மட்டில் வபனம் அனுஷ்டிக்கிறார்கள். ஆகையால் அது உதகதானங்கமென்றாவது, சுத்யர்த்தமென்றாவது சொல்ல முடியவில்லை. ஆனதாலும், மற்ற ந்யாயங்களைக்கொண்டு, சுத்யர்த்தமென்று வயதைக் கவனியாமல் வபனத்தை அனுஷ்டிக்கிறவர்களுக்கு பத்னி வகையரு மரணத்தில் ஜ்ஞாதிமரணத்திற்கு வபனமுண்டு. மற்றவர்களுக்கில்லை. பத்ன்யாதிமரணம் பலமானதால்.

12. வபனப்ரஸக்தியுள்ள 10-நாள் தீட்டு இரண்டுசேர்ந்தால் ஒரே க்ஷெளரம்.

13. வபனப்ரஸக்தியுள்ளதும், இல்லாததுமான 10-நாள் தீட்டுகள் இரண்டு சேர்ந்தால் வபனமுண்டு.

14 உதகதானப்ரஸக்தியுள்ள 10 நாள் தீட்டுகள் இரண்டு சேர்ந்தால், தனித்தனியாய் உதகதானம் செய்யவேண்டியது.

## 19. தீக்ஷையில் வபனம்.

1. தீக்ஷை என்பதால், கர்ப்பதீக்ஷை, விவாஹதீக்ஷை, உபநயனதீக்ஷை, மாத்ருதீக்ஷை, பித்ருதீக்ஷை, இவைகள் சொல்லப்படுகின்றன.

2. கர்ப்பதீக்ஷை என்பது, பத்னீ முதல் கர்ப்பமான போது 4-வது மாஸம் முதலும், இரண்டாவது கர்ப்பத்திற்கு 5-வது மாஸம் முதலும், மற்ற கர்ப்பத்திற்கு ஏழாவது மாஸம் முதலும், (அதாவது 180-நாள்களுக்குமேல்) தீக்ஷை என்றும், அப்படியே அனுஷ்டிக்கப்பட்டுவருவதாயும் தெரிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

கௌதமஸ்ம்ருதிவசநம்:—

த்விதீயகர்பே ஸம்ப்ராப்தே பஞ்சமாஸாத்விவர்ஜயேத் । அந்யத்ர கர்பே ஸம்ப்ராப்தே ஸப்தமாஸாத்விவர்ஜயேத் ॥

விவாஹதீக்ஷை, உபநயனதீக்ஷை என்பது, விவாஹம், உபநயனம் இவை நடந்தபின் 1-வர்ஷம் அல்லது 6-மாஸம்.

மாத்ருதீக்ஷை, பித்ருதீக்ஷை என்பது, மாதாபிதாக்களின் மரணத்திற்குப் பின் 1-வர்ஷம்.

3. மாத்ருதீக்ஷை, பித்ருதீக்ஷை என்ற இவ்விரண்டு சப்தங்களும், ப்ரம்ஹசர்ய கேசதாரணாதி நியமங்களுடன் கூடிய தீக்ஷையைக் கூறுகின்றன.

4. கர்ப்பதீக்ஷை, விவாஹதீக்ஷை, உபநயனதீக்ஷைகளின் நடுவில் மாதாபிதாக்களின் மரணம் ஏற்பட்டாலும், மாதாமஹன், மாதாமஹீ, பித்ருவ்யன், அவன் பத்னீ, அம்

மான், அம்மாமி, ஜ்யேஷ்டப்ராதா, அவன் பத்னீ, அத்தை, மாத்ருஸஹோதரீ, பகிநீ, (மாமனார், மாமியார்) இவர்கள் மரணத்தில் கர்த்ருத்வமுண்டானாலும் வபனமுண்டு.

5. மாத்ரு, பித்ரு தீக்ஷையில் பத்னீ ப்ரஸவித்தால் வபனமுண்டு.

6. கர்ப்பதீக்ஷையுள்ளவனுக்கு, ஸபிண்டீகரணநிமித்தம் வபனமில்லை.

7. ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு தீக்ஷை ஆவச்யகமில்லை. அனுஷ்டிப்பது ச்லாக்யம். இல்லாவிட்டாலும் தோஷமில்லை. ஸபிண்டீகரணத்திற்கு முன் வேறு க்ருத்யம் செய்தால் வபனமில்லை. பின்செய்தால் தீக்ஷையை ஆசரித்தால் வபனமில்லை. இல்லாவிட்டால் உண்டு.

8. ஸந்யாஸியாகப் போனவர்களுடைய பிள்ளைகளுக்குப் பித்ருதீக்ஷை கிடையாது.

9. * 'ப்ரதமாஸு விவாஹேஷு தீக்ஷாக்ஷௌரம் விதீயதே। த்விதீயாதிவிவாஹேஷு தீக்ஷாக்ஷௌரம் நவித்யதே' ॥ என்ற இந்த வசனப்படி இரண்டாவது முதலான விவாஹங்களுக்கு விவாஹதீக்ஷை இல்லை என்றும், இவ்வசனம் பழயகோசங்களில் இருப்பதாயும் சிலர் சொல்லுகிறார்கள்.

## 20. ஸம்ஸ்காரத்தினால் அதிகத் தீட்டு.

1. தத்தனாய்ப் போனவன், தன் ஜனகமாதா, ஜனகபிதா இவர்களுக்கும், தௌஹித்ரன் தன் மாதாமஹன், மாதாமஹீ இவர்களுக்கும், ஸமானோதகன் தன்ஸமானோதகனுக்கும் கர்த்தாவாக இருந்தால் 10-நாள் ஆசௌசமுண்டு.

2. ஜ்ஞாதியல்லாத ஒருவனுக்கு கர்த்தா வேறொருவனிருக்கும்போது வேறொருவன் தஹனம்செய்தால் தாஹகனுக்கு 3-நாள் ஆசௌசமுண்டு.

---

* இவ்விஷயம் மூலக்ரந்தத்திலில்லை.

கர்த்தா வந்துவிட்டால் உடனே தீட்டுப்போய்விடும். ஸஞ்சயனத்திற்குப் பிறகு வந்தால் 10-நாள் ஆசௌசமுண்டு. ஆசௌச்யன்னபோஜனம் செய்தால் உதகதானமுமுண்டு.

3. பக்ஷிண்யாசௌசக்காரன் தஹனஞ்செய்த பிறகு, கர்த்தா வந்தால் ஊாஹகனுக்கு 3_நாள் ஆசௌசம். ஸஞ்சயனத்திற்குப் பிறகு வந்தால் 10-நாள் ஆசௌசமும், உதகதானமுமுண்டு.

4. 3_நாள் தீட்டுள்ள ஸமாநோதகன், தஹனஞ்செய்தால், கர்த்தா ஸஞ்சயனத்திற்கு முன் வந்தாலும், பின்வந்தாலும், 10-நாள் ஆசௌசமும், உதகதானமுமுண்டு.

5. ஸபிண்டன், கர்த்தாவாகயிருக்கும்பக்ஷத்தில், 10-நாள்களுக்கு மேற்பட்டால் புனர்தஹனம் முதல் செய்து தனக்குத் தீட்டிருக்கிறவரையில் பிண்டோதகதானம் செய்து, தீட்டுப்போகிற தினத்தில் ஏகோத்திஷ்டத்தையும், மறுநாள் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டியது.

6. ஒரு வர்ஷத்திற்குப் பிறகு கேட்டால் ஒரே நாளில் புனர்தஹனம், பிண்டதானம், உதகதானம், இவைகளைச் செய்து, மறுநாளில் ஏகோத்திஷ்டத்தையும், 3-வது நாளில் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டியது.

## 21. 𑌆𑌦𑍍𑌯𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌮𑍍 ॥

1. இறந்ததினம் முதல் 11_வது நாளில் ஆத்யச்ராத்தஞ் செய்யவேண்டியது. விக்னம் ஏற்பட்டால், 12, 23, 27-வது நாட்களில் பிண்டோதகதானத்தை மறுபடிசெய்து ஊனமாஸிகத்திற்கு முன் செய்யவேண்டியது. வேறு ஆசௌசம் வந்தால், அதன் நிவ்ருத்திக்குப்பிறகு ஆவ்ருத்தாத்யத்தைச் செய்யவேண்டியது.

2. பிதாவின் க்ருத்யமத்யத்தில், மாதாவுக்கு அல்லது இதரர்களுக்கு மரணம் நேர்ந்தாலும், அந்தந்த 11-வது தினத்தில் ஆத்யத்தையும், ஆசௌசம்போனபிறகு ஆவ்ருத்தாத்யத்தையும் செய்யவேண்டியது.

3. 11-வது தினத்தில், ஸங்கடம் நேர்ந்துவிட்டால் ஆவ்ருத்தாத்யத்தைப் பிறகு நாள் பார்த்துச்செய்யவேண்டியது.

4. ஆவ்ருத்தாத்யத்தை ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு செய்யக்கூடாது. ஆனால், மலமாஸத்திலிறந்தால், ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு, சுத்தமாஸ ம்ருததிதியில் ஆவ்ருத்தாத்யத்தைச் செய்யவேண்டியது.

5. ஆத்யச்ராத்தம், 11-வது நாளில் செய்யப்படாவிட்டால், ஸஞ்சயனமாகாமலிருந்தால், புனர்தஹனம் முதல் பிண்டோதகதானம் முதலிய யாவற்றையும் செய்து, ஆத்யம் செய்யவேண்டியது. ஸஞ்சயனம் செய்யப்பட்டிருந்தால் பிண்டோதகதானம் முதல் யாவற்றையும் செய்து ஆத்யத்தைச் செய்யவேண்டியது.

6. பதினொருவது நாளில் வ்ருஷோத்ஸர்ஜனத்தை பகலின் முதல் பாகத்திலாவது நடுப்பகலிலாவது செய்யவேண்டியது. வ்ருஷபமானது, ஒன்று அல்லது இரண்டு வயதுள்ளதாய் இருக்கவேண்டும். கிடாரியானது உடம்பு சிகப்பாகவும், முகமும் முதுகும் சாம்பல் நிறமாயும், குளம்பும் கொம்பும் வெள்ளை நிறமாகவும் இருக்கவேண்டியது. இப்படிக் கிடைக்காவிட்டால் கருப்பு, அல்லது சிவப்பு, அல்லது எந்த நிறமாயிருந்தாலும் இருக்கலாம். அதனுடைய பின் வலது காலின் அடியில் தனக்கு இஷ்டமான தேவ

தையினுடைய அடையாளத்தை மஞ்சளினால் செய்யவேண்டியது. பர்த்தா, புத்ரன், இருவரையும் உடைய ஸ்திரீ விஷயத்தில் தனி வ்ருஷபத்தை விடாமல் பசுவுடன் கூட விடவேண்டும். புத்ரனில்லாத ஸ்த்ரீ பர்த்தாவின் எதிரில் மரித்தால் வ்ருஷபோத்ஸர்ஜனம் செய்யவேண்டியதில்லை. ஒரு பசுவை தானம் செய்யவேண்டியது. ஸ்த்ரீக்கு பர்த்தா வ்ருஷோத்ஸர்ஜனம் செய்யக்கூடாது. காம்யவ்ருஷோத்ஸர்ஜனத்தில் நாந்தீச்ராத்தம் செய்யவேண்டியது.

பதினோருவது நாளில் செய்யப்படும் ஏகோத்திஷ்டத்திற்கு காலதோஷம் பார்க்கவேண்டியதில்லை.

7. பதினோரும் நாளில் சூத்ரம் செய்யாவிட்டால் ஸஞ்சயனமாயிருந்தால் பிண்டம், உதகம் இவைகளை மட்டும் மருபடியும் செய்யவேண்டும். ஸஞ்சயனம் செய்யாமலிருந்தால் மறுபடியும் ஸம்ஸ்காரம் முதல் செய்யவேண்டும். பத்து நாளைக்குள் வேறு தீட்டு வந்தாலும் ஏகோத்திஷ்டத்தைச் செய்தே தீரவேண்டும். ஆவ்ருத்தாத்யத்தைத் தீட்டுப்போனபின் செய்யவேண்டும்.

8. ஆவ்ருத்தாத்யத்தையும் பதினோருவது நாளில் செய்யவேண்டியது. செய்யத் தடைபட்டால் பனிரண்டாவது நாள் முதலான காலாந்தரத்தில் ஊனமாஸிகத்திற்குள் செய்யவேண்டியது. இப்படிச் செய்யப்படுவதில் பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, சதுர்தசி, ஜன்மானுஜன்மம், த்ரிஜன்மம், வெள்ளிக்கிழமை இவைகளில் செய்யக்கூடாது. ஏகோத்திஷ்டத்திற்கு விஹிதகாலம் மாத்யான்ஹிக காலம்.

9. ஏகோத்திஷ்டத்தில் விச்வேதேவஸ்தானமில்லை. அர்க்யம் இல்லை. 1_தர்ப்பபவித்ரம். ஆவாஹனம் இல்லை. அக்னௌகரணமில்லை. ஒரு பிண்டம். நமஸ்காரங்கிடையாது.

10. ப்ரேதநிமித்தமான ப்ராம்ஹணனை மேற்கு முகமாக உட்காரவைக்கவேண்டியது. பதினோரும் நாள் ஷோடசம் செய்தபின் பனிரண்டாவது நாள் ஸபிண்டீகரணம் செய்யப் படாவிட்டால் ஸபிண்டீகரணஞ்செய்யும் முன்னிலைக்கு மறு படியும் ஷோடசம் செய்யவேண்டியது.

## 22. ஸபிண்டீகரணம் ॥

1- மரணதினம் முதல் 12-வது நாளில் முக்யகர்த்தா ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டியது.

2. மாதாபிதாக்களைத்தவிர, மற்றவர்கள் விஷயத்தில் 12_வது தினங்கூட நாள் பார்த்துச் செய்யவேண்டியது.

3. 12-வது நாளில் செய்யாவிட்டால் 12_வது நாள் முதல் 17-வது நாள் வரையிலாவது, 23-வது நாள், த்ரிபக்ஷம், 3, 4, 6, 11-வது மாஸங்கள், வத்ஸராந்தம் இவைகளிலாவது செய்யவேண்டியது.

4. மாதாபிதாக்களின் விஷயத்தில் 12-வது நாள் முதல் 17-வது நாள் வரையிலும் நாள் பார்க்கவேண்டியதில்லை. பிறகு நாள் பார்த்தே செய்யவேண்டியது.

5. ஜன்மநக்ஷத்ரம், த்ரிபத (வண்ட) நக்ஷத்ரம், ஞாயர், செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, சதுர்த்தசி இவைகள் கூடாது.

6. ரோஹிணி, திருவாதிரை, கேட்டை, அனுஷம், ஹஸ்தம், இவைகள் ச்லாக்யம். கர்த்தாவின் நக்ஷத்ரத் திற்குப் பொருத்தம் பார்த்தே செய்யவேண்டியது.

7. ஒருவனுக்கு அனேக பார்யைகளிருந்தால் மூத்த வளே ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டியது. அநேகம் பிள்ளைகளிருந்தால் மூத்தவனே செய்யவேண்டியது. மூத்த வன் விதுரனுயிருந்தால் அவனுக்கு அடுத்த ஸாக்னிகன் செய்யவேண்டியது. பிறகு மூத்தவன் விவாஹம் செய்துகொ

ண்டு ஸாக்னிகனுயானல் அவன் மருபடி ஸபிண்டீகரணத்தை பார்வணவிதியாய்ச் செய்யவேண்டியது.

8. 12-வயது முடியாத ப்ரம்ஹசாரிக்கு ஸபிண்டீகரணமில்லை. நாராயணபலிமட்டுந்தான். ஆப்திக, ப்ரத்யாப்திகங்கள் கிடையாது.

9. அனுபநீதன், அனூடா இவர்களுக்கு ஸபிண்டீகரணுதிகள் இல்லை.

10. விவாஹமானவர்களுக்கு எவ்வளவு வயதாயிருந்தாலும் ஸபிண்டீகரணுதிகளுண்டு.

11. 3-நாளாசௌசமுள்ள ஸமாேேனுதகன், தௌஹித்ரன், தத்தன், பாகிநேயன் முதலியவர்கள் கர்த்தாவாக ஆனல், 10-நாளாசௌசமனுஷ்டித்து 12-வது நாளில் ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டியது.

12. பக்ஷிண்யாசௌசமுள்ளவர்கள் கர்த்தாவாக ஆனல் 3-நாளாசௌசமனுஷ்டித்து 4-வது நாளில் ஏகோத்திஷ்டத்தையும், 5-வது நாளில் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டியது.

13. பந்துக்கள் கர்த்தாவானல் 3-வது நாளில் ஏகோத்திஷ்டத்தையும், 4-வது நாளில் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டி'து.

14. பிதாவின் தசாஹமத்யத்தில் மாதா இறந்தால் பிதாவின் ஸபிண்டீகரணத்தை த்ரிபக்ஷாதிகாலத்தில் செய்யவேண்டியது. மாதாவின் தசாஹமத்யத்தில் பிதா இறந்தால் மாதாவின் ஸபிண்டீகரணத்தை த்ரிபக்ஷாதிகாலத்தில் செய்யவேண்டியது.

15. மாதா பிதாக்கள் இறந்த வர்ஷத்தில் வேருெருவருக்கும் ஸபிண்டீகரணத்தைச் செய்யக்கூடாது. ஆனல்,

1. பத்னி, 2. புத்ரன், 3. பௌத்ரன், 4. ப்ராதா, 5. ப்ராத்ரு புத்ரன், 6. நாட்டுப்பெண், 7. ஸஹோதரீ, இந்த ஏழுபேர்களும், மாதா பிதாக்களின் ஸபிண்டீகரணத்திற்கு முன் இறந்தால் த்ரிபக்ஷாதி காலத்திலும், பின இறந்தால் அதின் 12-வது நாளிலும் ஸபிண்டீகரணத்தைச்செய்ய வேண்டியது. 1. தாய், 2. தகப்பன், (ஜனகமாதா ஜனக பிதா) 3. ஸபத்னீமாதா, 4. பிதாமஹன், 5. பிதாமஹீ, 6. மாதாமஹன், 7. மாதாமஹீ, 8. அம்மான், 9. சிறிய தகப்பன், பெரிய தகப்பன், 10. ஸீமந்தஜனகிய தமயன், இவர்களுக்கு ஸபிண்டீகரணத்தை ஔபாஸநாக்னியில் செய்ய வேண்டியது.

மற்றவர்களுக்கு ஸபிண்டீகரணத்தை லௌகிகாக்னியில் செய்யவேண்டியது.

16. மாதாபிதாக்களுக்கு ஸபிண்டீகரணஹோமத்தை ஔபாஸநாக்னியில் செய்யவேண்டியது ஆவச்யகம். கர்த்தா அக்னிவானக இல்லாவிட்டால் அவனுடைய அக்னியிலேயே செய்யவேண்டியது. அநேகம் ப்ராதாக்களிருந்து மூத்தவன் அனக்னிகனயிருந்தால் அவனுக்கடுத்த அக்னிவான் செய்ய வேண்டியது. மூத்தவனுக்கு பத்னி அனுகூலையாயில்லாமல் ப்ரதிகூலையாயிருந்தால் வர்ஷ முடிவுவரையில் ஸபிண்டீகரணத்திற்குக் காலமிருப்பதால் அதுவரையில் ப்ரதீக்ஷிக்கவேண்டும். அப்போதும் ப்ரதிகூலையாயிருந்தால் அடுத்த அக்னிவான் செய்யவேண்டியது. ப்ராதாக்களில்லாதவன் 12-வது நாளில் யதாசக்தி க்ருச்ரங்களால ஆத்மசுத்தி செய்துகொண்டு பத்னிக்கு ப்ரதிநிதி செய்துகொண்டு ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டியது.

17. பத்நீ அனுகூலையாயிருந்து புருஷன் நிஷ்காரணமாய் ப்ரதிகூலனயிருந்தால் அதற்கு யாதொரு விதானமுமில்லை. இவ்விதம் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அவன் ஸபிண்டீகரணம் செய்ய அர்ஹனல்ல.

18. கர்த்தாவுக்கு அநேகம் பத்னிகள் இருந்தால், அக்னி ஸம்ஸர்க்கம் செய்யப்பட்டிருந்தால் எந்த பத்னியைக்கொண்டாவது ஔபாஸனாரம்பம் செய்துகொண்டு ஸபிண்டீகரணத்தைச் செய்யலாம். அக்னிஸம்ஸர்கமாகாத பக்ஷத்தில் மூத்தவளை வைத்துக்கொண்டு செய்யவேண்டியது. அவள் ப்ரதிகூலையாயிருந்தால் முன் பாராவில் சொல்லியபடி செய்யவேண்டியது.

19 ஸபிண்டீகரணத்தில் ஷட்பிண்டிகளுக்கு ஹோமம், வரணம் முதலிய விஷயங்களைக் காட்டும் பட்டிகை ஒன்று இதன் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

20. விஷ்ணுவரணமில்லாமல் ஸபிண்டீகரணத்தைச் செய்யவேகூடாது. விஷ்ணுவரணமில்லாமல் ச்ராத்தம்செய்கிற சிலர், ஸபிண்டீகரணத்தில் விஷ்ணுவரணம் செய்தால் ஆப்திக ப்ரத்யாப்திகங்களிலும் அது ஆவச்யகமென்று தப்பெண்ணங்கொண்டு விஷ்ணுவரணமில்லாமல் ஸபிண்டீகரணஞ்செய்கிறார்கள். அது யுக்தமல்ல. ஸபிண்டீகரணத்திற்கும் ஆப்திக ப்ரத்யாப்திகங்களுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. தவிர, ஒரு தடவை விஷ்ணுவரணத்துடனே, விஷ்ணுவரணமில்லாமலோ, ச்ராத்தம் செய்தால் எப்போதும் அதேவிதம் செய்யவேண்டுமென்ற நியமமில்லை. தேசகாலதனங்களை அநுஸரித்து மாற்றிச்செய்வதினால் லோபமில்லையென்பது பெரியோர்களின் அபிப்ராயம்.

21. தாய் தகப்பன் தவிர, மற்றவர்களுக்கு செவ்வாய், வியாழன், வெள்ளி, சதுர்த்தசி இவைகளில் ஸபிண்டீகரணம் செய்யக்கூடாது. ஜன்மநக்ஷத்ரம், த்ரிபாதநக்ஷத்ரம், சனி, ஞாயர் இவைகளில் செய்யக்கூடாது.

22. கர்த்தாவானவன் ஸபிண்டீகரணத்திற்கு முன் சுப கார்யத்தைச் செய்யக்கூடாது.

23. ப்ரஷ்டன், ப்ரஷ்டை இவர்களுக்கு ஸபிண்டீகரணம் செய்யக்கூடாது. நாராயணபலியைத்தான் செய்ய வேண்டியது.

24. அக்ரமமாக இறந்தவர்களில் மாதா, பிதா, பர்த்தா, பத்னீ இவர்களைத் தவிர மற்றவர்களுக்கு ஸபிண்டீகரணம் செய்யக்கூடாது. மேலேகண்டவர்களுக்கு ஆமத்தினாலாவது, ஹிரண்யத்தினாலாவது ஸபிண்டீகரணம் செய்யலாம்.

25. ஸபிண்டீகரணத்தில் காலலம்ப 3 குண்டங்கள் வெட்டவேண்டும். இரும்பினால் வெட்டக்கூடாது. வடபுரத்துக் குண்டத்தை சதுரமாகவும், நடுக்குண்டத்தை முக்கோணமாகவும், தென்புரத்துக் குண்டத்தை வட்டமாக யானையடி மாதிரியாகவும் வெட்டவேண்டியது. அகலம் எவ்வளவோ அதில் அரைவரிசை ஆழமிருக்கவேண்டியது. விச்வேதேவப்ராம்ஹணனை கிழக்குமுகமாகவும், பிதாமஹப்ராம்ஹணனை வடக்கு முகமாகவும், ப்ரேதநிமித்தப்ராம்ஹணனை மேற்கு முகமாகவும் உட்காரவைக்கவேண்டியது.

𑌸𑌪𑌿𑌣𑍍𑌡𑍀𑌕𑌰𑌣𑍇 𑌦𑌾𑌹𑍇 𑌸𑌹𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌵𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 ।
𑌶𑍍𑌵𑌃𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑍇 𑌨𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌵𑍇𑌦𑌾𑌰𑌣𑌂 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 ॥

தஹனம், ஸபிண்டீகரணம் இந்த தினங்களிலும் மறு நாட்காலையிலும் ப்ரயாணம் போகக்கூடாது.

## 23. த்வாதச ச்ரவணர்களின் பெயர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 𑌯𑌜𑍍𑌞𑌾𑌯𑌿𑌵𑌃 | ௧ | 𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 | ௨ |
| 𑌯𑌜𑍍𑌞𑌰𑌾𑌜𑌃 | ௩ | 𑌯𑌜𑍍𑌞𑌜𑌯𑌃 | ௪ |

| | | | |
|---|---|---|---|
| யஜ்ஞப்ராவ்ருத்: | ௫ | யஜ்ஞஜீவ: | ௬ |
| யஜ்ஞஜ்ஞ: | ௭ | யஜ்ஞநந்தந: | ௮ |
| நீதிஶாஸ்த்ரஜ்ஞ: | ௯ | ஸூர்யவாஹ: | ௧௦ |
| ஸத்யவாந் | ௧௧ | ஜ்ஞாநஶோபந: | ௧௨ |

## 24. வத்ஸராத்ஸபிண்டீகரண விஷயே ஶாஸ்த்ரீய ஹோமஜநே மாயதீர்ஜவவஸ்வ ॥

ஶௌத்ரவக்ஷிகேத்ர ஸாஹஸ்ரம் ஶிஸாஹஸ்ர ஜ்ஞாஶாஸிகே।
ஸம்வத்ஸரவிஶேஷகேவ ஸஹஸ்ரம் நியதோ ஜபேத் ॥
ஸோதகும்பஹேதௌ ஸாஹஸ்ர ஶேவம் ஷாண்மாஸிகேஷ்வ ।
உத்க்ராந்திவைத்ஸரண்யாஶ்வ லக்ஷம் கார்யம் ப்ரதிஹோ॥

## 25. ஸோதகும்பம் ॥

1. மரணதினம் முதல் 12-வதுநாளில் துவக்கி ஆப்திகம் வரையில் மாஸிகோநமாஸிகதினங்கள் தவிர, ப்ரதிதினமும் ஸோதகும்பச்ராத்தம் செய்யவேண்டியது. அல்லது, மாஸிகதினத்திற்கு முன் தினத்தில் செய்யவேண்டியது.

2. ப்ரதிதினம் செய்யும் விஷயத்தில் காரணவசத்தால் நின்றுபோன ஸோதகும்பத்தை மருநாளில் சேர்த்துச் செய்யவேண்டியது.

3. மாஸத்திற்கொரு தடவை செய்யும் விஷயத்தில் நின்றுபோனால் அதற்கு வேறு காலமில்லை.

4. ஸபிண்டீகரணத்திற்கு முன்செய்யப்படும் ஸோதகும்பங்களில் ஏகோத்திஷ்டமாக (ப்ரேதவரணமாக) வரணம் செய்யவேண்டியது.

## 26. ஊநமாஸிகம்.

1, ஊநமாஸிகங்களை நாள்பார்த்து விஹிதகாலத்தில் செய்யவேண்டியது.

2. 27-வது நாளுக்குமேல் 30-நாள்களுக்குள்ளும், 40-நாள்களுக்கு மேல் 45-நாள்களுக்குள்ளும், 170-நாள் களுக்குமேல் 180-நாள்களுக்குள்ளும், 340-நாள்களுக்கு மேல் 355-நாள்களுக்குள்ளும், ஊநமாஸிகங்களைச் செய்ய வேண்டியது. அந்தந்தக் காலங்களில் செய்யத்தவறினால் வேறு காலங் கிடையாது.

3. வெள்ளிக்கிழமை, நந்தா, (ப்ரதமா, ஷஷ்டீ, ஏகாதசீ,) சதுர்தசீ, ஸிநீவாலீ, தர்சம், க்ருத்திகா, ஆஸ்லேஷா, பூர்வபல்குநீ, ஜ்யேஷ்டா, மூலம், பூர்வாஷாடா, பூர்வப்ரோஷ்டபதா, த்ரிபுஷ்கரம், த்விபுஷ்கரம் இவைகளில் செய்யக்கூடாது. த்விதீயா, ஸப்தமீ, த்வாதசீ என்ற பத்ராதிதிகள், ஞாயிறு, செவ்வாய், சனி, இம்மூன்று வாரங்கள், க்ருத்திகா, புநர்வஸு, உத்தர பல்குநீ, விசாகா, உத்தராஷாடா, பூர்வப்ரோஷ்டபதா இந்த த்ரிபாத நக்ஷத்ரங்கள் இவைகளுள் 3-சேர்ந்தால் த்ரிபுஷ்கரம், 2-சேர்ந்தால் த்விபுஷ்கரம்.

4. தோஷமற்றகாலங் கிடைக்காவிட்டால் அந்தந்த காலங்களின் கடைசி தினத்தில் செய்யவேண்டியது.

5. ஊனமாஸிகங்கள் நாள் கணக்கின்பேரில் ஏற்படு வதால் அவைகட்கு மலமாஸாதி தோஷங்களில்லை.

6. ஊனமாஸிகங்களை நாள் கணக்கின்பேரில் செய்ய வேண்டுமே தவிர, இந்த மாஸிகத்திற்குப்பின், இந்த மா ஸிகத்திற்கு முன் என்கிற நியமமில்லை.

## 27. 𑌮𑌾𑌸𑌿𑌕𑌮𑍍 ॥

1. மாஸிகத்தை மாதந்தோறும் இறந்த திதியிற் செய்யவேண்டியது.

2. ஸபிண்டீகரணத்திற்கு முன் செய்யும் மாஸிகங்களை ஏகோத்திஷ்டமாகவும், பின் செய்யும் மாஸிகங்களைப் பார்வணமாகவும் (ச்ராத்தம் போலவும்) செய்யவேண்டியது.

3. தீட்டினால் நின்றுபோன மாஸிகத்தை தீட்டுப் போகிற தினத்திலேயே செய்யவேண்டியது. ஸபிண்டீகரணத்திற்கு முன் ஏகோத்திஷ்டமாகச்செய்யும் மாஸிகத்தை அடுத்த மாஸிகத்துடன் சேர்த்துச்செய்தாலும் செய்யலாம்.

4. மலமாஸத்தில் மரித்தவர்களுக்கு 11-வது நாளில் ஆத்யம்செய்து சுத்த மாஸத்தில் ஆவ்ருத்தாத்யமும் ஊநமாஸிகமும்செய்து, பிறகு 2-வது மாஸத்தில் வருகிற திதியில் த்விதீயானுமாஸிகம் செய்யவேண்டியது.

5. ஆப்திகம் மலமாஸத்தில் வந்தால் அதிலேயே செய்யவேண்டியது.

6. ஒரு மாஸத்தில் 2-திதிகளிருந்து சூன்யதிதியான முதல் திதியில் இறந்தவனுக்கு அதே மாஸத்தில் பின்வரும் திதியில் அதிக த்விதீயானுமாஸிகமென்று மாஸிகம் செய்ய வேண்டும், விடக்கூடாது.

7. ஒரு மாஸத்தில் திதியே இல்லாவிட்டால் முந்திய மாஸத்தின் திதியில் சேர்த்துச்செய்யவேண்டியது.

உதாஹரணம்:—

மார்கழி மாஸத்தில் திதியே இல்லாமல் கார்த்திகை

மாஸக் கடைசியில் 'வ்ருச்சிகசாப சுக்லபஞ்சமீ திதி' என்று பஞ்சாங்கங்களால் தெரிந்து இரண்டு மாதத்திய திதி ச்ராத்தங்களும் செய்யப்பட்டு வருகின்றனவல்லவா? அதுபோன்ற திதியில் ஒருவனிறந்தால் அவனுக்கு வ்ருச்சிக சுக்லபஞ்சமீ திதிதான் ம்ருததிதி. மார்கழி மாஸத்தில் சுக்லபஞ்சமீ திதியில்லாததால் த்விதீய மாஸிகத்தை 11_வது நாளில் ஆத்யம் செய்தபின் ஆவ்ருத்தாத்யம் செய்யும்போது இரண்டு ப்ராம்ஹணர்களை வைத்து ஆவ்ருத்தாத்யத்திற்கென்றும், த்விதீய மாஸிகத்திற்கென்றும் தனித்தனியாய் ஏகோத்திஷ்டமாய் வரணம்செய்து ஆவ்ருத்தாத்யத்துடன் செய்யவேண்டியது.

8. இறந்த வர்ஷத்தின் மத்தியில் முன் கூறியபடி திதி வந்தால் இரண்டு மாஸத்திய மாஸிகங்களையும், சேர்த்துச்செய்யவேண்டியது. 12_வது மாஸிகமும், ஆப்திகமும் சேர்ந்துவிட்டால் ஆப்திகத்தைமட்டும் செய்யவேண்டியது.

9. ஸபிண்டீகரணத்திற்கு முன் ஷோடச ச்ராத்தங்களுக்கு ஸங்கல்பம் செய்யும்போதே அந்த வர்ஷத்திலும் அடுத்த வர்ஷத்திலும் திதிகளைப்பார்த்து மாஸிகங்களும், ஊநமாஸிகங்களும் எந்த வரிசையாக வருமோ, அவ்விதம் ஸங்கல்பம் செய்வதுடன், அதிகமாஸமிருந்தால் அதற்காக மாஸிகத்தையும் சேர்த்துக்கொண்டு, கணக்கின்படி பிராம்ஹணர்களை ஏற்படுத்துவது ச்லாக்யம். தெரிந்துகொள்ளமுடியாதபக்ஷத்தில் எப்படிச்செய்தாலும் பாதகமில்லை.

10. ஸபிண்டீகரணத்திற்கு முன் ஏகோத்திஷ்டமாகச் செய்து முடிந்துபோன மாஸிகங்களை நீக்கி, மற்றைய மாஸிகங்களை ஷோடசத்தில் சேர்க்கவேண்டியது.

11. மாஸிகாதிகளை சுபகார்யங்களுக்குமுன் ஆகர்ஷித்துச் செய்யவேண்டியது. சுபத்திற்குப் பிறகு ஷெ மாஸிகங்களை அததற்கேற்பட்ட காலங்களில் மறுபடியும் செய்ய வேண்டியதில்லை. ஆனல் மாதா, பிதா விஷயத்தில் 2, 3 தடவைகளில் மறுபடியும் அததன் காலங்களில் செய்யவேண்டியது. ஸஹோதரன் முதலான அன்யர்களின் சுபத்திற்காக அபகர்ஷம் செய்யக்கூடாது. கர்த்தாவுக்குமட்டில்தான் இந்த விதி.

## 28. த்ரிபுருஷோத்தேசச்ராத்தமும், ஏகபுருஷோத்தேச ச்ராத்தமும்.

1. பிதா, மாதா, ஸபத்நீ மாதா, பிதாமஹன், பிதாமஹீ, ப்ரபிதாமஹன், ப்ரபிதாமஹீ, மாதாமஹன், மாதாமஹீ, பத்நீ, பித்ருவ்யன், ஜ்யேஷ்டப்ராதா, ஜனகபிதா, ஜனகமாதா இவர்களுக்கு ச்ராத்தம் த்ரிபுருஷோத்தேச்யகமாய்ச் செய்யவேண்டியது. மற்றவர்களுக்கானல் ஏகோத்தேச்யகமாய்ச்செய்யவேண்டியது.

2. ஸ்த்ரீகள் செய்யும் ச்ராத்தங்களில், மாமனர், மாமியார், தாய், தந்தை, பர்த்தா, (மச்சுனன்) பிதாமஹன், பிதாமஹீ, ப்ரபிதாமஹன், ப்ரபிதாமஹீ இவர்கள் ச்ராத்தங்கள் மட்டும் த்ரிபுருஷோத்தேச்யம். மற்றவை ஏகோத்தேச்யம்.

## 29. ஹோமமுள்ள ச்ராத்தங்களும், ஹோமமில்லாதவைகளும்.

1. பிதா, மாதா, ஸபத்நீமாதா, பிதாமஹன், பிதாமஹீ, ப்ரபிதாமஹன், ப்ரபிதாமஹீ, ஸீமந்தஜஜ்யேஷ்டன், மாதாமஹன், மாதாமஹீ, பித்ருவ்யன், ஜனகபிதா, ஜனகமாதா, இவர்கள் ச்ராத்தத்தில் ஹோமமுண்டு. மற்றவர்கள் ச்ராத்தத்தில் ஹோமமில்லை.

2. ஸ்த்ரீகள் செய்யும் ச்ராத்தங்களெல்லாவற்றிற்கும் ஹோமம் கிடையாது.

## 30. ச்ராத்தம்.

1. தாய், தகப்பன் இவர்கள் ச்ராத்தங்கள் ஒரே திதியிலிருந்தாலும், திதித்வயத்தால் ஒரே தினத்தில் வந்தாலும், ஆசௌசத்தால் நின்று தீட்டுப்போகும் தினத்தில் சேர்ந்தாலும், ஒரே பாகத்தில் பிதாவின் ச்ராத்தத்தை முந்தியும், மாதாவின் ச்ராத்தத்தைப் பிந்தியும் செய்யவேண்டியது.

2. தகப்பன், ஸபத்நீமாதா இவர்களின் ச்ராத்தங்கள் முன்சொல்லிய காரணங்களால் ஒன்று சேர்ந்தால் பிதாவினதை முன் செய்துவிட்டு, பின்பு வேறுபாகத்தில் ஸபத்நீமாதாவின் ச்ராத்தத்தைச் செய்யவேண்டியது.

3. ஆப்திகமும், மாஸிகமும் ஒன்று சேர்ந்தால் ஆப்திகத்தை முந்தியும் மாஸிகத்தைப் பிந்தியுமாக வெவ்வேறு பாகங்களிற் செய்யவேண்டியது.

4. * பார்வணமும், ○ ஏகோத்திஷ்டமும் ஒன்று சேர்ந்தால் பார்வணத்தை முந்தியும், ஏகோத்திஷ்டத்தைப் பிந்தியுமாக வெவ்வேறு பாகங்களில் செய்யவேண்டியது.

5. அனேக ச்ராத்தங்கள் ஒன்று சேர்ந்தால் தகப்பன், தாய், ஸபத்நீமாதா, ப்ராதா இந்த வரிசையாய்ச்செய்யவேண்டியது.

6. மாதாபிதாக்களுக்கு க்ருத்யம் செய்துகொண்டிருக்கும்போது ஷை யார்களின் ஆசௌசத்தால் நின்றுபோன ச்ராத்தத்தை ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு செய்யவேண்டியது. "மாதா பித்ரு வ்யதிரிக்த க்ருத்ய" விஷயத்தில் அந்

* பார்வணம்—மூன்று பேர்களை உத்தேசித்த ச்ராத்தம்.

○ ஏகோத்திஷ்டம்—ஒருவனை உத்தேசித்த ச்ராத்தம்.

தரிதமான ச்ராத்தத்தை ஆத்யச்ராத்தமான பிறகு செய்ய வேண்டியது.

7. மாதாபிதாக்களின் ஸபிண்டீகரணத்திற்கு முன் இதரர்களின் ச்ராத்தத்தைச் செய்யக்கூடாது. அன்யர்களின் ஸபிண்டீகரணத்துக்கு முன் மாதாபிதாக்களின் ச்ராத்தத்தைச் செய்யவேண்டும். மாதாபிதாக்களின் ஸபிண்டீகரணம் காரணவசத்தால் தாமதித்தால் 12-வது நாளில் இதரர்களின் ச்ராத்தத்தைச் செய்துவிடலாம்.

8. ஒருவன் ஒரே நாளில் (ஷண்ணவதி ச்ராத்தங்கள் தவிர) 3 ச்ராத்தங்களைச் செய்யக்கூடாது. செய்யும்படி நேர்ந்தால் 2 ச்ராத்தங்களை தான் செய்துவிட்டு, மற்றொன்றை ஸஹோதரனால் செய்விக்கவேண்டியது. ஸஹோதரன் இல்லாவிடில் தானே மருநாளிற் செய்யவேண்டியது.

9. ஒரே நாளில் ஒரே பித்ருக்களையுத்தேசித்து 2-ச்ராத்தங்கள் செய்யக் கூடாது. நைமித்திகங்களானால் செய்யலாம்.

### ஒரே நாளில் இரண்டு ச்ராத்தம் செய்யக்கூடாதென்பது.

1. ஒருவன் ஒரே நாளில் ஒரே தேவதையை உத்தேசித்து இரண்டு ச்ராத்தங்கள் செய்யக்கூடாது. ஆனால் நைமித்திக ச்ராத்தங்கள் சேர்ந்து வந்தால் அவைகள் எல்லாவற்றையும் செய்யவேண்டியது. நித்ய நைமித்திகங்கள் சேர்ந்தால் நைமித்திகம் செய்யவேண்டியது. நித்யம் செய்யவேண்டியதில்லை. நைமித்திகத்தினாலேயே நித்யம் ஸித்தித்துவிடுகிறது.

### 2. ச்ராத்தங்கள் இரண்டுவகைப்படும்.

1. நித்யம். 2. நைமித்திகம்.

நித்யம் என்பது சுளவுமாக வருவது. நைமித்திகம் என்பது ஒரு விஷயத்தை நிமித்தீகரித்து வருவது.

உதாஹரணம்:— ஸந்த்யா, ஸங்க்ரமணம் முதலியவைகள் நித்யம்.

க்ரஹணம், சந்த்ரோதயம் ஸூர்யோதயம் முதலிய ஈமஹாயோகங்கள் நைமித்திகம்.

**3, நித்யம் என்பது இரண்டு வகைப்படும்.**

1. நியதம். 2. அநியதம்.

உதாஹரணம்;—

ஸந்த்யா என்பது நியதம்.

விஷுவத், ஸ்ரோணி, மஹாலயம், இவைகள் அநியதம்.

சுளப்தமாய் வருவது நியதம். சில காலங்களில் வருவது அநியதம். நியதத்தைக்காட்டிலும் அநியதம் பலமானது. அநியதத்தைச் செய்யவேண்டியது.

**10.** ஸ்த்ரீகள் செய்யும் ச்ராத்தமானது ரஜஸ்காலத்தினால் மறைக்கப்பட்டால் ஸ்நானம் செய்த மறுநாளில் அதாவது 5-வது தினத்தில் அதைச் செய்யவேண்டியது.

✻ ஸ்நானம் செய்யும் 4-வது தினத்தில் பர்த்தாவின் ம்ருததிதி நேர்ந்தால் அன்று 12-நாழிகைக்குமேல் ஸ்நானம் செய்து, புனஸ்நானமும் செய்து பஞ்சகவ்ய ப்ராசனம்செய்து அன்றே பர்த்ரு ச்ராத்தம் செய்யலாம். அதற்கு ப்ரமாண வசனம்:—

சதுர்த்தே திவஸே ப்ராப்தே ம்ருதே பர்த்ரு திநம் யதி ।
ஸ்நாத்வா புந: ஸ்நாத்வா பஞ்சகவ்யம் பீத்வா ச்ராத்தம் ஸமாசரேத் ✻॥

✻ மேற்சொல்லும் விஷயத்திற்கு தீக்ஷிதீயத்திலாதாரமில்லை.

பஞ்சகவ்யமென்பது:—

பசு ஸம்பந்தமானது 5. அதாவது– பால், தயிர், மூத்ரம், சாணம், நெய்.

**இவைகள் வைக்கவேண்டிய இடம்:—** மத்தியில் பால், கிழக்கில் தயிர், தெற்கில் மூத்ரம், மேற்கில் சாணம், வடக்கில் நெய்.

**இவைகளைச் சேர்க்கமந்த்ரங்கள்:—** 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌽𑌦𑌾𑌯 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌗𑌨𑍍𑌧𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌤𑌿 𑌗𑍋𑌮𑌯𑌮𑍍 । 𑌆𑌪𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌵𑍇𑌤𑌿 𑌚 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌦𑌧𑌿𑌕𑍍𑌰𑌾𑌵𑌿𑌣𑍍𑌣𑌇𑌤𑌿 𑌦𑌧𑌿 । 𑌶𑍁𑌕𑍍𑌰𑌮𑌸𑍀𑌤𑌿 𑌚𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯𑍇𑌤𑌿 𑌕𑍁𑌶𑍋𑌦𑌕𑌮𑍍 ॥

**சாப்பிட மந்த்ரம்:—** 𑌯𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑌸𑍍𑌥𑌿𑌗𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌦𑍇𑌹𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌮𑌾𑌮𑌕𑍇 । 𑌪𑍍𑌰𑌾𑌶𑌨𑌂 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌦𑌹𑌤𑍍𑌵𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌵𑍇𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 ॥

**𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ॥**

𑌪𑌯𑍋 𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌨𑌾𑌶𑌾𑌯 𑌦𑌧𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌧𑌨𑌮𑍍 ।
𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑌾𑌪𑌨𑌾𑌶𑌾𑌯 𑌗𑍋𑌮𑌯𑌂 𑌰𑍋𑌗𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥
𑌘𑍃𑌤𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌦𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 ॥

**சேர்க்கவேண்டிய அளவு:—**

𑌮𑍂𑌤𑍍𑌰𑌮𑍇𑌕𑌪𑌲𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌗𑍋𑌮𑌯𑌮𑍍 । 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌸𑌪𑍍𑌤𑌪𑌲𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑌧𑌿 𑌤𑍍𑌰𑌿𑌪𑌲𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ 𑌘𑍃𑌤𑌮𑍇𑌕𑌪𑌲𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌪𑌲𑌮𑍇𑌕𑌂 𑌕𑍁𑌶𑍋𑌦𑌕𑌮𑍍 ॥

11. ச்ராத்தம் தீட்டினால் நின்றுபோனால் தீட்டுப்போகும் தினத்தில் செய்யவேண்டியது. வேறு காரணத்தினால், அல்லது மாதியினால் விட்டுப்போனால் க்ருஷ்ணபக்ஷ ஏகா

தசியிலாவது அமாவாஸ்யையிலாவது க்ருச்ராசரணம் செய்து ச்ராத்தம் செய்யவேண்டியது. மறதியினல் விட்டுப்போய் பச்சாதாபப்படுகிறவன் உடனே க்ருச்ராசரணம் செய்து ச்ராத்தம் செய்யலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். அதற்கு ப்ரமாணவசனம்:—

ஶ்ருத்யூ ஶ்ருதிஶாஸம் வ ஶ்யதெzஹநி விதூக்ரியா ।
தஶஹவிஷ்ஷூரதிஶ்ரவூள ஜஶெஷ்வா தக்ஷூணெzவி வா ॥

12. மாதாபிதாக்களிறந்த ஸமீபகாலத்தில் மாதாமஹன் முதலியவர்களிறந்து அவர்களுக்கு க்ருத்யம் செய்யும்படி நேர்ந்தால் அவர்களுக்கு ஸபிண்டீகரணத்தை மாதாபிதாக்களின் ஆப்திகத்திற்குப் பிறகு செய்யவேண்டியது. ச்ராத்தங்கள் அனேகமாய் 355—வது நாளில், அல்லது 385-வது நாளில் வரும். மாதா பிதாக்களின் ஆப்திகம் 385-வது நாளிலும், மாதாமஹாதிகளின் ஆப்திகம் 355—வது நாளிலும் வந்து மாதா பிதாக்களின் ஆப்திகத்திற்கு முன் மாதாமஹாதிகளின் ஆப்திக திதி வந்தாலுங்கூட மாதாபிதாக்களின் ஆப்திகத்திற்குப் பிறகுதான் மாதாமஹாதிகளின் ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டும். மறுபடி வேறு ஆப்திகம் கிடையாது.

13. ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் இறந்துபோன மாதத்தில், பக்ஷத்தில், திதியில் வருஷந்தோறும் ப்ரத்யாப்திகத்தைச் செய்யவேண்டியது.

14. ஒரு திதி இரண்டு நாள்களிலும் வ்யாபித்திருந்தால் அபராண்ஹவ்யாப்தியுள்ள தினத்தில் செய்யவேண்டியது.

15. இரண்டு தினங்களிலும் அபராண்ஹவ்யாப்தியிருந்தால் அதிகமுள்ள தினத்திற் செய்யவேண்டியது.

16. இரண்டு தினங்களிலும் அபராண்ஹவ்யாப்தி ஸமமாயிருந்தால் முன் தினத்திற் செய்யவேண்டியது.

17. இரண்டு தினங்களிலும் அபராண்ஹவ்யாப்தி இல்லாவிடில் மறுநாள் குதபவ்யாப்தி இருக்குமாதலால் அன்று செய்யவேண்டியது.

18. பகலை 5 பாகம் செய்தால் 1 ப்ராதஃ காலம், 2 ஸங்கவகாலம், 3 மத்யான்ஹகாலம், 4 அபராண்ஹகாலம், 5 ஸாயான்ஹகாலமென்று சொல்லப்படுகின்றன. மத்யான்ஹகாலத்தை 3 பாகமாகச் செய்தால் 1 காந்தர்வகாலம். 2 குதபகாலம். 3 ரௌஹிணகாலம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

19. ஒரு மாஸத்தில் இரண்டு திதிகள் வந்தால் பின் வரும் திதியில் ச்ராத்தம் செய்யவேண்டியது. பிந்தியதிதி ஸங்க்ரமணத்தால் துஷ்டமாயிருந்தால் முந்தியதிதியில் செய்யவேண்டியது.

20. இரண்டு திதிகளுக்கும் தோஷமிருந்தால், பிந்தியதிதியில் செய்யவேண்டியது. ஆனால் மத்யான்ஹத்திற்கு முன் ஸங்க்ரமணம் ஏற்பட்டால் அன்று தோஷமில்லை. ஆனால் ஆனி, புரட்டாசி, மார்கழி, தை, பங்குனி இம்மாஸங்களில் ஸங்க்ரமணம் மத்யான்ஹத்திற்கு முன் ஏற்பட்டால் தோஷமுண்டு. மற்ற மாஸங்களின் ஸங்க்ரமணமானால் தோஷமில்லை.

21. அர்த்தராத்ரிக்குமேல் ஸங்க்ரமணமானால் அன்றைக்கு தோஷமில்லை. முந்தியானால் தோஷமுண்டு.

22. ஒரு மாஸத்தில் ஒரே திதியானால் எந்த தோஷமிருந்தாலும் அதிலேயே ச்ராத்தம் செய்யவேண்டியது.

**23.** ஒரு மாஸத்தில் திதியே இல்லாவிடில் முந்தின மாஸத்தில் சாந்த்ரமானப்படி சுத்தமாஸ திதியில் செய்ய வேண்டியது. பிந்திய மாஸத்தில் செய்யக்கூடாது. சாந்த்ரமானப்படியும் திதியில்லாவிடில் மறுமாஸதிதியில் செய்ய வேண்டியது.

இதற்கு உதாஹரணம்:—

கார்த்திகைமாஸ முடிவுதினத்தில் அமாவாஸ்யை; மார்கழி முதல்தினத்தில் ப்ரதமை; மார்கழி முடிவில் சதுர்த்தசி. அன்று மகரஸங்க்ரமணம். தைமாஸம் முதல் தினத்தில் அமாவாஸ்யை. மார்கழி மாஸத்தமாவாஸ்யா திதிக்காரர்களுக்கு தைமாதம் முதல் தேதியில் ச்ராத்தம் செய்யவேண்டியது. ஏன எனில் மார்கழி முதல்நாள் முதல், தைமாதம் அமாவாஸ்யை வரையில் மார்கசீர்ஷமானதால், தைமாஸ அமாவாஸ்யையில் செய்யவேண்டியது.

**24.** ச்ராத்தத்தில் ஸமானகோத்ரர்கள், நிமந்த்ரணத்திற்கு யோக்யரல்ல. ஸோதகும்ப ச்ராத்தத்திற்கு பாதகமில்லை.

**25.** மாதாமஹன் முதலிய அன்யகோத்ரிகளுக்குச் செய்யும் ச்ராத்தத்தில், கர்த்தாவினுடையவும் உத்தேச்யனுடையவும், ஸஹோதரர்கள் நிமந்த்ரணத்திற்கார்ஹரல்லர்.

**26.** ச்ராத்தத்திற்குமுன் 1 மாஸம் அல்லது 1 பக்ஷம் வரையில் பரான்னம் க்ஷௌரம் இவை கூடாது. ஸங்கட விஷயத்தில் முதல்நாள் மறுநாள் ச்ராத்ததினம் இம்மூன்று நாட்களிலாவது பரான்னத்தை விடவேண்டும்.

**27.** தன்னுடைய மித்ரன், ஆசார்யன், அம்மான்,

தங்கை, தமக்கை, மாமனர், மாமியார் இவர்களின் அன்னத்திற்கு பரான்னமென்ற தோஷமில்லே.

28. வீட்டின் வாயிற்படிக்கெதிரில் 12 அங்குலம் சதுரமாய் விச்வேதேவர்களுக்கு மண்டலமும், அதற்குத் தென்புறமாய் 12 அங்குலம் சக்ரமாய் பித்ருக்களுக்கு மண்டலமும் செய்யவேண்டியது. 2 மண்டலங்களுக்கும் நடுவில் 6 அங்குலங்கள் இடைவெளி இருக்கவேண்டும். காலலம்பிய ஜலங்கள் ஒன்று சேரக்கூடாது. தேவமண்டலத்தில் அக்ஷதையுடன் கூடிய தர்ப்பத்தைக் கிழக்கு நுனியாகவும் பித்ருமண்டலத்தில் எள்ளுடன் கூடிய தர்ப்பத்தை தெற்கு நுனியாகவும் போடவேண்டும்.

29. நின்று கொண்டு காலலம்பக்கூடாது.

30. ஹோமத்தில் மிச்சமான நெய்யினல் பாத்ராபிகாரம் அனனுபிகாரம் இவைகளை செய்யக்கூடாது.

31. பருப்பு, பால், நெய், தயிர், தேன் இவைகளைத் தொன்னேயில் வைத்து அன்னம் வைக்கப்படுகிற பெரிய இலேயில் வைக்காமல் பூமியிலேயே வைக்கவேண்டியது.

32. எப்போதும் ஆபோசனம் தானகவே போட்டுக் கொள்ளக்கூடாது.

33. தர்ப்பபவித்ரபாணியாய் காலலம்பவும் சந்தனம் பூசவும் கூடாது.

34. 3 வஸ்த்ரங்கள், அல்லது 2 வஸ்த்ரங்கள், அல்லது 1 வஸ்த்ரமாவது கொடுக்கவேண்டும். வஸ்த்ரமில்லாதபக்ஷத்தில் யஜ்ஞோபவீதமாவது கொடுக்கவேண்டும். உபவீதம் கொடுக்கப்படாத ச்ராத்தம் நிஷ்பலம்.

35. ச்ராத்த பிராம்ஹணர்களின் காலை கணுக்காலுக்கு மேல் அலம்பக்கூடாது. உள்ளங்காலையும் அலம்பக்கூடாது.

36. ச்ராத்தத்தில் பாகமெல்லாம் நெய்யினாலேயே செய்யவேண்டும். எவ்விஷயத்திலும் எண்ணையைச் சேர்க்லாமென்று சொல்லப்படவில்லை. எள், தேங்காய் இவைகளை சேர்க்கலாமென்று இருப்பதால் சிலர் நல்லெண்ணையையும் சிலர் தேங்காயெண்ணையையும் சேர்த்துவருவதாகத்தெரிகிறது.

37. ஏகோத்தேச்யகமாய் செய்யப்படும் ச்ராத்தத்தில் ஜ்ஞாதிகள் பித்ருசேஷபோஜனம் செய்யக்கூடாது.

38. த்ரிராத்ரஜ்ஞாதிகள் பித்ருசேஷபோஜனம் செய்யக்கூடாது.

39. ச்ராத்தத்திற்கு யோக்யமான வஸ்துக்கள்:—

உளுந்து, கருப்பு எள், சம்பாநெல், கோதுமை, பயறு, சடுகு, கருப்பில்லாத பாகல் (3 விதம்), பில்வம், நெல்லி, திராக்ஷை, பலா (2 விதம்), மா, மாதுளை, கடுக்காய், குங்குமப்பூ, கருவேப்பிலை, எலுமிச்சை, வாழை (5 விதம்), இலந்தை, தேங்காய், திப்பிலி, மிளகு, புடலங்காய், முள்கத்திரி, சுக்கு, தேன், நெய், சர்க்கரை, காயம், பச்சைக்கற்பூரம், வெல்லம், கடலுப்பு, வெள்ளரி, பசுவின்பால், அவல், எருமைப்பால் (மத்யமம்), ஜீரகம், சிகப்புக்கொடியுள்ள கூச்மாண்டம், கரணைக்கிழங்கு (2 விதம்), சேப்பங்கிழங்கு, கடலை, ஏலம், வெள்ளைப்புஷ்பங்கள், தாமரை, ஜாதிபுஷ்பம், சம்பகம், மல்லிகை, துளசி, தாழம்பூ, மரு இவைகள் ச்ராத்தயோக்யமானதுகள்.

### 40. ச்ராத்தயோக்யமல்லாத வஸ்துக்கள்.

வரகு, காராமணி, கொள்ளு, கடலை, கருப்புப்பாகல் காய், பெருங்காயம், துவரை, முருங்கை, பூஷணி, சுரைக் காய், எருமைப்பால், மாதுளை, விளா, காச்சு உப்பு, ஒற் றைக்குளம்புள்ள ம்ருகத்தின்பால், எலுமிச்சை, புடலங் காய், மிளகாய், மோர், மந்தாரை இவைகள் ச்ராத்தத்திற்கு யோக்யமல்லாதவைகள்.

41. விதி நிஷேதம் இரண்டிலும் சொல்லப்பட்ட வைகளைச் சேர்த்தாலும் சேர்க்கலாம். தள்ளினாலும் தள்ள லாம். போஜனப்ரகரணத்தில் நிஷித்தமான வஸ்துக்களை ச்ராத்தத்தில் சேர்க்கக்கூடாது.

42. ச்ராத்தத்தில் ப்ராம்ஹணர்கள் போஜனம் செய்த இலைகளை பூமியிலேயே புதைக்கவேண்டுமே அல்லாது வேறு விதம் செய்தால் ச்ராத்தம் நஷ்டமாகும்.

43. ச்ராத்ததினத்தில் ச்ராத்தக்ருஹத்தில் சூத்ரர்க ளுக்கு சாப்பாடு செய்விக்கக்கூடாது.

44. ச்ராத்தத்தில் ப்ராம்ஹணர்கள் சாப்பிட்ட இலைக ளை ஸ்வஸ்திவாசனத்திற்குமுன் எடுத்துவிடவேண்டியது. பிண்டப்ரதானத்திற்குப் பிறகு ஸ்தலத்தை சுத்திசெய்ய வேண்டியது.

45. ஸ்த்ரீ, பாலர்கள் செய்யும் ச்ராத்தத்தில் பில் வாங்கி செய்பவனுக்கு அபஸவ்யம் இல்லவே இல்லை.

46, சித்தப்பன், பெரியப்பன், மூத்ததமயன் இவர்க ளுடைய ச்ராத்தத்தில் அவரவர்களையும், அவரவர்களின் பித்ருபிதாமஹர்களையும் வரணஞ் செய்யவேண்டியது.

47. ச்ராத்தத்தில் யோனிஸம்பந்தம், கோத்ரஸம்பந்தம், மந்த்ரஸம்பந்தம் இவைகள் உள்ளவர்களை நிமந்த்ரணம் சொல்லக்கூடாது. அனுகல்பமாக பாட்டன், அம்மான், மாமனர், தௌஹித்ரன், மருமான், மாப்பிள்ளை இவர்களை நிமந்த்ரணம் சொல்லலாம். நல்ல வேதவித்தாயிருந்தாலும் சத்ரு கூடாது.

48. ச்ராத்தத்திற்கு முதல் நாளில் கர்த்தா குச்சியினல் பல் துலக்கக் கூடாது. நிமந்த்ரணத்திற்கு ஏற்பட்டவர்கள் யாதொருவிதமான ப்ரதிக்ரஹமும் செய்யக்கூடாது. வரிக்கப்பட்டவன் வழி நடக்கக்கூடாது. சுமை சுமக்கக்கூடாது. வரிக்கப்பட்டவன் பிறகு மாட்டேனென்று சொன்னலும் வரிக்கப்பட்டவனை வேண்டாமென்று சொன்னலும் இவ்விருவர்களும் ப்ரும்ஹஹத்யாதோஷத்தை யடைந்து சூத்ரயோனியில் பிறப்பார்கள். ச்ராத்தத்தைத் தவிர மற்ற ஸ்நாநம் தானம் முதலிய சத்கார்யங்களையும், கரும்பு, ஜலம், பழம், கிழங்கு, தாம்பூலம், பால், மருந்து இவைகளைப் புஜித்தபிறகும் செய்யலாம். ச்ராத்ததினத்தில் கர்த்தா பல் தேய்க்கக்கூடாது.

49. ச்ராத்தத்தில் ப்ராம்ஹணர்கள் காலலம்பின பிறகு கர்த்தா மண்டலத்திற்கு வடக்கிலாவது ஈசான்யத்திலாவது முந்தி ஆசமனீயம் செய்யவேண்டியது. ப்ராம்ஹணர்கள் பிறகுதான் ஆசமனீயம் செய்யவேண்டும்.

ப்ராம்ஹணர்கள், ச்ராத்தம் முடிகிறவரையில் ஒருவரோடொருவர் தொட்டுக்கொள்ளக்கூடாது.

அக்ஷயத்ருப்திவாசனம், ஆஸனம் இவைகளில் ஆரும் வேற்றுமையாகவும், ஆவாஹனத்தில் இரண்டாம் வேற்று

மையாகவும், அன்னம் கொடுப்பதில் நான்காம் வேற்றுமையாகவும், மற்ற உபசாரங்களில் எட்டாம் வேற்றுமையாகவும் உபசரிக்கவேண்டும்.

### 50. விச்வேதேவர்கள் 12:—

𑌇𑌷𑍍𑌟𑌿𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑍇 𑌕𑍍𑌰𑌤𑍁𑌦𑌕𑍍𑌷𑌃 𑌸𑌙𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑍌 𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌿𑌕𑍇 । 𑌨𑌾𑌨𑍍𑌦𑍀𑌮𑍁𑌖𑍇 𑌸𑌤𑍍𑌯𑌵𑌸𑍂 𑌕𑌾𑌮𑍍𑌯𑍇𑌷𑍁 𑌧𑍂𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑍌 ॥ 𑌪𑍁𑌰𑍂𑌰𑌵𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌵𑍌 𑌚𑍈𑌵 𑌪𑌾𑌰𑍍𑌵𑌣𑍇 𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑍌 । 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑍇 𑌕𑌾𑌲𑌕𑌾𑌮𑍌 𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌸𑌾𑌯𑍁𑌰𑍂𑌰𑍂𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌾𑌃 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌦𑍇𑌵𑌾𑌃 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑌃 । 𑌇𑌷𑍍𑌟𑌿𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 = 𑌯𑌾𑌗𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌙𑍍𑌗𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃

அதாவது—

1. ச்ராத்தம்—புரூரவர், ஆர்த்ரவர்.
2. மகாளயம்—துறி, ரோசனர்.
3. நாந்தீ—ஸத்யர், வஸு.
4. யாகம்—க்ரது, தக்ஷர்.
5. ஸபிண்டீகரணம்— காலர், காமுகர்.
6. 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃-𑌸𑌾𑌯𑍁𑌃, 𑌰𑍂𑌰𑍂𑌃,

51. மண்பாத்ரத்தில் சந்தனம் வைக்கக்கூடாது. நெய் தூபம் உதவாது. ஆபோசனம் போட்டபிறகு மறுபடி ஜலம் போடுவதும், அர்க்யபாத்ரத்தில் திலோதகத்தை விட்ட பிறகு மறுபடி ஜலம் விடுவதும் கள்ளுக்குச்சமானமாகும். அர்க்ய பாத்ரங்களை திரந்துவைக்கக்கூடாது. இடம்விட்டு நகத்தவும் கூடாது. அர்க்ய பாத்ர ஜலம் முழுவதும் கொட்டிப்போனால் மறுபடி முன் சொன்னதுபோல் மந்த்ரவத்தாய் ஜலபூர்ணமாய் செய்யலாம். கொஞ்சம் கொட்டினால் குற்றமில்லை.

52. ஒவ்வொரு உபசாரமும் விச்வேதேவருக்கானவுடன் பித்ருக்களுக்குச்செய்து இதேமாதிரி எல்லா உபசாரங்களை யும் தனித்தனியே செய்யவேண்டியதே தவிர சேர்த்துச் செய்யக்கூடாது.

53. இத்மம் என்பது 17 ஸமித்துக்கள் கூடியது.

54. பருப்பு, பாயஸம், நெய் இம்மூன்றும் சாப்பிடுகிற வர்களுடைய வலதுபக்கத்தில் இருக்கவேண்டும். மற்ற பதார்த்தங்களுக்கு நியமம் இல்லை.

55. ச்ராத்தபோஜனத்தில் பலி வைக்கக்கூடாது.

56. ஏகோத்திஷ்டம், ஸபிண்டீகரணம், மாஸிகம், அனு மாஸிகம், ஷோடசம், நாந்தி, கயாச்ராத்தம், நவச்ராத்தம் இவைகளில் அபிச்ரவணம் கூடாது.

57. ச்ராத்தத்தில் ஒருவருக்கொருவர் எச்சில் போட்டுக் கொண்டுவிட்டால் அந்த இலையைத்தொடாமல் எடுத்தெரிந் துவிட்டு அந்த இடத்தை கோமயத்தினுல் சுத்திசெய்து அந்த இடத்தில் வேறு இலை போட்டு எல்லாவற்றையும் பரிமாறி பரிஷேசனம்செய்து சாப்பிடவேண்டும். தோஷமில்லை.

58. போஜனுரம்பம் முதல் முடிவிற்குள் ஹோமாக்னி அணைந்துவிட்டால் அன்றைய தினம் உபவாஸமிருந்து புனச் ராத்தம் செய்யவேண்டும்.

59. வாயஸபிண்டத்தை காகம் எடுக்காமல், அது நாயினுல் தொடப்பட்டாலும், வேறு ஜந்துக்களாற் தொடப்பட் டாலும், சூத்ரனுல் பார்க்கப்பட்டாலும், அன்று தினம் உப வாஸமிருந்து மறுநாள் புனச்ராத்தம் செய்யவேண்டும்.

60. விச்வேதேவவரண ப்ராம்ஹணன், பித்ருவரணப் ராம்ஹணனுக்குப் பிறகு, கை அலம்பவேண்டும். ஆசமனமும் அப்படியே செய்யவேண்டும்.

61. ச்ராத்தகர்மாவில் ஒரே பங்க்தியில் சாப்பிடுகிற எல்லாப்ராம்ஹணர்களுக்கும், பக்ஷ்யம், போஜ்யம் முதலான சாப்பிடக்கூடிய பதார்த்தங்களை சரியாய்ப் போடவேண்டும். தக்ஷிணையை நிமந்த்ரண ப்ராம்ஹணர்களுடைய வித்யை, குணம் இவைகளிலுள்ள ஏற்றக் குறைச்சலுக்குத் தக்கபடி வ்யத்யாஸமாய்க் கொடுக்கலாம்.

62. பிண்டப்ரதானத்திற்குப் பிறகு, ஆக்ராணம் செய்வதானது கர்மாங்கமாகையால் செய்யவேண்டும்.

63. பிண்டப்ரதானத்தில் நடுப்பிண்டத்தை கர்ப்பமாகாத தன் பத்னியினிடம் மந்த்ரவத்தாகக்கொடுத்து சாப்பிடச் சொல்லவேண்டியது.

பிண்டங்களை அக்னி, ஜலம் இவைகளில் போட்டுவிடவேண்டியது. தீர்த்தச்ராத்தத்தில் ஜலத்திலேயே போடவேண்டியது.

## 64. ஸ்நானமான பிறகு வஸ்த்ரம் பிழிவதற்கு.

உச்சிஷ்டபாகினோ தாஸா: யே ம்ருதா ஹ்யக்னிதக்திகா: ।
தத்வஸ்த்ர தோயம் தேஷாம் து ஸம்பாவிநோ ம்ருதா:॥

65. ச்ராத்தகர்த்தாவுக்கு ஏகாதசியில் உபவாஸநியமமில்லை. பித்ருசேஷபோஜனம் அவச்யம் செய்யவேண்டியது.

விதவைக்கு புருஷன் ச்ராத்தத்தில் ஏகாதசியாயிருந்தாலும் பித்ருசேஷபோஜனம் அவச்யம் செய்யவேண்டியது. அதனால் வ்ரதபங்கமாகமாட்டாது.

66. அன்யகோத்ரியான சுமங்கலிகள், மாதா, பிதா, தமயன் இவர்களின் ச்ராத்தத்தில் பித்ருசேஷபோஜனம் செய்யலாம். விதவைகள் சாப்பிடவே கூடாது.

ஒருவன் மாமனார், அம்மான் இவர்களுடைய பித்ருசேஷம் சாப்பிடலாம்.

பழம், கரி, பக்வமான வ்யஞ்சனம், பால், தயிர், நெய், தேன், இன்னம் சமைத்தது, சமைக்காதது இப்பொருள்களுக்கு பித்ருசேஷதோஷம் கிடையாது.

67. நிமந்த்ரணம் சாப்பிட்டவர் 10 தடவை காயத்ரியினல் ஜலத்தை சாப்பிடவேண்டும். பிறகுதான் ஸந்த்யாவந்தனம் செய்யவேண்டியது. ஔபாஸனத்தை மற்றவர்களைக் கொண்டு செய்விக்கவேண்டும்.

**68. நிமந்த்ரணம் சாப்பிடுகிறவர்கள் அன்றையதினம் அடியில்கண்டவைகளைச் செய்யக்கூடாது. அவைகளை விலக்கவேண்டும்.**

1. வழி நடத்தல்.
2. மறுபடியும் ஆஹாரம் செய்தல்.
3. வைதிககர்மங்களைச் செய்தல்.
4. ஸ்த்ரீஸம்போகம் செய்தல்.
5. தானம் வாங்குதல்.
6. தானம் கொடுத்தல்.
7. ஔபாஸனம் செய்தல்.
8. அத்யயனம் செய்தல்.

69. மறுதினத்தில் ஒரு வைதிக கர்மாவுக்கும் அவர்கள் கூடாது. ஏனென்றல்:—

**ஞூஶிகெகூவடுசெகாஹூ** என்று வசனம் ஏற்பட்டிருக்கிறது.

ச்ருத்த கர்த்தா, மறுநாள் 1. க்ஷௌரம், 2. எண்ணை தேய்த்துக்கொள்ளுதல், 3. பரான்னம், 4. ஸ்த்ரீ ஸம்போகம், 5. ப்ரதிக்ரஹம் வாங்குதல் இவைகளை முக்யமாய் விலக்கவேண்டியது.

70. ஸபிண்டீகரணத்திற்குப்பின், வ்ருத்தப்ரபிதாமஹனுக்குக்கொடுக்கும் பாதேய ச்ராத்தத்தை ஆமத்தினாலேயே செய்யவேண்டும். அவனுக்கு வேறு ச்ராத்தம்கிடையாது. ஆமச்ராத்தத்தில் அன்னத்திற்கு 4-பங்கதிகமாய் ஆமத்தைக் கொடுக்கவேண்டும்.

## 71. ஸந்யாஸிகளின் மரணத்தில் ஆப்திகாதி விஷயங்களின் தோஷத்தைப்பற்றி.

யதீநாம் ப்ராஹ்மணஶ்ராத்தே தத்க்ஷணம் ஸஹபோஜநே ।
ஶூத்ராயநே தத்க்ஷணம் ஸ்யாத் ஶ்ராத்தே தாஸதம் ஜபேத் ॥
ஶ்ராத்தே து த்ரிதிநம் ப்ரோக்தம் ப்ராஹ்மணே தஶவாஸரம் ।
பௌத்ரே பஞ்சதிநம் ப்ரோக்தம் வஜ்ரநாராயநே அயம் ॥
காத்யாநாராயணபலிவிஷயே ஶ்ராத்தாதிகம் ஸ்ம்ருதம் ॥

## 72. ச்ராத்தாதிகளில் சாப்பிட்டால் எத்தனை காலத்திற்கு அவர்களுக்குச் சுத்தியில்லை என்பது.

ஶ்ராத்தே ஸபிண்டைகாஹம் மாஸிகேஷு ச ஷட்திநம் ।
ஷண்மாஸாநபி ஸாபிண்ட்யே ஏகோத்திஷ்டே ச வத்ஸரம் ॥
ஊநே பக்ஷதிநம் ப்ரோக்தம் ஆப்திகே பக்ஷராத்ரகம் ।
ப்ரேதாரண்யாதியோகக்ஞாம் ந த்ருப்யந்தி தேவதா ॥
நஸ்யந்தி பக்ஷதாதயா மித்ரம் ஶநைஶ்சரம் ॥

## 73. ச்ராத்தாதிகளில் போஜனஞ்செய்த தோஷத்திற்காக செய்யவேண்டிய காயத்ரீஜபஸங்க்யாநிர்ணயம்.

ஸம்ஸ்க்ருதே ப்ராஹ்மணஶ்ராத்தம் ஶதமஷ்டோத்தரம் ஜபேத் ।
த்ரிம்ஶத்ஸஹஸ்ரமேகாஹம் ஜபம் குர்வீத வை த்விஜ: ॥
ஸாபிண்ட்யே தஶஸாஹஸ்ரம் ந த்ருப்யந்தி தேவதா ।
ஜபேதஷ்டஸஹஸ்ரம் து நவஶ்ராத்தே ஜபேத் த்விஜ: ॥
ஏகோத்திஷ்டே து ஸாஹஸ்ரம் ததேவாப்திகே ஸ்ம்ருதம் ।

## 74. ச்ராத்தத்தின் ப்ரயோஜனம்.

* அந்நேந கந்தேந தேவாஸ்து ஸந்துஷ்டா: பித்ருபோஜநாத் ।
யக்ஷா: பிண்டதாநேந ராக்ஷஸா பலிபோஜநாத் ॥
உச்சிஷ்டேந பிஶாசாத்யா: நாரகா விகிரேண து ।
அஜ்ஞாதா: காகபிண்டேந ஶ்ராத்தே த்ருப்யந்தி ஸர்வதா ॥

## 75. காக்காய் பிண்டத்தை எடுப்பதின் பலன்.

* அமேத்யரோம: ப்ரவாஸஸ்ய தாயாதேஷு பவேத்க்ஷய: ।
ப்ராமாதிபிண்டக்ரஹணே வாயஸேநேதி கீர்திதம் ॥

## 76. புனச்ராத்தஞ் செய்யவேண்டியதற்கு ஹேதுக்கள்.

* அர்க்யநாஶே ஶய்யாநாஶே தீபநாஶே ததைவ ச ।
போஜநோச்சிஷ்டஸம்ஸர்கே ஶ்வசண்டாலவிஸர்ஜநே ॥
மதிராபாண்டஸம்ஸ்பர்ஶே ஸ்யாச்ச ஸம்ஸ்ப்ருஷ்டே விகிரே ததா ।
ஶூத்ராத்யாஷ்டே ஶுநாத்யாஷ்டே போஜநேஷு ததைவ ச ॥
உபவாஸம் ததா குர்யாத் புந: ஶ்ராத்தம் ஸமாசரேத் ।
உச்சிஷ்டோச்சிஷ்டஸம்ஸர்கே ஶுந: ஶூத்ராதிஸம்ஸ்பர்ஶநே ॥
பத்தே பிண்டஸம்ஸ்ப்ருஷ்டே காகபிண்டஸ்ய போஜநே ।
அர்க்யபாத்ரம் து நஷ்டம் ஸ்யாத் ப்ராஹ்மணாநாம் ச போஜநே ॥
உபோஷ்ய தத்திநே கர்தா புந: ஶ்ராத்தம் பரேऽஹநி ।

ஶ்ராத்தம் என்பது அந்நஶ்ராத்தம், ஆமஶ்ராத்தம், ஹேமஶ்ராத்தம் இவற்றைக் குறிக்கும்.

## 31. பித்ருஶேஷபோஜநம் ॥

ஶ்ராத்தங்களில் பித்ருஶேஷபோஜநம் அவச்யம் செய்யவேண்டியது. ச்ராத்தம் செய்கிறவன் தரித்ரனாகயிருந்

---

* இவை தீக்ஷிதீயக்ரந்தத்திலில்லை.

தாலும் தன்னுடைய அன்னத்தையாவது ச்ராத்தம் செய்த வன் வீட்டில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு சாப்பிட வேணும். அப்படி செய்யாவிட்டால் யமனுடைய அமேத்யத்தை சாப்பிடுகிறதுமன்னியில் பித்ருக்களையும் சாப்பிடச் செய்கிறுன். வம்சமும் வ்ருத்தியாகமாட்டாது. அதில் பத்நீ சேஷமென்றும், சின்னவாள் சேஷமென்றும் விசேஷம் ஒன்றும் கிடையாது. அவர்களும் வஸ்வாதிரூபத்தை அடைந்து விட்டவர்களாதலால், ச்ராத்தம் செய்கிற கர்த்தா அந்த சேஷத்தை புஜிக்காவிட்டால் அவனால் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை தேவர்களும், கவ்யத்தை பித்ருக்களும் ஒருக்காலும் புஜிக்கிறதில்லை. ச்ராத்தம் செய்யாததுபோலவே ஆகும். கர்த்தா ஏகாதசீவ்ரதம் அனுஷ்டிப்பவனாகயிருந்தாலும் பித்ருசேஷபோஜனம் செய்தே தீரவேண்டும். வ்ரதபங்கம் ஆகமாட்டாது. ஜ்ஞாதிகளில் ஏகாதசீவ்ரதம் அனுஷ்டிப்பவனாகயிருந்தால் பித்ருசேஷத்தை ஆக்ருணம் செய்யவேண்டியது.

## 32. ச்ராத்தாங்க தர்ப்பணம்.

1. ஹோமத்துடன் செய்கிற ச்ராத்தங்களுக்கெல்லாம் அங்கபூதமான தர்ப்பணமுண்டு. மாதாபிதாக்களின் ச்ராத்தத்திற்கும், ஸக்ருன்மஹாளயத்திற்கும் அங்கமான தர்ப்பணத்தை மறுநாளிலேயே செய்யவேண்டியது. மற்ற ச்ராத்தாங்கமான தர்ப்பணத்தை அன்றே செய்யவேண்டியது.

2. ஜீவபித்ருகன் செய்யும் ச்ராத்தங்களில் அங்கமாக தர்ப்பணம் கிடையாது.

3. ஸபிண்டீகரணம், அநுமாஸிகம், நாந்தீச்ராத்தம், ப்ரதமாப்திகம் இவைகளுக்கு அங்கமாக தர்ப்பணம் கிடையாது.

4. ச்ராத்தசேஷமான திலத்தைக்கொண்டும், தர்ப்பத்தைக்கொண்டும், பரேஹநிதர்ப்பணம் செய்யவேண்டியது.

பரேஹநி தர்ப்பணத்தை ப்ராம்ஹமுஹூர்த்தத்திலெழுந்து ஸ்நானம் செய்தபிறகு செய்துவிட்டு மறுபடி ஸ்நானம் செய்யவேண்டியது. ஸூர்யோதயமான பிறகு தர்ப்பணம் செய்யும்படி நேரிட்டால் ஸ்நானம்செய்து ஸந்த்யாவந்தனம் செய்துவிட்டுப் பிறகு செய்யவேண்டியது. பிறகு ஸ்நானமில்லை. ஔபாஸனஹோமம் செய்யவேண்டியதுதான்.

### திலதர்ப்பணம்.

5. பிதா இறந்து ஒருவர்ஷ காலத்திற்குப் பிறகு திலதர்ப்பணம் செய்யவேண்டும் என்றும், க்ரஹணம் முதலிய நைமித்திகம் நேர்ந்தால் அது முதற்கொண்டு செய்யவேண்டுமென்றும், ஒருவர்ஷம் க்ரமித்துத் தான் ப்ரேதத்வம் நீங்குகிறதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். அது ஸரியல்ல. ஏனெனில்,ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு செய்யப்படும் ஸோதகும்பம், மாஸிகம் இவைகளை பித்ருத்வம் வந்துவிட்டதென்ற ந்யாயத்தைக்கொண்டு பார்வணமாகச்செய்கிறார்கள். திலதர்ப்பணத்திற்கு மட்டில் பித்ருத்வம் வரவில்லை என்று நினைப்பது தகுதியாகுமா? அன்றியும் தகப்பனிறந்து ஸபிண்டீகரணம் ஆனபிறகு ஒரு வர்ஷத்துக்குள் தாயார் ச்ராத்தம் வந்தால் அதற்கு அங்கமான பரேஹநி தர்ப்பணத்தை செய்கிறதா விட்டுவிடுகிறதா? இதற்கு பதில் அவர்களே தான் சொல்லவேண்டும்.

### 33. தர்ச ச்ராத்தம் முதலியன.

1. தர்சமும், ஸங்க்ரமணமும் ஒன்று சேர்ந்தால் ஏதாவதொன்றை அனுஷ்டிக்கலாமென்று சிலர்.

2. * யத்ராவதேதாம் விஷுவாயநே த்வே ஏகஸ்மிந் தத்ர விஷுவயநே புண்யே । ஸ்நாநம் விஷ்ணுபதே வ்ருஷ்டம் தயஸ்து ஏகஸ்மிந் தத்ராஸ்நாந் ஏவாநு ஸஞ்சய ॥ என்ற விசேஷ வசனத்தால், ஏகதினத்தில் விஷுவ அயநங்கள் நேர்ந்தால்

* இது தீக்ஷிதீயக்ரந்தத்திலில்லை.

அவைகளை செய்யவேண்டியது. மற்ற 8—மாஸங்களிலும் உஸ—ீமே செய்யவேண்டியது. என்பது சிலர்மதம். உஸ—ீத்தில் எந்த ஸங்க்ரமணம் நேர்ந்தாலும் ஸங்க்ரமணத்தையே அனுஷ்டிக்கவேண்டும். ஸங்க்ரமணம் நைமித்திகமானதால் என்பது சிலர்மதம்.

3. தர்சம், ஸங்க்ரமணம், அர்த்தோதயம் அல்லது மஹோதயம் இவைகள் சேர்ந்தால் அர்த்தோதயம் அல்லது மஹோதயத்தை அனுஷ்டிக்கவேண்டியது.

4. தர்சத்தில் க்ரஹணத்தை அனுஷ்டிக்கவேண்டியது.

5. பிதா மாதா இறந்துபோன வர்ஷத்தில் தர்சச்ராத்தம் முதலியவைகளை அன்னரூபமாகச் செய்யவே கூடாது.

ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு திலதர்ப்பணத்தை மட்டும் செய்யவேண்டும். வேண்டாமென்பது சிலர் கொள்கை.

6. அவிபக்தர்களான ப்ராதாக்கள், தர்சம் முதலிய ச்ராத்த தினங்களில் வெவ்வேரிடங்களிலிருந்தால் தனித்தனியே ச்ராத்த தர்ப்பணாதிகளைச் செய்யவேண்டியது.

7. தர்ச ச்ராத்தத்தில் ஸ்த்ரீகளுக்கு வரணம் கிடையாது. பித்ரு வரணத்துடன் சேர்த்தும் செய்யக்கூடாது. ஆனால் தர்ப்பணமும் பிண்டமும் உண்டு.

8. தகப்பன் உள்ளவனுக்கு பித்ருகார்யங்களில் அதிகாரமில்லை. ஆனால் "பித்ருயக்ஞம்", நாந்தீ, தீர்த்தச்ராத்தம் இவைகளை தகப்பன் உள்ளவனும் செய்யவேண்டியது.

9. தகப்பன் செய்தால் யார் தேவதைகளோ அவர்கள் இவனுக்கும் தேவதைகள். தீர்த்த ச்ராத்தத்தில் கயா ச்ராத்தம் கிடையாது.

10. ஆள்காட்டிவிரலையும் கட்டைவிரலையும் சேர்த்து எள்ளை எடுக்கக்கூடாது. கட்டைவிரலாலேயே தள்ளிக்கொள்ளவேண்டியது.

11. ஸங்கல்பச்ராத்தத்தில் ஆவாஹனம், ஹோமம்,

அர்க்யம், விகிரம், பிண்டப்ரதானம் இவைகள் கிடையாது.

அமாவாஸ்யை. இது இருவகையாகயிருக்கிறது.

1. அமாவாஸ்யை. 2. போதாயன அமாவாஸ்யை.

போதாயன அமாவாஸ்யை என்பது போதாயனஸூத்ரிகளாலும், காத்யாயனஸூத்ரிகளாலும் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. இந்த போதாயன அமாவாஸ்யைக்கு சந்த்ர தர்சனம் முக்யம். போதாயன அமாவாஸ்யை கழித்த மறு நாளைக்கு மறுநாள் சந்த்ரதர்சனம் ஆகவேண்டியது. வரப்போகிற சங்கதியை முன்னாடி தெரிந்துகொள்ள அடியில் கண்ட வசனங்களும் நிபந்தனைகளும் ஏர்ப்பட்டிருக்கின்றன. அப்படிக்கிருந்தும் சில ஸமயங்களில் தவ்றிவருகிறது. அப்படித்தவராமல் சொல்வதற்குத் தெரிந்தவர்கள் ஒருவரையும் காணோம்.

1. [illegible] ॥

2. [illegible] ॥

3. [illegible] ॥

4. [illegible] ॥

5. [illegible] ॥

6. [illegible] ॥

7. [illegible] ॥

8. [illegible] ॥

9. சுக்லபக்ஷம் பஞ்சமிக்குள் திதித்வயம் வரவேண்டும்.

10. ஒரு ஸ்த்ரீயின் பர்த்தாவுக்கு தன் ஔரஸ புத்ரனே, ஸ்வீக்ருதபுத்ரனே, அல்லது ஸபத்நீபுத்ரன் வகையராவோ ச்ராத்தம் செய்யும் காலத்தில், இவள் அவர்களின் முந்நிலேயில் இருக்கவேண்டியது. அப்படி இல்லாவிட்டால்.

‘[illegible]’॥

என்றபடி, இவளும் பர்த்தாவை உத்தேசித்து தனிமையில் ச்ராத்தம் செய்யவேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் ச்ராத்தத்தை விட்டவனுக்கு என்ன தோஷப்ராயச்சித்தம் ஏற்படுகிறதோ அதற்கு இவளும் உள்ளாகிருள்.

## 33. மஹாளயம்.

1. மஹாளயபக்ஷத்தில் பரணிக்கு “மஹாபரணீ” என்று பெயர். த்ரயோதசிக்கு, “கஜச்சாயை” என்று பெயர். மத்யாஷ்டமிக்கு “கயை” எனப்பெயர். இவைகளிற் செய்யும் ச்ராத்தம், கயா ச்ராத்தத்திற்கு ஸமானம்.

2. அமாவாஸ்யை, வ்யதீபாதம், பரணீ, த்வாதசீ, அஷ்டமீ இவைகளில் திதி, நக்ஷத்ரம், வாரம் இவைக

ளால் ஏற்பட்ட தோஷங்களைக் கவனிக்கவேண்டியதில்லை. மஹாளயபக்ஷத்தைத் தவிர, மற்ற பக்ஷங்களில் ப்ரதமை, ஷஷ்டி, ஏகாதசி, த்ரயோதசி, ஜன்மநக்ஷத்ரம், ரோஹிணீ, ரேவதீ, மகம் இவைகளில் மஹாளயம் கூடாது.

3. ஏகவர்க்கத்திற்கு மஹாளயம் செய்யும் விஷயத்தில், த்ரயோதசீ, மகம் இவைகள் கூடாது. இரண்டு வர்க்கத்திற்கும் செய்கிற மஹாளயத்தில் த்ரயோதசீ, மகம் மெத்த ச்லாக்யம். பிள்ளைகள் பிரித்துக்கொண்டாலும். ஒன்ருக இருந்தாலும், ப்ரத்யேகமாய்த்தான் மஹாளயம் செய்யவேண்டியது. பிரித்துக்கொள்ளாத காலத்தில், மகத்துடன் சேர்ந்த திரயோதசியில் செய்யக்கூடாது. இந்த மகாத்ரயோதசியில் பிண்டதானம் கிடையாது. இரண்டு அயனங்களிலும், 2 விஷுவங்களிலும், எல்லாயுகாதிகளிலும் பிண்டதானத்தைத் தவிர, ச்ராத்தம் செய்யவேண்டும். மகாநக்ஷத்ரத்தில் பிண்டப்ரதானம் கூடாது. அந்வஷ்டகை, வ்ருத்தி, மஹாளயம், ப்ரத்யாப்திகம், கயை இவைகளில் மாதாவுக்குத் தனியாக வரணமுண்டு.

4. காருணிக பித்ருக்களாவன:—

சிறிய தகப்பன், பெரிய தகப்பன், தமையன், தம்பி, பிள்ளைகள், அத்தை, அம்மான், பெரியதாயார், சிறியதாயார், ஸஹோதரிகள், தங்கை தமக்கைகளின் புத்ரர்கள், பார்யை, மாமனர், அத்திம்பேர், மாட்டுப்பெண், மைத்துனன், குரு, யஜமானன், ஸ்நேகிதன் இவர்களுக்கும் மஹாளயத்தில் ச்ராத்தம் செய்யவேண்டும். பிள்ளையுள்ள சிறிய தகப்பனுக்கு வேண்டியதவச்யமில்லை.

5. மஹாளயச்ராத்தத்தை அன்னரூபமாய் செய்கி

றவர்களும், ஹிரண்யரூபமாய் செய்கிறவர்களும், ப்ரதிவர்ஷமும் அவ்விதமே செய்யவேண்டுமென்ற நியமமில்லை. தேசகாலசக்த்யனுஸாரமாய் மாரிச்செய்வதால் தோஷமில்லை.

6. விதுரர்கள் மஹாளயத்தை அன்னரூபமாய்ச் செய்ய அதிகாரமுள்ளவர்களல்ல.

பர்வதினத்தில், ப்ரத்யாப்திகச்ராத்தம் க்ரஹணத்தால் நிஷேதிக்கப்பட்டு மறுநாள் செய்யவேண்டிவரும் விஷயத்தில் பர்வதினத்தில் ப்ரத்யாப்திக ச்ராத்தத்தை ஹிரண்யரூபமாய்ச் செய்யவேண்டியது. அதற்கங்கமாய் தர்ப்பணம் கிடையாது.

7. மாதா ஜீவித்திருந்தால் மஹாளயத்தில் மாத்ருவர்க்கத்துக்கு வரணமில்லை. ஸபத்நீமாதா ஜீவித்திருந்தாலும் பிதாமஹ்யாதிகளுக்கு வரணமில்லை. ஆனுல் மாதாவோ அல்லது ஸபத்நீமாதாவோ இறந்துபோயிருந்தால் அவர்களுக்கு மட்டில் வஸுரூபமாக வரணம் செய்யவேண்டுமென்று தோன்றுகிறது. இரண்டு பேரும் இறந்துபோயிருக்கும் பக்ஷத்தில் க்ரமப்படி மாத்ருவர்க்கத்திற்கும் ஸபத்நீமாதாவுக்குத் தனியாகவும் வரணம் உண்டு.

8. சிலர் ஸபத்நீமாதாவை காருணிக பித்ருக்களில் சேர்த்து வரணம் செய்கிறுர்கள். அது பிசகு. அவள் மாதாவைப்போலவே தவிர, காருணிக பித்ருக்களில் சேரமாட்டாள்.

9. ஸன்யாஸியின் மஹாளயத்தை த்வாதசியிலேயே செய்யவேண்டியது. மற்ற திதிகளில் செய்யக்கூடாது. ஆனுல் த்வாதசியில் ஸந்யாஸியல்லாத மற்றவர்களுக்கும் செய்யலாம்.

10. சஸ்த்ரஹநநம் முதலியவற்ருல் துர்மரணமடைந் தவர்களுக்கு சதுர்தசியிலேயே மஹாளயம் செய்யவேண்டியது. வேறு திதியில் செய்யக்கூடாது. வேறெவர்க்கும் அந்த திதி கூடாது.

11. மாதாமஹாதிகளை ஸபத்நீகர்களாக வரிக்கவேண்டும். மாதாமஹ்யாதிகளுக்குத் தனியாய் வரணம் செய்யக் கூடாது.

12. மஹாளயம் செய்வதற்கு முன் பிறர் மஹாளயத்தில் வரிக்கப்பட்டு புஜிக்கலாகாது.

13. தாயார் ஜீவித்திருந்தால் மஹாளயத்தில் பிதாமஹ்யாதிகளுக்கு வரணமில்லை. ஆனுல் பிண்ட தர்ப்பணங்களுண்டு.

14. மாதாபிதாக்களின் ச்ராத்தம் வருகிற மாஸத்தில் ச்ராத்தத்திற்கு முன் மஹாளயமாவது, மஹாளய தர்ப்பண மாவது செய்யக்கூடாது.

15. மஹாளயத்தில் விச்வேதேவர் விஷ்ணு இவர்கள் இல்லாமல் செய்யவே கூடாது. செய்தால் ராக்ஷஸர்கள் அபஹரித்துவிடுகிருர்கள்.

16. மஹாளயத்தை அன்னரூபமாக செய்கிறவர்கள் சிலர் பித்ருதிகளுக்கு தனியாய் பாகமும், மாதாமஹாதிகளுக்கு தனியாய் பாகமும் செய்கிருர்கள். அது வேண்டியதில்லை. அதற்கு சாஸ்த்ரமும் இல்லை.

### 35. நாந்தீச்ராத்தநிமித்தங்கள்.

1. பத்னியின் முதலாவது ரஜோதர்சனம்.

2. கர்ப்பாதானம்.

3. பும்ஸவனம்.
4. ஸீமந்தம்.
5. ஜாதகர்மம்.
6. பிறந்த குழந்தையை முதலில் பார்த்தல்.
7. நாமகரணம்.
8. அன்னப்ராசனம்.
9. சௌளம்.
10. உபநயனம்.
11. உபாகர்மம்.
12. ப்ராஜாபத்யாதி வ்ரதம்.
13. ஸமாவர்த்தனம்.
14. கோதான வ்ரதம்.
15. விவாஹம்.
16. யக்ஞம்.
17. ப்ரதிஷ்டை.
18. நூதன க்ருஹப்ரவேசம்.
19. ராஜ்யாபிஷேகம்.
20. ஆச்ரம ஸ்வீகாரம்.

இவைகளில் நாந்தீ ச்ராத்தம் செய்யவேண்டியது.

𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌦𑍍𑌯𑍁𑌃 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌮𑌾𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌂
𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥

என்பது பொதுவசனம். ஆனால் ஆபஸ்தம்பீயர்கள் அடியில் கண்ட வசனப்படி அனுஷ்டித்து வருகிறார்கள்.

𑌗𑌰𑍍𑌭𑌾𑌧𑌾𑌨𑍇 𑌵𑌿𑌵𑌾𑌹𑍇 𑌚 𑌸𑌵𑌨𑍇 𑌜𑌾𑌤𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ।
𑌨𑌾𑌮𑌚𑍌𑌳𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌨𑌾𑌨𑍇𑌷𑍁 𑌵𑍍𑌰𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌸𑍋𑌮𑌵𑌨𑍇 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌭𑍋𑌜𑌯𑍇𑌦𑍍𑌯𑍇 𑌵𑌾𑌚𑌯𑍇𑌦𑌾𑌶𑌿𑌷𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

அனேக சுபகார்யங்கள், அதாவது உபநயனத்துக்கு முன் ஜாதகர்மம் முதல் சேர்த்துச் செய்யப்படும்போது,

நாந்தி ஒன்றுதான். நாந்தியில் தயிர் இலந்தைப்பழம் சேர்த்து பிண்டம் செய்யவேண்டியது. கிழக்கு முகமாய் உட்கார்ந்துகொண்டு கிழக்கு நுனியாக தர்ப்பத்தைப்போட்டு அதில் இரண்டிரண்டு பிண்டம் வைக்கவேண்டியது. அப்ரதக்ஷிணம் அபஸவ்யம் கூடாது. எள்ளுக்குப்பதில் யவையை உபயோகப்படுத்தவேண்டும். பித்ர்ய மந்த்ரங்களை ஜபிக்கக் கூடாது. ஸ்வதாவாசநம் கூடாது. பாத்ரத்தைத் தலை கீழாகக்கவிழ்க்கக்கூடாது. கோத்ரத்தைச்சொல்லி ஒரு பிண்டமும், மௌனமாக ஒரு பிண்டமும் ஆக இரண்டு பிண்டங்களைக் கொடுக்கவேண்டும். இதை ஆமமாயாவது ஹிரண்யமாயாவது செய்யலாம்.

நாந்தீச்ராத்தத்தில் ஒவ்வொரு வரணத்திற்கும் இரண்டு ப்ராம்ஹணர்களை வரிக்கவேண்டியது.

‘‘வ்யஸிஷ்டாஷெ விவாஹேஷு ப்ரபிதாமஹ வர்க்கயோ:’’

என்ற வசனப்படி.

‘‘ப்ரபிதாமஹ பிதாமஹ பித்ரூ’’

என்று வரிக்கவேண்டியது.

நாந்தியில் மாத்ருவரணம் முதலில் செய்யவேண்டியது. பிறகு பித்ருவரணம் செய்யவேண்டியது.

நாந்தி செய்த 6 தினங்களுக்குள் வேறு நாந்தியை செய்யக்கூடாது.

பிதா, ப்ராதா ஒருவருமில்லாதவனுக்கு அன்யன் உபநயனம் செய்யும்பக்ஷத்தில் அவனே நாந்தீச்ராத்தம் செய்யவேண்டியது. உபநயனம் செய்யப்படுகிறவனுடைய பித்ராதிகள் ச்ராத்ததேவதைகளாவார்கள்.

பிதா, ப்ராதா இல்லாத மாணவகனுக்கு அன்யன் ப்ராஜாபத்யாதி வ்ரதஸமாபனத்தில் ஆசார்யனுனல், அந்த

நாந்தீ ச்ராத்தத்தில் ஆசார்யனுடைய பித்ராதிகள் ச்ராத்த தேவதைகளாவார்கள்.

நாந்தி ச்ராத்தத்தில் கர்த்தாவுக்கு அன்றய தினம் மட்டில் நியமம். நிமந்த்ரணம் சாப்பிட்டபேர்களுக்கு 3_நாள் வர்ஜநம் செய்யவேண்டும்.

நாந்திசெய்த க்ருஹத்தில் தர்சம், தர்ஶ்ராத்தம், மஹாளயம், ஸபிண்டீகரணம், ப்ரத்யாப்திகம் இந்த ஐந்து தவிர, 3 மாஸம் வரையில், தர்சம் ஸங்க்ரமணம், மந்வாதி, யுகாதி வகைரவுக்கு ச்ராத்தம் செய்யக்கூடாது. கர்த்தாவுக்கும் இந்த விதிதான். தினந்தோரும் செய்யும் ஸ்நாநாங்க தர்ப்பணத்தில் விவாஹமானல் ஒரு வர்ஷத்திற்கும், உபநயனமானல் 6 மாஸத்திற்கும், சௌளமானல் 3 மாஸத்திற்கும் நாந்திசெய்த கர்த்தா எள்ளேயும் தர்ப்பையையும் உபயோகிக்கக்கூடாது. 'நைமித்திகேஷு கார்யேஷு திலைர் தர்பைஶ்ச தர்பயேத்' ‖ தர்சாதி தர்ப்பணங்களெல்லாம் எள்ளும் தர்ப்பையையும் கொண்டுதான் செய்யவேண்டும். ஜீவபித்ருகன் ஸ்நாநாங்க தர்ப்பணத்தில் கருப்பு எள்ளே உபயோகிக்கக்கூடாது.

இரு கைகளினலும் பித்ருதர்ப்பணம் செய்யக்கூடாது.

ஞாயிற்றுக்கிழமை, ஜந்மநக்ஷத்ரம், வீட்டுக்குள், சோபனக்ருஹம், சோபன தினம் இவைகளில் எள்ளு கூடாது.

வீட்டில் செய்யவேண்டியதாயிருந்தால் ஒரு பாத்ரத்தில் எள்ளும் ஜலமும் வைத்துக்கொண்டு மற்றெரு பாத்ரத்தில் தர்ப்பணம் செய்யவேண்டியது.

ஜீவபித்ருகன் ஒருவன் நாந்திசெய்தால் அவனுக்கு தாயார் இல்லாவிடினும், தகப்பன் யாரை உத்தேசித்து

செய்கிருனே அவர்களையே உத்தேச்ய தேவதைகளாகச் செய்யவேண்டியது.

### 36. மலமாஸத்தில் செய்யக்கூடியவைகளும், செய்யக்கூடாதவைகளும்.

1. மலமாஸம் என்பது 2 அமாவாஸ்யை அல்லது 2 பூர்ணிமை உள்ள மாஸம், 2 ஸங்க்ரமணமுள்ள மாஸம், ஸங்க்ரமணமில்லாத மாஸம்.

2. அதிகமாஸம் என்பது சாந்த்ரமானப்படி 12 மாஸத்திற்குமேல் வருபவை.

3. அக்னிஹோத்ரம் எடுத்துக்கொள்வது, சாலை, ப்ரதிஷ்டை, யக்ஞும், தர்மம், வ்ரதம், காம்ய வ்ருஷோத்ஸர்ஜனம், சௌளம், உபநயனம், விவாஹம், ராஜ்ய பட்டாபிஷேகம், நாந்தி, காம்ய ச்ராத்தங்கள், தடாக ப்ரதிஷ்டை, ஆச்ரமஸ்வீகாரம், தீர்த்தயாத்ரை, க்ஷேத்ரயாத்ரை, அன்னப்ராசனம், க்ருஹப்ரவேசம், வேதோபாகர்மம் இவைகளை மலமாஸத்தில் செய்யக்கூடாது.

4. அதிமாஸம் வருகிற வர்ஷத்தில் சாந்த்ரமானப்படி இரண்டு மாஸங்களிலும் பித்ருகார்யங்களைச் செய்யவேண்டியது. தேவகார்யங்களை பிந்திய மாஸத்தில் செய்யவேண்டியது.

5. ஆனல் தர்சாந்தத்தில் சாந்த்ரமானமாதத்தையநுஷ்டிப்பவர்களுக்குத்தான் ச்ராத்தம் முதலியவற்றில் மலமாஸ தோஷத்தைக் கவனிக்கவேண்டும். ஸௌரமானத்தை யனுஷ்டிக்கிறவர்களுக்கு ஒரே பேருள்ள இரண்டு மாஸமில்லாததால் மலமாஸதோஷமில்லை.

6. குரு சுக்ரர்களின் அஸ்தமனம், வ்ருத்தத்வம், பால்யம், இவைகளிருக்கும் காலத்தில் நாமகரணம், அன்னப்ராச

னம், சௌளம், உபநயனம் விவாஹம், ஜாதகர்மம், வேதாரம்போத்ஸர்ஜனங்கள், காம்யகர்ம இவைகளைச் செய்யக்கூடாது. புது ஆபரணம், வஸ்த்ரம், இவைகளை தரிக்கக்கூடாது. க்ருஹப்ரவேசம், கோதானம், ஆச்ரமஸ்வீகாரம், மகோத்ஸவம், இவைகளைச் செய்யக்கூடாது.

7. குரு, சுக்ரன் இவர்கள் ஸூர்யனுடைய ஸாமீப்யத்தால் மறைந்துபோகும் காலம் மௌட்யம். மௌட்யத்திற்கு முந்தினது வார்த்தகம், பிந்தியது பால்யம். கிழக்கிலானால் சுக்ரனுக்கு வ்ருத்தத்வம் 15-நாள், மேற்கிலானால் 5-நாள். கிழக்கிலானால் பால்யம் 5-நாள், மேற்கிலானால் 10-நாள். குருவுக்கு கிழக்கு மேற்கு இரண்டு திக்குகளிலும் வார்த்தம் 15 நாள், பால்யம் 15-நாள். இந்தக்காலங்களில், மலமாஸத்தில் எது எது செய்யக்கூடாததோ அவைகளைச் செய்யக்கூடாது.

8. ஜநநாசௌசம், மரணாசௌசம் இவைகளை அனுஷ்டிக்கும் காலத்தில் சந்த்ர ஸூர்யக்ரஹணங்கள் நேர்ந்தால் க்ரஹணம் முடியும் வரையில் சுத்தியுண்டு. ஆனதால் ச்ராத்த தான தர்ப்பணாதிகளை அனுஷ்டிக்கவேண்டும்.

𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑌸𑍍𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

தர்மசாஸ்த்ரச்சுருக்கத்தில், ச்ராத்தகாண்டம் முற்றுப்பெற்றது.

௨

# தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.

(5—6-ஆம் பிரிவுகள்.)

## திதிநிர்ணய காண்டம், ப்ராயச்சித்த காண்டம்.

1. இவ்விரண்டு காண்டங்களையும் பற்றி முகவுரையில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

2. பாபம், (தோஷம்,) புண்யம், தைவம் உளதென்பது இவைகளை எல்லா மதஸ்தர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

3. பாபம் என்பது ஆயுளைக் குறைத்தல், வ்யாதியையும் மனஃக்லேசத்தையும் உண்டுபண்ணுதல், தாரித்ர்யத்தை வ்ருத்திசெய்தல் இவைகளுக்கு மூலம்.

4. புண்யம் என்பது ஆயுள்வ்ருத்தி, ரோகமின்மை, மனநிம்மதி, ஸம்பத்து இவைகளை உண்டுபண்ணும்.

5. ஆகையினால் சாத்யமானமட்டில் பாபச்செய்கைகளை ஒழித்து புண்யமான கார்யங்களையே செய்ய முயல்வது புத்திசாலித்தனம். அப்படிக்கன்றி பாபம்செய்துவிட்டு அதற்கு ப்ராயச்சித்தம் தேடுவது பெரும் மூடத்தனம்.

உ

ஸ்ரீவீதராகலக்ஷண ஸம்பந்ந ஸ்ரீமதே

ஸ்ரீ ராமசந்த்ரஸ்வாமிநே நம: ॥

## சில முக்ய விஷயங்கள். *

1. அக்நிஸந்தாநம் — அக்நிம் ஸந்தாய ஜுஹுயாத் ப்ராயஶ்சித்தவ்யாஹ்ருதீ: । தத்காலஸ்ய ப்ராப்தஸ்ய ஆஹுதித்வயமேவ ஹி ॥

ஆஹுதித்வயமேவேத்யாபஸ்தம்ப: ॥ அக்னிஸந்தானம் செய்துகொண்டு அந்தக்காலத்திய இரண்டு ஆஹுதிகளை செய்யவேண்டியது.

இரண்டேதான் செய்யவேண்டியது என்பது ஆபஸ்தம்பருடைய மதம்.

2. "ஸாயமாரப்ய ஜுஹுயாத் ஆஹுதீநாம் சதுஷ்டயம்" இதி போதாயநவிஷய: ॥

முதல் நாள் ராத்ரி உள்பட நான்கு ஆஹுதிகள் செய்ய வேணும் என்பது போதாயனருடைய மதம்.

3. உபயஸ்விஷ்டக்ருத்ஸ்தாநே ஸக்ருதேவ ஹுநே யம: ॥

இரண்டு ஸ்விஷ்டக்ருத்வருகிற இடத்தில் ஒரே ஆஹுதிசெய்யவேண்டும் என்பது யமனுடைய மதம்.

---

* இவற்றை ஸந்தர்ப்பவிடங்களில் சேர்க்காமையால் இவ்விடம் தனியாக எழுதும்படி நேர்ந்தது.

4. 𑌔𑌪𑌾𑌸𑌨𑍇 ॥ 𑌤𑌣𑍍𑌡𑍁𑌲𑌸𑍍𑌯 (𑌹𑍁𑌤𑌸𑍍𑌯) 𑌶𑍃𑌤𑌾𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌉𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌨𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 । 𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌸𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட அக்ஷதையோ அல்லது வேறு எதுவோ ச்ருதமாவதற்கு முந்தி உபஸ்தானம் செய்யக்கூடாது. அப்படி செய்தால் அந்த ஹோமம் வ்யர்த்தமாய்ப்போவதுடன் அந்தக் கர்மாவும் பயனற்றதாய்விடும். (குன்மரோகம் வருமென்றும் சொல்லுவார்கள்.)

5. 𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌪𑌾𑌕𑌃— 𑌵𑌿𑌵𑌾𑌹𑌶𑍇𑌷𑌹𑍋𑌮𑌾𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍀 𑌭𑌵𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 𑌸𑌤𑌿 । 𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌪𑌾𑌕𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑍇 𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑍁 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

ஔபாஸன ஆரம்பகாலத்திற்குப் பிறகு சேஷஹோமத்திற்கு முந்தி பூர்ணிமை வந்தால் ஸ்தாலீபாகாரம்பம் செய்யலாம். அமாவாஸ்யை வந்தால் கூடாது.

6. 𑌅𑌰𑍍𑌧𑍋𑌦𑌯𑌃— இதைப்பற்றி முந்தி 121–வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில்கண்டபடி இல்லாமல் பாதபேதங்கள் இருந்தாலும்,

𑌅𑌮𑌾𑌽𑌰𑍍𑌕𑌪𑌾𑌤𑌶𑍍𑌰𑌵𑌣𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌚𑍇𑌤𑍍𑌪𑍌𑌷𑌮𑌾𑌘𑌯𑍋𑌃 । 𑌅𑌰𑍍𑌧𑍋𑌦𑌯𑌸𑍍𑌸 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌕𑍋𑌟𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌗𑍍𑌰𑌹𑍈𑌸𑍍𑌸𑌮𑌃॥ 𑌸𑍋𑌮𑌵𑌾𑌰𑍇𑌣 𑌯𑍋𑌗𑍋𑌽𑌯𑌂 𑌮𑌹𑍋𑌦𑌯 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃॥

இந்த வசனப்படி ஷ நான்கும் ஞாயிற்றுக்கிழமையில் சேர்ந்தால் அர்த்தோதயம் என்றும், திங்கள்கிழமையில்சேர்ந்தால் மஹோதயம் என்றும் கோடிஸூர்யக்ரஹணங்கள் எவ்வளவு புண்யபலன்களைக்கொடுக்குமோ அவ்வளவு பலனை இவைகள் கொடுக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

7. (1) தநிஷ்டாபஞ்சகம்—

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, இந்த ஐந்து நக்ஷத்திரங்களுக்கும் பெயர்.

(2) கும்பமீநஸ்தே சந்த்ரே மரணம் யதி ஜாயதே । ந தஸ்ய ஸத்கதிம் ப்ராஹு: கநிஷ்டா மாஸமேவ ச ॥ பாந்தவானாம் க்ருஹாணாம் ச மாஸமேக வதேத்வதே ।

இந்த ஐந்து நக்ஷத்ரங்களில் இறந்தவர்கள் நல்ல கதியை அடைகிறார்கள். மற்ற பந்துக்கள் வகைருக்களுக்கும், வீட்டிலிருக்கிற கால்நடைகளுக்கும் அடிக்கடி பீடையுண்டாகும்.

(3) தஸ்மாத் தத்பரிஹாரார்த்தம் ஶாந்திம் ஸமாசரேத் ॥

ஆகையால் பீடாபரிஹாரார்த்தமாக சாந்தி செய்யவேண்டியது முக்யம்.

(4) ம்ருதே திநே ப்ரேதக்ருத்யம் ப்ரேதாக்நௌ ஜுஹுயாத் தத: ॥

இறந்துபோனதினத்தில் ப்ரேதக்ருத்யம் ஆனபிறகு அனுக்ஞைபெற்று, க்ருச்ராசரணம்செய்து தர்ப்பைகளினல் 5-கூர்ச்சம்செய்து அவைகளில் க்ரமப்படி ப்ரேதவஹம், ப்ரேதஸகம், ப்ரேததபம், ப்ரேதராஜம், ப்ரேதபூமிபம் என்று ஆவாஹநம் செய்து பூஜைசெய்து, எள்ளுகலந்த ஆஜ்யாஹுதி ஷடி ஐந்தையும் உத்தேசித்துச்செய்து, யமாய யமராஜாய இதி 14 ஆஜ்யாஹுதி செய்து வஹ்நவாம் ஜாதவேத: என்ற ருக்கினல் ஆஜ்யாஹுதி செய்து வ்யாஹ்ருதிகளினல் ஆஜ்யாஹுதிகளும் செய்யவேண்டியது. ஷடி 5 கூர்ச்சங்களையும் ப்ரேதத்துடன் கட்டிக்கொண்டுபோய் அத்துடன் தஹநம் செய்துவிடவேண்டியது. தஹநம் ஆனபிறகு பூரட்டாதி நக்ஷத்ரத்தில் இறந்திருந்தால் எள்ளுடன்

வெங்கலபாத்ரத்தை தானம் செய்யவேண்டியது. யநிஷ்டா வஞுகத்தில் மரணம் நேரிடும்போலிருந்தால் ரேழித்திண்ணையிலோ, ரேழி நடையிலோ அல்லது வாசல் திண்ணையிலோ கொண்டுவந்து போட்டுவிடுகிறார்கள். ரேழித் திண்ணையில் மரணம் நேர்ந்தால் சுவரை இடித்து த்வாரம்செய்து அதின் வழியாக ப்ரேதத்தை சிலர் வெளிப்படுத்துகிறார்கள். சுவரை இடிக்கவேண்டியதில்லை என்கிற எண்ணத்தைக்கொண்டு நடையிலும் வாசல் திண்ணையிலும் போட்டு எடுத்துவிடுகிறார்கள். ஆனால் இவைகளுக்கு ஆதாரம் தென்படவில்லை. எவ்விடத்தில் இறந்தாலும் எப்படி எடுத்தாலும் ஶாந்திசெய்வதே முக்யமென்று பலபேர் அநுஷ்டானத்தில் இருக்கிறது.

5. 𑌶𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑌶𑌮𑌾𑌸𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌷𑌣𑍍𑌮𑌾𑌸𑌂 𑌶𑌤𑌤𑌾𑌰𑌕𑍇 । 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑍋𑌷𑍍𑌠𑌪𑌦𑌂 𑌵𑌰𑍍𑌷𑌂 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇𑌽𑌷𑍍𑌟𑍌 𑌤 𑌮𑌾𑌸𑌕𑌾𑌃 ॥ 𑌰𑍇𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌸𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌗𑍃𑌹𑌂 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 । 𑌬𑌹𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌵𑌿𑌹𑌾𑌰𑌾𑌜𑌃 𑌸𑌗𑍋𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌗𑌣𑌤𑌥𑍍𑌯𑌯𑌾 । 𑌕𑌣𑌶𑌿𑌕𑍋𑌤𑍍𑌵𑌿 𑌦𑍀𑌨𑌿𑌹𑌿𑌨𑍀𑌣𑍀𑌤𑌂 𑌗𑍃𑌹𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 । 𑌇𑌤𑌿 𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑌿𑌷𑌯𑌃 ॥

அவிட்டத்திற்கு 10 மாஸம், சதயத்திற்கு 6 மாஸம், பூரட்டாதிக்கு 1 வர்ஷம், உத்திரட்டாதிக்கு 8 மாஸம், ரேவதிக்கு 3 மாஸம், அந்த க்ருஹத்தையோ அல்லது அந்த இடத்தையோ வர்ஜிக்கவேண்டும். இதை சூத்ரவிஷயமென்று தள்ளிவிட்டார்கள்.

6. 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌵𑍈𑌡𑍂𑌰𑍍𑌯𑌕𑌂 𑌨𑍀𑌲𑌂 𑌗𑍋𑌮𑍇𑌦𑌕𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌰𑌾𑌗𑌕𑌮𑍍 । 𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑌾𑌨𑌿 𑌦𑌾𑌨𑌾𑌨𑌿 𑌪𑌞𑍍𑌚𑌰𑌤𑍍𑌨𑌾𑌨𑌿 𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌇𑌤𑌿 𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑌿𑌷𑌯𑌃 ॥

அவிட்டத்திற்கு வைரம், சதயத்திற்கு வைடூர்யம், பூரட்டாதிக்கு நீலம், உத்திரட்டாதிக்கு கோமேதகம், ரேவதிக்கு புஷ்பராகம், இவற்றை தானம் செய்யவேண்டியது. இது கோடீச்வரவிஷயமென்று இதையும் தள்ளிவிட்டார்கள். ப்ராம்ஹணர்களுக்கு 13_ம் நாள் அதாவது ஸபிண்டீகரணம் நடந்து தீட்டுப்போன பிறகு சாந்திசெய்யவேண்டியதே முக்யம். சாந்தி செய்வதில் அவிட்டத்திற்கு வஸ்த்ரம், சதயத்திற்கு ஸ்வர்ணம், பூரட்டாதிக்கு பருத்தி, உத்திரட்டாதிக்கு எள், ரேவதிக்கு வெங்கலம் இவைகளை தானம் செய்யவேண்டியது. இது ஒரு பக்ஷம்.

அவிட்டத்திற்கு வஸ்த்ரம், சதயத்திற்கு ஸ்வர்ணம், பூரட்டாதிக்கு ஸப்ததான்யம், உத்திரட்டாதிக்கு திலம், ரேவதிக்கு வெங்கலம், இவைகளை தானம் செய்யவேண்டியதில், ஸப்ததான்யத்தில் வகைக்கு 2_மரக்கால் அல்லது 1_மரக்கால் தானம் செய்யவேண்டியது.

ஏழுதான்யமாவன:—எள், உளுந்து, நெல், யவை, தினை, அல்லது கம்பு, சாமை, பயரு, இது ஒரு பக்ஷம்.

கில முக்யவிஷயங்கள் முற்றிற்று.

# விசேஷ அறிவிப்பு.

இதிற் சொல்லிய ஆசௌசம், ஸம்ஸ்காரம் முதலிய விஷயங்களில் சில ஆஹிதாக்னிவிஷயத்தில் மாருதலை அடையும். அவ்விஷயங்களைப் பற்றி இங்கொன்றும் சொல்லப்படவில்லை.

# கவனிப்பு.

